# புது வைரம் நான் உனக்கு

ரமணிசந்திரன்



# புது வைரம் நான் உனக்கு

ரமணிசந்திரன்

அருணோதயம்
5/3, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை : சென்னை - 600 014.

## நூல் விவரப் பட்டியல்

| | |
|---|---|
| நூலின் பெயர் | : புது வைரம் நான் உனக்கு |
| ஆசிரியர் | : ரமணிசந்திரன் |
| மொழி | : தமிழ் |
| முதல் பதிப்பு | : டிசம்பர், 1995 |
| இரண்டாம் பதிப்பு | : ஜனவரி, 1997 |
| மூன்றாம் பதிப்பு | : ஆகஸ்ட், 1998 |
| நான்காம் பதிப்பு | : மே, 2000 |
| ஐந்தாம் பதிப்பு | : செப்டம்பர், 2003 |
| ஆறாம் பதிப்பு | : டிசம்பர், 2004 |
| ஏழாம் பதிப்பு | : மார்ச், 2006 |
| எட்டாம் பதிப்பு | : செப்டம்பர், 2007 |
| ஒன்பதாம் பதிப்பு | : டிசம்பர் 2008 |
| பத்தாம் பதிப்பு | : ஜூன், 2010 |
| பதினொன்றாம் பதிப்பு | : ஆகஸ்ட், 2011 |
| பனிரெண்டாம் பதிப்பு | : மார்ச், 2013 |
| நூலின் அளவு | 1 x 8 கிரவுன் |
| தாள் | : 11.6 Kg. வெள்ளைத் தாள் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 232 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை-14. |

**விலை: ரூ.100.00**

| | |
|---|---|
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ், சென்னை-14. |

# பதிப்புரை

தமிழில் நல்ல நூல்களுக்கு தமிழ் மக்களின் வரவேற்பு குறையாது என்பதற்கு ரமணிசந்திரன் நாவல்கள் ஒரு எடுத்துக்காட்டு.

இலட்சிய கதா பாத்திரங்களைக் கொண்டு நல்ல கதையை தெளிவாகப் பின்னி, சுவையாகக் கொண்டு செல்லும் பாணி திருமதி. ரமணிசந்திரனுக்கே உரியது. இதில் வரும் கதா பாத்திரங்களை எங்கோ பார்த்தது போன்ற பிரமை ஏற்படுவதில் வியப்பில்லை. அன்றாட நிகழ்வுகளைக் கொண்டே கதை பின்னப்படுவதால் வாசகர்களின் ஆர்வம் மேலும் மேலும் தூண்டப்படுகிறது. படிப்பவர்களுக்கு ஒருவித திருப்தி - மனநிறைவு ஏற்படுகிறது. உயிரோட்டமுள்ள தமிழ் நடையும் உதவியாக இருக்கிறது. இத்தனை சிறப்புகளும் கொண்ட இந்த நாவலை படித்து மகிழுங்கள். கருத்தை எழுதுங்கள்.

— அருணோதயம் அருணன்

# பாராட்டுரை

மதிப்புக்குரிய அருணோதயம் அருணன் அவர்கட்கு!

அன்புடன் எழுதிக்கொள்வது, நான் இலங்கையிலிருந்து இக் கடிதம் எழுதுகிறேன். திருமதி. ரமணிசந்திரனின் முத்தான நாவல்களை வாசிக்கும் லட்சக்கணக்கான வாசகிகளில் நானும் ஒருத்தி. அவரின் அநேகமான நாவல்கள் புத்தக வடிவில் உங்களது அருணோதயம் வெளியீடாக வந்துள்ளது. ஏனைய எழுத்தாளர்களின் நாவல்களை விட ரமணிசந்திரனின் நாவல்கள் என்றால் எனக்கு உயிர். நான் கூடுதலாக விரும்பிப் படிப்பதே இவரது படைப்புக்களைத்தான். கிட்டத்தட்ட 45 நாவல்கள் படித்துவிட்டேன். எனக்கு அவரது நாவல்கள்தான் உற்றதுணை, அவற்றைப் படிக்கின்ற போது ஏற்படுகின்ற மகிழ்ச்சி, நிம்மதி வேறெதிலும் கிடைப்பதில்லை. அதிலே காணும் மனநிறைவு, அதை எப்படி வார்த்தையில் சொல்லிவிட முடியும்.

மேலும், தற்சமயம் உங்கள் வெளியீடுகளில் எழுத்துக்கள் மிகவும் பெரியனவாக நன்றாக உள்ளது. பழைய வெளியீடுகளில் எழுத்துக்கள் சிறியவையாக இருந்தன. இப்போது வருபவை நல்ல அழகாக உள்ளது. நான் புத்தகம் வாங்குமுன் அருணோதயம் வெளியீடா எனப் பார்த்து விடுவேன். உங்கள் வெளியீட்டில் வரும்போது நாவல்கள் ஒரு தனி அழகைப் பெறுகின்றது. ஐஸ் வைக்கிறேன் என்று எண்ணாதீர்கள் - முற்றிலும் உண்மையே. மற்றவர்களிடம் கேட்டுப் பாருங்கள்.

மேலும் உங்கள் பணி மேன்மேலும் வளர, தொடர வேண்டுமென வாழ்த்தி, வேண்டி விடை பெறுகிறேன்.

நன்றி

இங்ஙனம்
தங்கள் அன்புள்ள
சுசீலா - இந்திரகுமார்

# புது வைரம் நான் உனக்கு

## 1

**கா**லைக் கதிரவனின் கிரணங்கள் மூடிய இமைகளின் மேல் படுமாறு கிழக்கு நோக்கிக் கண்மூடி நிற்பது, இளங்காலை வேளை யில் சிதம்பரநாதனின் தினசரி வழக்கம்.

அவருடைய அருமை மகள், ஆசைக்கும் ஆஸ்திக்கும் சேர்த்து எல்லாம் ஒன்றாகப் பிறந்த திருமகள் பூரணி, தந்தைக்குக் கற்றுக் கொடுத்த பழக்கம். ''இப்படிப் பத்து நிமிடங்கள் நின்றால் கண்பார்வை கூடுமாம் அப்பா'' என்று கூறிப் பிடிவாதமாகச் செய்ய வைப்பாளே!

முதலில் ஏனோதானோ என்று மகளின் தொணதொணப்புக் காகச் செய்தது.

பிறகு.... பூரணி இந்தப் பூவுலகம் விட்டுச் சென்ற பிறகு, ஒரு மிகமிக முக்கியமான சடங்குபோல அதைச் செய்துவிட்டுத்தான் மற்ற வேலை. மழை மூட்டமாய்க் கதிரவன் கண்ணுக்குத் தெரியாத நாட்களிலும் கூட, அந்தப் பத்து நிமிடங்கள் அப்படி நின்றே தீருவார்.

என்னவோ, அதிலேயே ஓர் ஆறுதல். மகள் சொல்லிச் சென் றதை எல்லாம் நிறைவேற்றுவதுபோல ஒரு பிரமை.

மகளைப் பற்றிய எண்ணங்களை அசை போட்டபடி அசை யாமல் நிற்பார் அவர்.

''அப்... பாப்... பா'' என்று தளர்நடை போட்டு அவரைப் பூரணி நெருங்கி வந்து தூங்கச் சொன்ன குழந்தைப் பருவம் முதல், அப்பா, தைரியமாய் இருங்கப்பா!'' என்று பிரசவ வலியை பல்லைக் கடித்து சகித்தபடி மருத்துவ மனைக்குச் சென்றது வரையிலான ஆயிரமாயிரம் சம்பவங்கள்!

அந்த வலி! அதுதான் அவருடைய செல்வ மகளைக் கொள்ளை கொண்டு போயிற்று.

ஏற்கனவே பிறவியிலிருந்தே பூரணி சற்றுப் பலவீனமான பெண்தான். ஓடினால் இரைக்கும். எனவே விளையாட்டுகளில் இருந்து தானாகவே ஒதுங்கிவிடுவாள்.

எதற்கும் 'ஞைஞை' என்று வந்து நிற்கும் பெண் அல்ல என்பதால் மகளின் குறைபாட்டைக் கண்டுகொள்ளவே பெற்றோருக்கு வெகுகாலம் ஆகிப் போயிற்று.

ஒருவாறு கண்டுபிடித்து வைத்தியரிடம் சென்ற பிறகுதான் விவரம் தெரிந்தது.

பூரணி என்று ஆசையாகப் பெயர் வைத்த பெண்ணுக்கு உள்ளே எல்லாம் பூரணமாக இல்லை. முக்கியமாக இதயம்.

காரணம் என்று ஏதேதோ சொன்னார்கள். கர்ப்பத்தில் வளர்ச்சி சரியாக இல்லை என்றார்கள். ஒன்றுக்குள் ஒன்று என்று நெருங்கிய உறவுக்குள் வழி வழியாய்த் திருமணம் செய்தால் இப்படி நேரக்கூடும் என்றார்கள். பூரணி ஒரே குழந்தையாக நின்று போனதன் காரணம் கூட அதுவாகவே இருக்கலாம் என்றார்கள்.

ஆனால் ஒன்று உடனடியாகவோ உயிருக்கோ பெரிய ஆபத்து என்று யாரும் சொல்லவில்லை.

வாழ்க்கையைக் கொஞ்சம் வெகுவாக நடத்திச் செல்ல வேண்டும். ஆட்டம் ஓட்டம் என்று உடலைச் சிரமப்படுத்திக் கொள்ளக் கூடாது.

திருமணம், ஒன்றிரண்டு குழந்தைகள் பெறுவது வரையிலும் கூட செய்யலாம் என்றுதான் சொன்னார்கள்.

ஆனால் இரண்டிற்கு மேல் கூடாது. அப்போதும் பிரசவ வலி தாங்க முடியாது. வலியெடுக்கும் முன்னரே சிசேரியன் செய்து பிள்ளையை எடுத்து விட்டால் பிரச்சினை இல்லை என்றுதான் பார்த்த வைத்தியர்கள் அத்தனை பேரும் சொன்னார்கள்.

மகளின் குறைபாட்டைச் சொல்லியே மாப்பிள்ளை தேடினார் சிதம்பரநாதர்.

மகளை வேறு எங்கும் அனுப்பத் துணிவில்லாமல், வீட்டோடு மாப்பிள்ளையாகப் பொருளாதார நிலையில் சற்றுத் தாழ்ந்த இடத்திலேயே தேடி ராமலிங்கத்தைக் கண்டு பிடித்தார்.

மருமகனைக் குற்றம் சொல்வதற்கில்லை.

பூரணி மகிழ்ச்சியோடுதான் வாழ்ந்தாள்.

அவள் கருவுற்றபோது, தாய், தந்தை, கணவன், எல்லோருமே அவளை அப்படித் தாங்கினார்கள். ஆனால்....

மலையிலிருந்து உருண்டு பிழைத்தவர்களும் உண்டு. புல் தடுக்கிச் செத்தவர்களும் உண்டு என்பார்கள்.

சிசேரியனுக்குக் குறித்த தேதிக்குப் பதினைந்து நாட்களுக்கு முன்பாக மாடிக் குளியல் அறையில் பூரணிக்குக் கால் வழுக்குவானேன்? தினமும் தேய்த்துக் கழுவி விடப்படுகிற தரை!

ஒரு வழக்கின் உண்மை தெளிவதற்காக, மாட்டுக் கொம்பில் யமன் இருந்து கல்யாண மாப்பிள்ளையின் உயிரை வாங்குவதைப் பாண்டியனுக்குச் சிவபெருமான் காட்டியதாகப் புராணக் கதை ஒன்று உண்டு

பூரணியின் உயிரை வாங்க, யமதர்மன், சோப்பு நுரையிலும் தண்ணீரிலுமாக இருந்து அவளது கால் வழுக்கச் செய்திருக்க வேண்டும்.

விழுந்தவள், உடனே எழுந்திருக்க முடியாமல் சற்று நேரம் மூச்சிரைத்து விட்டு, கத்திப் பயனில்லை என்று கண்டு, ஒருவாறு துணியைச் சுற்றிக் கொண்டு சிரமப்பட்டுக் கதவை அடைந்து திறந்து, தாயாரை உதவிக்கு அழைத்தபோது அவளுக்கு நல்ல

வலியே தொடங்கி விட்டது. அந்தப் பலவீனமாக இருதயத்தால் தாங்கிக் கொள்ள முடியாத வலி! தாங்கி மீள முடியாத வலி...!

அவரை மீண்டும் நிமிர வைத்தது. அந்தத் ''தைரியமாய் இருங்கப்பா'' தான்.

அதுவும், வீல்வீல் என்று அலறித் தான் இருப்பதை உலகுக்குத் தெரிய வைத்த குழந்தையும்தான்.

மகளின் ரத்தமும் சதையுமாய் உருவாகிய உயிர் அவள் தன் உயிரைக் கொடுத்து உலகுக்குக் கொணர்ந்த அவளுடைய செல்வ மகன்.

ஸ்கேனில் ஆண் பிள்ளை என்று தெரிந்ததால் அவள் பெயர் கூட வைத்துவிட்டிருந்த பிள்ளை!

மனைவி இறந்த பிறகும் மாமானர் வீட்டில் இருக்க மருமகனுக்கு விருப்பம் இல்லை.

ஆனால் பேரனை மருமகனோடு அனுப்ப சிதம்பரநாதர் அடியோடு மறுத்துவிட்டார். கெஞ்சியும், மிஞ்சியும் ஒரு பச்சைக் குழந்தையைத் தனியே வளர்ப்பதில் உண்டான கஷ்ட நஷ்டங்களை எடுத்துச் சொல்லியும் ஒருவாறு ராமலிங்கத்தை ஒத்துக் கொள்ளச் செய்தார். சன்னியாசியாக வாழ முடியாத சின்ன வயது; அடுத்தவள் வந்து பிள்ளையைப் படுத்தினால்... என்ற பிறகு, அப்போதும் மனமின்றியேதான் மகனை விட்டுக் கொடுத்து விட்டுச் சென்றான் மருமகன்.

ஆனால் கொஞ்ச காலமாக சில ஆண்டுகளாகவே அப்படித் தந்தையிடமிருந்து மகனைப் பிரித்தது தவறோ என்ற ஐயம் சிதம்பரநாதருக்கு உண்டாகத் தொடங்கியிருந்தது.

அன்றைக்கு மருமகன் அவ்வப்போது வந்து எட்டிப் பார்த்ததை அவர் ஊக்குவிக்கவில்லை. மருமகனைக் காண்கையில் மகளின் இழப்பு பெரிதாகத் தெரிந்தது அதற்கு ஒரு காரணம். மறுதாரம் கொண்ட பின், ராமலிங்கம் ஒதுங்கிப் போய்விட்டதை அப்போது நிம்மதியாகவே உணர்ந்தார்.

ஆனால், பெற்றவரின் கண்டிப்பு மனோரஞ்சனுக்குத் தேவைப்பட்டிருக்குமோ என்று இப்போது தோன்றியது.

தாத்தாவைப் பேரன் தன் சுட்டுவிரலில் முடிந்திருந்தான். செல்லச் சிணுக்கத்துடன், கருமணிக் கண்களில் குறும்பும் கெஞ்சலுமாக அவன் ஒன்றைக் கேட்கும்போது அது எதுவாக இருந்தாலும் சரிதான். இல்லை என்ற சொல் பாட்டனாரின் அகராதியிலேயே இல்லாது ஒழிந்து போயிற்று.

ஆனால் கொஞ்ச காலமாக அவருள் ஒரு கலக்கம்.

கேட்டதெல்லாம் கிடைத்து நினைத்ததெல்லாம் நடப்பதால் மனோரஞ்சன் தறுதலையாகிக் கொண்டிருக்கிறானோ என்று ஒரு பயம்.

தன் விருப்பங்கள் தவிர, மற்றவர் மனம், நோவு, நியாய, அநியாயம் பற்றி இப்போதெல்லாம் அவனுக்கு அக்கறை இருப்பதாகவே அவருக்குத் தோன்றவில்லை.

அதிலும் அவனுடைய பாட்டியின் மறைவுக்குப் பிறகு மனோரஞ்சனிடம் இருந்த கொஞ்சநஞ்ச இளக்கமும் மறைந்துவிட்டதாகவே அவருக்குத் தோன்றியது.

இந்த கார் ரேஸ் வெறி!

''நம் ரத்தப் பரம்பரைக்கு நீ ஒருவன்தானடா இருக்கிறாய். வேறு ஏதாவது நல்ல விளையாட்டு ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளேன். கிரிக்கெட், ஹாக்கி, பாட்மின்டன்... என்று எத்தனை இருக்கின்றன!'' என்று பேரனிடம் சொல்லிப் பார்த்தார்.

''எனக்குப் பிடித்தது இதுதான்.'' என்றதற்கு மேல் பாட்டனுக்குக் காரணம் என்று வேறு எதையும் சொல்ல வேண்டும் என்று கூட அவனுக்குத் தோன்றவில்லை.

பேரன், தன்னைப் பெற்றவரைத் தேடுகிறானோ, அவரைக் காணாத ஏக்கம் இப்படிப் பிரதிபலிக்கிறதோ என்றும் ஒரு சந்தேகம். பண்டிகை நாட்களிலும், பிறந்த நாளிலும் கண்களில் ஒரு தேடலுடன் அவன் அலசியது நினைவு வரக் கேட்டும் பார்த்தார்.

''அப்பாவைப் போய்ப் பார்த்து விட்டு வருகிறாயா, கண்ணப்பா?'' என்று.

''உங்களுக்குப் பைத்தியமா தாத்தா?'' என்று பெரிதாகத் தோளைக் குலுக்கினான் மனோரஞ்சன். ''சந்திக்க நேர்ந்தால் அவர் என்னை அடையாளம் கண்டுபிடிப்பதே சிரமம். இங்கே ஒரு மகன் இருக்கிற விஷயம்கூட அவருக்கு மறந்து போயிருக்கும். அதுதான் சொந்தமாய்ப் பெரிய குடும்பமே இருக்கிறதாயே! அதற்கு மேல் அவசியமில்லை என்று எண்ணி விட்டு விட்டிருப்பார். அவரைப் போய் நானாகச் சென்று பார்ப்பதா? சேச்சே!'' என்று சட்டையில் இல்லாத தூசியைத் தட்டி விட்டதோடு பேச்சை முடித்துவிட்டு அங்கிருந்து அகன்றும் போய்விட்டான்.

இதை எப்படி எடுத்துக் கொள்வது?

மெய்யாகவே அக்கறை இல்லையா? அன்றித் தாத்தாவிடமே சுயகவுரவம் பார்க்கிறானா?

ஆனால் ஒன்று பெற்றவரைப் பார்க்கும் ஆவல் மட்டும் அவனுக்கு இருக்குமானால் அவன் யார் தடுத்தாலும் நிற்கிறவன் இல்லை என்பது அவருக்கு நிச்சயம்.

மருமகனிடமும் உள்ளூர ஒரு தாங்கல் அவருக்கு இருந்தது. என்னதான் வேறு குடும்பம் ஒன்று அமைந்துவிட்ட போதும் வளர்ந்து இளைஞனாகிவிட்ட மகன் எப்படியிருக்கிறான் என்று காணும் ஆசை இல்லாமலேயா போய்விடும்?

சில ஆண்டுகளாகச் சிதம்பரநாதருக்கு இன்னொரு தலைவலியும் வந்திருந்தது.

ரேஸ் அது இது என்று சுற்றிச் கொண்டிருந்த மனோரஞ்சன் கூடவே பெண்களையும் சுற்றுவதாகக் காதில் விழத் தொடங்கியது.

திருமணம் செய்து வைக்க முயன்றபோது, பேரன் ஒரேடியாக மறுத்து விட்டான். அப்படி அவனது சுதந்திரத்தை அவன் யாரிடமும் கொடுப்பதாக இல்லையாம்.

ஆனால் பெண்களைச் சுற்றுவதை அவன் மறுக்கவும் இல்லை. அதைப் பெரிய விஷயம் என்று மதிப்பதாகவும் இல்லை.

செய்வது அறியாமல் பெரியவர் குழம்பினார். இந்த வேக மும் போகமும் அவனை எங்கே கொண்டு போய் நிறுத்தப் போகின்றனவோ என்று அஞ்சினார் அவர்.

அவர் அஞ்சியதற்கு ஏற்றபடியே விரைவிலேயே ஒரு சேதி வந்தது.

பதறியடித்துப் பறந்து சென்று பார்த்தபோது தலையிலிருந்து கால் வரை கட்டுகளுடன் மனோரஞ்சன் மருத்துவமனையில் தன் நினைவின்றிக் கிடந்தான். அவன் உயிரோடு இருப்பதற்கான அடையாளமே இல்லை.

நெஞ்சை அழுத்தியவாறு நின்றவரை, அமர வைத்து அவ ருக்கும் சில வைத்தியம் செய்து அதன் பின் விவரம் சொன்னார்கள்.

ரேசில் அருகே வந்த காரும் மனோ ரஞ்சனின் காரும் ஒன்றை ஒன்று முந்தப் பார்த்தபோது இடித்துக் கொண்ட வேகத்தில் இரண் டுமே பல குட்டிக்கரணம் போட்டுச் சிதறிப் போயின. மற்றவன் விந்தியவாறு எழும்பிவிட, மனோரஞ்சன்தான் எக்கச்சக்கமாய் மாட்டிக் கொண்டுவிட்டான். மீட்டு வந்து சோதித்த போது உடை யாதது ஏதும் அவன் உடம்பில் இல்லை என்று தெரிய வந்தது.

எட்டுமணி நேர அறுவை சிகிச்சையில் எல்லாவற்றையும் சீர் செய்து கிடத்தியிருக்கிறார்கள். ஆனால்..

''ஆனால்?'' என்று கேட்டபோது பெரியவரின் வாயிலி ருந்து குரலுக்குப் பதில் காற்றுதான் வந்தது.

''இப்போதைக்கு உயிர் இருக்கிறது. அவ்வளவே. மிஸ்டர் மனோரஞ்சன் பிழைப்பது... பிழைத்தால் பெரியவரின் அதிர்ஷ் டம் என்றே சொல்ல வேண்டும்.''

அசைவற்றுக் கிடந்தவனின் அருகில் இருந்து பேரனின் நெஞ்சு மிகவும் லேசாக ஏறி இறங்குவதைப் பார்த்தபடி அமர்ந்தி ருந்தவருக்குத் துக்கம் நெஞ்சை அடைத்தது.

என்ன சொன்னாலும் கேட்க வில்லையே, பாவி!

மகள் அசைவற்றுப் போனதை எண்ணி சிதம்பரநாதரின் மனம் கலங்கியது. பேரனாவது பிழைப்பானா? பிழைத்தாலும் பழைய துடிப்புடன் இருப்பானா?

கோமா போன்ற வார்த்தைகள் அவரை நடுங்க வைத்தன.

கலக்கத்துடன் பேரனையே பார்த்தபடி அமர்ந்திருந்தார் அவர்.

'விஷ்ஃபுல் திங்கிங்' என்பார்களே, அது போலவோ அன்றி நிஜமாகவோ, மனோரஞ்சனின் உதடுகள் லேசாக அசைவது போல் சிதம்பரநாதருக்குத் தோன்ற, விழுந்தடித்துக் கொண்டு பேரன் அருகே ஓடிச் சென்றார். ஆனால் அதற்கு மேல் அவனிடம் மாற்றமில்லை.

அறையிலேயே இருந்த நர்சிடம் கூறியபோது, அவர் பரிதாபத்துடன் பார்த்து விட்டுப் பேசாதிருந்துவிட்டார்.

மறுமுறை நர்சும் கண்டுவிட்டு, டாக்டரை அழைத்து வந்தார்.

டாக்டர் பரிசோதிக்கும்போதே மீண்டும் மனோரஞ்சனிடம் அதே பாதிப்பு காற்றாய்க் கிசுகிசுத்தது குரல்.

கூர்ந்து கேட்டுவிட்டு, "சௌ...மி...னி. சௌமினி. யாரந்தப் பெண்? உங்கள் பேரனுடைய மனைவியா? காதலியா?" என்று கேட்டார் டாக்டர்.

யாரென்று சொல்லுவார் பெரியவர்?

பரிதாபமாய்த் தலையசைக்கவும், "பாருங்கள் சார், அந்தப் பெண்ணைத் தேடி உடனே வரவழையுங்கள். ஒருகால் அவளால் உங்கள் பேரனை மீட்க முடிகிறதா என்று ஒரு முயற்சி செய்யலாம். சீக்கிரம். எப்படியாவது அவளை வரவழையுங்கள்" என்றார் வைத்தியர்.

பெயரளவில்கூட அறியாத பெண்ணைப் பெரியவர் எங்கிருந்து கொண்டு வருவார்?

சிதம்பரநாதர் மலைத்து நின்றது சில கணங்களே. வெகு விரைவிலேயே உயிர்த்து டெலிபோனிடம் ஓடினார்.

அந்த நகரில் பெரிய துப்பறியும் நிறுவனம் உடனே செயல்பட த் தொடங்கியது.

அங்கங்கே உள்ள தொடர்புகள் மூலம் மனோரஞ்சன் சமீபத்தில் ரேசுக்காகச் சென்ற இடங்கள் அத்தனையிலும் அவனது ஜாதகம் அலசப்பட்டது.

அங்கங்கே அவனோடு பழகியவர்கள், முக்கியமாகப் பழகிய பெண்களின் விவரம் சேகரிக்கப்பட்டது.

ஆனால் அந்தப் பட்டுப்பூச்சிகளில் சௌமினியின் பெயர் காணாமல் ஒரு தளர்ச்சி நேர்ந்தது.

உடனே இன்னமும் பின்னோக்கித் தேடினார்கள்.

சென்னையில் மனோரஞ்சன் படித்து முடித்தபின் அதை ஒட்டிய சமயம், சௌமினி என்ற பெண்ணோடு அவன் சினிமா, கடற்கரை என்று சுற்றியது கண்டுபிடிக்கப்பட்டது.

அதன்பின் அந்த சௌமினி காணாது போய்விட, மீண்டும் ஒரு தேக்கம்.

அடுத்த வழியாக, மனோரஞ்சனின் உடைமைகள் அலசப்பட்டன.

மூன்றாண்டுகளுக்கு முன்பாக எழுதபபட்டிருந்த ஒரு கடிதம். சௌமினி என்று கையெழுத்திட்டிருந்த கடிதமும், டைரியின் உட்புறத்தில் அவளது முகவரியும் கிடைத்தன.

திருநெல்வேலியின் சிந்துபூந்துறையில் அவளைக் காண முடியாதபோதும், விசாரித்து அவள் இருப்பிடம் கண்டுகொள்ள முடிந்தது.

அங்கே சென்று பார்த்தபோது மெய்யாகவே அங்கே ஒரு சௌமினி இருந்தாள்; இரண்டரை வயதுப் பிள்ளையோடு இருந்தாள்!

ஆனால் அவள் ஆத்திரத்தில் இருந்தாள்; அருவெறுப்பில் இருந்தாள்; மனோரஞ்சனிடம் முழு வெறுப்பில் இருந்தாள்.

அவன் முகத்தில் விழிப்பதே கூடாது என்ற வைராக்கியத் தோடும் இருந்தாள்.

## 2

ரொம்பவும் விடிகாலை நேரம் தான். மணி ஐந்தரை ஆக இன்னமும் சில நிமிடங்கள் இருந்தன. ஆயினும், வழக்கம்போ லவே, விழிக்க வேண்டும் என்று நினைத்திருந்த நேரத்திலேயே சௌமினிக்குத் தானாக விழிப்பு தட்டிவிட, கையைத் தலைப்புற மாக நீட்டி, அங்கே இருந்த அலாரம் கடிகாரத்தின் விசையை அழுத்தி, அதைச் செயலிழக்கச் செய்தாள்.

அப்பாடா! இனி அலாரத்தின் மணிச்சத்தம் பிள்ளையை எழுப்பி விட்டுவிடாது.

நிம்மதியோடு முறுவலித்தபடியே மகனிடம் திரும்பினாள் சௌமினி.

விடிவிளக்கு உமிழ்ந்த மங்கிய ஒளியில் அயர்ந்து உறங்கிய பிள்ளையை ஆவலுடன் மேய்ந்தன அவளது விழிகள்.

குறுகுறு கண்களைச் சிப்பி இமைகள் மூடியிருக்க, பரமசாது போலக் கிடந்த சிறுவனை அப்படியே அள்ளி அணைத்துக் கொள்ள வேண்டும் போல ஒரு வேகம் உண்டாயிற்று.

அதை அடக்கிக் கொண்டு, அவனது தூக்கம் கலைந்து விடா மல் கவனத்துடன் அவனது நெற்றியில் மிருதுவாய் முத்தமிட்டு, மெல்ல எழுந்து சென்று அவளது அன்றாட வேலைகளைத் தொடங்கினாள்.

முன்னெல்லாம் ஆறுமணிக்கு மேலாக விழித்தாலே, சாவகாசமாக வீட்டு வேலைகளை முடித்துவிட்டு, நிதானமாக அலுவலகத்துக்குச் செல்ல அவளுக்கு நேரம் சரியாக இருக்கும்.

இப்போதெல்லாம் அது முடிவதே இல்லை.

இந்தக் குட்டிப்பையன் நடக்கத் தொடங்கிய பிறகு, இல்லை, தவழத் தொடங்கியதிலிருந்தே வீட்டில் வேலைகளுக்கு முடிவே இல்லாதது போல மளமளவென வளரத் தொடங்கி விட்டன.

பலவாறாக யோசித்துப் பிள்ளைக்குச் சித்தார்த்தன் என்று சௌமினி பெயரிட்டிருந்தாள். ஆனால் செயலில் அந்தப் புத்தரும் இவனும் எதிர்த் துருவங்கள்தான். குணத்திலும் அவன் அப்படி இருந்து விடக்கூடாது என்று அவ்வப்போது அவள் வேண்டிக் கொள்ளும்படி ஆயிற்று.

இங்கும் அங்கும் தன்னிச்சையாகச் செல்கிற பிள்ளைக்கு எல்லாமே அதிசயம். எல்லாவற்றையும் அறிந்து கொள்வதில் அடங்காத ஆர்வம். இதை எடுப்பதும், அதை உடைப்பதும், கொட்டிக் கவிழ்ப்பதும், வேண்டாததை எல்லாம் வாயில் போட்டுக் கொள்வதுமாக வினாடி சும்மா இராமல் லூட்டி அடிப்பான். இந்தச் சிறு வீட்டில் அவன் எடுக்க முடியாத இடம் என்று எங்கே கொண்டு போய், எவ்வளவு சாமான்களை வைப்பது?

பெரும்பகுதி நேரம் அவன் பின்னோடு ஓடுவதும், மீதி நேரத்தில் அவர்கள் இருவருக்குமான எளிய உணவு, உடை, வீட்டுச் சுத்தம் என்று பார்ப்பதுமாக நேரம் பறந்துவிட, ஓடு ஓடு என்று வேகமாய் வேலை செய்துவிட்டு ஓடினால்தான் ஒன்பதரைக்குத் தாமதமின்றி வேலைக்குச் செல்ல முடிந்தது.

அந்தச் சிற்றூரின் பொருளாதாரத்தை ஓரளவுக்கு உயர்த்திய ஒரு பெரிய தொழிற்சாலையின் நிர்வாக அலுவலகத்தில் சௌமினிக்கு வேலை. பணிபுரிவோரின் வசதிக்காக, நிர்வாகமே குழந்தைகள் காப்பகம் ஒன்றையும் நிறுவனத்தின் எல்லைக்குள்ளாகவே நடத்தி வந்ததால் வேலை நேரத்தில் பிள்ளையை என்ன செய்வது என்ற கவலையின்றி அவளால் இருக்க முடிந்தது.

தன் துறுதுறுப்பினால் பிள்ளை பல தொல்லைகள் கொடுத்து பார்த்துக் கொள்கிறவர்களுக்கு எரிச்சல் மூட்டி விடுவானோ என்று அவளுக்கு முதலில் பயம்தான்.

அவளானால் தாய்; பிள்ளை கண்ணைக் குத்திவிட்டாலும் சகித்துக் கொள்வதும், குறும்புக்காரப் பிள்ளை என்று அதை ரசிக்கவும் முடியும். ஆனால் மற்றவர்களிடம் அதை எதிர்பார்க்க முடியாது அல்லவா?

ஆனால் தன் விஷமப் பார்வையாலும், விளையாட்டாலும், சிரிப்பாலும் 'க்ரஷ்'சில் பணிபுரிந்த அத்தனைபேர் மனதையும் பிள்ளை கவர்ந்து விட்டது அவளுக்கு முதலில் நிம்மதியைத் தந்த போதும், அடிக்கடி அவளது மன அமைதி குலைந்து அலைபாயவும் அதுவே காரணம் ஆயிற்று.

சௌமினியின் மனநிலை தெரியாமல், குழந்தையைத் திருப்பித் தரும்போது, ''இவனுக்கு நீங்கள் பிருந்தாவனக் கண்ணன் என்று பெயர் வைத்திருக்க வேண்டும். இந்த ஆள் மயக்கிக்குப் போய்ச் சித்தார்த்தன் என்று தப்பாகப் பெயரிட்டு விட்டீர்கள்'' என்று, மெச்சுதல் என்று எண்ணிப் பேசிவிடும் போது உள்ளூர அடிபட்டுப்போவாள் அவள்.

ஆள் மயக்கி! ஆமாம். அதில் சித்து அப்படியே அவனுடைய அப்பாவின் வாரிசுதான். குறுகுறு பார்வையும், குறும்புச் சிரிப்பும், வேடிக்கைப் பேச்சுமாக மற்றவர் மனதை, முக்கியமாக மறுபாலாரின் மனதைக் கவர்ந்து விடுவதில் அவனும் மன்னன்தான். மாமன்னன்! சக்கரவர்த்தி!

சுடரிடம் மயங்கி, அதை நெருங்கி, அந்தத் தப்புக்குத் தண்டனையாக உயிரை விடும் விட்டில் பூச்சிபோல, அவளும் அந்த மாமன்னனால் கவரப்பட்டு அவலப்பட்டவளே... ஆனால் உயிர் மீந்திருந்தது.

பிறகு, பிள்ளை கிடைத்த பின், அந்த உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் ஆவலும் வந்தது. மகனைப் பார்த்து, மனதிலிருந்து கடந்த காலத்தை அரும்பாடு பட்டேனும் பெருமளவு ஒதுக்க முடிந்தது.

அப்படிச் சிரமப்பட்டு நினைவிலிருந்து விலக்கியவை எல்லாம் இப்படி ஒரு பேச்சில், வஞ்சினம் கொண்டாற் போல் மீண்டும், படையாய்த் திரண்டு தவிர்க்க முடியாமல் அவள் தவிப்பதும் இப்போது அடிக்கடி நிகழ்வதாயின.

அன்று மாலையும் அப்படித்தான் நேர்ந்தது.

குழந்தைகள் காப்பகத்தில் பணிபுரியும் மாலினிக்குச் சித்தார்த்தனைத் திருப்பித் தரவே மனமில்லை.

"என்னக்கா, அதற்குள்ளாகவா உங்கள் வேலை நேரம் முடிந்து விட்டது. அநியாயம், எங்கள் கண்ணனைப் பிடுங்கிக் கொள்ள இவ்வளவு சீக்கிரமாய் யசோதைபோல வந்துவிட்டீர்களே! போங்கள். நாங்கள் தரமாட்டோம். இன்னமும் எங்கள் பயிற்சி முடியவில்லை." என்று சிரித்தபடியே சிறு ஆற்றாமையோடு முறையிட்டாள் அவள்.

சற்றே அதிர்ந்து விட்டு, அதைப் புன்னகையால் சமாளித்து, "அப்படி என்ன பயிற்சி இந்த ஒன்பது மணி நேரத்தில் முடியாதது?" என்று வேடிக்கை போல வினவினாள் சௌமினி.

"ஒன்..பது மணி நேரமா? எல்லாம் மதியத் தூக்கம் கும்பகர்ணன், கர்ணிகளாகப் போட்டுவிட்டு இப்போதுதான் விழித்தன. ஆண்டுவிழா வருகிறதே, இந்தப் பிள்ளைகளை வைத்து கோபிகைகள் கோலாட்டாம் போடலாம் என்று பார்த்தோம். சித்துக் குட்டிதான் கண்ணன். எல்லா வாண்டுப் பெண்களும் தான்தான் ராதையாக இவனோடு ஆடுவேன் என்று அடம்பிடிக்கிறார்கள். பாருங்கள், பின்னால் நீங்கள் இவனோடு நன்றாகப் படப் போகிறீர்கள். நான்தான் மருமகள் என்று பத்துப் பேராவது வந்து நிற்கப் போகிறார்கள்" என்றுரைத்து, மீண்டும் நகைத்தாள் மாலினி.

இவன் தந்தையோடு பட்டது போதாதாமா? ஒப்புக்காக உதட்டை இழுத்துப் புன்னகை போலக் காட்டிவிட்டுச் சிறுவனைத் தூக்கிக் கொண்டு கிளம்பினாள் சௌமினி.

என்ன கண்ணன்! என்ன கோபிகைகள்! இவர்களுக்கு வேறு ஒரு நல்ல 'தீமே' கிடைக்கவில்லையாமா? ஒரே ஒரு ஆண்

பிள்ளை கண்ணனாம். சுற்றிச் சுற்றிப் பெண்கள் கூட்டம் குதித்துக் கும்மாளம் போடுவதாம்.

இதில் ராதை வேடத்துக்குப் போட்டியாம்! பாவம். பச்சைக் குழந்தைகள்! புத்தி அறிந்த வயதிலேயே அறிவு புல்மேயப் போய் விடுகிறது. இவர்களாவது சின்னக் குழந்தைகள்! ராதை என்றால் கதாநாயகியாக நிற்கலாம். ஆடை அணிமணிகள் அதிகம் பூண லாம் என்று கூட ராதை வேடத்துக்கு ஆசைப்படலாம்.

ஒருவேளை அப்படித்தான் ரஞ்சன் அவளையும் கணித் தானோ? அவனது பணத்துக்கும் அதனால் கிடைக்கக் கூடிய வாழ்க்கை வசதிகளுக்கும் ஆசைப்பட்டே சௌமினியும் அவனை நாடியதாக எண்ணியிருப்பானோ?

அன்று ராதையாகத் தன்னை உருவகப்படுத்தி மனம் மகிழ்ந் ததை எண்ணுகையில் இன்னும் உள்ளே கூசியது அவளுக்கு.

இந்த உலகத்தில் எத்தனை ஆயிரம் ஆண்கள்! லட்ச லட்ச மாய், கோடி கோடியாய் ஆண்மக்கள் இருக்கையில், ஏன்... ஏன்... அவள் மனம் அந்த மனோரஞ்சனிடம் மயங்கியே தீர வேண்டும்?

கடவுள் ஏன் இந்த அநியாயம் செய்தார்? அல்லது இது அவளது சொந்த முட்டாள்தனமா?

கிளறிவிடப்பட்ட கனல்போல அவளது நெஞ்சுக்குள் மீண் டும் நெருப்பு கொழுந்து விட்டு எரியலாயிற்று.

சின்னச்சின்ன விஷயங்கள் நின்று நிதானித்து, நன்றாக யோசித்து, ஒன்றுமில்லை, என்று ஒதுக்கிய விஷயங்கள் எல்லாம் ஓங்கி வளர்ந்து விசுவரூபம் எடுத்து மீண்டும் அவளை வாட்டலா யின.

''அம்மா, அப்பா எங்கே?'' என்று சித்தார்த்தன் கேட்டதும் சற்று நேரம் அவளுக்கு மூச்சுக்கூட விட முடியாமல் போயிற்று.

ரொம்பவும் பழக்கப்பட்டு விட்ட கேள்விதான்.

பேசத் தெரிந்ததில் இருந்து, குழந்தைகள் காப்பகத்துக்கு வரும் மற்ற பிள்ளைகளுடைய தந்தையரைப் பார்த்தும், அங்கே

மற்ற பிள்ளைகள் பெற்றவரைப் பற்றிப் பேசுவதைக் கேட்டும், அப்போதிலிருந்து அவனும் தொடங்கி விட்ட விசாரிப்புதான்.

'அப்பா ஊருக்குப் போயிருக்கிறார்' என்று பதில் கூறியும் பழக்கம்தான்.

இன்னும் வளர்ந்து, விவரம் புரிந்து கேட்கிறபோது, இருவருக்கும் ஒத்து வராததால் பிரிந்து விட்டோம் என்று மற்றவர்களிடம் அளப்பதையே இவனிடமும் சொல்லி முடித்து விடுவது என்றும் முடிவு செய்திருந்ததுதான்.

ஆனால் இன்று மகன் கேட்டதும் மனம் அஞ்சி அலை பாய்ந்து விட்டது.

அவன் நம்பாவிட்டால்? ஒத்துக் கொண்டு சும்மா இராமல், நான் அப்பாவை நேராகப் போய் பார்க்கப் போகிறேன் என்று கிளம்பினால்?

பாசம் வைத்துவிட்ட மனது அதன் விளைவுகளை எண்ணிப் பார்க்கக் கூட துணிவின்றி அஞ்சி நடுங்கியது.

"அம்... மாம்மா...! என்று கையைப் பிடித்து நிறுத்தினான் மைந்தன்.

"ஏ... என்னடா?" என்றபடி சுற்றுப்புறத்தைக் கவனித்தாள் சௌமினி. வீடு இருக்கும் தெருமுனைக் கடை! எப்படி வந்தாள்!

"சாக்லெ..ட்..டும்மா!"

தலையைச் சரித்து, உதட்டோரம் சின்னக் குறும்புச் சிரிப்பும், கண்களின் குறுநகையை மீறிய கவனமுமாகப் பிள்ளை கேட்ட போது தன்னை மீறி வந்த முறுவலோடு, சாக்லெட்டை வாங்கிக் கொடுத்து விட்டு உடனே கலங்கினாள்.

இதே சாகசம்தான்.

ஒரு சின்ன, ரொம்ப ரொம்பச் சின்ன சலுகை. எடுத்துக் கொள்ளலாமா? இந்தப்பட்டு விரல்களில் ஒரு கட்டி முத்தம்... முருகா! என்ன இது!"

''அம்மாம்மா, சில்லறை வாங்காமப் போறீங்களேம்மா'' என்று கடைப் பையன் ஓடிவந்து மீதிக் காசைக் கொடுத்த போது உள்ளூர 'அய்யோ!' என்றிருந்தது அவளுக்கு இன்னமுமா இந்தப் பாதிப்பு?

அதிலும், சற்றும் தகுதியற்ற ஒருவனின் நினைவில்?

உதட்டை இழுத்து, முறுவலித்து, நன்றியொன்று உரைத்து விட்டு, மேலே நடந்தபோது உள்ளூர வெகு திடமாய் ஓர் உறுதி செய்து கொண்டாள். இனிமேல் கண்ட கதையையும் நினைத்து மனதை அலைய விடக்கூடாது.

பெரிய்...ய உறுதிதான்.

வீடு வந்து சேர்ந்து வெதுவெதுப்பாய்த் தண்ணீரைச் சுட வைத்துப் பிள்ளைக்கு உடம்பு கழுவத் தொடங்கும்போதே மீண் டும் அலை பாய்தல் தொடங்கிவிட்டது.

காரணம் ஒரு சிறு மச்சம். சித்தார்த்தனின் மார்பில் நட்சத்திர வடிவில் அமைந்த.'வெள்ளை மச்சம்' அதைக் கண்டதும் உடனே மனம் கலைந்து போயிற்று.

இதை அவனிடம் பார்த்திருக்கிறாள். ஒருநாள். ஒரே ஒரு நாள்.

''பாரதியார் பாடல்களில் 'வீணையடி நீ எனக்கு' மிகவும் பிரமாதம் தெரியுமா? சும்மா சொல்லக் கூடாது. மனிதர் அனுப வித்துப் பாடியிருக்க வேண்டும். வீணையை இரு கைகளாலும் அணைத்து, மெட்டுக்களை வருடி.... தந்திகளை மீட்டி...

ரஞ்சன்.... ப்ளீஸ்...

''அய்யோ! அம்மா, அம்மா! கண்ணு எரியுதே! கண்ணுல சோப்பும்மா... என்ற பிள்ளையின் அழுகை மீண்டும் அவளை நிகழ்காலத்துக்குக் கொண்டு வந்தது.

தன் கவனமின்மைக்காகத் தன்னையே கடிந்து கொண்டு, மகனைச் சமாதானப்படுத்தியபடியே குளிப்பாட்டித் துடைத்து, உணவூட்டித் தூங்க வைத்து, என்று முழு கவனத்துடன் சித்தூக் குட்டியின் தேவைகளைக் கவனித்தாள்.

மகன் தூங்கிவிட்ட பிறகோ மனம் மீண்டும் பழைய கதைக்கே ஓடியது. எவ்வளவோ தடுத்துப் பார்த்தும் முடியாமல், எண்ணத்தை அதன் போக்கிலேயே விட்டு விட்டு அப்படியே ஓய்ந்து போய் உட்கார்ந்தாள்.

வெறு முணுமுணுப்பாய் ஒலித்த அவளது மறுப்பைக் காதில் விழாதது போல ஒதுக்கி, சௌமினியின் கரங்களை மாலைபோலத் தன் கழுத்தில் தூக்கிப் போட்டுக் கொண்டு, "பூணு வடம் நீ எனக்கு" என்று கவிதை சொன்னவன் அடுத்து, "புது வைரம் நான் உனக்கு" என்று ஒரு மெல்லிய சங்கிலையை அவள் கழுத்தில் அணிவித்து அதன் சிறு டாலரைத் தூக்கிக் காட்டினான்...

ஒற்றையாய்ப் பருமணல் போல ஒரு கல்.

உள்ளே ஒன்றும் இல்லாத நீர்க்குமிழ் போலத் தோன்றிய கல். லேசான அசைவில், விளக்கின் ஒளிபட்டு, நீல நெருப்பை உமிழ்ந்தது.

மெய்யாகவே வைரம்!

அவளுக்காக? ஏன்?

பிரமிப்பும் கேள்வியுமாகக் கண் அகல மனோரஞ்சனை நோக்கியவள் மேலும் திகைத்தாள்.

அந்த வைரத்துக்குப் போட்டியான பளபளப்பு அவன் விழிகளில்!

அந்த விழிகளை நேருக்கு நேராக நோக்கி நிற்க முடியாமல் தாழ்ந்த பார்வையில் அந்த நட்சத்திர மச்சம் பட்டு அவளை மேலும் மூச்சடைக்கச் செய்தது.

எப்போதும் ஆடைக்குள் மறைந்திருக்கும் இந்த மச்சம் இப்போது எப்படிப் பார்வையில் படுகிறது என்பது புரியாத அளவு அவள் முட்டாள் அல்ல.

கூடவே, மனோரஞ்சனின் உணர்ச்சிகளை ஊகிக்க முடியாத அளவு ஜடமும் அல்ல.

அவளிடமும் அதே உணர்ச்சிகளின் ஆளுகைதானே!

அன்றைய தினத்தை என்னவென்று சொல்வது? சௌமினிக்கு ஞானோதயம் ஆன நாள் என்பதா? அல்லது அவள் சகலத்தையும் இழந்துவிட்ட நாள் என்று கூறுவதா?

அப்படி அனைத்தையும் இழந்தாள் என்று சொல்வதற்கும் இல்லைதான். குறைந்தபட்சமாகத் தன் பெண்மையைக் காத்துக் கொண்ட திருப்தி ஒன்று உண்டுதான்.

ஆனால் மகிழ்ச்சி, ஆனந்தம், இன்பம், எதிர்பார்ப்பு, ஆசை என்று மற்ற அத்தனையும் இழப்பாகிவிட்ட காரணத்தால், அந்தத் திருப்தியால் அவளால் சற்றும் திருப்தி காண முடியாமல் போயிற்று.

## 3

இந்த ஐந்தாண்டு காலத்தில் பலமுறை பல நூறுதரம் சௌமினி அன்றைய நிகழ்ச்சி பற்றி எண்ணிப் பார்த்தது உண்டு. எண்ண, எண்ண வேதனைதான் என்றாலும் பிடிவாதமாய் அதை மனதில் கொணர்ந்து யோசித்துப் பார்த்தது உண்டு.

அன்று அவள் நடந்து கொண்ட விதம் சரிதானா? எந்த இடத்திலாவது தவறு செய்தாளா? மாறாக, செய்தது சரியென்றால் இவ்வளவு வேதனை ஏன் உண்டாக வேண்டும்?

யோசித்து யோசித்து, அணுஅணுவாய்ப் பிரித்து, அலசி, ஆராய்ந்து, சோர்ந்து, இனியும் இதை நினைத்தால் பைத்தியம் பிடித்து விடக்கூடும் என்று முயன்று ஒதுக்கியதும் உண்டு. எத்தனையோ தடவைகள், அப்படி ஒதுக்க முடியாமல் தனியாய்த் தவித்துவிட்டு, கூடவே இருந்து கொல்லும் இந்த எண்ணங்களைத்

தவிர்ப்பதற்காகத் தனியாய் இருக்க பயந்து, தனிமையைத் தவிர்த்ததும் உண்டு.

ஆனால் இன்று, இந்த இரவில் யாரிடம் போய் நின்று தனிமையைத் தவிர்ப்பது? ஒன்றும் முடியாமல் பழைய நினைவுகளிலேயே ஆழ்ந்து போனாள் அன்றுபட்ட காயத்தின் வலியை அதே அளவில் அனுபவித்தபடி.

அன்று, ஓரளவு தன் தவறாக செளமினி எண்ணியது ஒன்றே ஒன்றுதான். மனோரஞ்சன் அணிவித்த கையோடு அந்தச் சங்கிலியைச் கழற்றி அவன் கையிலேயே கொடுத்திருக்க வேண்டும். அப்படிக் கொடுத்திருந்தால் அவள் எப்படிப்பட்டவள் என்பது அவனுக்குப் புரிந்திருக்கும் மேலே இவ்வளவு காயப்படாமல் தப்பியிருக்கலாம்.

ஆனால், அவனது வெற்று மார்பை பார்த்த அதிர்ச்சியும், ஏதோ புரியாத ஒரு கவர்ச்சியுமாக, அவள், சற்றுத் தடுமாறி நின்றதை மனோரஞ்சன் சம்மதமாய் எண்ணி, அவளைத் தழுவி முத்தமிடத் தொடங்கி விட்டான்.

அப்போதும் மனோரஞ்சனைப் பற்றிச் செளமினி தவறாக எண்ணிவிடவில்லை. ஏன், எதையும்தான் எண்ணத் தோன்றவில்லை அவளுக்கு. மனதைக் கவர்ந்தவனின் முதல் அணைப்பில் தன்னை மறந்து நின்றவளுக்கு அந்தப் பரவசம் தவிர வேறு எதுவுமே தெரியவில்லை.

ஆனால் ஓரேயடியாய் அப்படியே நின்று விடவும் இல்லை.

சிறுவயதுமுதல் மனதில் பதிந்து விட்ட கோட்பாடுகளுக்கு ஒரு தனி வலிமை உண்டுபோலும். மனோரஞ்சன் வெகுவாக அத்துமீறத் தொடங்கியபோது, தானாக உடல் எதிர்த்து விட்டது.

உடலோடு மனமும் மெல்ல விழித்துவிட, ''வேண்டாம் ரஞ்சன். இ.... இதெல்லாம் இதெல்லாம் இப்போது.. த... தப்பு. '' என்று அவன் பிடியிலிருந்து விலக முயன்றபடி திக்கித் திணறினாள் செளமினி.

''ம்கூம் இதெல்... லாம் இப்போது மட்டுமல்ல, எப்போதுமே தப்பு கிடையாதாக்கும்'' என்று சரசமாகக் கூறியபடியே அவளை மீண்டும் தன் பிடிக்குள் இருத்த முயன்றான் மனோரஞ்சன்.

பெருமளவு சுயஉணர்வு திரும்பிவிட, ''ஊகூம், ரஞ்சன் திருமணத்துக்கு முன்பாக இதெல்லாம் தப்பு கூடாது'' என்று தெளிவாக ஆனால் கொஞ்சலாகவே மறுத்தாள் அவள்.

ஒரு சிறு அமைதிக்குப் பின், ''யாருடைய திருமணம்?'' என்று ஒரு மாதிரிக் குரலில் மனோரஞ்சன் கேட்கவும், ஒருகணம் சௌமினிக்கு ஒன்றுமே புரியாது போயிற்று.

இவன் என்ன சொல்கிறான்?

வயிற்றுக்குள் ஏதோ பிசைய, ''ரஞ்சன், நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்று மெல்லிய குரலில் வினவினாள். நம்பிக்கையும் பயமுமாக அவளது அகன்ற விழிகள் மேலும் விரிந்து அவனையே நோக்கின.

ஏதோ சொல்ல வாயெடுத்துவிட்டு, சற்றுத் தயங்கி, தோளைக் குறுக்கி, பேசாதிருந்தான் அவன்.

சௌமினி பயந்து போனாள். ''ரஞ்சன், ப்ளீஸ், நீங்கள் நீங்கள் ஏன் அப்படிக் கேட்டீர்கள்? நான்.. நாம் திருமணம் செய்து கொண்டு வாழப் போவதாக... ரஞ்சன், நான் நம் திருமணம் பற்றி பேசினால் நீங்கள்... ஏதாவது சொல்லுங்கள், ரஞ்சன். என்னவென்று சொல்லுங்கள்.'' என்று கலக்கத்துடன் வினவினாள்.

லேசான புருவச் சுளிப்புடன் ஒரு சிகரட்டை எடுத்துப் பற்ற வைத்தான் மனோரஞ்சன். ''லுக் சௌமினி, நான் எப்போதாவது உன்னைத் திருமணம் செய்து கொள்வதாகச் சொல்லியிருக்கிறேனா?'' என்று குரலில் சிறு கண்டிப்புடன் கேட்டான்.

அவன் பேசும் மொழியே புரியாது போலத் திகைத்தாள் சௌமினி. சொல்லவில்லையா? சொல்லவே இல்லையா?

வேவகமாக யோசித்து விட்டு, ''காதலிப்பதாகச் சொன்னீர்களே! ஒருமுறையல்ல, பலமுறை சொல்லியிருக்கிறீர்களே!'' என்றாள் அவள்.

''இல்லையென்று இப்போதும் சொல்லவில்லையே. உன்னிடம் எனக்கு மிகுந்த காதல்தான். உன் அழகில், ஒயிலான நடையில், எழிலான உடல் அமைப்பில், சிரிப்பில் என்மனம் அப்படியே உன்வசம்தான். உன்னோடு காதல் செய்ய எனக்கு மிகமிக ஆசையே!''

திகைப்பு சினமாக மாற, ''அதாவது, காதல் செய்ய ஆசையே தவிரக் காதலிக்க விருப்பம் இல்லை. அப்படித்தானே?'' என்றாள் அவள் மிடுக்காக.

''இரண்டும் ஒன்றுதான்,'' என்றான். அவனும் எரிச்சலுற்று.

''இல்லை பெரியவேறுபாடு இருக்கிறது!'' என்றாள் சௌமினி அழுத்தம் திருத்தமாக. ''முன்னது வெறும் காமம். உடல் ஆசை. பின்னது மரியாதைக் குரியது. அதன் பெயர்தான் காதல்!'' என்று அறிவித்தாள்.

''உன்... னதக் காதல்! அப்படியா? அப்படியே வைத்துக் கொள்ளலாம். உன் உன்னதக் காதலின் செயல்பாடு சன்னியாசி வாழ்க்கையா? அந்தக் காதலில் உடலாசை அதாவது காமம் கலப்பதே இல்லையா? அல்லது தாலி என்று ஒரு லைசன்ஸ் தகட்டை மாட்டியதும் காமம், காதலாக உருமாறிவிடுமா'' அவன் எகத்தாளமாக அடுக்கினான்.

பதில் சொல்லத் தெரியாமல் சற்றுத் திணறினாள் சௌமினி. இந்த மாதிரி விஷயங்கள் எல்லாம் அவளுக்குப் பேசிப் பழக்கம் இல்லை. அதிர்ச்சியும் ஆத்திரமுமாக காதல், காமம் என்றெல்லாம் பேசினாளே தவிர, மேலமேலே அதுபற்றிப் பேசுவது கூசத் தொடங்கிவிட்டது.

ஆனால் இவனுக்குப் பதில் சொல்லாமல் விடவும் முடியவில்லை. எனவே, ''யாரும் யாருடனும் போகலாம் என்று விலங்

குகள் போல வாழ்ந்த கற்காலப் பழக்கங்கள் மாறி, ஒருவனுக்கு ஒருத்தி என்று நாகரீகம் வளர்ந்ததன் அடையாளம் திருமணம், இருமனங்களை இணைக்கும் புனிதமான பந்தம்'' என்று தான் அறிந்த மட்டில் விளக்கினாள்.

''ஒருவனுக்கு ஒருத்தி என்ற நாகரீகமா? ஒரேஒருத்தர் நாலைந்து கல்யாணம் செய்கிறார்களே; அப்போது உன் நாகரீகத் திருமணத்தில் எந்த அளவு நாகரீகம் மிச்சமிருக்கும்? உன் புனித பந்தம் எத்தனை மனங்களை இணைக்கும்?''

''இரண்டு கல்யாணம் செய்தாலே இப்போது கம்பி எண்ண வேண்டும். அதுகூடத் தெரியாமல் இருக்கிறீர்களே!'' என்று குட்ட முயன்றாள் சௌமினி.

''அய்யோடா! நான் ஒன்றன்பின் ஒன்றாகச் செய்வதைச் சொன்னேனம்மா!'' என்றான் அவன் பயந்தவன் போல. ''திருமணம், விவாகரத்து; மீண்டும் திருமணம், மீண்டும் விவாகரத்து. அப்படிச் செய்வது... என்று அக்கறையோடு விளக்கினான் மனோரஞ்சன்.

அவன் கண்களில் கேலியைக் காணவும், அவளுக்குக் கொதித்தது. ''நீங்கள் விதண்டா வாதம் செய்கிறீர்கள்!'' என்றாள் ஆத்திரத்துடன்.

''உனக்குப் பதில் சொல்லத் தெரியாவிட்டால் விதண்டா வாதம் என்பதா? உனக்குத் தெரியாதென்றால் கேட்டுக் கொள். நாகரீகம் மிகுந்தவை என்று சொல்லப்படுகிற மேலை நாடுகளில் திருமணம் இல்லாமல் சேர்ந்து வாழ்வது சர்வ சாதாரணமாக ஒத்துக் கொள்ளப்பட்ட - ஒத்துக் கொள்ளப்படுகிற ஒன்று. உன் புனிதத் திருமண லைசன்ஸ் இல்லாமலே இந்தக் காதல் கூட்டில் பிறக்கும் பிள்ளைகளுக்கும் எல்லாவித உரிமைகளும் உண்டு. தெரியுமா?''

''நாம் இருப்பது மேல்நாட்டில் அல்ல. இந்தியாவில். பண்பாடு மிகுந்த தமிழ்நாட்டில்! அது தெரியுமா உங்களுக்கு?'' என்று மடக்கினாள் சௌமினி.

''ஏன், இங்கேமட்டும் அந்தப் பழக்கம் இல்லை என்கிறாயா?''

இல்லை என்று அடித்துப் பேசமுடியாமல் தயங்கினாள் அவள். புலியைப் பார்த்துப் பூனை சூடு போட்டுக் கொண்ட கதையாக வேண்டாததையும் காப்பியடிக்க என்று இருக்கிறார்கள் தானே. ஹிப்பியிசம், போதை மருந்து என்று...

கையிலிருந்த சிகரெட்டைக் கிண்ணத்தில் போட்டுவிட்டு அவள் அருகே வந்தான் மனோரஞ்சன். அவள் கையைப் பற்றி லேசாக வருடியபடியே பேசினான். ''பார், சௌமினி, இந்த அனாவசியமான வாக்குவாதம் நமக்கு வேண்டாம்! எனக்கு உன்னிடமும் உனக்கு என்னிடமும் ஆசை இருக்கும்போது அதை நிறைவேற்றிக் கொள்ளக் கண்ட தளைகளையும் இழுத்துப் பூட்டிக் கொண்டாக வேண்டுமா? அவசியமே இல்லை, கண்ணம்மா! பாரதியார் என்ன சொல்கிறார் பார். 'ஆத்திரம் கொண்டவர்க்கு சாத்திரம் எதுக்கடி?' என்கிறார். அவ்வளவு பெரிய வரகவி, தெரியாமலா சொல்லுவார்? கண்ணைத் திறந்து நம்மைச் சுற்றிலும் நன்கு பார். எத்தனை எத்தனையெத்தனை உயிரினங்கள் எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லாமலே இணைந்து வாழ்கின்றன....''

விரல்களின் வருடலும், வெல்வெட் குரலின் ஓதலுமாக ஏதோ மந்திரத்தால் கட்டுப்படுவது போல உணர்ந்தாள் சௌமினி. இல்லை. இவனைப் பேசவிட்டால், அதைக் கேட்டுக் கொண்டு நின்றால் அவளை முட்டாளாக்கி விடுவான்.

சடக்கெனக் கையை விலக்கிக் கொண்டு, ''சாரி, மனோரஞ்சன் கல்யாணத்தை ஒரு கட்டுப்பாடாகவோ, தளையாகவோ நான் கருதவில்லை. அத்தோடு, திருமணம் என்கிற புனிதமான உறவுக்குப் பிறகே என்னை ஓர் ஆண் தொடுவதை நான் அனுமதிக்க முடியும்.'' என்றாள் அழுத்தம் திருத்தமாக.

''எந்த ஆண்?'' என்றான் அவன் கோணலாகப் பார்த்து.

''என்னது?'' என்று ஒருகணம் திகைத்தவள், உடனே புரிந்து, ''என்ன சொன்னீர்கள்?'' என்று ஆத்திரத்துடன் கையை ஓங்கி விட்டாள்.

ஓங்கிய கரம் இறங்குமுன், இலகுவாகப் பற்றி நிறுத்தினான் மனோரஞ்சன். ''நீ அடித்தால் கன்னத்தைக் காட்டிக் கொண்டு நிற்க நான் என்ன முட்டாளா?'' என்றபடி அவளை உறுத்தவன், குரலும் முகமும் மாற, ''சௌமி, உண்மையைச் சொல்லு. உனக்கு நான் மெய்யாகவே வேண்டாமா, கண்மணி?'' என்று மென்குரலில் கேட்டு, பற்றியிருந்த கைவிரல்களில் மிருதுவாய் முத்தமிட்டான்.

இவனை வேண்டாம் என்று சொல்ல வேண்டியிருப்பது எவ் வளவு வேதனை...

அவள் தயங்கிய போது மனோரஞ்சன் ஒரு தவறு செய்தான்.

சரசப் பார்வையுடன், ''நீ இம்மென்றால் இதுபோல இன்ன மும் தருவேன்.'' என்று விழி அசைவால் அவள் கழுத்தில் சற்று முன் அணிவித்த வைரத்தைச் சுட்டிக் காட்டினான்.

இதுபோலவா?

இது தரப்பட்டதன் காரணம் அவன் வாயாலேயே ஐயத்துக்கு இடமின்றித் தெளிவாக்கப்பட்டதும், வைரமும் சங்கிலியும் மேனி யில்பட்ட இடமெல்லாம் நெருப்பாய்ச் சுட்டது அவளுக்கு.

சட்டெனக் கையை உதறி விடுவித்துக் கொண்டவள், அவசர மாகச் சங்கிலியைக் கழற்றினாள். அதை அவன் கையில் கொடுக்க வும் மனமற்று அருகில் இருந்த மேசைமேல் வைத்தாள்.

''பத்திரமாக எடுத்து வைத்துக் கொள்ளுங்கள் மிஸ்டர் மனோரஞ்சன். உங்களைப் போல உயர்ந்த கொள்கைகளை உடைய எவளாவது ஒருத்தி வருவாள். அப்போது தவறாமல் உதவும்.'' என்றாள் எகத்தாளமாக.

கண்கள் கடினமுற, ''நிச்சயமாக - சர்வ நிச்சயமாக வரத்தான் போகிறாள்.'' என்றான் அவன். ''ஆனால் ஒருத்தியல்ல. ஓராயி ரம் பேர். உலகத்தில் நீ ஒருத்திதான் பெண் என்று இல்லை, சௌ மினி. கடலில் எத்தனையோ மீன்கள். எனக்கேற்ற படி, என்னோடு ஒத்துழைக்கக் கூடிய எத்தனையோபேர் இருப்பார்கள்.'' என்றான் அவனும் ஏளனமாகவே.

ஓராயிரமா? இவனைத் திருப்பி அடிக்க வேண்டுமே!

"என்னது? மீனா?" என்று ஆச்சரியமாய்க் கண்களை அகல விரித்தாள் சௌமினி." அடேயப்பா! பரிணாமத்தில் நீங்கள் இத்தனை படிகள் கீழே இறங்கியிருப்பீர்கள் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை மனோரஞ்சன். இனிமேல் பறவையாய், பாம்பாகி, பல்மிருகமாகி... அம்மாடியோவ்! மனிதநிலை அடைவதற்கு உங்களுக்கு எத்தனை பிறவிகள் எத்தனை கோடிப் பிறவிகள் தேவைப்படுமோ தெரியவில்லையே! ஆனால் அதுவரையும் உங்கள் தகுதிக்குத் தகுந்தாற்போல தேடிக் கொள்வது சரிதான். போங்கள் போய் நேரத்தை வீணாக்காமல் மீன் பிடியுங்கள். இன்னமும் நான் இங்கேயே வந்து உங்கள் வேலையை - மீன்பிடிக்கிற வேலையைச் சொன்னேன் கெடுப்பது சரியில்லை. பை!" என்றவள் அதே மேஜை மேல் இருந்த கைப்பையை எடுத்துக் கொண்டு மடமடவென்று அங்கிருந்து வெளியேறினாள். நிமிர்வோடுதான்.

கல்லூரி விடுதியை அடைந்து, அவளது அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்ற பிறகும்கூட அந்த வீராப்பு அப்படியேதான் இருந்தது.

அவனுக்குச் சரிக்குச் சரியாகப் பதில்பேசி மட்டம் தட்டி ஏதோ பெரிதாக சாதித்துவிட்ட மாதிரிக் கர்வம்தான்; என்னை யாரென்று நினைத்தான் என்று ஆக்ரோஷமான அலட்சியம்தான்.

ஆனால் அது சில மணிநேரம் தான்!

சுற்றியிருந்த ஒலியும் ஒளியும் மறைந்து இருளும் நிசப்தமும் சூழ்ந்த உடனேயே மனது கிடந்து தவிக்கத் தொடங்கி விட்டது.

எதையோ ஏதோ பெரும் செல்வத்தை கைநழுவ விட்டு விட்டாற்போல - வாழ்வின் அடிப்படைத் தேவை அனைத்தையும் இழந்துவிட்டது போன்ற ஒரு வேதனையில் சௌமினி துடித்துப் போனாள்.

அது இழப்பே அல்ல; அழிவின் விளிம்பு வரை சென்று விட்டவள் உரிய தருணத்தில் புத்தி வந்து தப்பித்திருக்கிறாள்'என்

பது நன்றாகவே புரிந்தபோதும், அந்த வேதனை சற்றும் குறைய மறுத்தது. விசித்திரமான வகையில் அதிகமாயிற்று என்றே சொல் லலாம்.

அவனது இருப்பிடம் தெரியும். கிளம்பி அங்கே சென்று விடலாமா? சிறுவயது முதல் கல்லில் எழுத்தாய் மனதில் பொறிக் கப்பட்டிருக்கும் கோட்பாடுகளைக் கழற்றி எறிந்து விட்டு வந்து விட்டேன். உன் விருப்பம் போல நடந்து கொள்கிறேன் என்று அவனிடம் போய்விடலாமா என்று ஒருதரம் தோன்றவும் சௌ மினி ரொம்பவும் பயந்து போனாள்.

அவளா இப்படியெல்லாம் நினைக்கிறாள்!

சென்னையில் இருக்கவே அஞ்சி, மறுநாளே ஊருக்குக் கிளம்பிச் சென்றாள்.

குற்றுயிராய்ப் பாட்டியின் மடியில் தஞ்சம் புகுந்ததையும், அங்கேயே கிடந்து தன்னைத் திடப்படுத்திக் கொண்டதையும் நினைக்கையில் சௌமினிக்கு இப்போதும் ஆச்சரியம்தான்.

தாமிரபரணி ஆறும், ஒரு புறமாய் முருகன் கோவிலும், ஆற் றுக்கு மிக அருகிலேயே சிந்து பூந்துறையில் பாட்டியின் வீடும் அவளது மனப்புண்ணை ஆற்ற ஓரளவு உதவியபோதும் பாட்டி யின் அன்புதான் அவளைப் பெருமளவு நிமிர வைத்தது.

அந்த சிலமாதங்கள், பெற்ற தாயாருக்கும் மேலாக வைத்து துணையிருந்து, தேற்றிய பாட்டியை நினைக்கையில் இன்றைக்கும் சௌமினியின் நெஞ்சு கசிந்தது.

சௌமினியின் பெயர்க் காரணம்கூட ஓரளவுக்குப் பாட்டி தான். தந்தைவழிப் பாட்டி. இப்போது தாய் தந்தையற்ற சௌமி னிக்கு பாட்டிதான் சகலமும்.

மாதா, பிதா, குரு, தெய்வம் எல்லாம்.

தான் பெற்ற பிள்ளைகளின் இழப்பைக் கூட ஒதுக்கி, சிறுவய திலிருந்தே தாய்க்குத் தாயாய், தந்தைக்குத் தந்தையாய் ஒற்றை

ஆளாய் இருந்து செளமினியை வளர்த்து ஆளாக்கியதோடு மட்டு மின்றி, மனம் ஒடிந்து அரை உயிராய் வந்து விழுந்தவளை மீண் டும் நிமிரவைத்தாளே! அதற்காகவே பாட்டிக்குக் கோயில் கட்டிக் கும்பிடலாம்!

கோவில் கட்டும் அளவு சக்தியில்லாதபோதும், தினமும் படுக்குமுன் பாட்டியின் படத்தை எடுத்துப் பார்த்துக் கொண்டிருப் பது செளமினியின் பழக்கம். அதிலும் மனது கலங்கும் சமயங்க ளில் படத்தைக் கையிலேயே வைத்துக் கொண்டிருப்பாள்!

பாட்டி இருந்தபோது மடியில் விழுந்தாள். இப்போது படமே கதியாயிற்று.

## 4

**செள**மினிக்கு மட்டுமில்லாது, அவளுடைய பெரியப்பா மகனுக்கும் பாட்டிதான் எல்லாம். அப்படி ஆகநேர்ந்தது விதியின் கொடுமை என்றுதான் சொல்ல வேண்டும்.

வழக்கமாக, விடுமுறைதோறும் செளமினியின் குடும்பமும் அவளுடைய பெரியப்பாவின் குடும்பமும் சிந்து பூந்துறைக்கு வந்து விடும். இரு குடும்பத்துடைய தலைவர்களைப் போலவே தலைவியரும் உடன்பிறந்தவர்கள் எனவே போட்டி பூசல் என்று இராது உருவ அமைப்பு, பழக்க வழக்கங்கள் எல்லாம் பெரும்பா லும் ஒன்றுபோல் இருக்கும். பாசமும் அதிகம்.

அண்ணன் தம்பி இருவருமே குடும்பத்தை முதலில் பெற் றோரிடம் அனுப்பி விட்டு, லீவு முடியும் தருணம் பத்து நாட்கள் அவர்களும் வந்து சேர்ந்துவிடுவார்கள்.

அதுவரை, தாமிர பரணியில் மிச்சம் மீதி இருக்கும் தண்ணீ ரையும், ஆற்றங்கரையையும் கலக்கிக் கொண்டு இருக்கிற பிள்ளை களோடு எல்லோருமாய்த் திருச்செந்தூர், கன்னியாகுமரி, குற்றா லம் என்று ஒரு சுற்று சுற்றி விட்டு அவரவர் இருப்பிடத்துக்குக் கிளம்புவார்கள். கண் கலங்க, தாத்தாவும் பாட்டியும் விடை கொடுப்பார்கள்.

ஆண்டுதோறும் இது வழக்கம்.

அந்த ஆண்டு அப்போது சௌமினிக்குப் பத்து வயது - அந்த ஆண்டு தொடங்கியதுமே ஒருதுக்கம் நேர்ந்து விட்டது. தாத்தாவின் இழப்பு.

இழப்புக்கு வந்து, அதுபற்றிய சடங்குகள் முடிந்தபின், சிந்து பூந்துறையில் தனியே இருக்க வேண்டாம் என்று பாட்டியையும், சௌமினியையும் பெரிய தந்தை கோவைக்கு அழைத்துச் சென் றார்.

சூழ்நிலை உணர்ந்து இங்கிதமாக நடப்பதில் பாட்டியை யாரும் மிஞ்ச முடியாது.

வழக்கம்போல லீவு தொடங்கிவிட, கடந்த ஆண்டு நினை வும், அதுபோல மீண்டும் சிந்துபூந்துறை செல்ல மனமற்ற நிலை யும், அதேசமயம் லீவு நாளில் வீட்டில் சும்மா இருப்பதில் சலிப்பு மாக எல்லோரும் வளையவருவதை உணர்ந்து, கொஞ்சநாள் சின் னமகனுடன் இருக்க ஆசை என்று கூறி எல்லோரையும் அழைத் துக் கொண்டு சென்னைக்கு வந்தாள்.

தாத்தா நினைவில் முதலில் இங்கேயும் கொஞ்சம் மந்தமான சூழ்நிலைதான். ஆனால் அதைத் தூண்டிவிட்டுக் கொண்டு இரா மல், பாட்டியே மக்கள் மருமக்களையும், பேரன் பேத்திகளையும் உற்சாகப்படுத்தவும் விரைவிலேயே விடுமுறை களை அங்கும் வந்துவிட்டது.

அங்கே சுற்றியதுபோலவே, இங்கேயும் எலுமிச்சம் பழசா தம், புளியோதரை என்று கலந்த சாதங்களை தகுந்த வியஞ்சனங்க

ளுடன் செய்து எடுத்துக் கொண்டு மகாபலிபுரம், கோவளம், பூண்டி என்று சுற்றினார்கள்.

கடைசியாக அன்று ஏரிக்குப் போனார்கள். படகு விட்டார் கள்; சாப்பிட்டார்கள். மீண்டும் படகு விடக் கிளம்பினார்கள்.

முதலில் சுற்றிவந்த போது பாட்டிக்குத் தலை சுற்றியது என்று பாட்டி கரையிலேயே இருந்து விட்டாள். பாட்டியைத் தனியே விட மனமற்று, சௌமினியும் பாட்டியோடு கூடவே உட்கார்ந்து விட்டாள். கடைசி நேரத்தில் தம்பியோடு சண்டை போட்டுக் கொண்டு, மின்னியும் பெரியப்பா மகள் அவளும் தம்பி இருக்கும் படகில் ஏறமாட்டேன் என்று கரையில் தங்கிவிட்டாள்.

மின்னியின் பெயரும் சௌமிதான். சௌதாமினியம்மாள் என்ற பாட்டியின் பெயரை இரு வீட்டின் முதல் பெண்களுக்கும் வைக்க வேண்டும் என்று இருமகன்களுக்கும் ஆசை. ஆனால் 'சௌதாமினி' என்று வைத்தால் அது 'சோதா' என்று பிறர் கேலி செய்ய இடமளிக்கக் கூடும் என்ற எண்ணத்தில் சற்றுச் சுருக்கி சௌமினி என்று வைத்தார்கள். பெரியம்மா தன் மகளை 'மின்னி' என்று அழைப்புக்குப் பழக்கிவிட, அடுத்தவள் 'சௌமி' யானாள்.

மின்னி, சௌமியை விட மூன்று வயது பெரியவள்.

அவள்தான் கோபத்தில் முறைத்துப் பார்த்துக் கொண்டி ருந்த அவள்தான் முதலில் கண்டுபிடித்தாள். ''படகு என்னவோ போல் சுற்றுகிறது' என்றவள் பதட்டத்துடன் எழும்போதே படகு கவிழ்ந்து விட்டது.

அதிகப் பாரம் என்றார்கள்; நீர்க் கொடிகளில் சிக்கிக் கொண் டது என்றார்கள்; சுழல் உள்ளே இழுத்துவிட்டது என்றார்கள். கீழே சேறுவேறு. கடைசியில் உயிரற்ற உடல்களை மட்டுமே மீட்க முடிந் தது.

மின்னி, சௌமினியை விட மூன்று வயது பெரியவள். சின் னக் குழந்தைபோல 'ஓ' என்று கத்தி அழுவாள். சௌமினி பாட்டி யைத் தொட்டுக் கொண்டே அருகிலேயே இருப்பாள்.

இருவரையும் அரவணைத்துக் காத்தவள் பாட்டிதான்.

ஏற்கனவே சமீபத்தில்தான் கணவனை இழந்தவள்; கண நேரத்தில் மலைபோல இரு மகன்களையும், மருமகள்களையும், நான்கு பேரக் குழந்தைகளையும் பறிகொடுத்த பாட்டிக்கு எப்படி இருந்திருக்கும் என்று, பிறகு சற்று வளர்ந்த பின் சௌமினி பலமுறை எண்ணி உருகியிருக்கிறாள்.

ஆனால் தன் வேதனையை எல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு, இரு பேத்திகளையும் தேற்றிப் பாதுகாப்பதிலேயே சௌதாமினி யம்மாள் தனது முழுக் கவனத்தையும் செலுத்தினாள்.

இவ்வளவு வேதனைக்கும் நடுவில், நல்ல வேளையாக, பணம் பெரிய பிரச்சினையாகி விடவில்லை.

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் பணம், பிராவிடண்ட் பண்ட், கிரா ஜுவட்டித் தொகை என்று இரு அப்பாமார் வழியிலுமே ஓரளவு பணம் கிடைத்தது.

அதை இரு பேத்திகளுக்காக, பாங்கில் டெப்பாசிட் செய்து, சிக்கனமாக வாழ்ந்து, அந்த வட்டியிலும், கணவர் வைத்துவிட்டுப் போனதிலுமாகப் பேத்திகளை நல்லபடியாகவே வளர்த்தாள் அந் தப் பெரியவள்.

மற்ற இடங்களில் தனியே இருந்து மலைத்து மலைத்துச் செயல்பட மனமற்று, மீண்டும் சிந்துபூந்துறைக்கே பேத்திகளை அழைத்துச் சென்று விட்டாள். பழகிய இடத்தில் செயல்படுவது அவளுக்கு எளிதாக இருந்தது.

பேத்திகள் படிப்பைத் தொடர்ந்தனர். பகலில் வெளியே சென்று படிப்பதும், மாலையானால் கோழிக்குஞ்சு போலப் பாட்டி யின் சிறகுக்குள் அடைவதுமாக நாலு ஆண்டுகள் நகர்ந்தன.

ஆனந்த ஆரவாரம் இல்லாவிட்டாலும் வாழ்க்கை அமைதி யாகக் கழிந்தது.

ஆனால் அந்த வாழ்வில் மின்னிக்குத் திருப்தி குறைந்து போயிற்று.

தன் அழகில் பெரும் நம்பிக்கை அவளுக்கு. ''மாடலிங்' செய்யப் போகிறேன்'' என்றாள் சௌமினியிடம். ''பணம் நிறைய வருவதோடு வேறு வசதிகளும் உண்டு. சொன்னால் பாட்டிக்குப் புரியாது. 'மாடலிங்' என்றாலே தப்பாக நினைப்பாள். வயதாகி விட்டதல்லவா? அதனால் மேலே படிக்கப் போவதாகச் சொல்லி விட்டு, பம்பாய் அல்லது சென்னைக்குப் போய், அங்கிருந்து படித்துக் கொண்டே முயற்சிக்கப் போகிறேன். உன்னிடம் சொல் லாமல் மறைக்க எனக்கு மனமில்லை. ஆனால் பாட்டியிடம் காட் டிக் கொடுத்து விடாதே'' என்று கூறிக் கிளம்பிவிட்டாள்.

பாட்டியிடம் மறைப்பது பதினாலு வயது சௌமினிக்கு மிக வும் கடினமாக இருந்தது. ஆனால் மின்னியிடமும் பிரியம் அதி கம். பாட்டி அவ்வளவு பழமைவாதி அல்ல என்ற நம்பிக்கை அவளுக்கு இருந்தபோதும், ஒருவேளை மின்னியின் ஆசைக்குப் பாட்டி தடைபோட்டு விடக் கூடுமோ என்ற பயத்தில் அவள் வாய் திறவாமலே தான் இருந்தாள்.

கூடவே இன்னொன்று. இது மின்னியின் ரகசியம் - அவளை நம்பிச் சொன்னதை அடுத்தவரிடம் - அது பாட்டியிடம் என்றா லும் கூட அம்பலப் படுத்துவது நேர்மையில்லையே.

பாட்டி பழைய காலமேதவிர முட்டாள் அல்ல. ஒவ்வொரு விடுமுறைக்கும் மின்னி வீடு திரும்பாமல் சாக்கு சொல்வதோடு, அதிகப் பணமும் கேட்கவும், சந்தேகம் கொண்டு சௌமினியிடம் லேசாக விசாரித்தாள். சின்னப் பேத்தி தடுமாறவும், பெரியவ ளுக்கு நேராகவே எழுதினாள். ''பதினெட்டு வயது நிரம்பிய பெண் நீ. உன் தாய் இல்லாவிட்டாலும் நல்லது கெட்டது பற்றி இயன்றவரை உனக்குக் கற்றுக் கொடுத்திருப்பதாகவே எண்ணுகி றேன். நீயும், நன்மை தீமை தெரியாத முட்டாளல்ல. நானும் பழைய தலைமுறையைச் சேர்ந்தவள் என்றாலும் இன்றைய நடப்பை அடியோடு மட்டம் என்று தள்ளுகிறவளும் அல்ல. எது வானாலும் என்னிடம் சொல்லிவிட்டே செய்யலாம்'' என்று.

இந்தக் கடிதத்தை அலட்சியப்படுத்தாமல் மின்னி சிந்துபூந்து றைக்குத் திரும்பி வந்தாள்.

வரும்போது ஆளே மாறிவிட்டிருந்தாள். வித்தியாசமான ஆடை அணிகள். வேறுபாடான பாவனைகள். கூந்தலைத் தோள் அளவில் வெட்டியிருந்தாள். அவள் முகத்தை ஸ்டைலாகத் திருப் பும்போது ஷாம்புபோட்ட கூந்தல் பளபளப்புடன் துள்ளி விழுவ தைக் கண் கொட்டாமல் பார்த்தாள் சௌமினி.

மின்னியின் உடைகளைப் பற்றிப் பாட்டி எந்தவிதக் கருத்தும தெரிவிக்கவில்லை. குறிக்கோள் பற்றியும் அப்படியே. செலவை மட்டும் மட்டுப்படுத்திக் கொள்ளும்படி கூறினாள். 'நாம பணக்கா ரர்கள் இல்லை, பெரியபாப்பா. நான் உன் பாட்டி. அதிலும் பழைய காலக்கிழவி. சிக்கனம் தெரியும் தவிர, இந்தமாதிரியெல்லாம் தைரியமாய் வேலை செய்து சம்பாதிக்கத் தெரிந்திருக்கவில்லை. ஆனாலும் கூட, வீட்டுச் செலவுகளை எப்படியோ நானாகச் சமா ளித்தேனே தவிர உங்களுடைய தகப்பன்மார் வைத்து விட்டுப் போன பணத்தைத் தொட்டேனில்லை.

''நீ கேட்கிற பணம் முழுவதையும் நான் தருவது என்றால் அதைத் தொட்டால்தான் முடியும். பெரியபாப்பா அந்த டெப்பா சிட்டை உடைத்தால் நாளைக்கு உன் திருமணத்துக்குத் திண்டாட்ட மாகி விடும். கையில் பணம் இல்லாமல் ஒரு நல்ல கணவன் 'நல்ல' என்று மட்டுமில்லை கொஞ்சமேனும் வசதியுள்ள பையன் கிடைப்பது இந்த நாட்டில் இயலாத காரியம். அதனால்...

வெள்ளிக் காசுகளை அள்ளி இறைத்தாற் போல அழகாகச் சிரித்தாள் மின்னி. முன்னெல்லாம் 'பகபக'வென்று மின்னியின் சிரிப்பு மட்டும் கேட்பதற்கு எப்படியோ இருக்கும். இப்போது, கேட்டுக் கொண்டே இருக்கலாம் போல இவ்வளவு அழகாகச் சிரிக்கிறாளே என்று எண்ணினாள் சௌமினி.

அவள் நினைத்துக் கொண்டு இருக்கும்போதே, குரலில் ஒரு கெஞ்சலுடன் மின்னி பேசினாள். ''பாட்டீ... பாட்டி! நானும் உங்க ளுடைய பேத்திதானே? அப்படிப் பணத்தை வீணாக்கிவிடு வேனா? இதெல்லாம் சின்னமீனைப் போட்டுப் பெரிய மீனைப் பிடிக்கிற விவகாரம் பாட்டி. இந்த மாடல் தொழிலில் வெற்றி பெற

வேண்டுமானால் முதலில், நம் செலவில் நாலு அலங்காரம், ஸ்டைல் காட்டினால்தான் முடியும். பாட்டி அதற்கென்று தனியா கப் பயிற்சி பெறும் செலவு வேறு. ஆனால் ஒன்று. இதெல்லாம் முதல்படி வரைதான்.. அப்புறம் பணம் கொட்டும். எனக்கு மட்டு மில்லாமல் உன் சின்னப் பேத்திக்கும் நல்ல.... பெரி... ய்ய இடமா கவே மாப்பிள்ளை தேட முடியும். தெரியுமா? சௌமி எனக்கு வெறும் சித்தப்பா மகள் மட்டுமா? கூடப் பிறந்த தங்கையை விட மேல் அல்லவா? எனக்கு அவளும் அவளுக்கு நானும் தானே? அவள் பொறுப்பு என்னுடையது அல்லவா? இதெல்லாம் யோசித் துப் பார்த்துதான் இந்தத் தொழிலையே தேர்ந்தெடுத்தேன் பாட்டி.

எப்படியோ கொஞ்சலும் கெஞ்சலுமாகத் தன் காரியத்தைச் சாதித்துக் கொண்டாள் மின்னி.

வட்டிப் பணத்தில் பாட்டி மிச்சம் பிடித்து வைத்திருந்ததை வாங்கிக் கொண்டுதான் மீண்டும் அங்கிருந்து கிளம்பினாள்.

கிளம்புமுன் மீண்டும் சௌமினியிடம் அந்தரங்கம் பேசி னாள்.

''பாட்டியிடம் சொன்னது அத்தனையும் மெய்தான், சௌமி. ஆனால் அவர்களிடம் சொல்லாமல் விட்ட ஒன்றும் இருக்கிறது. இந்த மாடல் தொழிலில் நிஜமான பெரிய ஆட்களிடம் பழகுகிற வாய்ப்பு கிடைக்கிறது, சௌமி. பொருள் என்னதான் நன்றாக இருந்தாலும் விளம்பரம் சரியாக அமையாவிட்டால் விலைபோ காது என்பதால் விளம்பரம் கொடுக்கிற பெரிய பெரிய நிறுவனத் தலைகள் எல்லாம் - எம்.டி., டைரக்டர் என்று முக்கியமானவர்கள் எல்லாம், விளம்பரம் தயாரிக்கிற போது பார்ப்பதற்கு வந்து நிற் பார்கள். நம் குடும்பத்திலோ அழகுக்குக் குறைச்சல் இல்லை. வரு கிற இந்தப் பெரிய ஆட்களில் எவனாவது ஒருவன் என்னிடம் மயங்கி விடமாட்டானா? அப்படி என்னிடம் ஒருவன் மாட்டிக் கொண்டு விட்டால், அப்புறம் உனக்கும் அந்த வட்டத்திலேயே ஒருவனைப் பிடித்துவிடலாம் என்பதுதான் என் திட்டம். இந்த

மாடல் தொழிலை நான் தேர்ந்தெடுத்ததின் அடிப்படையே அது தான். ஆனால் இதைப் பாட்டியிடம் சொன்னால் என்னவோ குடியே முழுகி விட்டது போல லபோ லபோ என்பார்கள். அவர்களின் கொள்கை, கட்டுப்பாடுகளுக்கு இது கொஞ்சமும் சரி வராது. ஆனால், இந்த சிந்துபூந்துறையிலேயே மக்கி மடிய வேண்டாம்; நமக்கு ஒரு நல்ல வளமான வாழ்க்கை காத்திருக்கிறது என்ற மகிழ்ச்சியோடு நீ இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் உன்னிடம் சொல்கிறேன். நம்பிக்கையோடு இரு.'' என்று தங்கையைத் தட்டிக் கொடுத்து விட்டுச் சென்றாள்.

மயங்குவது, மாட்டுவது, பிடிப்பது எல்லாம் அந்தப் பதினைந்து வயதிலும் சௌமினிக்கு அவ்வளவு உயர்வாகப் படவில்லைதான். அதேசமயம் சிந்துபூந்துறை, மக்கிமடிகிற இடமாகவும் படவில்லை. ஆனால் கண்களில் கனவு மிதக்க கனிமொழிகள் பளபளக்க மின்னி பேசியதைப் பார்க்கவே அவளுக்கு ஆனந்தமாக இருந்தது.

எப்போதுமே மூன்று வயது பெரியவளான மின்னி, சௌமினிக்கு 'ஹீரோயின்' தான். இந்த ஓர் ஆண்டில் அவள் தன்னை நன்றாக அழகுபடுத்திக் கொள்ளவும் பயின்றிருந்ததால் சின்னவளுக்கு, மின்னியை விட்டுப் பார்வையை எடுக்கவே மனமில்லாதிருந்தது.

அடிக்கடி வந்து போவதாகச் சொன்ன மின்னி, அடுத்து அந்தப் பக்கம் வந்தது பாட்டியின் மறைவின்போதுதான். மாடல்களுக்குப் பம்பாயில்தான் அதிக வாய்ப்பு என்று அங்கே சென்று விட்டவளுக்குச் சிந்துபூந்துறை மறந்தே போயிற்று.

பாட்டியும் சௌமினியும் எழுதிய கடிதங்களுக்கு எப்போதாவது பதில் எழுதியதோடு சரி. அதற்குள்ளாக, சௌமினியும் காதல் கடலில் மூழ்கித் தத்தளித்து, ஒருவாறு கரையேறி விட்டிருந்தாள்.

கரை சேர்த்த பாட்டி, எவ்வளவோ தைரியம் கொடுத்தபோதும், சென்னைக்குத் திரும்பிச் செல்லப் பிரியமில்லாது போகவே, அங்கேயே சுருக்கெழுத்து, தட்டெழுத்து, கம்ப்யூட்டர் கையாளு

தல் போன்ற சில வேலைவாய்ப்பு கல்விகளைக் கற்று முடித்திருந் தாள்.

பாட்டியின் மரணத்திற்காகச் சௌமினி அளவு மின்னியும் துக்கப்படக்கூடும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. ஆனால் செய்தி கேட்டதும் வந்தாள். சௌமினிக்கு ஆறுதலும் சொன்னாள்.

ஆனால், அதேவாயால் தொடர்ந்து "எப்படியோ, இப்போ தைக்குப் பாட்டி இறந்தது நமக்கு நல்லது என்றுதான் சொல்ல வேண்டும்" என்று மின்னி கூறவும் சௌமினிக்கு அதிர்ச்சியாய் இருந்தது.

கோபமும் திகைப்புமானதாய்ச் சின்னவளின் பார்வையைச் சந்தித்த மின்னி, லேசாக முறுவலித்தாள். "பாட்டி நமக்குச் செய்தி ருக்கும் உதவிகளுக்கு ஈடு இணையே கிடையாது, சௌமிம்மா. ஆனால் ஒன்று யோசி, பாட்டி இருக்கும் வரை. நம் டெப்பாசிட் பணத்தின் மீதான அதிகாரம் அவர்களுக்குத்தான் இல்லையா? நம் திருமணம் தவிர வேறு எதற்காகவும் அந்தப் பணத்தைத் தொட பாட்டி அனுமதித்திருக்கவே மாட்டார்கள். நீயே சொல்லு, அது நமக்கு நன்மையாகுமா?" என்ற கேட்டாள்.

திருமணம்? அதுவும் இந்தப் பிறவியிலா? அதற்காகப் பணம் வேறா?

"இல்லை." என்ற திருத்தமாய்த் தலையசைத்தாள் சௌமினி.

"அதுதான் சொன்னேன். பார், இப்போதானால், பாட்டியின் கார்டியன் அதிகாரம் இல்லாது போய், நமக்குப் பதினெட்டு வய துக்கு மேல் ஆகிவிட்டதால் பணம் நம் கைக்கு வந்துவிடும். இந்தக் காலத்தில் ஒரு லட்சம் என்பது ஒரு பெரிய தொகை என்று இல்லா விட்டாலும் நமக்கு அது எவ்வளவோ உதவியாக இருக்கும் என்ப தால்தான் அப்படிச் சொன்னேன்." என்று மூத்தவள் விளக்கினாள்.

இந்தப் பணம் என்ன பெரியதாய் உதவிவிடும் என்று எண் ணியபோதும், பாட்டியின் மறைவை மின்னி அலட்சியப்படுத்திப்

பேசவில்லை என்கிற அளவில் சௌமினி சமாதானம் அடைந்தாள்.

தன் பணத்துடன் மின்னி உடனேயே திரும்பிச் சென்று விட்டாள்.

தனிமையும் துயரமுமாகத் தவித்துக் கொண்டிருந்த சௌமினிக்கும் ஒரு புகலிடம் கிடைத்தது.

பாட்டி நோய்ப்பட்டதிலிருந்து அவளுக்கு வைத்தியம் பார்த்த டாக்டரின் பெயர் பானுமதி. முடிந்தவரை, நோயின் வாதையைத் தாங்கிக் கொண்டு, பேத்திக்காக இன்முகம் காட்டிய பாட்டியை டாக்டருக்கு மிகவும் பிடித்துப் போயிற்று.

அதேபோலச் சற்றும் முகம் கோணாமல் தன் பாட்டிக்கு சௌமினி எல்லா வேலைகளையும் செய்தவிதமும், அவளது பளிச் சென்ற தோற்றமுமாகப் பேத்தியையும் பிடித்துப் போயிற்று.

ஒரு குடும்ப சினேகிதியாகப் பழகியவள், பின்னர், தான் வேலைபார்த்த மருத்துவமனையிலேயே, சௌமினிக்கும் ஒரு வேலைக்கு ஏற்பாடு செய்தாள்.

தன் கணக்கு வழக்கு பணிகள் முடிந்த பிறகும் மருத்துவமனை வேலைகளில் சௌமினி உதவுவது உண்டு. பானுமதியின் பிரியமும், மருத்துவமனைப் பணியுமாக ஒருவாறு சௌமினியைத் தேற்றின.

விரைவிலேயே, ''எப்படியும் திருப்பித் தந்து விடுவேன். இப்போது, அவசரத்துக்கு உதவு'' என்று மின்னி கேட்கவும், மறுக்காமல், சௌமினி தன் பணத்தில் பாதியை அவளுக்கு அனுப்பி வைத்தாள்.

பானுமதிக்கு இது பிடிக்கவில்லை. பிடிக்காததை அவள் மறைக்கவுமில்லை.

ஆனால், தனக்கு ஒரு காலத்திலும் பயன்பட வாய்ப்பில்லாத அந்தப் பணம் மின்னிக்காவது உதவட்டும் என்று சௌமினி கூறிய போது, ஒரு சினேகிதியாய் அந்தக் குடும்ப நிலவரம் அறிந்திருந்த டாக்டரால் மேலே எதுவும் சொல்ல முடியவில்லை... அதுவும்

சௌமினி தன்மனதை முழுமையாக அவளிடம் கொட்டியிருந் தாளே!

அதன்பின், எதிர்பாராத விதமாக, மின்னியே சிந்துபூந்து றைக்கு, விரைவில் திருமணம் செய்து கொள்ளப் போவதாக ஓர் அறிவிப்புடன் வந்து சேர்ந்தாள்.

அவள் முன்பு கூறிச் சென்றதை நினைக்கையில் உள்ளூர ஒரு மாதிரி உணர்ந்தபோதும், உடன்பிறவாச் சகோதரிக்குத் திருமணம் என்பதால் உண்டான மகிழ்ச்சியே சௌமினியின் மனதில் மேலோங்கியது.

வாழ்த்துத் தெரிவிக்க வாயெடுத்தவள், மின்னி காட்டிய அவ ளுடைய வருங்காலக் கணவன் படத்தைக் கண்டதும் வாயடைத்து நின்றாள்.

படத்தில் இருந்தவன் மனோரஞ்சன்தான்! சந்தேகமே இல்லை.

அந்த மனோரஞ்சனை எப்படி மணக்கப் போகிறாள் என் பதை மின்னி விவரித்தபோது, மனோரஞ்சன் மீது சௌமினி கொண்டிருந்த வெறுப்பு பரிபூரணம் ஆயிற்று.

## 5

**சௌ**மினியிடம் மின்னி எதையும் மறைக்கவில்லை. சொல்லப் போனால் சில விவரங்களை இவள் இவ்வளவு விளக்க மாகச் சொல்லாதிருக்கக் கூடாதா என்று சௌமினி உள்ளூர நொந்து கொள்ளும் அளவுக்கு வெளிப்படையாகப் பேசினாள் மின்னி.

''முன்பானால் நீ சின்னப் பிள்ளை. நிறைய விஷயம் உன்னிடம் சொல்ல முடியாமல் எனக்குக் கூசிவிடும். இப்போது நீயும் இளம் பெண் என்று நாம் இருவரும் ஒரே நிலையில், சமவயதுத் தோழிகள் போல எனக்கு எளிதாகப் பேசமுடிகிறது, சௌமீ!'' என்று மின்னி குதூகலமாக உரைத்தபோது அந்த உற்சாகத்தைத் தடுக்கச் சௌமினிக்கு மனமும் வரவில்லை.

''மனோவுக்குள் ஏதோ வேகம் சௌமி. கார்ப் பந்தயங்களில் அவர் கலந்து கொள்வதே அதற்குச் சான்று... அப்புறம்... அவ்வளவாய் அதிநாகரீகம் பிடிப்பதில்லை. என்னைப் பாவாடை தாவணி, சேலை உடுத்தச் சொல்லுவான். நீளமாய்ச் சடை பின்னி பூவைக்கச் சொல்லுவான் தெரியுமா? நான் முடியை வெட்டி விட்டிருந்தேனில்லையா? அவனுக்காகச் சவுரி வாங்கி, அதை வைத்துக் கஷ்டப்பட்டுப் பின்னுவேன்... உன் அலங்காரம்தான். அசட்பில் நீ என்று கூடச் சொல்லிவிடலாம்... உன்னை மனதில் வைத்து, பேச்சு, அங்க அசைவு, சிரிப்பு... எல்லாம் அதேபோல் செய்வேனா, அசந்து விட்டான்!...

மனோரஞ்சனை, மின்னி சந்தித்தது பம்பாயில் ஒரு விளம்பரப் படப்பிடிப்பில்தான். அப்போது மாடல் தொழிலில் அவள் பெயர் கொஞ்சம் நினைவுக்கு வரத் தொடங்கி விட்டிருந்தது. நாலைந்து பெண்களை வைத்து கூட்டமாகக் காட்டும் படங்களில் அவளும் ஒருத்தியாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த காலம்.

ஒரு சருமப் பாதுகாப்பு சோப் விளம்பரம். சோப் நிறுவனத்தின் சார்பில் மனோரஞ்சன் சென்றிருந்தான். கம்பெனி சேர்மனின் பேரன் என்றார்கள் படபிடிப்பின் போது, முழு நேரமும் அவன் பார்வை அவள் மேலேயே இருந்தது.

அப்போதே மின்னிக்குத் தன் வெகு நாளையத் திட்டம் ஒரு வழியாக நிறைவேறப் போகிறது என்பது தெரிந்துவிட்டது.

படப்பிடிப்பு முடிந்ததும் அவளைத் தனியே அழைத்துப் பேசினான். யா, என்ன என்று விசாரித்தான். இரண்டு நாட்களில் ஆடை அலங்காரங்கள் பற்றி விமர்சித்தான்.

அவனைக் கவரும் விதமாகக் காட்டத்தான் சௌமினியிடம் மின்னி பணம் வாங்கியது கூட. முதலில் அவன் ஐடியா புரியாமல், அதி நாகரீக உடைகளை வாங்குவதில் பணத்தை வீணாக்கிவிட் டாள். பிறகு, விதம் விதமான சேலைகள், பொருத்தமாய் நகை கள்... தங்கமுலாம் பூசிய வெள்ளி நகைகள்கூட என்ன விலை தெரியுமா?

''முதலில் மனோ சொல்லும் இடங்களை கவனித்து அங்கெல் லாம் நான் போனேன், சௌமி. பிறகு அவனே வரச் சொல்லத் தொடங்கினான். அப்படியே நெருங்கிவிட்டோம்... அப்போ தைக்கு ஏதோ வேலை என்று எழுந்து சென்று விட்டாள் சௌமினி.

ஆனால், தன் வெற்றியை பிறருக்குப் பறைசாற்ற - குறைந்த பட்சம் தங்கையிடம் பகிர்ந்து கொள்ள மின்னிக்கு ஆசை. சௌ மினி திரும்ப வந்ததும் தொடர்பு அறாமல் பேசினாள்.

''முதலில் பேச்சிலேயே அவன் ஆழம் பார்த்தேன், சௌமி. திருமணம் என்ற எண்ணமே அவனுக்கு இருப்பதாகத் தெரிய வில்லை. அதனால் வேறுமாதிரியாய் வளைத்து விட்டேன்... என் றவள் தலையைச் சரித்து, தன் சித்தப்பா மகளைக் கூர்ந்து நோக்கி னாள். ''இதை நீ எப்படி எடுத்துக் கொள்வாயோ, தெரியவில்லை சௌமி. எனக்கே, இந்தச் சிந்துபூந்துறைச் சூழ்நிலையில் கொஞ் சம் ஒரு மாதிரியாகத்தான் இருக்கிறது. ஆனால் அங்கே நகர வாழ்வில் ஒன்றும் தப்பாகத் தெரியவில்லை. தண்ணீர் குடிக்கிற மாதிரி சர்வ சாதாரணமாகத் தான் தோன்றியது.

வயிற்றுக்குள் ஏதோ பிசைய, சௌமினி அசையாமல் வீற்றி ருந்தாள். இல்லை.. இல்லை. அவள் நினைக்கிறமாதிரி எதுவும் இருக்காது. இருக்கக் கூடாது... கடவுளே...!

அடுத்தவளின் தவிப்பு புரியாமல் மின்னி தொடர்ந்து பேசி னாள். ''உனக்குப் புரிகிறதில்லையா, சௌமி? நாங்கள் இருவரும் சேர்ந்து பழகத் தொடங்கி விட்டோம். அவன் தொட்டபோது நான் தடுக்கவில்லை. நான் திட்டமிட்டது நடக்கும் வரை மனோரஞ்சன் இழுத்த இழுப்புக்கெல்லாம் போனேன்; அவன் இஷ்டம்

போலெல்லாம் ஆடினேன். இப்போது 'டெஸ்ட்' பண்ணி, இது தான் என்று உறுதியானதும் எல்லாவற்றையும் அப்படியே போட்டுவிட்டு இங்கே வந்துவிட்டேன். அங்கே இருந்தால் கலைப்பதற்கு ஏற்பாடு செய்தாலும் செய்துவிடுவான். இப்போது பார், உன் பிள்ளைக்குத் தாயாகப் போகிறேன்; உடனே திருமணத்துக்கு ஏற்பாடு செய் என்று எழுதப் போகிறேன். எழுதி, முதலில் உன்னிடம் காட்டுகிறேன். அதில் ஏதாவது திருத்தம் இருந்தால் சொல்லுகிறாயா? எப்போதும் படிப்பில் நீதானே கெட்டிக்காரி?'' என்று எழுந்து உள்ளே எழுத்து மேஜையை நாடிச் சென்றாள் மின்னி.

இதயத்தைச் சுற்றிலும் பனிக்கட்டி படர்வது போல உணர்ந்தாள் சௌமினி. உள்ளே எல்லாம் இறுகி விறைத்துவிட, மூச்செடுக்கவும் முடியாமல் அப்படியே அமர்ந்திருந்தாள்.

செத்துவிடப் போகிறோமா என்றுகூடத் தோன்றியது. அப்படிச் செத்துவிட்டால் நல்லது என்ற எண்ணமும் வந்தது.

மனோரஞ்சனைப் பற்றி அறிந்திருந்தும், மின்னி அவளது வாய் மொழியாகத் 'தாயாக' என்ற வார்த்தை சொல்லுகிற வரை 'இருக்காது இருக்காது' என்று உள்ளூர உருப்போட்டாளே, தான் எவ்வளவு பெரிய முட்டாளாக இருக்க வேண்டும் என்று தன்னையே நொந்து வெந்தாள்.

அவன்தான் மோசம்! இயல்பிலேயே ஒழுக்கம் கெட்டவன். ஆனால் மின்னி? பாட்டியின் ரத்தம் தானே அவள் உடம்பிலும் ஓடுகிறது?

எவ்வளவு கேவலம்! எவ்வளவு அசிங்கம்! குமட்டிக் கொண்டு வந்தது அவளுக்கு. உள்ளே மின்னி நாற்காலியை இழுக்கும் ஒலி கேட்டது. இல்லை. இவளை இப்போது பார்க்க முடியாது. முகம் பார்த்துப் பேச முடியாது!

சட்டென எழுந்து வேகமாக நடந்தாள். முருகன் கோவில் எதிரே தெரிந்தது. உள்ளே சென்று தரிசனம் செய்ய மனமில்லை.

கோயிலைச் சுற்றிக் கொண்டு சென்று, ஆற்றுப் படுகையில் வெளியே கை நீட்டிக் கொண்டிருந்த ஒரு பாறையை ஒட்டி அமர்ந் தாள்.

மனம் சரியில்லாதபோது இங்கே வந்து அமர்வது சௌமி னிக்கு வழக்கம்.

ஆற்றின் பொன் மணலும், ஓடையாகவோ, ஆறாகவோ காலத்துக்கும், மழைக்கும் தக்கபடி சலசலத்து ஓடும் நீரும், பள்ளம் தோண்டி ஊற்றுநீர் எடுப்போருமாக பார்த்துக் கொண்டு இருக்கும் போதே மனம் இலகுவாகி விடுவது உண்டு. பிறகு கோவிலுக்குச் சென்று முருகனைத் தரிசித்துவிட்டால் எப்படியும் அமைதி கிட்டி விடும்.

ஆனால் இன்று ஒன்றும் முடியவில்லை.

முன்பு மனோரஞ்சனைப் பிரிய நேர்ந்ததைப் பெரும் வேதனை என்று நினைத்தாளே! எவ்வளவு முட்டாள்தனம்! இந் தத் துன்பத்துக்கு முன் அது தூசு அல்லவா!

வேண்டாம்! வேண்டாம் என்று, எவ்வளவோ ஒதுக்க முயன் றும், முடியாமல், ரஞ்சனும் மின்னியுமாக ஏதேதோ தோற்றங்கள் சௌமினியின் மனதில் தோன்றி, அங்கே எரிந்த நெருப்பை மேலும் மேலும் ஊதிக் கொழுந்து விட்டு எரியச் செய்தன.

நெஞ்சு வெடித்து விடும் போலான ஒரு வெறியை அடுத்து, பெரும் கேவலுடன் அவளது கண்களில் அருவி இறங்கியது.

அவ்வளவுதான். முழங்கால்களை உயர்த்தி, முட்டில் முகம் புதைத்து விம்மலும் விக்கலுமாக அழுது தீர்த்துவிட்டாள்.

யாரேனும் பார்த்தால் என்ன நினைப்பார்கள் என்ற எண்ணம் கூடத் தோன்றவில்லை.

வெகுநேரம் அழுது தீர்த்தபின், கண்ணீர்ச் சுரப்பிகள் வற்றி விட, வெறும் கேவல்களில் உடம்பு குலுங்கியபடி, மேலும் கொஞ்ச நேரம் அப்படியே கிடந்தாள் அவள்

அதன்பிறகே மின்னியின் நிலை பற்றிச் செளமினியால் சிந்திக்க முடிந்தது.

கல்யாணம் இல்லாமலே, மின்னி கருவுற்றிருக்கிறாள். இது இந்த நாட்டில் பெருமைக்குரிய காரியம் அல்ல. முன்போலக் காரி உமிழ்வது இல்லையேதவிர, அவமானச் சின்னமாய்த்தான் எண்ணுவார்கள்.

மனோரஞ்சன் அவளைக் கல்யாணம் செய்யாமல் கைவிட்டால் ரொம்பவும் கேவலமாகி விடும். மாறாகப் பிள்ளைப் பொறுப் பேற்று, மின்னியை மணந்தாலும் அதுவும் செளமினிக்கு ஒரு விதத்தில் வலிதான். ஆனால் இன்றையப் பிரச்சினைக்கு வேறு விடை இல்லை.

முகத்தில் நன்றாக நீர் அடித்துக் கழுவிவிட்டுத்தான் செளமினி வீடு திரும்பினாள்.

ஆனாலும் அவளைப் பார்த்ததுமே, "திடீரென்று, பாட்டி ஞாபகம் வந்து விட்டதா செளமி? இப்படி அழுதிருக்கிறாயே!" என்று இரங்கினாள் மின்னி. "எனக்கும் இங்கே வந்ததிலிருந்தே அடிக்கடி பாட்டியின் நினைவு வரத்தான் செய்கிறது, செளமி. ஆனால் நீ பாட்டியுடனேயே அதிக நாள் இருந்துவிட்டதால் உனக்குத் தாக்குதலின் வேகம் அதிகமாக இருக்கிறது போல. பாட்டி போன பிறகு நீ மிகவும் மெலிந்திருக்கிறாய், தெரியுமா? சரியாகச் சாப்பிடுவதே இல்லையாக்கும்? பார், செளமி, நமக்கு வேறு யார் இருக்கிறார்கள்? நம்மை நாம்தான் பார்த்துக் கொள்ள வேண்டும்? ம்?" என்று பரிவும் கண்டிப்புமாக அவள் பேசியது ஏதோ ஒருவிதத்தில் செளமினிக்கு இதமாக இருந்தது.

இனி அந்தக் கடிதம் பார்க்க மின்னி அழைப்பாளே என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டபோது, "மனோவுக்குக் கடிதம் எழுதிவிட்டு உன்னைத் தேடினால் ஆளைக் காணோம். சொல்லாமல் எங்கே போனாய் என்று யோசித்துக் கொண்டிருந்தபோது ஸ்டோரிலிருந்து அந்தப்பையன் கோவிந்தன் சாமான் கொண்டு வந்தான். அவனிடம் கேட்டதற்கு, தபால் எடுக்கிற நேரம் என்

றான். சரிதான் என்று தபால் ஒட்டி, தபாலில் சேர்த்துவிடச் சொல்லிக் கடிதத்தை அவனிடம் அனுப்பி விட்டேன். அலங்கார நடையில் எழுதினாலும், சும்மா எழுதினாலும் அடிப்படை விஷயம் ஒன்றுதானே. 'சுபஸ்ய சீக்கரம்.' முடிந்த அளவு முன்னதாகப் போய்ச் சேரட்டுமே என்று நினைத்துக் கொடுத்து விட்டேன்'' என்று மின்னி கூறவும் கொஞ்சம் இலகுவாக மூச்சு விட்டாள் சௌமினி.

மின்னிக்குச் சுருக்கமாக ஒரு பதில் வந்தது. மொட்டையாகத் தொடங்கியிருந்தான் மனோரஞ்சன். ''கடிதம் எழுதியவள் இந்த விளையாட்டின் விதிமுறை அறியாத பேதை அல்ல' எனவே எந்தமாதிரி விளைவுக்கும் அவன் பொறுப்பாளி இல்லை. அத்தோடு, இந்த மாதிரிப் பொறிகளில் மாட்டிக் கொள்ள அவன் முட்டாளும் அல்ல. மேற்கொண்டு செய்ய வேண்டியதை அவளே தாராளமாகச் செய்து கொள்ளலாம். அதற்கு அடுத்தவர் துணை தேவையில்லை என்றிருந்த கடிதம் கையெழுத்தின்றி மொட்டையாகவே முடிக்கப்பட்டிருந்தது.

விளித்தலோ, கையெழுத்தோ இல்லாமல், யாருக்கு யார் எழுதியது என்று கண்டுகொள்ள முடியாதபடி கடிதம் 'டைப்' பண்ணப்பட்டிருந்தது.

உறையில் 'சௌமினி' என்ற பெயரைப் படித்ததும் பிரித்துப் படித்துவிட்ட சௌமினிக்கு நெஞ்சு கொதித்தது.

இவன் என்ன மாதிரி மனிதன்? தன் பிள்ளை என்கிற எண்ணம் கூடவா இராது ஆடுமாடு கூட... இல்லை. ஆடுமாடுகளிலும் தாய் மிருகம்தான் பிள்ளையைப் பராமரிக்கிறது. மனித இனத்தில் மட்டும்தான் ஆண்களிடமும் பிள்ளைப் பாசம் உண்டு. ஆனால், அன்று சௌமினி சொன்னது போல, மனோரஞ்சனின் மனம் மெய்யாகவே இன்னமும் மனித நிலைக்கு உயரவில்லை அவ்வளவுதான் விஷயம்.

இந்தக் கடிதத்தை மின்னியிடம் எப்படிக் காட்டுவது என்று சற்றுக் கலங்கினாள் சௌமினி.

அவளது குறிக்கோளும் சரி, அதை அடைய அவள் கையாண்ட குறுக்கு வழியும் சரி, இரண்டுமே சௌமினிக்குப் பிடிக்காவிட்டாலும், இந்த உலகத்தில் அவளுக்கு என்று இருக்கும் ஒரே உறவு வேதனைப்படுவதும் அவளுக்குத் தாங்க வில்லை தான்.

மனோரஞ்சனின் பதிலுக்காக நல்ல பதிலுக்காக அவள் எவ்வளவு ஆவலோடு காத்திருக்கிறாள் என்பதைச் சௌமினி அறிவாள். பாவம், இதைப் படித்ததும் எப்படி ஏமாந்து போவாள்!

ஆனால் அவளுக்கு வந்த கடிதத்தை மறைப்பதும் தவறு.

உள்ளூரக் கலங்கியபடியே சௌமினி கடிதத்தை மின்னியிடம் கொடுத்தாள்.

ஆனால், தன் சித்தப்பா மகள் அளவுக்கு, மின்னி கலங்கவில்லை. ''எதிர்பார்த்ததுதான்'' என்று தோளைக் குலுக்கினாள். ''இருக்கட்டும். எங்கே போய்விடப் போகிறான்? விரைவில் வந்து சேருவான் பார்.'' என்றாள் அலட்சியமாகவே.

புரியாமல் விழித்த தங்கையிடம், ''காட்டுக் குதிரையாய்க் கட்டில்லாமல் சுற்றிக் கொண்டு இருக்கிறவன் மனோரஞ்சன் அவ்வளவு எளிதாகக் கடிவாளத்தை ஏற்றுக் கொள்வானா? கொஞ்சம் எகிறத்தான் செய்தான். ஆனால் எப்படியும் வந்து விடுவான் பார்.'' என்றாள் மின்னி தன்னம்பிக்கையுடன்.

''ஒருவேளை... வராவிட்டால்?''

''பிள்ளையைத் தூக்கிக் கொண்டு அவனுடைய பாட்டனிடம் போய் நின்று திருமணத்துக்கு ஏற்பாடு செய்வேன். சும்மா விட்டு விடுவேன் என்று நினைத்தாயா?'' என்றாள் மின்னி சற்றும் கலங்காமல்.

திகைப்புடன் மற்றவளைப் பார்த்தாள் சௌமினி. இவள் என்ன, புரியாமல் பேசுகிறாளா? மூன்றாம் பேருக்குத் தெரியாமலா பிள்ளை பெறமுடியும்? உடலில் உண்டாகும் மாற்றங்கள் ஊருக்கெல்லாம் தண்டோரா போட்டு அறிவித்து விடுமே! எத்த

னைபேர் என்னென்ன கேள்வி கேட்பார்கள்? எல்லோரையும் அலட்சியப் படுத்திவிட முடியுமா?

அத்தோடு பிள்ளை பெறுவது என்றால் சும்மாவா? மருத்துவ மனையில் சௌமினி எத்தனை பார்க்கிறாள்! கணவன், பெற்ற வள், உற்றவர் என்று எத்தனைபேர் துணைவந்தும் பெறுகிறவள் என்னபாடு பட்டு விடுகிறாள்!

அவளைவிடவும் மூன்றாவது சிறிய தங்கையுடன் மின்னி இதைச் சாதித்துவிட முடியுமா?

தன் அச்சங்களையும் கவலைகளையும் சௌமினி சொன்ன போது மின்னி அதற்கும் ''ஃபூ!'' என்றாள்.

''ஒரு காரியம் சாதிப்பது என்றால் கஷ்டப்பட்டுத்தான் ஆக வேண்டும், சௌமி. தேனீக்கள் கொட்டுவதற்குப் பயந்தால் தேன் கிடைக்குமா? பணக்காரி ஆவது என்றால் சும்மாவா? சில அசௌ கரியங்களை அவமானங்களைச் சகித்துதான் ஆகவேண்டும். அதற்கெல்லாம் நான் தயாராகத் தான் இருக்கிறேன்.'' என்றாள் பிடிவாதக் குரலில்.

உடனேயே சற்று யோசித்துவிட்டு, ''என்னோடு இருப்பது உனக்கு அவமானம் என்று தோன்றினால் சொல்லிவிடு, சௌமி. நான் தனியாகவே... சௌமி, நீ என்னோடு இருப்பாயல்லவா?'' என்று கேட்டபோது, அவளது குரல் கம்மி விட்டிருந்தது.

மின்னியின் கண்களில் கலக்கத்தைக் காணவும் சௌமினி உருகிவிட்டாள். அவள் கையைப் பற்றி அழுத்தி, தான் இருப்பதை உறுதிப்படுத்தினாள்.

ஆனால் அதற்காக, தன் கடமை என்று நினைத்ததைச் சொல் லாமலும் இருந்துவிடவில்லை. திருமணம் இல்லாமல் பிள்ளை பெறுவதின் சிரமம், அவமானங்கள் பற்றிச் சொல்லிப் பார்த்தாள். முதலில் மின்னியின் திட்டமே ஒருமாதிரிப் பட்டது, அதை அவள் மனம் முதலிலிருந்தே ஒப்பவில்லை என்பதைச் சொன்னாள்.

வாழ்க்கைக்குப் பணம் அத்தியாவசியம்தான் என்றாலும் பணக்காரியானால்தான் வாழமுடியும் என்று இல்லை என்று எடுத்துக் கூறினாள்.

பிரசவம் என்பது அனுபவமற்ற இரு சிறு பெண்களால் இலகுவாகப் பார்த்து முடிக்க முடியாதது என்பதை முடிந்து அளவு விளக்கினாள்.

எனவே, முடிகிறபோதே இப்போதே இதை அகற்றிவிட்டு இரு பெண்களுமாக நேர்மையாக உழைத்து முன்னுக்கு வரலாம் என்று ஆலோசனை வழங்கினாள்.

விசித்திரமான வகையில் இந்தக் கடைசி விஷயம் கூறுவது அவளுக்கு மிகவும் சிரமமாக இருந்தது.

இது மனோரஞ்சனுடைய பிள்ளை. இன்னமும் சில மாதங்களில் கை, கால்கள் முளைத்து, முழு வளர்ச்சி பெற்று ஒரு குழந்தையாக - மனோரஞ்சனின் சாயலில் பிறக்கக் கூடியது... என்று எண்ணம் ஓடும்போதே, அப்படி ஒரு குழந்தையை உள்ளூர உருவகப்படுத்தி, அதில் மனம் நெகிழவும் தொடங்கிவிடவும், அதற்காகத் தன்மீதே ஆத்திரம் கொண்டாள் சௌமினி.

அவன் ஜாடையில் இதுவரை எத்தனை பிள்ளைகள் பிறந்திருக்கின்றனவோ? இன்னும் எத்தனை ஆயிரம் பிறக்கப் போகின்றனவோ, யார் கண்டது? அவன் புத்திக்கு அது ஒன்றும் நடக்காத காரியம் அல்லவே! ஆயிரம் பெண்கள் வருவார்கள் என்று அவனே சொன்னானே! அந்த ஆயிரத்தில் ஒருத்தியாகச் சௌமினியின் உறவினளே சென்றது எவ்வளவு அவமானம்!

அவன் மீதும், தன்மீதுமாக அவள் கொண்ட சினம், சௌமினியின் மனதைக் கல்லாக்கி, கருவைக் கலைத்து விடும்படி மின்னிக்கு கூறுவதை இயலுமாறு செய்தது.

''பணத்தின் அருமை உனக்கு இன்னமும் தெரியவில்லை. நீ சின்னப் பெண்ணில்லையா? அத்தோடு பாட்டி மடிக்குள்ளேயே பொத்திப் பொத்தி இருந்துவிட்டதால் உனக்கு உலகம் தெரிய

வில்லை.'' என்று உரைத்ததோடு சரி, வேறு எதையும் மின்னி காதில் போட்டுக் கொள்ளவே இல்லை.

மனோரஞ்சனுடைய ஆயிரம் பிள்ளைகளை பற்றிச் சௌமினி சொன்னபோதும், ஒருகணம் பேசாதிருந்து விட்டு, ''மனோ அப்படியெல்லாம் பெற்றுவிட மாட்டான், சௌமி. எனக்கு அது நிச்சயமாகத் தெரியும்.'' என்றாள் மின்னி திடமான குரலில்.

சௌமினியின் வினாப் பார்வையை மின்னி தவிர்த்த விதம், சின்னவள் அறியாத விஷயம் இன்னமும் ஏதோ இருப்பதை உணர்த்தியது.

ஆனால் மின்னியின் பிடிவாதம் அறிந்திருந்ததால், காலம் கடக்கு முன் செய்யவேண்டியுதைப் பற்றியே அவளிடம் வலியுறுத்த முயன்றாள் சௌமினி.

ஆனால் நல்லவேளையாகவோ அல்லது கெட்ட வேளையாகவோ, அது என்னமாதிரி 'வேளை' என்று இன்றளவும் சௌமினிக்குக் குழப்பம் தான். சித்தார்த்தனைப் பார்க்கையில் நல்லவேளையாகத் தோன்றுவது மின்னியை எண்ணுகையில் கெட்ட வேளை என்றாகிவிடும் எப்படியும், சௌமினி சொன்னதை மின்னி காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை.

# 6

மின்னியின் தைரியம், திடம் எல்லாம், வயிற்றில் பிள்ளை வளர்வதன் காரணமாய்ப் பெண்களைப் பாதிக்கும். 'மசக்கை' தொடங்கும் வரைதான் தாக்குப் பிடித்தன.

எந்நேரமும், வயிற்றுக்குள் பிசைவது போல உணர்ச்சியும், தலை சுற்றுவதுமாக, உண்ண உறங்கமுடியாமல் சங்கடப்பட்டாள்.

சில 'அசௌகரியங்களை' என்று அலட்சியமாக உரைத்தவள், இவ்வளவு கஷ்டமாக இருக்கும் என்று எண்ண வில்லையே என்று அவள் தவித்தபோது சௌமினிக்குப் பாவமாக இருந்தது.

சௌமினி அச்சத்துடன் எதிர்பார்த்த இன்னொன்றும் தொடங்கியது. அக்கம் பக்கம் இருந்தவர்கள் ''மின்னிக்கு என்ன,'' ''மெலிந்து விட்டாளே, உடம்பு சரியில்லையா?'' ''காய்ச்சலா?'' என்று விசாரிக்கத் தொடங்கினார்கள்.

இந்த மாதிரியான சந்தேகம் என்று இல்லை; வம்பு பேசுவதற் காக என்றும் சொல்வதற்கு இல்லை. பாட்டியோடு பழகியவர்கள், சௌமினியிடமும் காட்டிய அதே அக்கறையைப் பாட்டியுடைய அடுத்த பேத்தியிடமும் காட்ட முயன்றனர். அவ்வளவே.

ஆனால், இவர்களிடம் என்னவென்று சொல்வது என்று புரி யாமல் சௌமினிதான் திணறிப் போனாள். இப்போதைக்கு ஆமாம் ஆமாம் என்று ஏதாவது சொல்லிச் சமாளித்தாலும் இன்ன மும் சில மாதங்களில் எல்லாம் வெட்ட வெளிச்சமாகிவிடுமே! அப்புறம், இவர்கள் எல்லாம் மாறிவிட மாட்டார்களா? இந்தக் கரிசனமும் அக்கறையும் மாறிக் கண்ட இடத்தில் காறி உமிழ மாட்டார்களா?

ஏதாவது கண்காணாத இடத்துக்கு, முன்னே பின்னே தெரிந்த வர்களே இல்லாத ஊருக்குப் போய்விட்டால் நன்றாக இருக் குமே... என்றிருந்தது சௌமினிக்கும்.

வியப்பூட்டும் விதமாக, சுற்றிவளைத்து ஓர் அதிசயமான முறையில், சௌமினியின் இந்த ஆசை - இந்த ஆசை மட்டும் நிறைவேறியது.

மதிய இடைவேளையின்போது, பானுமதியோடு பேசிக் கொண்டிருக்கையில், தன் எண்ணத்தை பேச்சுப் போக்கில் சௌ மினி தெரிவித்தாள்.

ஆனால், பானுமதி ஒருவிதமாய் முறுவலிக்கவும், ஆர்வத்து டன் ''என்னக்கா?'' என்று விசாரித்தாள்.

''நானே, உன்னிடம் இதுபற்றிப் பேசலாம் என்றிருந்தேன், சௌமினி. ஆனால் பழகிய இடம் விட்டுக் கிளம்புவது உனக்குப் பிடிக்குமா, பிடிக்காதா என்று யோசித்தேன்...'' என்றாள் பானுமதி.

''என்னது! எப்படி?''

''சொல்கிறேன்.. என்ற தொடங்கினாள் பானுமதி. கொஞ்ச நாட்களாகவே பானுமதியின் திருமணம் பற்றிய பேச்சு அடிபடு வது சௌமினிக்குத் தெரியும்.

மாப்பிள்ளையும் வைத்தியரே. படிக்கும்போதே பழக்கமான வர்தான். பானுமதிக்கு மூன்றாண்டுகள் சீனியர் கிருபாகரன்.

இருவருமே ஏதேதோ காரணங்களால் இதுவரையில் திரும ணத்தைப் பற்றிய எண்ணம் இல்லாமல் இருந்தவர்கள்தான். சமீ பத்தில், ஒரு செமினாரில் ஒருவரை ஒருவர் சந்தித்தனர். பழங்க தையைப் பரிமாறிக் கொண்டவர்களுக்குப் புதுக்கதை எழுதும் ஆர்வம் ஏற்பட்டது.

கிருபாகரன் கோவையில் சிறு அளவில், சொந்த மருத்துவ மனை ஒன்று வைத்து நடத்திக் கொண்டு இருப்பவர். அதிலேயே, தாய், சேய், நலப்பிரிவு ஒன்று தொடங்கி மனைவிக்குத் தர அவர் விரும்பினார். பானுமதிக்கும், இங்கே மற்றவரிடம் பணிபுரிவதை விடக் கணவனோடு சேர்ந்து தொழில் நடத்தப் பிரியம்தான்.

இங்கு பார்க்கும் வேலையை விட்டு விட்டு வருவதானால், சௌமினிக்குக் கோவையில் இதே வேலையைத் தருவதாகப் பானுமதி கூறவும் மிகவும் ஆறுதலாகவும், நிம்மதியாகவும், உணர்ந்தாள் சௌமினி.

சௌமினி அளவுக்குத் 'தெரிந்தவர் மத்தியில் கவுரவம்' பற்றி கவலைப் படாவிட்டாலும், மின்னியின் மனதிலும் இதே உறுத்தல் இருந்ததாலோ என்னவோ, அவளும் வெளியூர் செல்வதில் ஆர் வமாகவே இருந்தாள்.

கோவை வாசம் எல்லோருக்கும் பிடித்துப் போயிற்று.

அறிந்தவர், தெரிந்தவர் இல்லாததால், அனாவசியமான 'கச முசா' இல்லாதிருந்தது. பரந்து, விரிந்து வந்த கோவை மாநகரின் ஓர் 'எக்ஸ்டன்ஷனில்' அந்த மருத்துவமனையும் அதை அடுத்துச் சற்று தூரத்தில் இவர்களது வீடும் அமைந்திருந்ததும் கூட வம்புக் கும், அரட்டைக்கும் இடம் கொடாது இருந்திருக்கலாம். எப்ப டியோ, சௌமினி சற்று நிம்மதியாக இருந்தாள்.

ஊர் மாற்றமோ, அதனால் வந்த தட்ப வெப்பமாற்றமோ காரணமாக, மசக்கை குறைந்தது மின்னிக்கும் மகிழ்ச்சி அளித்தது.

ஆனால் நாட்கள் செல்லச் செல்ல, மின்னி மாறலானாள். உடலால் மட்டுமின்றி, உள்ளத்தாலும்.

மனோரஞ்சன் நிச்சயமாக வருவான் என்று அவள் நம்பியதா லேயே, சிந்து பூந்துறையில் கோவை முகவரியை அவள் கொடுத்து வைத்ததே. ஆனால் மனோரஞ்சனிடமிருந்து சேதியே இல்லை எனவும் அவள் சற்றுத் தடுமாறித்தான் போனாள்.

அப்போதும் அளவுமீறிக் கவலைப்பட்டு விடவில்லை. அடுத்த திட்டமான பிள்ளையோடு பெரியவர் முன் சென்று நிற்பது என்ற திட்டத்தின் வெற்றிபற்றி அவளுக்குச் சற்றும் சந்தேகம் இல் லாதபடியால் அவள் அதிகம் கலவரப்பட்டு விடவில்லை.

சொல்லப்போனால், அவளது இடை தடித்து, வயிறு உப்பி, அவளது கொடி போன்ற உடல்வாகு மாறியது தான் அவளுக்குக் அதிகக் கவலையளித்த விஷயம். அந்த அழகான உடலமைப்புக் காக அவள் எவ்வளவு பணம் செலவழித்திருப்பாள்! எத்தனை பயிற்சிகள் செய்திருப்பாள்! அதைவிட அதிக வேதனையால் நாவை அடக்கி எவ்வளவு பட்டினி கிடந்திருப்பாள்!

ஆனால் மின்னியின் முகம் வாடும்போதெல்லாம் சௌமினி ஊகித்தது வேறு. வாய் திறந்து, வெளிப்படையாகக் கூறாவிட்டா லும், தன் ஒன்றுவிட்ட சகோதரி தன், தகுதியற்ற காதலனுக்காக உள்ளூர ஏங்குவதாகவே அவள் நிச்சயம் நம்பினாள். 'என்ன மாதிரி மனிதன் இவன்!' என்ற கூடுதலாக ஆத்திரத்தையும் வெறுப் பையும் கூட அவன் மீது வளர்த்து வந்தாள்.

இந்தக்கால கட்டத்தில், மின்னியிடம் இன்னுமொரு மாற்றம் நேர்ந்தது.

ஓய்வு நாட்களின்போது, பானுமதியின் வீட்டில் வீடியோ வில் படம் போடுவதும், அதை அவ்வப்போது சௌமினியும், தவறாமல் மின்னியும் சென்று பார்ப்பது உண்டு. மின்னி தனியாக வும் சினிமாவுக்குப் போவாள்.

அப்படிப் பார்த்த ஒரு படத்தில், ஏழைப் பெண்ணின் வயிற் றில் தன் மகனின் வாரிசு வளர்வது பிடிக்காமல், தன் பட்டாம்பூச்சி புத்தி மகனின் உதவியோடு ஒரு பணக்காரத் தந்தை, அந்தப் பிள்ளையோடு அதன் தாயையும் அழிப்பது போன்று கதை அமைந்திருந்தது.

அதைப் பார்த்ததிலிருந்து மின்னிக்கு ஒரே கலவரம்.

கருவுற்ற பெண்ணுக்கு, அவளது உடல் மாறுதல்களினாலும், பிள்ளைக்காக அதிகப்படியாகச் சுரக்கும் சில 'ஹார்மோன்'களி னாலும், இன்னோர் உயிரை உள்ளே வளர்க்க அதிகப்படி சக்தி தேவைப்படுவதாலும், அவ்வப்போது மனதில் சஞ்சலமும், உட லில் பலவீனமும் ஏற்படுவது இயற்கை. இதுபோன்ற சமயங்களில் கணவனின் துணை அவளைப் பெருமளவு திடப்படுத்துவது நடப்பு.

ஆனால், மின்னிக்கு அந்த மாதிரி ஆண் துணையோ, பெற்ற வர் பெரியவர் என்று மற்றவர்கள் துணையோ இல்லாததால், அத்தகைய திடம் ஏதும் கிட்டாததோடு, உள்ள தைரியமும் கை நழுவிப் போயிற்று.

பிள்ளை என்று ஆன பிறகு பொறுப்பேற்க மனோரஞ்சன் முன் வருவான் என்று எண்ணியது நடக்கவில்லை. இளைய தலை முறையைச் சார்ந்தவன், அந்தஸ்து பாராது பழகிய அவனே வர வில்லை என்றான பிறகு, அவனுடைய முந்தைய மூன்றாவது தலைமுறை எப்படி வரக்கூடும்? இவனை விடவும் அவர் மிகவும்

பழமைவாதியாகவும், ஜாதி, அந்தஸ்துக்கு அதிக மதிப்பளிப்பவ ராகவும் இருப்பதுதானே இயல்பு? அவர் எப்படி மின்னியுடைய சிசுவைத் தன் குடும்ப வாரிசு என்று ஏற்பார்? இந்தப் படத்தில் நடப்பதுபோலப் பிள்ளையோடு அவளையும் அழித்து விட்டால்?

நிச்சயமாக அவள் ஆசைப்பட்டது நடக்கப் போவதே இல்லை என்று அவள் எண்ணத் தொடங்கினாள்.

ஆக, ஆல்நாஷர் கதையாக, கார் பங்களா ஆசையால், ஓர ளவு செலவு மிஞ்சி வந்து கொண்டிருந்த வருமானத்தை மின்னி இழந்ததுதான் மிச்சம்.

வருமானத்தை மட்டுமல்ல. அதை ஈட்டித் தந்த அழகையும் தான். அரசனை நம்பி புருஷனை விட்ட பெண்போல, ஏதேதோ கற்பனையில், அவளிடம் இருந்த மூலதனமான உடல் அழகையும் விட்டுவிட்டாளே!

கண்ணாடியில் பார்ப்பதையே வெறுக்க வைக்கும் அளவு பீப்பாயக மாறிவிட்ட இந்த உடம்பு, எப்படி மீண்டும் கொடி போல் ஆக முடியும்? வெகுவாக முயன்று பயிற்சிகள் செய்து ஓரளவு அழகை மீட்டாலும், இந்த எட்டு மாதங்களில் பம்பாய் மாடல் உலகில் மின்னியின் பெயர் அடியோடு மறக்கப்பட்டிருக்குமே! இனி மீண்டும் அதை எப்படிப் பிடிப்பது? சர்வ நிச்சயமாய் அது முடியாத காரியம்.

பிற்பாடு, திருமதி மனோரஞ்சன் ஆனபிறகு கொடுத்துவிட லாம் என்று பகல் கனவு கண்டு, சௌமினியிடம் வாங்கிச் செலவு செய்துவிட்ட பணத்தை எப்படித் திருப்பிக் கொடுப்பது?

இன்னும் எவ்வளவு காலம் சௌமினியின் - அவளை விட மூன்று வயது சிறியவளின் உழைப்பில் வாழ்வது?

அது வேண்டாம் என்று வெளியேறினால் உணவுக்கும் உறை விடத்துக்கும் என்ன செய்வது?

சமயம் தெரியாமல் வயிற்றுக் குழந்தை, பலமாக உதைத்து, 'என்னை மறந்துவிடாதே! என் அருமை அன்னையே!' என்றது. உண்மை! இனி, இந்தப் பிள்ளைக்கும் சேர்த்தல்லவா சம்பாதிக்க வேண்டும்! எப்படி முடியும்?

நிச்சயமாக அது முடியாத காரியமாகவே மின்னிக்குத் தோன்றியது.

பிள்ளை பிறந்ததும், பேசாமல் ஏதாவது அனாதை இல்லத்தில் கொண்டுபோய் விட்டு விடலாமா என்று கூட மின்னி ஒருதரம் எண்ணிப் பார்த்தாள். ஆனால், என்னவோ அதற்கும் மனம் வரவில்லை. அத்தோடு சௌமினியும் அதற்குச் சம்மதிக்கமாட்டாள். குடும்ப பாரங்கள் எல்லாம் அவளுக்கு அதிகம். மற்றபடி, ஒருபயனும் இல்லாமல் மின்னிக்குச் சோறு போட்டுக் கொண்டு இருப்பாளா? அவள் சம்பாத்தியத்தில் வாழ்ந்து கொண்டே அவளை எதிர்ப்பது முடியாது?

சுற்றிச் சுற்றி எப்படி எப்படி யோசித்துப் பார்த்தாலும் ஏதோ சேற்றுப் பள்ளத்தில் தானாகக் குதித்து மாட்டிக் கொண்டது போலவும், மீள வழியே இல்லாமல் அதனுள் மேலும் மேலும் முழுகிக் கொண்டே இருப்பது போலவும் உணர்ந்தாள் மின்னி.

சும்மா இருப்பவரின் மனம் சைத்தானின் உலைக்களம் என்பார்கள்.

சௌமினி போலப் பிறருக்கு உதவும் உள்ளம் இருந்திருந்தால் மின்னியும் மருத்துவமனைக்குச் சென்று எத்தனையோ வகையில் உதவியிருக்கலாம். அதன்மூலம், கூடவே இருந்து கொல்லும் மனதிடமிருந்து மின்னி தப்பியும் இருக்கலாம். 'நம்மிலும் கேடு நாட்டிலே கோடி' என்று கண்டு மனம் தேறியும் இருக்கலாம்.

நோயின் வேதனையால் துன்புறுகிறவர்களின் அருகே அமர்ந்து, அவர்கள் கையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்திருப்பது கூடப் பெரிய உதவிதான். ஆனால் நோயாளிகளின் அருகில்

செல்லவே மின்னிக்குப் பிடிக்காது. வலி, நோவு, பிணி, மூப்பு பற்றிக் கேட்கக் கூட அவளுக்குப் பிடிக்காது.

எனவே, தனியே கிடந்து, 'தன்'னிலேயே உழன்று, 'என்ன மடத்தனம் செய்தேன்? புத்தியற்று, இறக்கி வைக்கமுடியாத சுமை யைத் தூக்கிக் கொண்டேனே!' என்று மறுகுவாள்.

அல்லது எதையாவது தின்பாள். மாடல் தொழிலுக்குத் தேவையான மெல்லிய மேனிக்காக எப்போதும் நாவை அடக்கி வாயையும் வயிற்றையும் கட்டியே வாழ்ந்திருந்தவள் அவள். இப் போது, எப்படியானாலும் பீப்பாய் வடிவம் தானே என்ற ஆத்திரத் தில், முன்பு பட்டினி கிடந்ததற்கும் சேர்த்து நன்றாகச் சாப்பிட் டாள். ஏதோ, அனுபவிக்கிற துன்பத்துக்கு மாறாக ஆசை தீர உண்ணவாவது முடிகிறதே என்று தின்பதிலேயே சுகம் கண்டு நினைத்ததையெல்லாம் உள்ளே தள்ளிக் கொண்டே இருந்தாள்.

பானுமதிதான் மின்னியையும் கவனித்து வந்தாள்.

சௌமினியிடம் மிகுந்த அன்பு கொண்டிருந்த அந்த டாக்டர், தன் அன்புக்குரிய பெண்ணின் அனாவசியப் பாரம் என்று தன்னை மட்டமாக எண்ணுகிறாள் என்பதை மின்னி உணர்ந்திருந்தாள். வெறுக்கிறாள் என்று கூட நினைத்தாள். எனவே, பானுமதியிடம் அவள் முடிந்த அளவு பேச்சு வைத்துக் கொள்வது இல்லை.

அந்தத் தடவை, 'செக்கப்' டாக்டர் பானுமதிக்குத் திருப்தி யாக இல்லை.

சாம்பிளாக வந்த சில 'டானிக்'குகளைச் சௌமினியிடம் கொடுத்து, 'மின்னி, கொழுப்பு, இனிப்பு இல்லாமல் அளவோடு உண்ண வேண்டும். நிறைய நடக்க வேண்டும்' என்று சொல்லி அனுப்பினாள்.

தனக்குப் பிரியமான சௌமினியின் வா ்யானத்தை மின்னி ்ன்று தீர்த்து விடக்கூடாது என்று பார்் ்தாள் என்று என்ன ி

உணவு பற்றி டாக்டர் கூறியதை மின்னி அலட்சியம் செய்தாள். இருக்கிற வேதனையில் இது ஒரே ஒரு சுகம். அதையும் விடுவதா? டி.வி.யில் கூட, கர்ப்பிணிப் பெண்கள் வயிற்றுப் பிள்ளைக்கும் சேர்த்துச் சாப்பிட வேண்டும் என்கிறார்கள், இவளானால் பட்டினி போடப் பார்க்கிறாளே என்ற ஆத்திரத்தில் இன்னமும் அதிகமாகத் தின்றாள்.

பெருத்து வந்த உடல் பாரத்தால் நாலு எட்டு எடுத்து வைக்கு முன் மூச்சு வாங்கவே நடையையும் விடுத்தாள். எதிர் காலத்தைப் பற்றிய நிராசையினால் விளைந்த அசிரத்தையும் அலுப்பும் வேறு. அடுத்தவர் சொல் புத்தி கேட்டறியாத தன்மையும் சேர்ந்து கொள்ள, தன்னையறியாமல், பிரசவத்தைத் தன்னால் ஆனமட்டும் சிரமமானதாக்கிக் கொண்டிருந்தாள் மின்னி.

இத்தனைக்கும் மேலாக, சிசேரியன் செய்தாவது, மின்னியைப் பானுமதி காப்பாற்றியிருக்கக் கூடும்.

ஆனால், குடும்பவிழா ஒன்றுக்காகப் பானுமதியும் அவளுடைய கணவரும் வெளியூர் சென்றிருந்த சமயத்தில் பேறுகாலத்திற்காக டாக்டர் கொடுத்த கெடுவுக்கு இரண்டு வாரம் முன்னதாகவே மின்னிக்கு வலியெடுத்து விட்டது.

எந்தவித நெருக்கடியையும் எதிர்நோக்காததால் மெல்ல வளர்ந்த கொண்டிந்த தன் சிறு தாய்சேய் நலப் பிரிவின் பொறுப்பை, நர்சிடமே விட்டுப் போயிருந்தாள் பானுமதி.

ஆனால் மின்னியின் நிலைமை நர்சின் சக்தியை மீறியதாக இருந்தது.

பிரசவ வலியின் கடுமையை இந்த அளவுக்கு எதிர்பார்த்திராத மின்னிக்குப் பேறுகாலத்தை முடிந்தவரை இலகுவாக்குவதற்காக நர்ஸ் சொன்ன எதுவும் கருத்தில் படவில்லை. கத்திக் கதறி, உருண்டு, புரண்டு உள்ளதையும் கெடுத்துக் கொண்டாள்.

கடைசியாக, நர்சின் ஆலோசனைப்படி, சௌமினி வேறு ஒரு டாக்டரை அழைத்து வந்து காட்டியபோது, நிலைமை அடியோடு கைமீறி விட்டிருந்தது.

கடைசித் தெளிவின்போது, மின்னி, சௌமினியை அருகில் அழைத்தாள்.

அவளது தாய்மை உணர்வை தூண்டி, அவளை உயிர்ப்பிக்கும் நோக்கத்தோடு அருகில் கிடத்தப்பட்டிருந்த குழந்தையைக் காட்டி, ''உன் பொறுப்பு'' என்றாள்.

கண்ணீரைக் கட்டுப்படுத்தியபடி, ''உனக்கு ஒன்றும் இல்லை, மின்னி. விரைவில் நன்றாகிவிடும்.'' என்று சௌமினி அவளைத் தேற்ற முயன்றாள்.

தலையசைத்து, கடைசி நேரத்து ஞானோதயமாக, ''பேராசை பெருநஷ்டம்'' என்று பெரிய மூச்சுக்களிடையே சொன்னதோடு சரி; மின்னி அதற்குமேல் அதிகம் கஷ்டப்படவில்லை.

மின்னியின் மறைவு சௌமினிக்குத் தன்னில் ஒரு பாகத்தை இழந்தது போல இருந்தது. மின்னிக்காக அவள் அழுதாள், புலம்பினாள் என்று இல்லை. ஆனால் ஒரு மாதிரி இறுகிப்போனாள்.

மனோரஞ்சனைப் பற்றி மின்னி பேசுவது தாங்காமல், வேலைவேலை என்று ஓடி ஒளிந்தது தப்போ; இன்னமும் அதிக நேரம் அவளோடு கழித்திருக்க வேண்டுமோ என்று அடிக்கடி எண்ணினாள்.

விடுப்பு எடுத்துக் கொண்டு, குழந்தையைக் கவனிப்பதும், விட்டத்தை வெறிப்பதுமாக வீட்டிலேயே கிடந்தவளுக்கு, வீட்டின் ஒவ்வோர் இடமும் அவளுடைய ஒன்றுவிட்ட சகோதரியை நினைவுபடுத்தியது.

அவளது அழகு, சிரிப்பு, ஆசைகள், எதையும் அலட்சியமாகத் தலையைச் சிலுப்பித் தள்ளிவிடும் தன்மை.. எல்லாமே அழிந்து போய்விட்டதே'

இந்த மனோரஞ்சன் என்ன காரியம் செய்துவிட்டான்! இதற்கெல்லாம் கடவுள் அவனை என்னமாதிரி தண்டிக்கப் போகிறாரோ, பாவம்!

ஒருவாரம் இடைவெளி கொடுத்தபின், பானுமதி, சௌமினியை அவளது வீட்டில் வந்து பார்த்தாள்.

பானுமதியின் எண்ணப்போக்கு பற்றி, மின்னி ஊகித்தது மிகவும் சரியே. சொல்லப் போனால், அது இன்னமும் கடுமையானதே.

ஆதாயம் பெறுவதற்காக மட்டிலும் மின்னி, தன் பாட்டியையும் சௌமினியையும் உறவாக மதித்தாள்; மற்றபடி அவர்களிடம் அவளுக்குப் பாசமே கிடையாது என்பது அவளது அபிப்பிராயம். சௌமினியின் பணத்தை அவள் வாங்கிச் சென்றதே பானுமதிக்குக் கோபம். அதையும் முழுக்க முழுக்க விழுங்கி ஏப்பம் விட்டுவிட்டு, அதற்கும் மேலாகக் கொஞ்சமும் வெட்கமோ, உறுத்தலோ இல்லாமல் வயிற்றைத் தள்ளிக் கொண்டு, சௌமினியின் உழைப்பில் அவள் உட்கார்ந்து உண்டதைப் பெரும் குற்றமாகவே அவள் கருதினாள்.

தற்கால அரசியல்வாதிகள் தத்தம் பதவிக்காலத்தில் முடிந்த அளவு பணம் பண்ணுவது போல, இந்தக் கருவுற்றிருந்ததைச் சாக்காக வைத்துக் கொண்டு, சௌமினியை ஒட்டுண்ணியாய் உறிஞ்சித் தின்று கொண்டே இருந்தாளே!

இந்த மரணம் மின்னிக்கு கடவுளாகப் பார்த்துக் கொடுத்த தண்டனையே. மற்றபடி இன்றைய விஞ்ஞான யுகத்தில் ஒரு பிரசவத்தில் யார் சாகக்கூடும்?

ஒரு நல்ல பெண்ணான சௌமினிக்கும் ஓர் அனாவசியச் சுமையிலிருந்து இதன் மூலம் அவர் விடுதலை தந்தாரா என்று கூடப் பானுமதி எண்ணியதுண்டு. இல்லாதுபோனால், இன்னும் எத்தனை ஆண்டுகள் அந்தச் சின்னப் பெண்ணின் உழைப்பை மின்னி உறிஞ்சியிருப்பாளோ!

ஆனால் இந்த எண்ணங்களில் எதையுமே பானுமதி சௌமி னியிடம் கூறியது இல்லை. கூறிப் பயனும் இல்லை.

சௌமினிக்குக் குடும்ப விசுவாசம் அதிகம். இதில் எதையும் அவள் ஒத்துக் கொள்ளமாட்டாள். சொல்வது பானுமதி என்பதால் ஓரளவு ஒத்துக் கொண்டாலும், மின்னியை அவள் கைவிடுவது நடக்காத காரியம்.

எனவே பானுமதி, இலவச வைத்தியம், சாம்பிள் மருந்துக ளைச் சும்மா கொடுப்பது என்று தன்னால் இயன்ற உதவி செய் தாள். சௌமினிக்காகத்தான்.

ஆனால் கொண்டதே கோலம் என்ற மனப்பான்மை கொண்ட அந்தப் பிடிவாதக்காரி மின்னி, ஒரு வைத்தியரின் ஆலோசனையைக் கூட அலட்சியம் செய்து, தன்னைத்தானே அழித்துக் கொண்டு இதற்கு ஒரு முடிவைக் கொணர்ந்தாள் என்று பானுமதி நிச்சயமாக நினைத்தாள்.

அடுத்து அந்தக் குழந்தை.

ஒரு தப்பான வழியில் உயர முயன்ற மின்னிக்குக் கடவுள் கொடுத்த தண்டனை அது. அந்தப் பிழையில் எள்ளளவும் பங்கு பெறாத சௌமினிக்கு அந்தச் சிலுவை சுமக்கும்படியான கடமை எதுவும் கிடையாது என்பதும் அவளுக்கு நிச்சயமே.

மின்னியைப் பற்றி ஆறுதலாக இரண்டொரு வார்த்தைகள் பேசியிருந்து விட்டு குழந்தையைப் பற்றிப் பேச்செடுத்தாள் பானு மதி.

இந்தக் குழந்தை பற்றிய பொறுப்பு யாருக்கும் இல்லை என் பதை மெல்ல உரைத்து விட்டு, கண்களில் கவனத்துடன், குழந் தையை ஏதாவது அனாதை இல்லத்தில் சேர்த்து விடலாமா என்று சாதாரணம் போல வினவினாள்.

சௌமினியின் அதிர்ச்சியும் அவள் எதிர்பார்த்ததே.

எனவே, குரலில் சிறு அழுத்தத்துடன், "அதற்கு மனமில்லா விட்டால் சொல்லு, பிள்ளைக்காக ஏங்குகிறவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். நல்லதான ஓர் இடம் பார்த்துக் குழந்தை யைத் தத்துக் கொடுக்கலாம்" என்றாள்.

ஆனால் அவள் எதிர்பார்த்து வந்தது போலவே, இந்த இரண் டில் எதையுமே சௌமினி ஒத்துக் கொள்ளவில்லை.

மின்னியுடைய குழந்தையைப் பொறுத்தவரையில், சௌமி னிக்கு எந்தவிதமான தார்மீகப் பொறுப்பும் கிடையாது என்ப தோடு, இந்த வயதில் அவளுக்கு இந்தச் சிசு ஒரு கனமான சுமை; அவளது பிற்கால வாழ்வுக்கு ஒரு பெரும் முட்டுக்கட்டை என்ப தையும் சௌமினிக்கு உணர்த்திவிடப் பானுமதி எவ்வளவோ முயன்றாள்.

ஆனால் அதற்குப் பலன்தான் கிட்டாது போயிற்று.

## 7

**பா**னுமதியின் காரண காரியங்கள் முழுவதையும், சௌ மினி அமைதியாகவே இருந்து கேட்டாள். அருகில், பாயில் கிடந்த குழந்தையிடம் பார்வையைப் பதித்து கேட்டிருந்தவள், அவள் பேசி முடித்ததும் மெல்ல நிமிர்ந்து, "அக்கா, நீங்கள் என் நன்மையை முக்கியமாக எண்ணித்தான் இதையெல்லாம் சொல்கி றீர்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரிகிறது... ஆனால்... ஆனால்..." என்று சற்றுத் தயங்கித் தடுமாறினாள்.

''ஆனால் என்ன, சௌமினி?''

மனோரஞ்சனுடைய பிள்ளையை நான் எப்படியக்கா கைவிடுவேன்?'' என்று கேட்டாள் சின்னவள்.

''மனோரஞ்சனா?!'' பானுமதி திகைத்துப் போனாள். பாவி! அவனா?!

''ஆமாம் அக்கா மின்னி பற்றிக் கொள்ள முயன்ற பணக்காரர் மனோரஞ்சன்தான். இந்தக் குழந்தை மின்னியுடையது மட்டும் அல்ல. மனோரஞ்சனுடையதும் கூட. இதை அனாதை என்று நான் எப்படி அடுத்தவரிடம் விடுவேன்?'' என்றாள் அவள் மெல்லிய குரலில்.

''ஆனால் அதற்காகப் பெற்றவனே ஒத்துக் கொள்ளாத பிள்ளைக்காக, உன் வாழ்வை அடியோடு அழித்துக் கொள்ளப் போகிறாயா?'' என்று ஆத்திரத்துடன் வினவினாள் பானுமதி.

''வாழ்வு என்றால்... அக்கா, நீங்கள் நினைக்கிற மாதிரி வாழ்வு எனக்கு அமைவது இனி ஒருபோதும் சாத்தியமல்ல என்பது எனக்கு எப்போதுமே தெளிவு அக்கா. எந்தவிதக் குறிக்கோளும் இல்லாத வெற்று வாழ்வு நான் வாழ வேண்டாம் என்று கடவுளாகப் பார்த்து இந்தக் குழந்தையை எனக்குத் தந்திருப்பதாகத்தான் நான் நினைக்கிறேன். அக்கா, நான் சும்மா, மனோரஞ்சனுடைய பிள்ளையைப் பார்த்து ஏற்பட்ட உணர்ச்சி வேகத்தில் சொல்கிறேன் என்று எண்ணுகிறீர்களா? இல்லவே இல்லை, அக்கா. மின்னியின் முடிவுக்குப் பிறகு நான் ரொம்பவும் யோசித்து எடுத்த முடிவு இது... இரவுபகல் யோசித்தேன் அக்கா. முடிந்த வரையில், இந்தக் குழந்தையின் முகத்தைப் பாராமல், தனியே உட்கார்ந்துதான் சிந்தித்தேன்... நிச்சயமாக இந்தப் பிள்ளையை நான் கைவிட முடியாது அக்கா. நான் உயிர் வாழ்வதற்கு ஓர் அர்த்தம் இருக்கிறது என்றால் இனி அது இவன்தான்.'' என்று முடித்தாள் சௌமினி.

அவளது குரலும், முகமும், அமைதியும், தெளிவுமாக அவள் சொல்லி முடித்த விதமுமாக, அவள் தீவிரமாக தீர்க்கமாகச் சிந்தித்ததை மெய்ப்படுத்தின.

இந்த முடிவிலிருந்து இவளை மாற்றுவது முடியாது என்பதைப் பானுமதி உணர்ந்தாள். பிடிவாதத்தில் சௌமினி, மின்னிக்குச் சற்றும் சளைத்தவள் அல்ல.

இந்த மனோரஞ்சன் என்னமாதிரி மனிதன்? தன்னைத் தவிர எதையும் எண்ணத் தெரியாத மின்னியும் அவனிடம் ஏமாந்தாள். நியாய அநியாயங்களை வரையறுத்து அதன்படி வாழும் சௌமினியும் அவனிடம்தானே மனதை இழந்திருக்கிறாள்!

ஆனால் எதற்காக?

யாருக்கோ, யாரோ பெற்ற பிள்ளைக்காக இந்த இனிய பெண் உழைத்து உருக்குலைவது எப்படி நியாயமாகும்?

அது பிடிக்காமல் மீண்டும் முயன்றாள். ''மனோரஞ்சன் குணம் பற்றி முன்பே சொல்லியிருக்கிறாய். அவனுக்கு இதுபோல் எத்தனையோ? அத்தனையில் இதுவும் ஒன்றுதானே? இந்தக் குழந்தையை மட்டும் காப்பாற்றியாக வேண்டும் என்றால் கொஞ்சம் மடத்தனமாக இல்லை?''

டாக்டரின் முயற்சியை உணர்ந்து லேசாக முறுவலித்தாள் சௌமினி. ''மற்றதெல்லாம் நான் அறிந்திராதவை அக்கா. ஆனால் தெரிந்தே மனோரஞ்சனுடைய மகனை நான் விடமாட்டேன்.'''

மேலும் யோசித்த பானுமதிக்கு இன்னொன்று தோன்றியது. தோன்றியதைச் சொன்னாள், ''அல்லது அந்த மனோரஞ்சனிடமே சென்று பார்த்தால் என்ன சௌமினி? பிள்ளையை நேரில் பார்த்தால் அவன் மனம் மாறக்கூடும். கூடவே பிள்ளைக்குத் தாய் வேண்டும் என்று உன்னையும்...

''அக்கா!'' என்று அலறிவிட்டாள் சௌமினி. சிரமப்பட்டுத் தன்னைச் சமனப்படுத்திக் கொண்டு, ''வேறு வாழ்வு கிடையாது என்று நான் கூறியது, மனோரஞ்சனையும் உட்படுத்திதான், அக்கா. மின்னியோடு... இன்னொரு பெண்ணோடு அவர் உறவு கொண்டதற்கு இந்தக் குழந்தை ஓர் அசைக்க முடியாத அத்தாட்சி. மின்னி மாதிரி எத்தனையோ? சே. நினைக்கவே உடம்பெல்லாம் கூசுகிறது. இந்த மாதிரி ஒரு மனிதரோடு, பத்தோடு பதினொன்றாக வாழ்வது என்னால் முடியாத காரியம் அக்கா. ஒருக்காலும் முடியாது. தயவு செய்து இதுபோல எண்ணிக்கூடப் பாராதீர்கள்.'' என்று முடித்து விட்டாள் அவள்.

சௌமினியின் உறுதியைக் கண்ட பானுமதி, அதன் பின், வேறு பேசாமல், அவளுக்கு உதவியாக இருந்தாள்.

மின்னியின் மகனைச் சௌமினி தத்து எடுப்பதில் சில சிக்கல்கள் இருந்தன.

ஒரு குழந்தையைத் தத்து எடுக்க, ஒன்று அது அனாதையாக இருக்க வேண்டும், அல்லது பெற்றோர் இருவரின் அல்லது இருவரில் உயிரோடு இருப்பவரின் சம்மதம் வேண்டும்.

ஆனால் மனோரஞ்சன் இருக்கும் திசைப்பக்கம் திரும்பிப் பார்ப்பது கூடக் கூடாது என்பது சௌமினியின் உறுதி.

எனவே ரொம்பவும் யோசித்து, அவளே ஒரு வழி கண்டாள். அவளே இந்தக் குழந்தையுடைய பெற்ற தாயாக மாறிவிடுவது;. குழந்தையைப் பெற்ற சௌமினி அவளே என்று காட்டிக் கொண்டால் பிரச்சினை தீர்ந்து விடுமல்லவா?

இந்த ஊரில் இருந்து கொண்டு அது முடியாதுதான். ஆனால் வேற்றூரில் குடியேறி, என் மகன் இவன்; கணவன் பிரிந்து விட்டான் என்று சொன்னால் யார் நோண்டப் போகிறார்கள்? குழந்தை, அவளுடைய பிள்ளையாகவே ஆகிவிடுமே!

முதலில் இந்தத் திட்டத்தைக் கேட்டுச் சிரித்த பானுமதியும் கிருபாகரனும், சௌமினியின் தீவிரத்தைக் கண்டு அதற்கு உதவி னர்.

அந்த உதவியின் பயனாக, சௌமினிக்கு விழுப்புரம் அருகே இருந்தச் சிற்றூரில், இந்த வேலை கிடைத்தது. (முதலாளி கிருபாகரனுடைய சினேகிதருடைய தந்தை) இங்கே அவளது வாழ்வு, இளவேனில் காலத்து ஆற்று நீரோட்டம் போல அமைதி யாகச் செல்லலாயிற்று இடையிடையே இந்த மாதிரி மனப் போராட்டங்கள் தவிர நள்ளிரவு வரை உட்கார்ந்திருந்து விட்டு, ஒருவாறு படுத்தாள் சௌமினி.

பிறகும், சித்தார்த்தனுக்கும் ராம காதையை நன்றாகக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்த பிறகே அன்று அவளால் கொஞ்சமேனும் கண்ணயர முடிந்தது.

ஆனால் அவளது அன்றைய தூக்கத்திற்கு ரொம்பவும் அற் பாயுளாக இருந்தது.

ஒரு சில மணி நேரம் அவள் ஆழ்ந்து உறங்குமுன், அவளது வீட்டு வாயிற்கதவு வேகமாகத் தட்டப்பட்டது.

''சௌமினி, சௌமினி, விழித்துக் கொள்ளுங்கள். சீக்கிர மாக எழுந்து வாருங்கள். ப்ளீஸ்...'' என்று யாரோ மிகவும் அவச ரப்பட்டார்கள்.

இது கனவல்ல என்று உணர்ந்து, சிரமப்பட்டு இமைகளைப் பிரித்தவாறே எழுந்து, வெளி விளக்கைப் போட்டுவிட்டு, வாயிற் கதவை அடுத்திருந்த ஜன்னலின் வழியே வெளியே பார்த்தாள் சௌமினி.

முகமறியாத மனிதர்கள் இருவர். ஆனால் கூடவே அவளு டைய முதலாளி!

தன்னை அவள் கண்டுவிட்டதை அறிந்து, ''கதவைத் திறம்மா'' என்றார் அவர் மெதுவாக.

இந்த நேரத்தில் இந்த முதியவர், இங்கே ஏன் வந்தார்? வயிற்றுக்குள் ஏதோ பிசைய, தாள்ப்பாள் நீக்கிக் கதவைத் திறந்தாள் சௌமினி.

''பாருங்கள் சௌமினி, நாங்கள் மனோரஞ்சனின் வீட்டிலிருந்து வருகிறோம். ஒரு விபத்துக்கு ஆளாகி உயிருக்கே ஆபத்தான நிலமையில் அவர் இருக்கிறார். உடனே கிளம்பி எங்களோடு வாருங்கள்.'' என்று, புதியவர்களில் ஒருவர் வேகமாக உரைத்தார்.

அவர் பேசும் மொழியே புரியாதவள் போலச் சற்று நேரம் திகைத்து விழித்து விட்டு, ''இல்லை! இது பொய்! நான் நம்பமாட்டேன்!'' என்று கிறீச்சிட்டாள் அவள்.

## 8

மனோரஞ்சனின் உயிருக்கு ஆபத்து என்பதை சௌமினியால் ஒத்துக் கொள்ள முடியவில்லை.

எவ்வளவு துடிதுடிப்பான இளைஞன்! வயது முப்பது கூட இராது; அவனுக்குப் போய் விபத்தாம்! உயிருக்கு ஆபத்தாம்!

இருக்காது. இது ஏதோ பொய்... சதி. இப்படிச் சொல்லி அவளை அழைத்துச் சென்று எங்காவது சிவப்பு விளக்குப் பகுதியில் விற்கப் பார்க்கிறார்களோ, என்னவோ!

ஆனால், நல்லவரான இந்த முதலாளி ஏன் இவர்களோடு கூட வந்தார்? ஒருவேளை அவர்களையும் இந்த வில்லன்கள் ஏமாற்றி விட்டார்களா?

லேசாகத் தொண்டையைக் கனைத்துக் கொண்டு "இதோ பாரம்மா... என்று அவர் தொடங்கவும், குறுக்கிட்டு "இல்லை சார். அப்படி எதுவும் இராது. இவர்கள் எதற்காகவோ பொய் சொல்லுகிறார்கள். நம்பாதீர்கள்." என்றாள் அவசரமாக.

கூட வந்தவர்களில் நடுத்தர வயதுள்ள மனிதன் லேசாக முறுவலித்து "இவ்வளவு அன்பை வைத்துக் கொண்டு ஏனம்மா இந்தப் பிரிவு?" என்று கனிவுடன் வினவினான்.

திடுக்குற்று நிமிர்ந்து, "அன்பா? இதெல்லாம் ஒன்றும் இல்லை. உங்களை நம்பாவிட்டால் யார் மீதோ அன்பு என்று விடுவதா?" என்றாள் அவள் ஆத்திரமாக.

அடுத்தவன் முன்வந்து, "ஓகே. உங்கள் விவகாரம் எங்களுக் குத் தேவையில்லை. ஆனால் கார் ரேசில் விபத்து நடந்தது உண்மை. அவர் படுகாயமுற்று உயிருக்குப் போராடிக் கொண்டு இருப்பதும் உண்மை. அவ்வப்போது உங்கள் பெயரை முனகுவது தவிர அவருக்கு வேறு உணர்வே இல்லை. அதனால், ஒருவேளை நீங்கள் வந்தால் அவர் பிழைக்கக் கூடுமோ என்று உங்களைத் தேடி அழைத்து வருமாறு மனோரஞ்சனுடைய தாத்தா எங்கள் நிறுவனத்திடம் கேட்டார். 'சகாயம்' துப்பறியும் நிறுவனத்தைச் சார்ந்தவர்கள் நாங்கள். மிஸ்டர் மனோரஞ்சனின் உடைமைக ளில்.... என்று நிறுத்தி, ஓரமாய் உறங்கும் சித்தார்த்தனைக் காட்டி, "குழந்தை பற்றி நீங்கள் எழுதிய கடிதம் கிடைத்தது. அதற் கும் முன்பே சென்னையில் நீங்கள் பழகியதும் அறிந்தோம். சிந்து பூந்துறை சென்று, அங்கிருந்து கோவை சென்றோம். டாக்டர் பானு மதியும், டாக்டர் கிருபாகரனும் எங்களை இங்கே அனுப்பி வைத் தார்கள். உங்களுக்கும், உங்கள் முதலாளிக்கும் கடிதங்களும் தந் தார்கள். இதோ உங்களது..." என்று தெளிவுடன் உரைத்து, பானும

தியின் கடிதத்தை எடுத்து செளமினியிடம் கொடுத்தான்.

பானுமதியின் எழுத்துதான். ''மன்னிப்பதும் மறப்பதும் வாழ்க்கைக்கு மிகவும் அவசியம், செளமி. உயிருக்கு மிஞ்சி உலகத்தில் ஒன்றுமே கிடையாது. பின்னொரு காலத்தில், முக்கியமான தருணத்தில் தப்பு செய்துவிட்டோமே என்று நானோ, நீயோ வருந்தும்படி ஆகிவிடக் கூடாது என்பதாலேயே இவர்களுக்கு உன் முகவரியும், கடிதமும் தந்திருக்கிறேன். உன் பிள்ளையோடு சென்று, உன் மனோரஞ்சனைப் பார்.'' என்று அவள் எழுதியிருந்தாள்.

அவளது கலங்கிய பார்வை, கையிலிருந்த கடிதத்திலிருந்து உயரவும், முதலாளி பேசினார். ''எல்லாம் உண்மைதான், செளமினி. கிருபாகரன் எனக்கும் கடிதம் அனுப்பியிருக்கிறான். இவர்களை நீ நம்பவேண்டுமே என்பதற்காகத்தான் நானும் உடன் வந்தேன். கிளம்பம்மா உன் அருகாமையேனும் அந்தப் பிள்ளையை யமனிடமிருந்து மீட்டு வரட்டும்.

பிள்ளைக்கும் தனக்குமாகக் கையில் கிடைத்ததை எடுத்துக் கொண்டு, நிமிடக் கணக்கிலேயே, செளமினி கிளம்பிவிட்டாள்.

''நான் மிஸ்டர் சிதம்பரநாதருக்குக் கால் போட்டுச் சொல்லி விடுகிறேன். அதற்காக நேரம் செலவு செய்யாமல் நீங்கள் போகலாம்.'' என்று வழியனுப்பி வைத்தார் முதலாளி.

பயணத்தைப் பற்றிய விவரங்கள் எதுவும் செளமினியின் மனதில் பதியவில்லை. கார் கொஞ்சம் மெதுவாகச் செல்வது போல அவளுக்குத் தோன்றியது. அதைக் குறிப்பிட்டபோதே, முடிந்த அளவு விரைவாகத்தான் வண்டியை ஓட்டுவதாகச் சொன்னார்கள். 'நிறைய கம்பெனிகள் இருப்பதால் உள்நாட்டுப் பயணம் எளிதுதானே' என்ற பேச்சு கேட்டது.

விமானம் ஏறினார்கள். வானில் பறந்த முதல் அனுபவம் செளமினியின் கருத்தில் சற்றும் நில்லாது போயிற்று.

ஆனால், நல்லவேளையாகச் சித்தார்த்தன் விழித்து விட்ட தால், அவனைக் கவனித்தாக வேண்டிய கட்டாயம் அவளை, நடப்புக்குக் கொணர்ந்தது. அவனது கேள்விகளுக்கு பதில் சொல் லும் தேவை வேறு.

விமானத்தைப் பற்றி அவனுக்குப் புரிகிற அளவில் விளக்கி முடியவும், விமானம் தரையிறங்கி மீண்டும் காரில் பயணம் தொடங்கியது.

காரைப் பற்றிய விவரங்கள் அறிந்தானதும், ''கார்லே எங்கே போறோம்?'' என்று அறிய விரும்பினான் பிள்ளை.

அரைக் கவனமாகவே மகனுடன் பேச்சில் ஈடுபட்டிருந்த சௌமினி யோசித்து பதிலளிக்குமுன், ''உன் அப்பாவிடம்.'' என் றான் கூட வந்தவர்களில் ஒருவன்.

சௌமினி உதட்டைக் கடித்துக் கொண்டு பேசாதிருக்க, சிறு வனுக்கு ஒரே கொண்டாட்டம். ''எங்கப்பா கிட்டேயேவா? வினு வோட அப்பா மாதிரி அப்பாவா? ஹைய்யா! ஜாலி! ஜாலி!'' என்று குதித்தான்.

''ஷ். சும்மா இரு, சங்கர். அங்கே இவன் தந்தை என்ன கதியில் இருக்கிறாரோ'' என்று முதல்வனை அடக்கினான் மற்ற வன்.

சற்றே விறைப்பற்றவளை ஓரக் கண்ணால் நோக்கியபடி, ''எப்படியோ, இருந்தாலே பரவாயில்லையே!'' என்று அந்த சங் கர் கூறவும், அறை விழுந்தாற்போல நிமிர்ந்தாள் சௌமினி.

''சங்கர்!'' என்ற மற்றவனின் குரலில் அதட்டல் இருந்தது.

நின்று விசாரித்து வரத் தேவை இல்லாமல், வந்தவர்களை உடனே அறைக்கு அழைத்துவர மருத்துவமனை வாயிலேயே ஆள் நிறுத்தியிருந்தார் சிதம்பரநாதர். ''மனோரஞ்சனின் நிலை யில் மாற்றம் இல்லை'' என்று கூறி அழைத்துச் சென்றவன்,

அறைக் கதவைத் திறக்குமுன், "உள்ளே போனா புள்ளை பயந்துக் கும், அம்மா" என்றான் பணிவுடன்.

மகனை என்ன செய்வது என்று புரியாமல் சௌமினி மலங்க விழிக்கையில், "ஜெம்ஸ் வாங்குவோமா?" என்று பிள்ளையைத் தூக்கிக் கொண்டு மறு திசை நோக்கி நடந்தான் அந்த சங்கர்.

நன்றி கூறக்கூடத் தோன்றாமல், பணியாள் திறநதுவிட்ட கதவின் வழியே உள்ளே விரைந்தாள் சௌமினி.

கட்டிலின் ஒரு புறமாய் ஒரு சாய்வு நாற்காலியில் அமர்ந்தி ருந்த பெரியவரையோ, அவர் "வாம்மா" என்று வரவேற்ற தையோ, கவனியாமல் கட்டிலின் மறுபுறமாய் மனோரஞ்சனை நெருங்கினாள் அவள்.

காலில், கையில், மார்பில், தோளில், தலையில்.... எத்தனை கட்டுகள்! பிளாஸ்திரிகள்!

கட்டுகள் இல்லாதிருந்த அவனது இடக்கரத்தைப் பற்றி, "ரஞ் சன், ரஞ்சன்... நான்... நான் சௌமினி வந்திருக்கிறேன். ரஞ்சன். ப்ளீஸ், என்னைப் பாருங்களேன்..." என்றாள் குரல் நடுங்க.

ஆனால் மனோரஞ்சனிடம் சிறு சலனம் கூடத் தென்படாது போகவும் பயமும் கலக்கமுமாக எதிர்ப்புறம் இருந்த சிதம்பரநா தரை நோக்கினாள்.

மனோரஞ்சனிடம் மாறுதல் காணாததில அவரும் சோர்ந்து போயிருந்தார். "அந்தக் கடிதம், நீ எனக்கு எழுதியிருக்கலாமே, அம்மா. என் கொள்ளுப் பேரனை எப்படியும் வீட்டுக்கு அழைத் துப் போயிருப்பேனே! அப்புறம், பிள்ளையையும், உன்னையும் விட்டு இவன்தான் எங்கே போவான்; எப்படி அடிபடுவான்? ரேஸ், மண்ணாங்கட்டி என்று என் பேரனுக்கு இந்தக் கதி நேர்ந்தி ராதே" என்று புலம்பினார்.

அந்த வேதனையிலும், சௌமினிக்கு உள்ளே ஏதோ உறுத்தி யது.

''ஷ்!'' என்றாள் அருகிலேயே நின்று கவனித்துக் கொண்டிருந்த நர்ஸ். ''காதலி வந்து கூப்பிட்டதுமே எழுந்து உட்கார்ந்து பாடிவிட இது என்ன சினிமாவா? எல்லா உணர்வுகளுமே மங்கியிருக்கிற இந்த நிலையில் இந்தம்மாவின் குரல் அவரது மூளையை எட்டி, அதை அவர் அறியவே நேரம் ஆகும். பாருங்கள், அவர் புரிந்து கொண்டார் என்றுதான் தோன்றுகிறது. மிஸ்டர் மனோரஞ்சன், கண்ணைத் திறந்து உங்கள் சௌமினியைப் பாருங்கள்! நீங்கள் பாராயணம் செய்கிற சௌமினி, உங்கள் குழந்தையைப் பெற்ற தாய், இதோ உங்களைப் பார்க்க வந்திருக்கிறாள். பாருங்கள். இன்னும் அருகே வாருங்கள் சௌமினி. அவர் கண்ணைத் திறந்ததும் பார்வையில் படுகிற மாதிரி வந்து நில்லுங்கள்.''

கண்ணிமைகளைச் சுருக்கி சுருக்கி மனோரஞ்சன் கண்களைத் திறக்க முயன்று கொண்டு இருந்த அந்தச் சில வினாடிகளில், பொட்டில் அறைந்தது போலச் சௌமினிக்கு ஒன்று உரைத்தது.

அவனுக்குக் கடிதம் எழுதியவள் - அவனுடைய குழந்தையைப் பெற்ற தாய் - அந்தச் சௌமினி அவள் இல்லையே!

எத்தனையோ ஆண்டுகளுக்கு... ஆண்டுகளா, எத்தனையோ யுகங்களுக்கு முன்பாகப் படிக்கிற காலத்தில் பழகிய - அதுவும் அரைகுறையாகப் பழகிய பெண்ணை, முழுமையாக ஒட்டி உறவாடிய ஆயிரம் பேருக்குப் பிறகு மனோரஞ்சன் அடியோடு மறந்திருக்க மாட்டானா?

அந்தக் கணத்தில் தன் நிலைமையை மிகவும் பயங்கரமாக உணர்ந்தாள் அவள்.

தன் பேரனுக்குப் பிள்ளை பெற்ற சௌமினி இவள் இல்லை என்று அறிந்ததும், கொள்ளுப் பேரனை வைத்துக் கொண்டு, அந்தப் பெரியவர் அவளை விரட்டியடித்து விட்டால்?

அவளது வாழ்நாள் ஒரே ஆதாரமான மகனைப் பிரிந்து அவள் எப்படி உயிரோடு இருப்பாள்?

அதைவிடவும், மனோரஞ்சனின் உடல்நிலை இன்னும் மோசமாகி என்னவாவது ஆகிவிட்டால்?

கண்மூடித் திறக்குமுன் உலகையே வலம் வந்துவிடக்கூடிய வல்லமை படைத்தமனம் என்னென்னவோ பயமுறுத்த, சரியாகி விட்ட நெஞ்சுக் கூட்டை அழுத்திய வண்ணம் மனோரஞ்சனைப் பார்த்த சௌமினி திகைத்துப் போனாள்.

திறந்திருந்த அவனது கண்கள் இரண்டும் அவளது முகத்தி லேயே நிலைத்திருந்தன.

அவனது மூச்சு நின்று போய்விட, அவன் ஒரு பெருமூச்சு விட்டு, ''வந்து விட்டாயா?'' என்று கேட்டுப் புன்னகை புரிய முயன்றபோது மீண்டும் அவனது இமைகள் தாமாக மூடிக் கொண் டன.

அச்சத்துடன் நோக்கிய இருஜோடி விழிகளுக்கும் பதிலாக, ''வெறும் சோர்வு அனேகமாக இனிப் பயப்பட தேவையிராது'' என்று முறுவலித்தாள் நர்ஸ்.

அவளைத் தாங்க மாட்டாதவை போலக் கால்கள் ப்லமிழந்து தொய்ந்து கட்டிலின் விளிம்பில் முகம் பதித்து கண்ணீர் சொரிந் தாள் சௌமினி.

## 9

அன்று, அந்த நர்ஸ் சொன்னது போல, மனோரஞ்சன் உடனே எழுந்து உட்கார்ந்து பாடத் தொடங்கி விடவில்லைதான். ஆனால், அப்போது முன்னேறத் தொடங்கிய அவனது உடல் நலம் அதன்பின் பின்னோக்கிச் செல்லவும் இல்லை.

தன்னை, யார் என்னவென்று அவன் சரியாகப் புரிந்து கொண்டானா என்பதில் சௌமினிக்குப் பெரிதும் சந்தேகமே. ஆனால் அவளது அருகாமையை மனோரஞ்சன் விரும்பினான் என்பது நன்றாகவே தெரிந்தது.

அவளது தொடு உணர்ச்சியில் அலட்டலும், அனத்தலும் குறைந்து மனோரஞ்சன் அமைதியாய் இருக்கவே, அவன் அருகிலேயே இருக்கும்படி டாக்டர்கள் சௌமினியிடம் கேட்டுக் கொண்டனர்.

சௌமினியும் மறுக்கவில்லை. அவளுக்கு மறுக்கத் தோன்றவும் இல்லை. சொல்லப் போனால், அப்படி ஒரு வேண்டுகோள் இருப்பதே அர்த்தமற்றதாக அவளுக்குத் தோன்றியது. மனோரஞ்சன், உடல் முழுவதும் காயங்களோடு, உயிருக்கு மன்றாடிக் கொண்டு கிடக்கும்போது அவனை விட்டு அவள் எப்படி அகலமுடியும்? இப்படி, அவசியமற்ற ஒரு வார்த்தை சொல்வதற்காக அவனை விட்டுப் பிரித்து இங்கே அழைத்து வரவேண்டுமா?

வெறித்து நோக்கி விட்டுத் திரும்பிச் சென்று, மீண்டும் மனோரஞ்சன் அருகில் அமர்ந்தாள் அவள்.

காயங்களின் உபாதையால் மனோரஞ்சன் அலட்டும்போது இதமாக வருடுவதும், கையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்திருப்பதும், அவனது அசைவுகளால் விலகிவிடும் போர்வை, தலையணைகளை சீர்படுத்தி இதமாக வைப்பதும், உணவு தருவதும் என்று இவை தவிர அவள் பெரிதாக எதுவும் செய்துவிடவில்லை. எல்லாம் பானுமதி, கிருபாகரன் மருத்துவ மனையில் செய்த பணிகள்தான்.

ஆனால் ஒரே ஒரு வேறுபாடு.

முன்பு அவள் செய்தது வெறும் இரக்கத்தால் செய்தது. 'ஏதோ, நம்மால் ஆன உதவி' என்ற எண்ணத்தோடு செய்யப்பட்டவை. அங்கே அந்த வேலைகளைச் செய்யும் போதே, மனதுள், அடுத்துச் செய்ய வேண்டிய வேலைகள், வீட்டுக்கு வாங்கிச் செல்ல வேண்டிய சாமான்கள், பணக் கணக்கு என்று யோசனை ஓடிக் கொண்டே இருக்கும்.

ஆனால், இப்போது அப்படியல்ல. மனோரஞ்சனிடம் கண் ணையும் கருத்தையும் பதித்து, அவனது சிறுசிறு அசைவுகளிலும் ஒரு புருவச் சுளிப்பில் கூட அவனது தேவையை ஊகித்து, அவனது இதம் மட்டுமே யோசித்து... அவனது நலம் தவிர வேறு சிந்தனையே அவளுக்கு இருக்கவில்லையே.

அவளது உயிரைக் காட்டிலும் பிரியமானவனான பிள்ளை யின் நினைவு கூட வரவில்லை என்றால் சொல்வதற்கு வேறு என்ன இருக்கிறது?

அவளது உணவு கூட அங்கே இருந்த நர்சின் உந்துதலால் உள்ளே சென்றது தான். உறக்கம், மனோரஞ்சனின் கட்டிலில் சாய்ந்தபடியே நடந்தது.

ஏழு நாட்கள் இப்படியே சென்றபின், வைத்தியர்கள், 'இனி மனோரஞ்சனின் உயிருக்குப் பயமில்லை.' என்று ஒருமித்த கருத் துத் தெரிவித்த பிறகே, சௌமினிக்குச் சுற்றுப்புறம் கண்ணிலும்... மனதிலும் பட்டது.

இந்த ஒருவாரத்தில் அங்கே பலமாற்றங்கள் நிகழ்ந்திருந்தன.

முதல் மாற்றம் மனோரஞ்சனிடம்.

முன்போல அரை மயக்கமும், மருந்து உறக்கமும் என்று இல்லாமல் அவ்வப்போது தெளிவும், இயல்பான தூக்கமும் கொண்டான். முன்பு, அவளாகத் தொட்டால் அமைதியுற்றவன், இப்போது பிடிவாதமாக அவள் கையைப் பற்றிக் கொண்ட பிறகே தூங்கினான். முன்பு அவள் குரல் கேட்டு அரைப் பார்வையால் அவளைத் தேடி உணர்ந்தவன், இப்போது விழித்திருக்கும் நேர மெல்லாம் அவள் மீதே பார்வையைப் பதித்திருந்தான். எந்தவித உணர்ச்சியும் இல்லாத வெற்றுப் பார்வை.

அவன் மெய்யாகப் பார்க்கிறானோ இல்லையோ என்ற சந் தேகம் கூட அவளுக்கு வந்தது. ஆனால் அவள் சற்று நகர்ந்தாலும், அவனது நோக்கு அவளோடு ஒட்டிக் கொண்டவை போல அவ ளைத் தொடர்ந்தது.

இந்தப் பார்வையின் பின்னே அவன் என்ன எண்ணுகிறானோ என்று முதலில் குழப்பமும் சிறு கலவரமும் கொண்ட சௌமினிக்குப் பிறகு, அது பழக்கப் பட்டுப் போனதோடு, அதன் காரணமும் புரிபட்டுப் போயிற்று.

மனோரஞ்சன் மெல்ல சுய நிலைக்குத் திரும்புகிறான்! முழு ஆரோக்கியம் திரும்பாத நிலையினால் உடலும் மூளையும் பழைய சக்தியோடு இயங்காத போதும், அவனது ரத்தத்தோடு ஊறிவிட்ட பெண் பித்தம், அங்கிருந்த ஒரே ஒரு வண்ண உடைப் பெண்ணைப் பார்க்கச் செய்கிறது! நர்சுகளின் வெள்ளைச் சீருடை அவனுக்குப் பிடிக்கவில்லை போலும்.

மற்றபடி, அவளை இன்னார் என்று உணர்ந்து அவன் நோக்குவதாகச் சௌமினிக்குத் தோன்றவில்லை. அன்றைக்கே அவளை அலட்சியப்படுத்தி, 'ஆயிரம் மீன்' பிடிக்கச் சென்றவன் ஆயிற்றே!

முதலில் அவன் சௌமினி என்று அரற்றியதும் அன்று 'வந்து விட்டாயா' என்றதும், எல்லாமே உணர்விழந்த நிலையில், பழைய ஞாபகத்தில் வந்த கனவாக இருக்க வேண்டும் என்ற முடிவுக்குச் சௌமினி வந்திருந்தாள். மற்றபடி, இத்தனை நாளில் அவள் முகம் நோக்கி, 'சௌமினி' என்று ஒருதரம் கூட அவன் அழையாதிருக்க வேறு விளக்கம் எதுவும் அவளால் காணமுடியவில்லை.

அவனுக்கு, விரலை ஆட்டினால் ஓடிவருகிற பெண்களைத் தான் பிடிக்கும். மறுக்கிறவர்களை நினைப்பதில் கூட நேரத்தை வீணாக்குவதில்லை போலும்.

தான் யார் என்று புரிந்து கொள்ளாததாலேயே மனோரஞ்சன் தன்னைப் பார்க்கிறான் என்பது சௌமினிக்கு உள்ளூர வேதனையைத் தந்தபோதும், அவன் பார்வை வேறு எங்கும் அலையாமல் தன்னிடமே நிலைப்பது அவளுக்கு இதமாகவும் இருந்தது.

அசட்டுத்தனமே என்றாலும் அது உண்மை.

ஆனால், எவ்வளவு அசடாக இருந்தபோதும், மனோரஞ்சன் உடல் நலம் பெற்று, அவளை இனம் கண்டு வெறுப்பு காட்டுமுன் விலகி விடுவதில் மட்டும் அவள் உறுதியாக இருந்தாள்.

அடுத்த மாற்றம் மனோரஞ்சனுடைய மைந்தனிடம்.

ரொம்பவும் குழந்தைப் பிராயத்திலிருந்து, காப்பகத்தில் விடப்பட்டு வளர்ந்ததாலோ என்னவோ, சித்தார்த்தனுக்கு வேற்று முகக் கூச்சம் அதிகம் கிடையாது. இப்போது தாயின் கவனம் ஒரேயடியாக வேறிடத்தில் நிலைத்து விடவும், அவனிடம் அன்பு காட்டிய மற்றவர்களை இலகுவாக ஏற்றுக் கொண்டான். அவ்வப் போது அவன் தேடிய நேரத்தில் அவனுடைய அன்னையைக் கண்ணில் காட்டிவிட்டால் அதுவே போதுமாய் திருப்தியுற்று, தன் உணவு, விளையாட்டுடன் மற்ற எல்லாக் காரியங்களையும் அடுத் தவர் மூலமாகவே நிறைவேற்றிக் கொண்டான்.

'கைகாரப் பொடியன்' என்று உள்ளூரச் செல்லமாக வைது கொண்ட போதும், சௌமினிக்கு உள்ளூரப் பெருமையே. 'அம்மா தான் வேண்டும்' என்று அவன் அடம் பிடித்திருந்தால் எவ்வளவு கஷ்டமாகிப் போயிருக்கும்? அவளுடைய சர்க்கரைக் கட்டி, சமர்த்துக் குட்டியும் தான்!

கொஞ்சிக் குழைந்து அன்பைப் பொழிந்த கொள்ளுத் தாத்தா மட்டுமின்றி, மற்றவர்களும் கூட அவளுடைய மகனிடம் பிரியம் காட்டியதை சௌமினி கண்டாள்.

இது வழக்கம்தான். அருகில் வருகிறவர்களை எல்லாம் கவர்ந்து தன்புறம் ஈர்த்துவிடுகிற சக்தி, சித்தார்த்தனுக்கு எப்போ தும்மே உண்டுதான்.

ஆனால் இப்போது அது பிரச்சினை ஆகிவிடக் கூடுமா?

மனோரஞ்சனின் மாடியறை ஜன்னலின் கண்ணாடிக் கதவு வழியே கீழே சித்தார்த்தன், தன்னுடைய கொள்ளுத் தாத்தாவுட னும் மற்றவர்களோடும் விளையாடுவதைப் பார்த்துக் கொண்டி ருந்தவளுக்கு உள்ளூர ஒரு குளிர் பிறந்தது.

இந்தத் தாத்தா தன் கொள்ளுப் பேரனை விடமாட்டேன் என்றால்? சித்தார்த்தனைப் பார்த்த பிறகு - அவனோடு பழகிய பிறகு அவனை விடுவது கடினம்தான். ஆனால், பெற்றவளுக்கு மிஞ்சிய உரிமை வேறு யாருக்கு உண்டு?

நீ பெற்றவள் இல்லையே என்று முணுமுணுத்த மனச்சாட்சிக்கு ஒரு குட்டு வைத்து அடக்கினாள்.

அந்த உண்மை அவளுக்கு மட்டும்தான் தெரியும். அவளுக்கும், பானுமதி தம்பதிக்கும்; அவர்கள் இருவரும் அவளைக் காட்டிக் கொடுக்க மாட்டார்கள் என்பது உறுதி.

ஆனால் இந்த ரகசியம் அறிந்தவன் இன்னும் ஒருவனும் உண்டு. இன்றைக்கு உடல்நிலை காரணமாக பேசாமல் படுத்துக் கிடந்தாலும், ஆரோக்கியம் திரும்பிய பின் அவன் என்ன செய்யக் கூடும் என்று என்ன நிச்சயம்? ஒருவேளை தன் மகனைக் கேட்டு விட்டால்?

உள்ளூர நடுங்கிக் குளிர்பரப்பிய அச்சம் தோன்றிய விரைவிலேயே மறைந்தும் போயிற்று.

மனோரஞ்சனைப் பொறுத்தவரையில், அவன் பிள்ளையை என்றுமே விரும்பியது இல்லை. திருமணத்தையே வெறுப்பவன் ஆயிற்றே! 'அடுத்துச் செய்ய வேண்டியதை அவளே செய்து கொள்ளலாம்' என்று இரக்கமின்றி அன்று எழுதியவனுக்கு இன்று மட்டும் பிள்ளைப் பாசம் பொங்கி விடுமா, என்ன? பைத்தியக்காரத்தனமான பயம்!

அவசியமற்ற அச்சம்தான். ஆனாலும் இனி எச்சரிக்கையோடு இருப்பது நல்லது என்று சௌமினி எண்ணினாள்.

முதலில் மனோரஞ்சனின் அறையே கதியென்று கிடப்பதைக் குறைக்க வேண்டும். மெள்ள மெள்ளப் பிள்ளையோடு நேரம் கழிக்கத் தொடங்கி, அதை அப்படியே அதிகரித்துக் கொண்டே வரவேண்டும். மனோரஞ்சனின் உடல் நிலை இன்னும் கொஞ்சம்

தேறியதும், என்வேலை முடிந்தது என்று கிளம்பி விட வேண்டும் என்று முடிவு செய்தாள்.

இன்ன விளைவு ஏற்படக் கூடுமாதலால் இப்படிச் செய்ய வேண்டும் என்று முடிவு செய்வது எளிதாக இருந்தது. ஆனால், செய்த முடிவைச் செயலாற்றவோ, அவள் பெரும் பிரயத்தனப் படவேண்டியிருந்தது.

முக்கியமான காரணம் அவளேதான்.

'தன்நெஞ்சறிய பொய்யற்க' என்றார் பொய்யா மொழிப் புலவர்.

மனோரஞ்சனின் உயிருக்கு ஆபத்து என்று அறிந்ததும் மற்ற அனைத்தையும் மறந்து ஓடிவந்ததும், பிள்ளையைக் கூட மறந்து பணிபுரிந்ததும் ஏன் என்பதைச் சௌமினி அறியாமல் இல்லை. அவள் அக் காரணத்தை அறிந்ததாலேயே தன்மீதே அவளுக்கு ஆத்திரமும் உண்டுதான்.

ஆனாலும் மனோரஞ்சனை விட்டு விலகிச் செல்வது அவளுக்கு மிகவும் கடினமாகவே இருந்தது.

மனதை மிகவும் கட்டுப்படுத்தி, அவளாக விலக முற்பட்டாலும், மனோரஞ்சனுக்கு வைத்தியம் செய்தவர்கள் வேறு அதற்கு முட்டுக் கட்டை போட்டார்கள்.

சௌமினி அருகே இருந்தால் மனோரஞ்சன் என்ன சொன்னாலும் கேட்கிறானாம். இல்லாவிட்டால் ஒரு மாத்திரை கொடுப்பதற்குள் அவனோடு மல்லுக் கட்ட வேண்டியிருக்கிறதாம். 'அவருக்கு உடம்பு நன்றாகக் குணமாகும் வரை உங்களுக்கு இந்த அறைக்குள்ளேயே சிறைத் தண்டனையாக்கும்!'' என்று மிரட்டுவது போலக் கூறிப் புன்னகை செய்தார் தலைமை நர்ஸ்.'

இதையும் மீறி, அன்றையக் காலைப் பொழுதை மகனுடன் கழிக்க முற்பட்டாள் சௌமினி. மனோரஞ்சனின் மருந்து மாத்திரை,பயிற்சி எல்லாம் முடிந்து அவன் சற்றுக் கண்ணயர்ந்ததும் கிளம்பி விட்டாள்.

தாயைக் கண்டதும் சித்தார்த்தனுக்கு ஏகப்பட்ட உற்சாகம். சிதம்பரநாதர் உட்பட, கூட நின்ற அத்தனை பேரையும் மறந்து விட்டு, ''அம்மா, அம்மா, அம்மா!'' என்று அவளது கழுத்தைக் கட்டிக் கொண்டு தொங்கியதும்! அவனுடைய பெரிய பாட்டனார் வாங்கித் தந்திருந்த அத்தனை விளையாட்டுச் சாமான்களையும் கடைபரப்பி அவளுக்குக் காட்டி மகிழ்ந்ததும், புண்ணுக்குப் புனுகு தடவியது போல சௌமினிக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது.

இத்தனை விளையாட்டுச் சாமான்களுக்கு இடையிலும் பிள்ளை அவளை மறந்து விடவில்லை. உள்ளம் உருகிப் போய் விட, மகனை மகிழ்விப்பதற்காக அவனோடு சேர்ந்து விளையாடினாள் விதரணையாக ஒதுங்கிக் கொண்ட மற்றவர்களை, அவன் கண்டு கொள்வதாக இல்லை.

ஆனால் கொஞ்ச நேரம் தான். மனோரஞ்சனின் அறையிலிருந்து உடனே உ.... ட.... னே.. வரும்படி அழைப்பு வந்துவிட்டது.

என்னவோ ஏதோ என்று ஓடிப்போனால், 'ரவுண்ட்ஸ்' வந்த டாக்டரைத் தொட்டுப் பார்க்க விடவில்லையாம்.

அவளைக் கண்டதும் மனோரஞ்சன் கையை நீட்ட, சௌமினி அருகில் வந்து, அவனது நீட்டிய கரத்தில் தன் கையை வைத்த பிறகே, மேலே வேலையைப் பார்க்கும்படி ஜாடை காட்டினான் அவன். தூக்கத்தில் உடம்பு தளரும் வரை பற்றியகையை அன்று அவன் விடவில்லை. சௌமினி, திகைத்து, குழம்பிப் போனாள். ஏன் இப்படி? அவள், அவன் அருகிலேயே இருந்து தான் தீர வேண்டும் என்று அப்படி என்ன பிடிவாதம்?

ஒருவேளை... ஆமாம். அப்படித்தான் இருக்க வேண்டும்! கடவுளே! இதை அவள் எப்படி மறந்தாள்?!

மின்னியின் பெயரும் சௌமினி அல்லவா? சௌமினி என்ற பெயரில் தானே மின்னி மனோரஞ்சனுடன் பழகியிருக்கிறாள். மின்னிக்கு மனோரஞ்சன் எழுதிய கடிதத்தைப் பிரித்துப் படித்தது கூட, உறையில் சௌமினி என்ற பெயரைப் பார்த்துத் தனதென்று எண்ணியதால்தானே?

ஆக, முதலில் அவன் செளமினி என்று அரற்றியதும், 'வந்து விட்டாயா' என்று ஆறுதலுற்றதும் அவளை மின்னியாக எண்ணித் தானே ஒழிய, உணர்விழந்த நிலையில்கூட அவனுக்குப் பழைய ஞாபகம் ஏதும் வந்துவிடவில்லை. பெருமளவு சாயல் ஒற்றுமை யும் சுகவீனத்தால் மனோரஞ்சனின் புலன்கள் வலுக்குன்றியிருந்த நிலையுமாகச் சேர்ந்து அவளை அவன் அந்த செளமினியாகவே எண்ணும்படிச் செய்து விட்டன. இப்போது கூட, வெறிப்பதும், வாழ்வின் ஒரே ஆதாரம்போலப் பற்றுவதும் கூட அவனளவில் மின்னியைத்தான்.

என்னதான் கெட்டு அலைந்தபோதும் மனோரஞ்சனுக்கு உள் ளூர மின்னியிடம் நேசம் இருந்திருக்கிறது. வேறு பிள்ளை பெற்று விடமாட்டான்' என்று மின்னி உரைத்தது, இந்த அன்பை அறிந்த நம்பிக்கையினால்தான் இருக்க வேண்டும்... ஆனால் அவனது வண்டு புத்தி அவளிடமும் அவனை நிலைக்க விடவில்லை போலும்.

பரவாயில்லை; மின்னியிடமாவது மனோரஞ்சனுக்கு உண் மையான அன்பு இருக்கிறதே என்று திருப்தி அடைய செளமினி மெய்யாகவே முயன்ற போதும், அதைவிடவும், ஒருபோதும் அவனுக்குத் தன்னிறைவு வரவே இல்லையே என்ற ஏக்கம் தான் அவளுக்கு மேலோங்கி நின்றது.

ஆனால் பிடிவாதமாக அந்த ஏக்கத்தை அகற்ற முயன்றாள். இதுபற்றி எண்ணி ஏங்குவதற்கும், அழுவதற்கும் ஏகப்பட்ட நேரம் பிற்பாடு இருக்கிறது. இப்போது கவனமாகச் சிந்திப்பதற் கும், அடுத்து செயல்படுவதற்கும் வேறு முக்கியமான விஷயங்கள் காத்திருக்கின்றன.

மிகமிக முக்கியமாய், மின்னியென்று எண்ணி இப்படிப் பற்று கிறவன், மின்னி பெற்ற பிள்ளையிடம் அக்கறை காட்டத் தொடங் கினால்? சித்தார்த்தனைப் பார்த்துப் பழகிவிட்டால், அப்புறம் அவனை விட்டுவிட எப்படி மனம் வரும்? அதுவும், மகன் என்று தெரிந்த பிறகு?

பேரனுடைய வாரிசு என்று சித்துவிடம் உருகிநிற்கும் சிதம்ப ரநாதரும் அதை ஊக்கப்படுத்தவே முயற்சிப்பார்.

ஊகூம். இனி இங்கிருப்பது முழு முட்டாள்தனம். யானை தன் தலையில் தானே மண்ணை வாரி இறைத்துக் கொள்வது போலத்தான். இந்த உளைக்குள் இதற்குமேல் புதைந்து விடாமல், இப்போதை - இயலுகிறபோதே விலகிவிடுவது உத்தமம்.

இந்த அளவு குணமானபிறகு, ஆரம்பத்தில் ஓரிரு நாட்கள் அலட்டினாலும் கூடக் குணப்படுத்த முடியாத பெரிய ஆபத்து எதுவும் மனோரஞ்சனுக்கு நேர்ந்துவிடப் போவது இல்லை...

அதற்குமேல், எதையாவது எண்ணிக் குழம்பிக் கொள்ளத் தனக்கே அவகாசம் கொடுக்க மனமற்றவளாக, சௌமினி நேரே சிதம்பரநாதரிடம் சென்றாள். "ஓர் இடத்தில் வேலை பார்த்துப் பிழைப்பவள் நான்... அதை மீறி விடுமுறை எடுத்துக் கொண்டே இருக்கமுடியாது. உங்கள் பேரனுக்கு இனி ஆபத்து இல்லை என்ப தால் நாங்கள் இன்று கிளம்புகிறோம்" என்றாள் பட்டுக் கத்தரித் தாற் போல.

"எங்கே அம்மா?" என்று மிகவும் பரிவான குரலில் நிதான மாகக் கேட்டார் சிதம்பரநாதர்.

சற்று அதிகமான பரிவு. சற்று அதிகமான நிதானம்.

"எங்கள் வீட்டுக்கு." என்றாள் அவள் சிறு அழுத்தத்துடன்.

"போகலாம்" என்றார் பெரியவர், பரிவு சற்றும் மாறாத பழைய குரலிலேயே.

# 10

தன் திகைப்பை வெளிக்காட்டாதிருக்க, சௌமினி, சற்று சிரமப்பட வேண்டியிருந்தது.

பிள்ளையோடு அவள் கிளம்புவதைச் சிதம்பரநாதர் அவ்வளவு எளிதாக ஒத்துக் கொள்ளக்கூடும் என்று அவள் எதிர்பார்க்கவே இல்லை.

அவள் விஷயம் எப்படியோ, தன்னுடைய கொள்ளுப் பேரனைப் பிரிய முடியாது என்றேனும் வாதாடுவார், குறைந்த பட்சமாய் இன்னமும் சிலபல நாட்களுக்காவது அவர்களது தங்கலை நீட்டிக்க முயற்சிப்பார் என்று அவள் நிச்சயமாக நினைத்திருந்தாள்.

அதற்குச் சற்றும் இடம் தரக்கூடாது என்றுதான் முதலில் அப்படி இளக்கமற்ற குரலில் அவள் பேச்சைத் தொடங்கியதே! ஆனால்....

பெரியவரின் ஒப்புதலின் காரணத்தை அவளால் இலகுவாக ஊகிக்க முடிந்தது.

என்னதான் சித்தார்த்தனிடம் அவருக்கு கொள்ளைப் பிரியம் இருந்தபோதும் அந்த மேட்டுக்குடி மனிதருக்கு, இந்த நடுத்தர வகுப்பாரின் உறவு பிடிக்கவில்லை. அதனால்தான், அவர் கிளம்புவதாகச் சொன்னதுமே தலையாட்டி விட்டார் போலும்.

அனேகமாக, இவளை எப்படிக் கிளப்புவது என்று கவலை கூடப் பட்டிருப்பார் என்று உள்ளூர ஏளனமாக எண்ணியபடியே, ''எனக்கு டிக்கட்டுக்கு ஏற்பாடு செய்தீர்களானால், தேவையான பணம் தந்து விடுகிறேன்.'' என்று கைப்பையைத் திறந்தாள்.

''என்னம்மா, நீ! பயணத்துக்கு உன்னிடம் நான் பணம் வாங்குவதா? அத்தோடு உனக்குத் தனியாக டிக்கட் ஏன் வாங்க வேண்டும்? இன்னும் ஒருவாரத்தில் நம் மனோப் பையன் பயணம் செய்யலாம் என்று டாக்டர் சொல்லிவிட்டார்கள். எல்லோரும் சேர்ந்தே நம் வீட்டுக்குப் போகலாம்.'' என்று இலகுவாக உரைத்துப் புன்னகை புரிந்தார் பெரியவர்.

மீண்டும் தன் திகைப்பை மறைக்க, சௌமினி பிரயத்தனப் பட வேண்டியதாயிற்று.

பெரியவர் சரியான ஆள்தான். பேரனுக்கு ஏற்ற பாட்டன்! ஆனால் ஒன்று. அவள் முதலில் எண்ணியது போல அவர் அந்தஸ்து பாராட்டவில்லை. அந்த மட்டும் பரவாயில்லை என்று விட்டுவிடலாம்.

ஆனால் நம் வீடாமே! அப்படிச் சொல்ல என்ன அழுத்தம் இருக்க வேண்டும்?

இந்த அழுத்தம் அவருக்கு மட்டுமே சொந்தமானதா?

''நான் என் வீட்டைச் சொன்னேன்.'' என்றாள் வெகு திருத்தமாக.

''உன் வீடும் அதுதானம்மா.'' என்றார் அவர் அலட்டிக் கொள்ளாமல்.

ஒருகணம் சிதம்பரநாதரை உற்றுப் பார்த்தாள் சௌமினி.

சிதம்பரநாரின் வெள்ளைப் புன்னகை காதுவரை விரிந்தது. ''நம்வீடு கடற்கரைப் பக்கம், அம்மா! அங்கெல்லாம் ஓதம் வரும் என்பதால் உயரக் கட்டியிருக்கிறோம். சுற்றித் தென்னை மரங்கள். ஊடே சூரிய அஸ்தமனம். கண் சிமிட்டாமல் பார்க்க வேண்டிய, கண் கொள்ளாக் காட்சி. வீட்டை ஒட்டியே கடற்கரை. மற்ற இடம் பாறைப் பகுதி என்றாலும் நம் வீட்டுப் பக்கம் நல்ல மணல். நினைத்தால் கடலில் குளிக்கலாம். மனோ வரும்போதெல்லாம் கடலில் துளைந்து எடுத்து விடுவான். உனக்கு கடலில் நீந்தத் தெரியுமாம்மா? தெரியாதென்றாலும் பரவாயில்லை. மனோ கற்றுக் கொடுத்து விடுவான்....

அவரை நேராகப் பார்த்துத் தலையசைத்தாள் சௌமினி ''அனாவசியப் பேச்சு வேண்டாம் சார். இதெல்லாம் நடக்கிற காரியம் அல்ல.''

''ஏனம்மா? என்ன நடக்காத காரியம்? நாளைக்கு உங்களுக்குக் கல்யாணம் ஆன பிறகு....

பொறுமை இழந்து, ''புரியாத மாதிரிப் பேசாதீர்கள் சார். கல்யாணமாம் கல்யாணம்! உங்கள் பேரனே இதற்கு ஒப்ப மாட்டார்.'' என்று வெடுக்கென மொழிந்தாள் சௌமினி.

''ஏன்? ஏன் ஒப்பமாட்டான்? ரத்தினம் போல பிள்ளையை வேண்டாம் என்றுவிட்டுவிடுவானோ?அப்படி அவன் விட்டால் நான்தான் அவனைச் சும்மா விடுவேனா? பாரம்மா, போனது போகட்டும். நான் அவனுக்கு நல்ல வார்த்தை சொல்லி, உங்கள் திருமணத்தை நடத்தி வைக்கிறேன்.'' என்று அமர்த்தலாக உரைத்தார் பெரியவர்.

நல்... ல வார்த்தை சொல்லி நடத்...தி வைக்கப் போகிறாராமே?

ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு ''ஐயா, உங்கள் பேரனோடு நீங்கள் நல்ல வார்த்தையோ, கெட்ட வார்த்தையோ, எதைச் சொன்னாலும் அது உங்கள் விஷயம். உங்கள் விருப்பம். எனக்கும் அதற்கும் சம்பந்தம் எதுவும் இல்லை. என்னைப் பொறுத்தவரையில், உங்கள் பேரனை மணக்க எனக்கு கொஞ்சமும் பிரியம் இல்லை. அதனால் இந்த வீண் பேச்சை விடுத்து, நாங்கள் கிளம்புவதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்தால், அதற்கு நான் நன்றி உடையவளாக இருப்பேன்.'' என்றாள் எரிச்சலை மறைக்காத குரலில்.

சிதம்பரநாதரும் நேர்ப் பேச்சுக்கு வந்தார். ''எங்கள் வம்ச விளக்கின் கதி என்ன?'' என்று கேட்டார்.

உங்கள் 'வம்ச விளக்கு' இது ஒன்றுதானா என்று உங்கள் பேரனிடம் தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள் என்று சுள்ளெனச்

சொல்லத் துடித்த நாவைக் கட்டுப்படுத்தி, ''இதுவரை சித்தார்த்தன் எந்தவிதத்திலும் கதியற்றுக் கிடந்ததில்லை. இனியும் அதுபோ லவே நன்றாகவே இருப்பான்'' என்றாள் சௌமினி அமர்த்தலாக.

சட்டெனத் தணிந்தார் சிதம்பரநாதர். தொண்டையைக் கனைத்து, ''யாரம்மா...'' என்று தொடங்கினார். ''உன்னைக் காட் டிலும் இரண்டு தலைமுறை மூத்த முது கிழவன் நான். வயதில் முக்கால் சதம் போடப் போகிறேன். இந்த வயதுக்கு உரிய அனுப வத்துக்கு மதிப்புக் கொடுத்து, என் பேச்சை, நீ சற்றுப் பொறுமை யோடு கேட்பாய் என்று நம்புகிறேன்...'' என்று நிறுத்தி அவளைப் பார்த்தார்.

''சொல்லுங்கள்'' என்றாள் சௌமினி சுருக்கமாக.

''பாரம்மா, உனக்கு என் பேரன் பேரில் கோபம் இருப்பது நியாயம்தான்'' என்றவரைப் பேசாமல் ஏறிட்டாள் சௌமினி.

எந்த அளவுக்கு நியாயம் என்பது இவருக்கு என்ன தெரியும்?

''எனக்குப் புரியாமல் இல்லை, சௌமினி... சௌமினி. ஆகா! உன் பெற்றோர் உனக்கு எவ்வளவு அழகான பொருத்த மான பெயர் வைத்திருக்கிறார்கள்! அழகும் இனிமையுமே உரு வெடுத்தவள் என்று யோசித்து அர்த்தபூர்வமாய் வைத்திருக்கிறார் களே!'' என்று சிலாகித்தார் சிதம்பரநாதர்.

ஐசா? அதிலும் 'அழகும் இ... னி... மையுமா?'

''இது எங்கள் வம்சாவளிப் பெயர். அப்பாவழிப் பாட்டியின் பெயர். பாட்டியின் பெயர் பேத்திக்கு என்று சாதாரண இடுகுறிப் பெயராக வந்ததுதான். காரணப் பெயராய் என் பெற்றோர் யோசித்துக் கண்டுபிடித்து, அர்த்த பூர்வமாய் வைத்தது அல்ல.'' என்று முகம் மாறாமல், வெற்றுக் குரலில் இயம்பினாள் சௌமினி.

'அங்கேயே நில்' என்று சொல்லாமல் சொன்னது தான். ஆனால் அவரிடம் சிரிப்பு பூத்தது. ''கெட்டிக்காரியம்மா நீ. ஐஸ் வைக்காதே என்று அழகாய்ச் சொல்லி விட்டாயே! அழகு, இனி

மையோடு அறிவையும் சேர்த்துக் காட்டும்படி உன் பெயரில் உன் பெற்றோர் மேலே ஏதாவது சேர்த்திருக்க வேண்டும்.'' என்று கூசாமல் மேலும் ஐஸ் வைத்தார்.

தன்னை மீறி எழுந்து முறுவலை அடக்கியபடி, ''ஏதோ நியாய அநியாயம் பற்றிப் பேசத் தொடங்கினீர்கள்...?'' என்று நினைவூட்டினாள் சௌமினி.

''ஆமாம்மா.'' என்று தலையாட்டினார் அவர். தொடர்ந்து, ''அநியாயம் செய்தவன் மேல் கோபப்படுவது நியாயம்தான். ஆனால் அவனே நியாயம் செய்ய முன்வருகிற போது அதை ஏற்க மறுப்பது பெரிய அநியாயம் அல்லவா, அம்மா?'' என்று சொல்லில் ஜாலம் செய்தார் அவர்.

''எல்லா அநியாயங்களுக்கும் நியாயம் செய்துவிட முடியாது, சார்.'' என்றாள் சௌமினி குரலில் கசப்புடன்.

''முடியும் மகளே. தகுந்த பிராயச்சித்தம் செய்கிறபோது எல்லாம் நேராகி விடும்.''

''என்ன அநியாயம், அதற்கு எது பிராயச்சித்தம் என்று யார் நிர்ணயிப்பது?'' என்று கேட்டபோது சௌமினியின் குரலில் சீற்றம் தொனித்தது.

சற்றுத் தயங்கி, ''என்னம்மா... கருவுற்ற பெண்ணைக் கைவிட்டது பெரிய ·மிகப் பெரிய தப்புதான். பெரும் குற்றம் தான். அப்போது உன் மனம் எப்படித் துடித்திருக்கும், துன்புற்றிருக்கும் என்று புரிந்து கொள்ள முடியாத மூடனல்ல அம்மா இந்தக் கிழவன். தகப்பன் பெயர் சொல்ல முடியாமல், உரிய லைசன்ஸ் இல்லாமல் பிள்ளை பெறுவது எவ்வளவு கொடுமை என்பதும் ஊகித்து விடக் கூடியதே. ஆனால் இன்று அந்தத் தவறை உணர்ந்து, முன்பு தன்னால் கைவிடப்பட்ட பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள முன் வருவதற்கு மேலாக மனோ வேறு என்ன பிராயசித்தம் செய்ய முடியும் என்கிறாய்?'' என்று கேட்டார் அவர்.

கைவிடபபட்டவளா? நானா? நான், கையை உதறி விட்டுப் போனவளாக்கும் என்று தலை நிமிர்ந்து உரக்க அறிவிக்க வேண் டும் போல இருந்தது சௌமினிக்கு.

ஆனால் அப்புறம்? தன் கொள்ளுப் பேரனை அவளிடமி ருந்து இலகுவாகப் பிடுங்கி விடமாட்டாரோ இந்தப் பெரியவர்! ஏதோ, குடும்ப வாரிசுக்காகத் தலைகீழாக நடக்கவும் தயார் என்கி றார். பிராயசித்தமாம்! அன்று கைவிட்ட பெண்ணைக் கைப்பி டித்து பிராயசித்தம் செய்வதற்கு இவருடைய பேரன் பரலோகத் துக்கு அல்லவா போயாக வேண்டும்... ஏளனமும் சினமுமாக எண்ணமிடும் போதே உள்ளே சுருக்கென வலித்தது அவளுக்கு.

அவளை அடியோடு மறந்தே விட்டவன் மனோரஞ்சன். அவனது மறைவு பற்றிச் சும்மா ஒரு போக்கில் நினைப்பது கூட இப்படி வலிப்பதா? என்ன மடத்தனம்!

தன்மீதே கொண்ட ஆத்திரத்தில் தன்னையறியாது தலை யைச் சிலுப்பினாள் சௌமினி.

ஆனால் தவறாக ஊகித்து, "பாரம்மா, இடைப்பட்ட காலத் தில் அனுபவித்த வேதனையில் வெறுப்பாகத்தான் மன்னிக்க மனம் வராமல் தான் இருக்கும். ஆனால் ஒன்றே ஒன்றை எண்ணிப் பார். ஊசி இடம் கொடாமல் நூல் நுழைய முடியாது என்று ஒரு பழமொழியே இருக்கிறது. அன்றையப் பிழையில் இருவருக்கும் பங்கு உண்டில்லையா?" என்று இதமான குரலில் எடுத்துச் சொன் னார் சிதம்பரநாதர்.

மெய்தான். ஆனால் அந்தப் பிழையில் பங்கெடுத்துக் கொண்ட பெண் அவளல்லவே! இதை இந்தப் பெரியவரிடம் முகத்தில் அடித்தாற்போலச் சொல்லவோ, சொல்லிவிட்டு, நிமிர்ந்த நன்னடையுடன் வெளியேறவோ வழியில்லை.

அது இயலாது என்றாகி விடவே சௌமினி வேறு பேசி னாள். "திருமணம் திருமணம் என்கிறீர்களே, அதுபற்றி முடிவு செய்ய வேண்டியது உங்கள் பேரனில்லையா? அவரிடம் கலந்து கொள்ளாமல் நீங்களே முடிவு எடுக்கிறீர்களே?"

''அதெப்படி மகளே, இவ்வளவு பெரிய விஷயம்; அவன் அனுமதி இல்லாமல் நானாக வாயைத் திறப்பேனா?'' என்று கேட்டு அவளை அதிர வைத்தார் அவர்.

அவளால் நம்ப முடியவில்லை.

''எ... எப்படி... எப்படிக் கேட்டீர்கள்? எப்போது கேட்டீர் கள்? அவருக்குத்தான் இன்னமும் புலன்கள்... பேச்சு சரியாக வசப்படவில்லையே... அவர் இரண்டு வார்த்தை சேர்த்துப் பேசி நான் கேட்டதே இல்லையே...'' என்று படபடத்தாள்.

முறுவலித்து, ''சம்மதம் என்று தெரிவிக்க, ஒரு வார்த்தை கூடத் தேவையில்லை, மகளே.'' என்றார் அவர்.

''அப்படியானால் வாய் வார்த்தையாய் உங்கள் பேரன் ஒத் துக் கொள்ளவில்லை?'' என்று கூர்மைப் பார்வையுடன் கூறிய வள் சட்டென நிமிர்ந்தாள். ''சற்று முன்கூட நல்ல வார்த்தை சொல்லி நடத்தி வைப்பதாக ஏதோ சொன்னீர்கள் இல்லையா?'' என்று கேட்டாள்.

சற்றே அசடு வழிந்து, ''அவன் மறுத்தால் நடத்தி வைப்பேன் என்றேன். அவன்தான் மறுக்க வில்லையே... அப்படி நான் சொன்ன காரணம் வேறு, சௌமினி. எப்போதும், அது திருமணத் துக்கு முன்னோ, பிற்பாடோ, உன் உரிமைகளைப் பாதுகாக்க நான் உனக்குப் பக்கபலமாக இருப்பேன் என்று உணர்த்துவதற்காகத் தான்.'' என்று விளக்கினார் அவர்.

''இவ்வளவு காலம் அந்தப் பலம் எதையும் சாதித்ததாகத் தெரியவில்லையே!'' என்றாள் சௌமினி லேசான உதட்டுப் பிதுக் கலுடன்.

''இல்லைதான்'' என்று வருத்தத்துடன் ஒத்துக் கொண்டார் பெரியவர். ''ஒன்று முழுப்பலம் காட்டி, ஒரேயடியாய் மனோவை அதட்டி அடக்கும் உறுதி எனக்கு இல்லை. ஒண்டிக்கு ஒண்டி எனும்போது அவனிடம் தான் அதிகத்திடம் இருந்தது. இப்போது நீயும் நானும் சேர்ந்து கொள்ளும்போது அவனது வலு, குறைவா

கத்தான் இருக்கும்? வேறுபக்கம் பார்வை கூடத் திரும்பாமல் பார்த்துக் கொள்ளலாம் இல்லையா?'' அதுவும், இப்போது அவனே திருமணத்தை நாடும்போது....

தன் பேரன் நல்லபடியாக ஒழுங்கான குடும்ப வாழ்வு நடத்த வேண்டும் என்று பெரியவர் ரொம்பவும் விரும்புகிறார் என்பது நன்றாகவே புரிந்தது. பாவம்தான். ஆனால் ஒருவேளை, அந்த ஆசையின் காரணமாக, அதற்குச் சாதகமாகத் தோன்றுவதை மட்டும் எடுத்துக் கொள்கிறாரோ?

சிறு யோசனையின் பின் தலையசைத்து, ''என்னால் எதையும் நம்ப முடியவில்லை, நீங்கள் கூறுகிற மனோரஞ்சனின் விருப்பம் உட்பட.'' என்றாள் சௌமினி மெல்ல.

விறைப்புடன் எழுந்தார் சிதம்பரநாதர். ''வாம்மா. என்னோடு வா. வந்து அவன் வாய் மூலமாகவே உண்மை தெரிந்து கொள்'' என்று கூறி வேகமாக நடந்தார்.

'வா. வா.' என்று விரைந்து, அழைத்துச் சென்றவரோடு கிளம்பிப் போகும் போதே, சௌமினியின் உள்ளம் கலங்கியது.

இந்தப் பெரியவரின் கூற்று மெய்யாக இருந்தாலுமே அதன் அடிப்படைக் காரணம் வேறாயிற்றே!

மனோரஞ்சனின் அறையை நெருங்கவும், பின்னடித்து, ''வே... வேண்டாம், சார். நான் உங்கள் பேச்சை ஒத்துக் கொள்கிறேன்.... என்றவள் மேலே பேசுமுன் இடைமறித்தார் அவர்.

''முதலில் இந்த 'சாரை' விடு. தாத்தா என்று அழகாகக் கூப்பிடப் பழகு'' என்று முறுவலித்தார்.

அவள் இளகிவிட்டதாக அவர் எண்ணுவது புரிந்து சௌமினி மறுக்குமுன் மனோரஞ்சனின் அறைக் கதவு திறந்தது. ''சௌமினி, நீங்கள் இங்கேதான் இருக்கிறீர்களா? உள்ளே மனோரஞ்சன் சௌமினி வந்தால்தான் தூங்குவேன் என்கிறார். சொன்ன பேச்சு கேட்டால் அல்லவோ சீக்கிரமாகக் குணமாகும். வாருங்கள். வந்து அவருக்குச் சொல்லுங்கள்.'' என்று உரைத்தபடி, பஞ்சு

ரோல், பாண்டேஜ்துணி, கத்தரிக் கோல், மருந்துகள் அடங்கிய ட்ரேயோடு வெளியேறினார் நர்ஸ்.

யோசனையோடு உள்ளே சென்றவளைத் தனது உணர்ச்சி யற்ற பார்வையால் எதிர்கொண்டான் மனோரஞ்சன்.

என்ன பார்வையோ? இந்தப் பார்வையின் பின்னே என்ன இருக்கிறது என்று சிறிதுகூட அறிய முடியாதபடி இவனால் எப்ப டிப் பார்க்க முடிகிறது?

கட்டிலின் அருகே செல்லும்போதே, அங்கே ஒருபெரும் மாற்றம் அவள் கண்ணில் பட்டது. அவனிடம் தான்.

ஓர் எகிப்திய மம்மி போல் மனோரஞ்சனின் உடல் எங்கும் முன்பு கட்டப்பட்டிருந்த கட்டுகள் இப்போது அகற்றப்பட்டிருந் தன. தாடையோடு சேர்த்துக் கட்டப்படிருந்த தலைக்கட்டு நீக்கப் பட்டிருந்தது. நிறையவே என்றாலும், அவன் உடம்பின் மீது, அங்கங்கே பெருக்கலும், கூட்டலுமாக பிளாஸ்திரிகள் நிரம்பியி ருந்த போதும், குணமாகிவிட்டது போல - அவன் பழைய மனோ ரஞ்சனாகி விட்டது போலத் தோன்றவே, அவள் சற்றே தயங்கி நின்றாள்.

பழைய மனோரஞ்சனே ஆகிவிட்டானா?

ஆனால் படுத்திருக்கிறானே?

வரவேற்பாய், லேசாக நீண்ட கரத்தைக் கவனியாதவள் போலச் சென்று கட்டிலின் அருகில் கிடந்த நாற்காலியில் அமர்ந் தாள் சௌமினி.

வழக்கமாகப் பிடிவாதத்துடன் அவளது கைக்காக உயரும் மனோரஞ்சனின் கை லேசாக மட்டுமே நீண்டிருந்தது மனதை உறுத்தியது.

மின்னி என்று எண்ணியிருந்தவனுக்கு இப்போது சந்தேகம் வந்துவிட்டதா?

விளைவு என்ன ஆனாலும் உண்மை நிலை தெரிந்தே ஆக வேண்டும் போல உணர்ந்தாள் சௌமினி.

மின்னியாக எண்ணியிருந்தான் என்றால், அவளாகவே நடித்து, திருமணத்தை மறுத்து விரைவிலே வெளியேறி விட வேண்டும்.

ஆனால் ஒருவேளை... ஆயிரத்தில்.... லட்சத்தில் ஒரு வாய்ப்பாக, அவளைப் பழைய சௌமினியாகவே அவன் உணர்ந்திருந்தால், அதைத் தெரிந்து கொண்டே ஆகவேண்டும் என்ற வேகத்தை அவளால் அடக்க முடியாது போயிற்று. பின்விளைவைப் பற்றிய பயமும், அதனால் கொண்டிருந்த கட்டுப்பாடும் காற்றில் பறந்துவிட, ஒரு பெரிய மூச்சுடன், மனோரஞ்சனை நேராக நோக்கினாள். ''நா... ன்... நான் யார் என்று தெரிகிறதா'' என்று கேட்டாள்.

## 11

அடக்கமாட்டாமல் கேட்டுவிட்டவளுக்கு அதற்கு மேல் மூச்சு எடுப்பது கூட முடியாது போயிற்று.

ஆனால், லேசாக இமைகள் இடுங்கியது தவிர, மனோரஞ்சனின் முகம் கல்லாகத்தான் இருந்தது.

சில வினாடிகள் சௌமினியின் பார்வையைத் தாங்கியிருந்து விட்டு, ஒரு விழி அசைவால் அவளை அருகே அழைத்தான்.

என்ன? ''நான் கேட்டது... என்று பொறுமையற்றுத் தொடர்ந்தவளை, விரல் உயர்த்தி நிறுத்தி, பக்கவாட்டில் இருந்த அலமாரியைக் காட்டினான் அவன். தொண்டையைச் செறுமிக் கொண்டு மெதுவாகச் சொன்னான். ''அங்கே, சின்னதாய்... கிரேகலர்ப் பெட்டி எடுத்து வா...

''நான் என்ன கேட்கிறேன்; நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்'' என்று கூச்சலிட வேண்டும்போல் வந்த கோபத்தை அடக்கிக் கொண்டு சௌமினி எழுந்தாள். இவனிடம் கத்திப் பேசிப் பிரயோ ஜனமே இல்லை.

'டிரனி ஆஃப் த இன்வாலிட்' என்பதற்கு உதாரணம் போல, நோயாளிக்குரிய சலுகைகளை முழு அளவில் பயன்படுத்தி மற்ற வர்களை அதிலும் அவளை இஷ்டம்போல ஆட்டி வைக்கிறானே என்று உள்ளூர எரிச்சலுற்றபடியே அவன் சொன்னதைச் செய் தாள்.

கூடவே, கரகரத்த குரலில் மனோரஞ்சன் மெதுவாகப் பேசிய தும் அவளை மிகவும் பாதித்தது. அவனுக்குத் தாடை எலும்பு முறிந்து, அதைக் கம்பி கொண்டு இணைத்திருந்தது அவளுக்குத் தெரியும். கட்டைப் பிரித்து விட்டார்களே, உள்ளே எலும்பு இணைந்திருக்குமா, பேசும்போது வலிக்குமோ, என்று கவலை வந்தது.

ஆனாலும், அதற்காக, அவளது கேள்வியை அலட்சியப்ப டுத்தி, அவன் தான் நினைத்ததை மட்டும் நடத்திக் கொள்வது நியாயமே இல்லை என்று உள்ளூரப் பொருமியபடி, பெட்டியை எடுத்து வந்து, படுக்கையை அடுத்திருந்த சிறு மேஜையில் 'தட்' டென்று வைத்தாள். அவன் தலையணையின் கீழிருந்து ஒரு சிறு சாவிக் கொத்தை எடுத்து அவளிடம் கொடுத்தான். 'திற' என்று பெட்டியைக் காட்டினான்.

வேண்டா வெறுப்பாக அவள் அந்தப் பெட்டியைத் திறக்க, ''நான் எங்கே போனாலும் இந்தப் பெட்டி என்னோடு வரும்'' என்றான்.

பேசுவது சிரமமாக இருந்ததோ என்னவோ, பெட்டியின் மேலாக இருந்தவற்றை விலக்கும்படியும், அடியில் தென்பட்ட ஒரு சிறு வட்ட வடிவமான வெல்வெட் டப்பாவை எடுத்துத் திறக்கும் படியும் சைகை செய்தான்.

டப்பாவினுள் என்ன இருக்கும் என்று ஊகிக்கப் பிரமாதமாக மூளை எதுவும் தேவையில்லை.

முகம் கடுக்க, ''நான் ஒரு கேள்வி கேட்டேன்'' என்று எரிச்சலோடு உரைத்தாள் சௌமினி.

''பதில் தான்... இது. டப்பாவைத் தி. திறந்து பார்...

ஒரு நகையை நீட்டி விட்டால், நடக்காத வேலையே இல்லை என்பது இவனது நினைப்பா? ஒருத்தி மறுத்தது மறந்தே போய் விட்டது போல. இருக்கட்டும். உச்சந்தலையில் ஓங்கி அறைந்தால் தான் உள்ளே உறைக்கும்....

''நகைக்குப் பறக்கிறவள் நான் இல்லை

''தெரியும். தி..திற...

ஆத்திரத்துடன் திறந்தவள் சற்று நேரம் அசைவற்றுப் போனாள் அந்த ஒற்றை வைர லாக்கெட்டுடன் அதே சங்கிலி!

'தெரிகிறதா' என்று கேட்டாயே.. இதற்கு உரியவள் ஐந்து ஆண்டு. களாக... அன்றிலிருந்து உனக்காகக் காத்திருக்கிறது...

''ஆனால் நான் இதற்காக ஏங்கிக் கொண்டு இருக்கவில்லையே!''

''சௌமினி, ப்ளீ .ஸ்'' என்ற அவன் அயர்வுடன் கண்களை மூடிக் கொள்ள, அவனது நெற்றி முகமெங்கும் முத்து முத்தாய் வியர்ப்பதைக் கண்டாள் சௌமினி. இப்படி வியர்த்திருக்கிறது என்று எண்ணியபடி, பெட்டியைப் பழைய இடத்தில் வைத்து விட்டுத் திரும்பியவள் சட்டெனக் கதிகலங்கிப் போனாள்.

இந்த ஏசி அறையில் இப்படி வியர்ப்பானேன்? அதுவும் தலையில். தலையில் வியர்ப்பது. கடவுளே, அவன் இதயத்தில் என்னவோ...

அரண்டுபோய் மணியை அடித்து நர்சை வரவழைத்தாள் சௌமினி.

சோதனை செய்துவிட்டு "இன்றைக்குக் கட்டு அவிழ்த்து உடம்பு முழுக்க சுத்தம் செய்து. எல்லாம் சேர்ந்து அதனால் வந்த அசதி மற்றபடி உன் ஆளுக்கு ஒன்றுமில்லை. பயப்படாதேம்மா" என்றாள் அவள் தேறுதலாக.

உன் ஆள்!

"இதற்கு உரியவள்...

மின்னி என்றோ, வேறு யாரும் என்றோ மனோரஞ்சன் அவளை நோக்கியிருக்க வில்லை அப்படியானால் அவன் அவளை மறக்கவே இல்லையா?

ஆனால் சித்தார்த்தன்?

இரண்டும் ஒத்துப்போக முடியாதே!

இல்லை. சர்வநிச்சயமாய் அது சாத்தியம் இல்லை என்று எண்ணியபடி நோக்கினால், அங்கே, மனோரஞ்சன் அயர்வுடன் கண்மூடிக் கிடந்த தோற்றம் அவள் மனதைக் கசக்கி உருக்கியது.

இங்கிருந்து கொண்டு எதையும் உருப்படியாக யோசிக்க முடியாது என்று நிச்சயித்து, மனோரஞ்சனின் அருகில் நர்சை இருத்தி விட்டு வெளியே சென்றாள் சௌமினி.

காலாறச் சற்று நடக்குமுன் சிதம்பரநாதர் வந்து சேர்ந்தார்.

"என்னம்மா, இப்போதாவது என் பேச்சை நம்புகிறாயா? ஒரு நல்ல நேரம் பார்த்துத் தாலி கட்டி, ரிஜிஸ்டரும் பண்ணி விடலாம்...

"சார்..." என்று குறுக்கிட்டாள் சௌமினி." உங்கள் பேச்சை நம்புகிறேன், அவ்வளவே. ஆனால் மேலே எதுவும் நடப்பதற் கில்லை. நாங்கள் கிளம்பியே ஆகவேண்டும்." என்றாள் அழுத் தம் திருத்தமாக.

"ஏனம்மா?" என்று வியப்பும் திகைப்புமாக வினவினார் அவர்.

''ஏ ஏனென்றால் நான் அவரை அடியோடு வெறுக்கிறேன்''

''எ... என்னது? ஆகா, என்னம்மா, பெரிதாகக் கதை அளக்கி றாயே! அவனுக்கு ஆபத்து என்றால் அலையக்குலைய ஓடிவருகி றாய்; அவனை விட்டு அங்கே இங்கே அகலாமல் அல்லும் பகலும் கூடவே இருந்து கண்விழித்துக் காப்பாற்றுகிறாய் வாயால் மட் டும் வெறுப்பு என்பதா? ஆனாலும் பயங்கர ரோஷம் அம்மா உனக்கு.'' என்று மெல்லச் சிரித்தார் அவர்

''தெரிந்தவர் ஒருவருக்கு - அவர் எவ்வளவு மோசமானவர் என்றாலும் கூட, உயிருக்கு ஆபத்து எனும்போது உதவாமல் இருக்க முடியுமா? மூழ்கிக் கொண்டு இருப்பவனுக்குக் கரையே றக் கைகொடுப்பது போலத்தான் நான் செய்தது. மற்றபடி, மனோ ரஞ்சன் மேல் என் வெறுப்பு அப்படியேதான் இருக்கிறது. அத னால் மனோரஞ்சனோடு மணவாழ்வு என்று எண்ணிப் பார்ப்பது கூட இயலாத காரியம். வெறும் வாய் வார்த்தை என்று எண்ண வேண்டாம் சார் அடிமனதிலிருந்து வரும் முழு உண்மை. எனவே, தயவு செய்து இனி இந்தப் பேச்சு பேசவேண்டாம்'' என்று முடித்தாள் சௌமினி.

மேலே என்ன செய்வதென்று புரியாமல் சற்று விழித்தார் பெரியவர். இவள் பிகுபண்ணவில்லை மெய்யாகத்தான் மறுக்கி றாள். ஆனால் அதற்காக விட்டுவிட முடியுமா?

இப்படிச் சொன்னால் எப்படிம்மா? உன் உணர்ச்சிகளை மட் டும் பார்த்தால் போதுமா? சித்துக் குட்டியைப் பற்றி யோசிக்க வேண்டாமா? இங்குள்ள சொத்து.. சுகம். வசதிகள்... இதையெல் லாம் மறந்து, உன் சொந்த விருப்பு வெறுப்புகளுக்காகப் பிள்ளை வாழ்வை நாசம் செய்வதா?'' என்று அடுத்த வழியில் முயன்றார்.

மனோரஞ்சன் வைரத்தைக் காட்டியது அவளுக்கு நினைவு வந்தது. ஏழைகளைக் காட்டிலும் பணத்தைப் பெரிதாக - பணத் தையே பிரதானமாகக் கருதுவது இந்தப் பணக்காரர்கள்தான் போலும்!

கொஞ்சம் அலட்சியமாக அவரை நோக்கி, ''இந்தச் சொத்து, சுகம், வசதி எல்லாம் இல்லாத பிள்ளைகள் வாழ்வெல்லாம் நாசமாகிப் போனவை என்று நீங்கள் மெய்யாகவே கருதுகிறீர்களா சார்?'' என்று கேட்டாள் அவள்.

''அய்யோ, இல்லையம்மா. அப்படிச் சொல்வதே மகாபாவம். இந்த வயதுக்குச் சித்துவை எவ்வளவோ நன்றாகவே வளர்த்திருக்கிறாய். கண்ணில் விளக்கெண்ணை விட்டுத் தேடினாலும் அதில் குற்றம் காண முடியாதுதான். ஆனால் ஆண் பிள்ளைகளுக்கு என்று ஒரு பருவம் உண்டு. அந்த நேரம் அவர்களை அடக்கி வளர்க்கவும், முன் மாதிரியாக இருந்து காட்டவும் ஒருவன் வேண்டும்...

ஒரு கோபச் சிரிப்புடன் சௌமினி குறுக்கிட்டாள். ''உங்கள் பேரன் என் மகனுக்கு ஒரு நல்ல முன்மாதிரியாக இருப்பார் என்று சொல்ல உங்களுக்கு வாய் வருகிறதே! அதுதான் பேராச்சரியம்!'' என்றாள் எகத்தாளமாக.

''நான் கூறுவதும் அதுதானம்மா. பொறு. முதலில் நான் சொல்வதைச் சற்றுப் பொறுமையோடு கேட்டு முடித்துவிட்டு அப்புறம் நீ பேசு. விடலைப் பருவத்தில் தந்தையின் கண்டிப்பு இல்லாததால் மனோரஞ்சன் தான் தோன்றியாக வளர்ந்தது போல அவன் மகனும் ஆகிவிடக் கூடாதே என்றுதான்...

''மனோரஞ்சனுக்குத் தான் தந்தையின் நிலையில் நீங்கள் இருந்தீர்களே!''

''இல்லை மகளே, இல்லை. எனக்குப் பாட்டனாகப் பிரியம் காட்ட முடிந்ததே தவிரக் கண்டிக்க முடியவில்லை. அது தகப்பனால் மட்டும் தான் முடியும்.

சௌமினி மீண்டும் கலங்கிப் போனாள்.

அப்படி நடக்கக் கூடுமா? சித்தார்த்தனும் மனோரஞ்சனைப் போல மாறிவிடக் கூடுமா? மாறமாட்டான் என்று என்ன நிச்சயம்?

அவள் அவன்மீது அன்பைப் பொழிந்து வளர்க்கக் கூடும். அது அவளால் முடிகிற ஒன்று. உணவைப் பார்த்துப் பார்த்துக் கொடுக்க முடியும். உடையைப் பார்த்துப் பார்த்து தேர்ந்தெடுத்து அணிவிக்க முடியும்.

ஆனால், இளைஞனாக மாறுகிற சமயத்தில், அவனது உள் மனம் என்னென்ன எண்ணக் கூடும் என்று அவளுக்குத் தெரியாதே. ஆண் மனதின் ஆசைகள், ஏக்கங்கள், அவைகளில் தப்பு ஆசைகளும் எண்ணங்களும் தோன்றுவது கூட இயற்கைதான். தப்புவழி செல்வதுதான் எப்போதும் எளிதாயிற்றே!

அந்த நேரத்தில், அந்தத் தப்பு எண்ணங்களை அடக்கி, நல்வழிப்படுத்துவது அவளால் இயலுமா? முடியாமல், இன்னொரு மனோரஞ்சன் உருவாகிவிட்டால்?

அன்று, 'கடலில் ஆயிரம் மீன்கள்' பற்றி மனோரஞ்சன் கூறிய போது உண்டான வேதனை, அணுவளவு குறையாமல், இப்போதும் வலிக்கிறதே!

அந்த வேதனை இன்னொரு பெண் அடைய அவள் பிள்ளை காரணம் ஆக அனுமதிப்பதா?

ஆனால் அதற்காக என்று மனோரஞ்சனை மணப்பதா? அவன் முகத்தில் கூட விழிக்கக் கூடாது என்று அவள் முன்பு முடிவு செய்த காரணம் இப்போதொன்றும் இல்லாமல் போய்விடவில்லையே.

அப்படியானால் சித்தார்த்தன்?

மீண்டும் சௌமினியின் உள்ளம், எருமை இறங்கிய தடாகமாயிற்று. ஆனால் தன் கலக்கத்தைக் காட்டிக் கொள்ளாமல், நிமிர்ந்து, ''ஒரு பிள்ளையின் பொறுப்பேற்க உங்கள் பேரனின் தகுதி எப்படி என்பது ஒருபுறம் இருக்கட்டும். முதலில் அந்தக் கடமை செய்ய அவருக்கு விருப்பம் இருக்க வேண்டாமா? ...ப்ளீஸ் சார். இப்போதைக்கு இந்தப் பேச்சை விடுங்கள். எனக்கு நான் கொஞ்சம் வெளியே போக வேண்டும்.'' என்று மேலே நில்லாமல் சென்றுவிட்டாள்.

அந்த மருத்துவமனை வளாகத்துள் காற்றே இல்லாதது போல, அவளுக்கு மூச்சு முட்டியது.

மனோரஞ்சன் அயர்ந்து தூங்குகிறான். இப்போதைக்கு விழித்து அவளைத் தேடப்போவது இல்லை. சித்தார்த்தனின் சிரிப்பு எங்கிருந்தோ இனிமையாகக் கேட்டது. அவனைப் பார்த்துக் கொள்ளச் சிதம்பரநாதர் யாராவது ஆள் வைத்திருப்பார்... பணம் இருந்தால் இதெல்லாம் எவ்வளவு எளிதாக நடத்த முடிகிறது! எப்படியோ, இப்போதைக்கு அவள் அங்கே தேவைப்படப் போவதில்லை.

சௌமினி மருத்துவமனையின் வெளிகேட்டை அடையவும், ''ஓட்டலுக்குப் போகணுமாம்மா?'' என்று ஒருவன் ஓடிவந்தான்.

மனோரஞ்சனுக்குக் கொஞ்சம் குணமானதுமே, வீட்டு மனிதர்கள் தங்கவென்று ஓர் ஓட்டலில் அறைகள் ஏற்பாடு செய்திருந்தார் சிதம்பரநாதர்.

குளிக்க, சிரம பரிகாரம் செய்யவென்று ஓட்டலுக்குச் செல்பவர்களை அழைத்துச் சென்று, திரும்பி அழைத்துவர ஏற்பாடு செய்திருந்த காரின் டிரைவர்தான், ஓடிவந்து கேட்டவன்.

''சும்மா, காற்றாட ஒரு 'வாக்கிங்'தான்'' என்று அவனை அனுப்பிவிட்டு மேலே நடந்தாள் சௌமினி.

இப்படி வசதி, சுகம் என்று பார்த்துப் பழகித்தான் பாதிப் பிள்ளைகள் உருப்படாமல் போகிறார்கள் போலும்.

விறுவிறுவென்று நடந்து, கண்ணில் பட்ட ஒரு பூங்காவுள் புகுந்து ஓர் ஓரமாய் கிடந்த சிமெண்ட் பெஞ்சில் தொப்பென அமர்ந்தாள்.

கைகளில் தலையைத் தாங்கியபடி அவள் அசையாமல் அமர்ந்திருந்த நேரம் ஒரு பதினைந்து நிமிடங்களாக இருக்கலாம்.

''இந்தப் பக்கமாய்க் கொஞ்சம் உட்கார்ந்து கொள்ளட்டுமாம்மா?'' என்று ஒருகுரல் கேட்டு நிமிர்ந்து பார்த்தாள்.

மருத்துவமனையில் அவ்வப்போது பார்த்த முகம்தான். பெரும்பாலும் சித்தார்த்தன் இருக்கும் இடத்தில் அவரைக் காண லாம். ஆனால் சற்று ஒதுங்கியே நிற்பார். தன் கொள்ளுப் பேரனின் பாதுகாவலுக்காகப் பெரியவர் நியமித்திருப்பார் என்று சௌமினி நினைத்ததுண்டு. இப்போது, அவள் அமர்ந்திருந்த பெஞ்சிலேயே உட்கார அனுமதி கேட்டது சற்று விசித்திரமாகப் பட்டபோதும், வெறுமனே தலையசைத்து வைத்தாள்.

உட்கார்ந்து கொண்டு, "நான் இன்றே கிளம்பலாம் என்று இருக்கிறேனம்மா. வேலையை வீட்டைப் போட்டுவிட்டு இங் கேயே கிடக்க வழியில்லை. இப்போதே பதினைந்து நாட்கள் ஆகிவிட்டன. இதற்குமேல் போனால் சீட்டு கிழித்து விடுவார் கள்." என்றவர் அவள் ஆச்சரியமாய் நோக்கவும், "நான் யார் என்று உனக்குத் தெரியாது போலத் தோன்றுகிறது... எப்படித் தெரியும்? பெரியவருக்குத் தான் என்னை உனக்கு அறிமுகப்படுத் திவைக்கும் எண்ணம் இல்லையே... அம்மா, சௌமினி, என்பெ யர் ராமலிங்கம். நான் மனோரஞ்சனுடைய தந்தை" என்று விளக் கினார்.

அவளுக்கு மீண்டும் ஒரே ஆச்சரியம். "பின்னே எப்படி மனோரஞ்சன் தாத்தா வீட்டில் இப்படி வளர்ந்தார்?" என்று வியப் புடன் வினவினாள்.

சற்றுத் தயங்கிவிட்டு, "அது ஒரு பெரிய, பழைய கதை யம்மா. பின்னொரு காலத்தில் வாய்ப்புக் கிடைத்தால் அதுபற்றி விவரம் சொல்கிறேன். இப்போது நான் உன்னிடம் கூற வந்த விஷயமே வேறு... பாரம்மா, ஏதோ மனத்தாங்கல் காரணமாக மனோரஞ்சனும் நீயும் பிரிந்து வாழ்வதாய் அறிந்து கொண்டேன். அந்த வேறுபாடுகள் நீங்கி, நீயும் என் மகனும் இணைந்து வாழ்ந் தால் எனக்கு மிகவும் மகிழ்ச்சி. ஒருவேளை அது முடியாவிட் டால், சித்து மீதுள்ள உன் உரிமையில் அணுஅளவு கூட இவர்க ளுக்கு விட்டுக் கொடுத்து விடாதே. அப்புறம் அவன் உனக்கு அடியோடு இல்லை என்று ஆகிவிடும். சும்மா சொல்லவில்லை யம்மா. அனுபவ பூர்வமாய் நான் அறிந்த உண்மை இது. ஆனால்

ஒன்று மீண்டும் பிரிந்து போய்விடாமல், உன் மகனோடு என் மகனையும் சேர்த்துப் பார்த்துக் கொள்ள முடிந்த அளவு முயற்சி செய்யம்மா இதைக் கேட்கத்தான் வந்தேன்... நான் வரட்டு மாம்மா? கடவுள் அருள் இருந்தால் பிறகு சந்திப்போம். என்று கிளம்பிச் சென்றார் அவர்

மகனைப் பிரிந்து வாழ்ந்ததற்குக் கதை இருக்கிறது என்றா லும், இவரும் மனோரஞ்சனோடு சேர்ந்து கொள்ளத்தானே சொல் லுகிறார்...

அதற்கான தடைகள் பற்றி இவருக்கும்தான் என்ன தெரியும்?

மேலும் ஓர் இருபத்துநாலு மணிநேரம், சிந்திக்க அவகாசம் கொடுத்துவிட்டு, சிதம்பரநாதர் மீண்டும் சௌமினியை அணுகி னார் ''மனோவின் தகுதி, விருப்பம் பற்றிச் சந்தேகப்பட்டாய். பிள்ளையை நன்றாக வளர்ப்பதாக அவன் எனக்கு வாக்குறுதியே தந்திருக்கிறான். இப்போது என்னம்மா சொல்கிறாய்?'' என்று கேட்டு அவளுக்குத் தூக்கி வாரிப்போட வைத்தார்.

கலக்கத்துடன், ''இப்போது அவரிடம் சித்து பற்றி சொல்ல வேண்டாம் என்று நினைத்தேனே... என்று தடுமாறியவளைக் குற்றம் சாட்டும் பாவனையில் நோக்கினார் அவர்.

''ஏதோ ஒரு காலத்தில் அசட்டுத்தனமாய்ப் பிள்ளையை நிராகரித்தான் என்பதற்காக மனோவிடம், அவன் மகனைப் பற்றி நீ பேசாமல் இருந்திருக்கலாம். ஆனால் நானும் அப்படியே இருக்க முடியுமா? பாவம் மனோ! பக்கத்திலேயே இருந்தவள். நீ இதுபற்றி மூச்சுக் கூட விடவில்லையா? நான் சொல்லவும் அப்படியே அசந்து விட்டான். சித்துக் குட்டியை அழைத்துவரச் சொல்லிக் காட்டினேன்...

''எப்போது? எ எப்போது?''

''நீ எண்ணெய் தேய்த்துக் குளிக்கப் போவதாகச் சொல்லி, ஒட்டல் அறைக்குப் போய் இரண்டு மணிநேரம் உட்கார்ந்திருந் தாயே, அப்போது'' என்றார் சிதம்பரநாதர், லேசாகக் கண்டிக்கும் குரலில்.

லேசாக முகம் கன்ற, சௌமினியின் பார்வை தாழ்ந்தது.

பெரியவர் கூறியது உண்மைதான். கட்டவிழ்த்த பிறகு பழைய மனோரஞ்சனாகத் தோன்றுவதோடு, தன்னையும் அறிந்திருக்கிறான் என்பது தெரிந்ததிலிருந்து, சௌமினி, அவனைத் தவிர்க்க முயன்றது மெய்தான்.

ஆனால் சித்துவையும் கூடவே கூட்டிச் சென்றிருக்க வேண்டும். இங்கேதான் பார்த்துக் கொள்ள ஆள் இருக்கிறதே! அவனும் புதுப்புது விளையாட்டு சாமான்களை வைத்து ஆசையாக விளையாடுகிறானே என்று விட்டுப் போனது தான் தப்பாகிவிட்டது... அதுமட்டும் அல்ல. மனோரஞ்சன் வைரத்தைக் காட்டியதுமே, பிள்ளையைத் தூக்கிக் கொண்டு பின்னங்கால் பிடரியில் இடிபட, இந்த இடத்தை விட்டு வெகுதூரம் ஓடியிருக்க வேண்டும். அதைச் செய்யத் தயங்கியதுதான் அவளது இமாலயத் தவறு.

ஆனால் அவள் என்னதான் மகன் பற்றி மனோரஞ்சனிடம் மூச்சு காட்டாமல் திருப்பி அழைத்துச் சென்றாலும் இந்தப் பெரியவர் அதை ஒத்துக் கொண்டு சும்மா இருந்து விட மாட்டார். எனவே ஒருவகையில் இதுவும் நல்லதுதான்.

இப்போதே இறுதி முடிவு எடுத்துவிடலாம்.

அதற்கு அவள் உறுதியோடு இருக்க வேண்டும். அவ்வளவே!

## 12

அன்று வைரத்தைக் காட்டி, ஐந்து ஆண்டுகளாகக் காத்திருப்பது பற்றி மனோரஞ்சன் கூறியதிலிருந்து, சௌமினி மிகவும் கிளர்ச்சியுற்றிருந்தாள். அந்தப் பேச்சு, அவளைப் பாதிக்கவே இல்லை என்றால் அவள் ஒரு பெண்ணாக இருக்க முடியாது.

ஆனால் என்னதான் மனம் அலைபாய்ந்தபோதும், அவன் காலடி யில் விழுந்து கிடக்க அவள் சற்றும் தயாரில்லை. ஐந்து ஆண்டுக ளுக்குமுன் 'ஆயிரம் மீன்' பிடிக்கச் சென்றவனோடு, ஆயிரத்து ஓராவது மீனாக வாழக்கூடாது என்பதிலும் அவள் மிகவும் உறுதி யாகவே இருந்தாள்.

மனோரஞ்சனின் தன்மை அறிந்திருந்ததால், அவன் விரும் பும் வாழ்வு இப்போதும் சாத்தியமில்லை என்று உணரும்போது முன்போலவே மறுபடியும் அவளிடம் அவனுக்கு வியப்பு குன்றி விடும் என்பது அவளுக்கு நிச்சயமே. தன் தூண்டிலுக்குத் தப்பிய மீன் என்ற ஒரு குறுகுறுப்பு ஒருமூலையில் இருக்கலாம். இப் போது, ஜீவசக்தி மிகவும் குன்றித் தளர்ந்த நிலையில் ஒரு நிறைவே றாத ஆசை நினைவு வந்து அவள் பெயரைப் பிதற்றவில்லையா? அதுபோல உடலும் மனமும் ஓய்கிற வேளையில் ஞாபகம் வர லாம் அவ்வளவே.

அப்படிப்பட்ட ஒரு நிலைமையை உருவாக்கிய பிறகு, மக னைப் பற்றி அறிய நேர்ந்தால், மனோரஞ்சன் பிள்ளை வளர்ப்பில் அதிக ஆர்வம் காட்டமாட்டான், என்பது சௌமினி ஆராய்ந்து கண்ட முடிவு.

சித்தார்த்தனின் விடலைப் பருவம் குறித்தும் ஓயாது சிந்தித்து ஒரு விடை கண்டிருந்தாள்.

ஒருதரம், பெற்றவர் கண்டிப்பும் இல்லாமல் பாட்டன் வளர்த்த பிள்ளை பேய்ப் பிள்ளை ஆகிவிட்ட காரணத்தினா லேயே தாயார் தனித்திருந்து வளர்க்கும் குழந்தை கெட்டுப் போயாக வேண்டிய கட்டாயம் எதுவும் கிடையாது.

அப்படிச் சித்து வழி தவறுவது போலத் தோன்றினால் அவனு டைய தந்தையைப் பற்றிய விவரங்களை, அவனிடம் உடைத்துச் சொல்லி விடுவது.

அந்தக் கதை, அவனது சொந்தக் கதையும் கூட. தன் பிறப் பின் அவலம் தெரிந்த பிறகும் அவனால் தப்பு வழி செல்ல இய லுமா?

மனோரஞ்சனின் உடல் நிலையும், சிதம்பரநாதரின் பேச்சுமாக அவ்வப்போது மனம் தடுமாறியதெல்லாம் மாறி, ஒருவாறு பிரிவு என்ற பழைய முடிவுக்கே சௌமினி வந்துவிட்டாள்.

ஆனால் அந்தப் பிரிவுக்கு மனோரஞ்சனை அடியோடு பாராதிருக்கும் அந்தப் பிரிவுக்குத் தன்னைத் தயார்ப் படுத்திக் கொள்ள, அவளுக்குக் கொஞ்சம் அவகாசம் தேவைப்பட்டது. அடுத்து, சிதம்பரநாதர், தன் கொள்ளுப் பேரனைத் தொடருவதை, அவருடைய பேரனின் மூலமாகவே தடுப்பதற்கு ஓர் ஏற்பாடும் செய்ய வேண்டியிருந்தது.

மிஞ்சி மிஞ்சி அவளது தேவை இன்னமும் ஓரிரு நாட்களே. அதற்குள்ளாகவே இந்தப் பெரியவர் இப்படி அவசரப்பட வேண்டுமா?

மனோரஞ்சனின் கட்டுகளைப் பார்த்துச் சித்தார்த்தன் பயந்து விடக் கூடாது என்று முதலிலிருந்தே பிள்ளையை அவன் அறைக்குள் யாரும் கூட்டிச் சென்றது இல்லை. அதே வழக்கத்தை எண்ணியிருந்தவளுக்கு இந்தப் பெரியவர் இப்படி ஒரு வேலை செய்யக் கூடும் என்ற எண்ணமே தோன்றவில்லை. கடைசியாக அவனிடம் தன் உறுதி சொல்லி முடிக்கும்வரை இப்படியே இருந்து விடலாம் என்று அவள் எண்ணியிருந்தாள்....

ஆனால்..., தன் மகனைப் பெற்றவள் யார் என்று மனோரஞ்சன் உணர்ந்திருப்பானா? அது இந்த சௌமினி இல்லை என்பது குறைந்தபட்சமாய் அவனுக்கு உள்ளங்கை நெல்லிக்கனி. ஆனால், அவனுடைய 'ஆயிரம் மீன்'களில் எந்த மகராசி சித்தார்த்தனை வயிற்றில் சுமந்திருந்தவள் என்று அவனால் எப்படிக் கண்டுபிடிக்க முடியும்? பா...வம்தான் என்று ஏளனமாக எண்ணினாள் சௌமினி. கோபமாகவும்தான். ''பிள்ளையைப் பார்த்ததும் உங்கள் பேரன் அப்படியே பூரித்துப் போய் விட்டாராக்கும்!'' என்றாள் முயன்று வரவழைத்த சாதாரணமான குரலில்.

''தெ...ரியவில்லையம்மா. கொஞ்சம் அதிர்ந்த மாதிரி இருந்தது. ஒரு சாக்லேட்பார் வாங்கிவரச் சொல்லி மகனிடம் கொடுத்

தான். ஆனால், நானே எதிர்பார்க்கவே இல்லையம்மா, இந்தக் குட்டிப் பையன் அவன் தகப்பனிடம் ஒட்டிக் கொண்டு, 'வலிக்கு தாப்பா? நான் கிஸ் பண்றேம்பா. எல்... லாம் சரியாப் போயிடும்' என்று...'' என்றவர் கண்ணில் கசிந்த நீரைத் துடைத்துக் கொண்டு மேலே பேசினார். ''முன்னாலேயே இருவரையும் சந்திக்க வைத்தி ருக்க வேண்டும். மனோ எப்போதோ எழுந்திருந்திருப்பான்!''

மகனைப் பற்றிய பெருமையை விட அவனது 'அப்பா பாசம்' சௌமினியின் மனதில் கவலையை எழுப்பியது. அதைப் பெரியவர் போற்றிய விதம் அதைவிட அதிகமாக.

''ஆமாம். வீட்டை, வேலையைப் போட்டுவிட்டு, நானும் இத்தனை நாட்களை இங்கே வீணாக்கும்படி நேர்ந்திராது.'' அவரை ஒட்டிப் பேசுவது போலவே, தான் திரும்ப வேண்டியிருப் பதை சௌமினி தெளிவு படுத்தினாள்.

நன்றாகத் திரும்பி அவள் முகத்தை நேராகப் பார்த்தார். சிதம் பரநாதர். ''முதலில் நீ கருவுற்ற விஷயத்தை அலட்சியப்படுத்தி னான் என்று உனக்கு மனோமேல் அடங்காத கோபம். அதுதா னேம்மா? ஆனால் அதற்காக எவ்வளவு வருத்தப்பட்டு விட்டான் தெரியுமா? குட்டிப்பையனை விளையாட அனுப்பிய பிறகு எல்லா விவரமும் கேட்டான். உன் வீட்டில் யார் யார் இருக்கிறார் கள், என்ன ஏது என்று கேட்டான். பெரியவர்கள் சிறு வயதிலேயே போய்விட்டார்கள்; பெரியப்பா மகளோ சித்தப்பா மகளோ ஒருத்தி இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன் இறந்து போனாள் என்றதும் ரொம்பநேரம் கண்ணைக் கூடத் திறக்காமல் ஓய்ந்து கிடந்தான், ஏன் தெரியுமா? நீ, தன்னந் தனியாய் இருந்து, பிள்ளை பெற்று கஷ்டப்பட்டதை எண்ணி அவ்வளவு வேதனை...

மின்னியைப் பற்றி மனோரஞ்சன் புரிந்து கொண்டு விட்டான் என்பதை உள்ளூர வலியுடன் சௌமினி உணர்ந்தாள். எவ்வளவு உற்சாகமான பெண் அவள்! கொஞ்சம் குறுக்கு வழி நாட்டம் உண்டு என்றாலும் அவளது கலகலப்பான பேச்சும் சிரிப்பும் மறக்க முடியுமா? கடைசி நாட்களில் அவளது அசிரத்தையான போக்கும் நினைவு வந்தது.

நிமிர்ந்து, ''எப்போதோ பட்டு முடித்த துன்பத்தை எண்ணி இப்போது வேதனைப்படுவானேன், அதிலும் அந்தத் துன்பத்தைத் தடுக்கக்கூடிய சக்தி இருந்தும் மறுத்துவிட்டு, இப்போது வேதனை அது இது என்றால் இதை என்னால் ஒத்துக் கொள்ள முடிய வில்லை, சார். என்றாள் சௌமினி வெறுப்புடன்.

மீண்டும் அவளை உற்று நோக்கினார் சிதம்பரநாதர். ''நீ என்னை உறவுக்காகத் 'தாத்தா' என்று அழைக்க வேண்டாம். என் வயதுக்காவது அந்த மரியாதை கொடுக்கலாமில்லையா... எனக்கு ஒரு விஷயம் கொஞ்சமும் புரியமாட்டேன் என்கிற தம்மா. உன்னைப் பார்த்தால் ஒரு மாதிரிப் பெண்ணாக - அது தான், சும்மா 'ஜஸ்ட் லைக்தட்' பழகுகிறேன் என்பார்களே; அது போல வாழ்க்கையை இலகுவாக எடுத்துக் கொள்கிறவள் போலத் தெரியவில்லை. அப்படியிருக்க... சரி. என்னவோ, எப்படியோ நடந்துவிட்டது என்றாலும், ஒரு குடும்பமாய் நல்லவிதமாய் வாழக்கூடிய இப்போதும் அவனை விட்டு ஓடத் துடிக்கிறாயே, இது ஏன் என்றும் புரியவில்லை. என்னம்மா, என்ன விஷயம்? சொன்னாயானால் என்னால் ஆனதைச் செய்கிறேன்,'' என்றார் கனிவான குரலில்.

அவரால் எதுவும் செய்ய முடியாது. ஆனால், இன்றுவரை என்ன பெரிதாகச் செய்து கிழித்துவிட்டீர்கள், இப்போது செய்கி றேன் என்பதற்கு என்று கேட்க அவளால் முடியவில்லை. வாளை வாளால் வெட்டலாம். வைரத்தை வைரத்தால் அறுக்கலாம். ஆனால் 'அங்கதளத் தண்டுக்கு அஞ்சுகிற கோடாலி' போலச் சிதம்பரநாதர் இளகி நெகிழ்ந்து பேசும் போது கடுமையாகப் பதில் கொடுப்பது சௌமினிக்குச் சிரமமாக இருந்தது.

மடியில் கோத்திருந்த விரல்களைப் பார்த்தபடிச் சற்றுநேரம் வாளா இருந்தாள். பிறகு மெல்ல இமைகளை உயர்த்தி, ''பாருங் கள் சா... தாத்தா, உலகத்தில் யாருடனுமே பகிர்ந்து கொள்ள முடியாத விஷயங்களும் உண்டு. இது... இதுவும் அதுபோல ஒன்று. தயவு செய்து மேலே எதுவும் கேளாதீர்கள்.'' என்றாள் முடிவாக.

''இந்த ஒரு வார்த்தைக்கு, மேலே பேசாமலே இருந்து விடு வேன், தாயே. ஆனால் என்பேரன்? அவன் பிள்ளை? அம்மா, இது பற்றி உன்னிடம் சொல்லலாமோ கூடாதோ, உடம்பு முழுவ தும் கட்டுகளோடு அவன் கிடந்தது உனக்கும் தெரியும். அவனுக்கு இன்னொரு பிள்ளை பிறக்கும் என்று என்ன நிச்சயம்? அப்படிப் பெற அவனே இருப்பான் என்று என்ன நிச்சயம்?''

சௌமினி அதிர்ந்து நோக்கவும், ''ஆமாம்மா. நீயானால் அவன் அறைக்குப் போவதைக் குறைத்துக் கொண்டே வருகி றாயா, அது மனோவைப் பாதிக்கிறது என்று நினைக்கிறேன். திடுமென நீ ஒரேயடியாக மறுத்தால் என்ன ஆகுமோ என்று, வேடிக்கை போல நீ மறுக்கக் கூடும் என்று குறிப்புக் கொடுத்தேன் பார், அப்படியே ஓய்ந்து போனான். சௌமினி, நீ என் பேரனை எமன் வாயிலிருந்து மீட்டாய். அதற்காக நான் உனக்கு எவ்வ ளவோ நன்றி உடையவனே. ஆனால் மீட்டதை நிலைக்க வைக்க வில்லை என்றால் முதலில் மீட்டதிலேயேதான் என்ன பிரயோஜ னம், சொல்லு?'' என்று கேட்டார் சிதம்பரநாதர்.

மீண்டும் சௌமினியால் பேசமுடியவில்லை.

மனோரஞ்சன் மேல் அவளுக்கு வெறுப்புதான். அவனது வாழ்க்கை முறைகண்டு அருவறுப்புதான். ஆனாலும், அவன் உயி ருக்கு ஆபத்து வரக்கூடும் என்றால் அவளால் தாங்க முடியவில் லைதான்.

அவளது பலவீனம் தெரிந்துதான் இந்த வழியில் முயற்சிக்கி றாரோ?

பாட்டன், பேரன் இருவருமே இதில் கெட்டிக்காரர்கள் தான். அவன் நோயைக் காட்டி மடக்கினால், இவர் உயிரைக் காட்டி மிரட்டுகிறார்! இருவரிடமும் தோற்பதற்கு மட்டும் அவளா?

சௌமினி யோசிப்பதைக் கண்டு, குரலைத் தணித்து, ''ஒன்று யோசித்துப் பார்த்தாயா, சௌமினி! மனோவிடம் இருக்கும் உனக்குப் பிடிக்காத குணத்தை அதுதானம்மா, மற்ற பெண்க ளோடு அவன் பழகுவதைக் கூட மாற்றிவிட முடியும். உன் கழுத்

துத் தாலி, அவனுக்கு வேலியாக மாறிவிடும்.'' என்று எதுகை யோடு உரைத்தார் அவர்.

''அப்படியானால், திருமணம் ஆன ஆண்கள் யாரும் பெண் விஷயமாய்த் தப்பு செய்யவே மாட்டார்களா, சா... தாத்தா?'' என்று சாதுபோல வினவினாள் சௌமினி.

சற்றே அசடு வழிந்தபோதும், ''என் பேரன் அதுமாதிரிப் பண்ணமாட்டான். நிச்சயமாக எனக்குத் தெரியும்.'' என்றார் அவர் அழுத்தமாகவே.

''நாய் வாலை நிமிர்த்த முடியாது என்று பழமொழியே இருக் கிறது!''

''ம்! என் பேரனை என்னிடமே நாய்க்கு ஒப்பிட்டுப் பேசுகி றாய்! போகட்டும். நீ என்பதால் பொறுத்துக் கொள்கிறேன். ஆனால் மாறுவது மனம் என்று ஒரு சொல் இருக்கிறதம்மா... திருந்துவதற்கு அவனுக்கு ஒரு வாய்ப்பாவது கொடுத்துப் பார்க்க லாமில்லையா?'' என்றார் அவர்.

இவர் விடமாட்டார். அனுமார்வால் மாதிரி இந்தப் பேச்சு நீண்டு கொண்டேதான் இருக்கும். இதற்கு முற்றுப் புள்ளி இவரு டைய பேரன்தான் - பேரன் மூலமாகத் தான் வைத்தாக வேண்டும்.

''சில விஷயம் நான் மனோரஞ்சனோடு பேசவேண்டும் தாத்தா. அவர் என்னுடைய சில... ஓரிரண்டு நிபந்தனைகளுக்குச் சம்மதித்தால்... பிறகு பார்த்துக் கொள்ளலாம்.'' என்று முடித்தாள் சௌமினி.

சிதம்பரநாதர் குதூகலத்துடன் நிமிர்ந்தார். ''இரண்டென்ன? இருபது நிபந்தனைகள் என்றாலும் அவன் சம்மதிப்பான். அப் பாடி! இனிக் கவலையில்லை. இனி மனோ பிழைத்து விடுவான்! முடிந்த அளவு சீக்கிரமே ஒரு நல்ல நாளும் நேரமும் பார்க்கச் சொல்ல வேண்டும்!'' என்றார் அவர் உற்சாகமாக.

ஏளனமும் கொஞ்சம் இரக்கமுமாக அவரை நோக்கி விட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள் சௌமினி.

ஒரு சிறு அமைதியின் பின், ''நிஜமாகவே நடக்கப் போவ தைத்தான் சொன்னேன், சௌமினி. நியாயமற்ற நிபந்தனைகளை நீ அவன் முன் வைக்க மாட்டாய். என்று சிதம்பரநாதரே தொடங்கியபோது சௌமினி 'தெரிந்த மாதிரி சொல்கிறீர்களே!'' என்று கேலியாக உதட்டைப் பிதுக்கினாள்.

ஆனால், ''தெரிந்துதான் பேசுகிறேன்.'' என்று அடித்துச் சொன்னார் அவர். ''இத்தனை நாள் பார்த்தபிறகு இது தெரிய வில்லை என்றால் என்னுடைய இத்தனை வயதுக்கு என்ன பிர யோசனம், சொல்லு? நீ அசட்டுத்தனமாக எதையும் சொல்லப் போவதும் இல்லை. அவனும் உனக்காக எதுவும் செய்வான்.''

அவளது நம்பாத தோற்றம் காணவும், ''மெய்தான் சொல்கி றேனம்மா. முதலில் நீ வந்தபோது, மனோ கிட்டத்தட்ட போய் விட்ட மாதிரிதான். உன்மேல் வைத்த அன்பு மட்டுமே அவனை உலகத்தில் பிடித்து வைத்திருந்தது. அந்த அன்புதான் உன் உதவி யோடு அவனை மரணத்துடன் போராடி மீட்டு வந்தது. அவ்வளவு அன்புள்ளவன், உன் விருப்பங்களை நிறைவேற்றியே தீருவான். அதனால் தான் சொன்னேன்.'' என்றார்.

'பழையகால நினைவின்' அலை மட்டும் என்று சொன்னால் இவர் ஒத்துக் கொள்ளப் போவதில்லை. பயனில்லாத ஒன்றுக்காக வாதாடுவானேன்?

ஆனால் அவள் பேசாமல் இருந்ததும் அவருக்கு வருத்தமே. ஆதங்கத்துடன் நோக்கி, ''பாரம்மா, நீ மனோவிடம் என்ன பேசு வது என்றாலும், இதை நினைவில் வைத்துக் கொண்டு பேசு. இந்தத் திருமணத்தின் மூலமாக அவனைத் திருத்தி விடலாம். அடுத்து, உன் மகனை நல்லபடியாக வளர்க்க ஒரு தந்தை கிடைப் பான். இந்த இரண்டு நல்லது நடப்பது மற்ற எதையும்விட முக்கி யம்... என்னம்மா...!'' என்று மீண்டும் குழைந்தார் அவர்.

அவளைவிட மூன்று மடங்குக்கு மேல் அதிக வயதானவர், முக்கால் சதம் போட்டதாக அவர் வாயாலேயே சொல்லியிருக்கி றார்; முதுமையால் தலை, புருவம், மீசை எல்லாம் நரைத்துப்

போன இந்தப் பெரியவர், தன் குணம் கெட்ட பேரனால் ஒரு சாதாரணமான, சிறு பெண்ணிடம் கெஞ்சுகிறார்.

பா...வம் என்று பரிதாப்படும்போதே, மனோரஞ்சனைத் திருத்துவது பற்றி அவர் சொன்னது புதுவிதமாய் மனதில்பட்டது.

திருந்துவது மனோரஞ்சனாகப் பார்த்துச் செய்தால்தான் உண்டு. ஆனால் தப்பு செய்ய முடியாமல் தடுத்துவிடலாமே!

ஒத்துக் கொள்வானா என்ற சந்தேகம் வந்தது. இல்லாவிட்டால் அவன் பொறுப்பு என்ற அலட்சியமும் வந்தது. ஒரு வேளை, ஒத்துக் கொண்டு விட்டால்.... அப்போதும், ஆப்பு அசைத்த குரங்கு போல அவஸ்தைப் படப் போகிறவன் அவன்தான் என்று எண்ணும் போதே உள்ளூர வன்மச் சிரிப்பு மலர்ந்தது. அதை வெளியில் காட்டாமல், ''சரி தாத்தா. நீங்கள் சொன்னதை நினைவில் வைத்துக் கொள்கிறேன்.'' என்றாள் பணிவாக.

இதே மானோபாவத்துடன்தான் சௌமினி மனோரஞ்சனிடம் சென்றாள்; பேசினாள். ஆனால் ஆப்பு அசைத்த குரங்கின் நிலை யாருக்கு நேர்ந்தது என்பதுதான் பின்னர் அவளுக்குப் புரியாத புதிராகிப் போயிற்று.

## 13

அன்று சௌமினி மனோரஞ்சனின் அறைக்குள் செல்ல வெகுநேரம் ஆகிவிட்டது. அவனிடம் என்ன பேசுவது, எப்படிப் பேசுவது என்று படிப்படியாக யோசித்து முடித்த பிறகே அங்கு போனாள்.

அதற்குள் சிதம்பரநாதர் மூலம் விவரம் அறிந்து அவனும் அவளை எதிர்நோக்கியிருந்தான். படுக்கையில் எழுந்து உட்கார்ந்

திருந்தான். பிளாஸ்திரிகள் ஒட்டிய மார்பு, மச்சத்தோடு சட்டைக் குள் மறைந்திருக்கப் பழைய மனோரஞ்சனாகவே காட்சியளித் தான். ''வா.'' என்றபோது குரல் சற்றுக் கனத்திருந்ததே தவிரச் சற்றும் பிசிரடிக்கவில்லை.

இது அவளுக்கும் வசதியாகவே தோன்றியது. நோய், சோர்வு என்ற இளக்கங்கள் இல்லாமல் பேச முடியுமே!

பேச்சை மனோரஞ்சன்தான் தொடங்கினான். ''உலகமுழுவ திலும் திருமணம் பற்றி முதல் எட்டு எடுப்பது ஆண் பக்கத்திலிருந் துதான். அதன்படி நானே கேட்டுவிடுகிறேன். தயவு செய்து, என் னைத் திருமணம் செய்து கொள்ள நீ சம்மதிக்க வேண்டும்.'' என் றான் சிறு முறுவலோடு.

அதற்குள் சிரிப்பா? ''எதற்கு?'' என்றாள் வெடுக்கென, அவள்.

''பின்னே?!'' என்று வியந்தான் அவன் ''நம் திருமணத்துக்கு உன் சம்மதம் கேட்கத் தேவையே இல்லையா? அதுதானே முறை என்று கேட்டு விட்டேனே!''

''திருமணம் உங்களுக்கு எதற்கு என்று கேட்டேன்.'' என் றாள் அவள் எரிச்சலை மறையாத குரலில்.

''அது... எனக்கு என் பிள்ளை வேண்டும்...

''ரொம்ப முக்கியமான காரணம்தான். ஆனால் பலதாரம் கொண்டால் கம்பி எண்ண வேண்டும். தெரியுமா?'' என்றாள் அவள் சற்று மிரட்டலாக.

சற்றுத் திகைத்து, பின்முறுவலித்து, ''அதற்கு அவசியம் இராது.'' என்றான் மனோரஞ்சன்.

''ஏன்? அப்படி இந்த ஒரு பிள்ளைமேல் மட்டும் என்ன பாசம்?''

''இந்த ஒன்றுதான் பிள்ளை என்பதால் இருக்கலாமில்லை யா?''

நம்பாதது போல லேசாகத் தோளைக் குலுக்கினாள் சௌ மினி.

''நீ நம்பினாலும் நம்பாவிட்டாலும் உண்மை அதுதான் சௌ மினி. அத்தோடு, சித்தார்த்தன் என் பிள்ளை என்பதற்குச் சான்றும் இருக்கிறது. ஆகவே, இதுபற்றி வீண் விவாதம் செய்வதை விடுத்து மேலே பேசலாமா? ஏதோ இரண்டு நிபந்தனைகள் என்று தாத்தா என்னவோ சொன்னார். அதைப்பற்றிச் சொல்லு.''

மனோரஞ்சன் நேரடியாக விஷயத்துக்கு வந்த விதத்தில் சௌமினி கொஞ்சம் தடுமாறினாள். அவன் 'சான்று' வேறு. அவன் என்ன அவளை மிரட்டுகிறானா?

தன் கலக்கத்தைக் காட்டிக் கொள்ளாமல், தன் நிபந்தனைக ளைச் சொன்னாள்.

முதல் நிபந்தனையை அவன் அப்படியே ஒப்புக் கொண் டான். ''கட்டிய மனைவி இருக்கையில் வேறு பெண்ணை நாடி அவளை அவமானப்படுத்துகிற வேலை நான் செய்ய மாட் டேன்.'' என்று விளக்கமும் கொடுத்தான்.

சரிஎன்று சும்மா சொல்வதுதான். 'கட்டிய மனைவி' என்று அதென்ன சொருகல் என்று அவள் புகையும் போதே அவன் தொடர்ந்தான். ''ஆனால் உன் அடுத்த நிபந்தனை... கஷ்டம், சௌமி. உன்னைப் பார்க்கும்போது அந்த மாதிரி விலகி இருப்பது முடிகிற காரியமாய் எனக்குத் தோன்றவில்லை.'' என்று உதட் டைப் பிதுக்கிக் கையை விரித்தான் ''ஆனால்...

அவனது இலகுவான பாவனையும், பேச்சும் ஆத்திரமூட்ட, ''ஒரு திருத்தம்'' என்று குறுக்கே புகுந்தாள் சௌமினி. ''அந்த 'உன்னை'க்குப் பதிலாக 'ஒரு பெண்ணை' என்றால் அது உண்மை யாக இருக்கும்.'' என்றாள் குத்தலாக.

அவளை வெறித்து நோக்கிவிட்டு, அவள் இடையே பேசா தது போல பாவித்து, ''ஆனால், உன்னை அடியோடு இழந்து விட இனி என்னால் முடியாது என்பதால், ஒரு சிறு மாற்றத்துடன் உன்

இரண்டாவது நிபந்தனையையும் ஏற்றுக் கொள்கிறேன். உன் விருப்பம் இல்லாமல் உன்னை நான் தொடமாட்டேன். இது உறுதி. என்று முடித்தான் மனோரஞ்சன்.

''ஆனால்..

''என்ன ஆனால்? விருப்பம் வந்துவிடுமோ என்று பயமாய் இருக்கிறதா?''

தலையைச் சிலுப்பி, ''வாழ்நாள் முழுவதற்கும் அது சாத்தியம் இல்லை'' என்றாள் அவள்.

அமர்ந்த குரலில் ''நாளை நடப்பதே நமக்கு தெரிவதில்லை, சௌமி பெரிய வார்த்தைகளைப் பயன்படுத்தாதே.'' என்றான் அவன் ''ஆனால் ஒன்று, விருப்பம் வரக்கூடும் என்ற பயம் இல்லையானால் இந்த மாற்றத்தைப் பெரிதுபடுத்துவானேன்? பேசாமல் ஒத்துக் கொண்டுவிட வேண்டியதுதானே? என்று சிறு முறுவல் பூத்தான்.

அவனைச் சுட்டெரிப்பது போலப் பார்த்துவிட்டு, ''மேலே ஆக வேண்டியதைப் பார்க்கும்படி உங்கள் தாத்தாவிடம் சொல்லுங்கள்'' என்றாள் சௌமினி.

சற்றும் எதிர்பாராதவிதமாக மனோரஞ்சன் இப்படி ஒரு திருகுதாளம் பண்ணுவான் என்று அவள் எதிர்பார்த்திருக்க வேண்டும். அவனுக்குச் சாதகமாக ஓர் இடைச் சொருகலைச் சேர்த்து, அதை அவள் மறுக்கமாட்டாமல் அவளை மடக்கி, அவள் வாயாலேயே ஒத்துக் கொள்ள வைக்கக் கூடும் என்பதையும் கூட அவள் முன்பே ஊகித்திருக்க வேண்டும்...

முன்பு, அவனிடமிருந்து பிரிந்து சென்றபோது அனுபவித்த துன்பம் சௌமினிக்கு நினைவு வந்தது. அந்த தவிப்பு! கொள்கை, கோட்பாடுகளை எல்லாம் தூக்கி எறிந்துவிட்டு அவனிடம் சென்று விடலாமா என்றுகூட எண்ணினாளே! மனோரஞ்சனோ இருக்க இடம் கொடுத்தால் முழு மடத்தையும் பிடுங்குகிறவன்!

சட்டென நிமிர்ந்தாள் சௌமினி.

இடம் கொடுத்தால் தானே? எந்தவித இளக்கமும் காட்டா மல் அவனை விரட்டியடித்து விட்டால் அப்புறம் அவன் எந்த மடத்தை எப்படிப் பிடுங்குவான்?

மறுயோசனைக்கு அவகாசம் தர விரும்பாதவர் போன்று, வேகமாக வேலைசெய்து, விரைவிலேயே திருமணத்தை நடத்தி னார் சிதம்பரநாதர்.

சௌமினிக்கு அதுவும் வியப்பாய்த்தான் இருந்தது.

செல்வந்தரான சிதம்பரநாதர், தனது நிலைக்கு ஏற்றபடி ஒரு பணக்காரப் பெண்ணைப் பேரனுக்கு மனைவியாக்க முயல்வதும், இடையில் குறுக்கிடும் மத்திய வர்க்கத்துப் பெண்ணை விரட்டிய டிப்பதும்தான் இயல்பு.

இவரானால், ரத்தினக் கம்பளம் விரித்து அதில் மலர் தூவாத குறையாக அல்லவா அவளை வரவேற்கிறார்!

ஒருவேளை, மனோரஞ்சன் ஒரேயடியாகக் கெட்டலைந்து, பெயரைக் கெடுத்துக் கொண்ட விதத்தில் பெண்ணென்று ஒருத்தி கிடைத்தாலே போதும் என்கிற நிலை ஏற்பட்டு விட்டதோ?

எப்படியோ? இனி அதையெல்லாம் எண்ணுவதே முட்டாள் தனம். வாக்குக் கொடுத்திருக்கிறான். அதை அவன் நிறைவேற்று மாறு பார்த்துக் கொள்வது அவள் பொறுப்பு.

திருமணத்துக்கு முன்தினம், மனோரஞ்சன், சௌமினிக்குக் கொஞ்சம் எரிச்சல் மூட்டினான். ''நீயானால் பெரிதாகச் சத்தியம் வாங்கிக் கொண்டாய். திருமணத்தின்போது தாலிகட்ட வேண் டும்; கை பிடிக்க வேண்டும்... அப்போதெல்லாம் என் கை உன் மேல் படுமே, அதற்கெல்லாம் அனுமதி உண்டா?''

அவனது சின்னச் சிரிப்பிலும் சின்னக் கேலியிலும் அவளால் கலந்து கொள்ள முடியவில்லை. அழுத்தம் திருத்தமாக, ''நான் என்ன அர்த்தத்தில் அப்படிச் சொன்னேன் என்று உங்களுக்குத் தெரியும். அதை மதித்து நீங்கள் நடத்தால் போதும். மற்றதைப் பற்றி எனக்கு ஒன்றுமில்லை.'' என்றாள் மரக்கட்டைப் போல முகத்தை வைத்துக் கொண்டு.

''நன்றி சௌமினி.'' என்று முறுவல் புரிந்தான் மனோரஞ்சன் இதுபற்றி இன்னொன்றும் கூட. மற்றவர்கள் முன்னிலையில் நம் அந்தரங்க வாழ்வைக் காட்டிக் கொள்ளாமலே பழகலாம் இல்லையா?''

''உங்கள் மேல் மையல் கொண்டு நான் உங்களை மணக்கவில்லை என்பது உங்கள் தாத்தாவுக்கு நன்றாகவே தெரியும். ஆனால் அதை ஊருக்கெல்லாம் அறிவிக்கும் ஆசை எனக்கு கிடையாது'' என்றாள், பழைய மாதிரியே அவள்.

''மெய்யாகவே நன்றி,'' என்றான் அவன், பாரம் இறங்கினாற் போல.

திருமணச் சேதி அறிந்ததும் பானுமதி கிளம்பிவந்தாள். அவள் மட்டும்தான். மின்னியின் மரணத்துக்குப் பிறகு, கணவன் மனைவி இருவரில் ஒருவரேனும் மருத்துவ மனை பொறுப்பைக் கவனிக்க என்று கோவையிலேயே இருக்கும் பழக்கம் சௌமினியும் அறிந்ததே.

வந்தவள், மருத்துவமனை வைத்தியர்களோடு பேசி விட்டுச் சௌமினியிடம் சென்றாள். ''மனோரஞ்சன் வெகு விரைவில் முழுக்க நன்றாகிவிடுவான், சௌமி. என் கடிதம் நினைவிருக்கிறதா? பழசை நினைத்து மனதைத் துன்புறுத்திக் கொள்வது மடத்தனம். நீ புத்திசாலித்தனத்தோடு புதுவாழ்வைத் தொடங்க வேண்டும் என்று வாழ்த்தினாள்.

இரு அழகிய சிறு வெள்ளிக் குத்துவிளக்குகளைப் பரிசாகக் கொடுத்துவிட்டுத், திருமணம் முடிந்த கையோடு கிளம்பிவிட்டாள். அவள் ஏற்றுக் கொண்டிருந்த தொழிலுக்கு, அவள் அதற்கு மேல் தாமதிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறுதான்.

ஆனால் சௌமினியின் கண்களில் ஏக்கத்தைக் காணவும், ''இந்த வாரம் இரண்டு பிரசவம் எதிர்பார்க்கிறோம், சௌமி.'' என்று சமாதானம் போல விளக்கினாள் பானுமதி.

அதற்குமேல், ''கிளம்புங்கள் அக்கா.'' சௌமினியே அவளைத் துரிதப்படுத்தி அனுப்பிவைத்தாள்.

திருமணத்திற்காகவென்று வெளியூரிலிருந்து வந்த இன்னொருவர் மனோரஞ்சனுடைய தகப்பனார். திருமண நேரத்துக்குச் சரியாக வந்து சேர்ந்தவர், பின்னர், சௌமினியைத் தனியே தேடிப்பிடித்து விவரம் சொன்னார்.'' சுசீலாவை... வந்து, மனோரஞ்சனுடைய சித்தியையும் பிள்ளைகளையும் மாமனார் வீட்டில் விட்டு வரப் போயிருந்தேன். அங்கே வைத்து இவன் தங்கையை மாப்பிள்ளை வீட்டார் பார்ப்பதாக ஏற்பாடு, அது முடிந்து, அங்கே எல்லோரும் கொஞ்சநாள் இருக்கட்டும் என்று விட்டுவிட்டு வந்து பார்த்தால் வீட்டில் கடிதம் கிடந்தது. உடனே கிளம்பி வந்தேன்... திருமண விஷயம் எனக்கு மிகவும் சந்தோஷம் அம்மா. ஆனால் ஒன்று. குடும்பத்தில் உன் இடத்திற்கு உரிய உரிமையைச் சிறு விஷயத்தில் கூட விட்டுக் கொடுத்து விடாதே. சின்னதுதானே, போகிறது என்று பார்த்தால் பிறகு ஒன்றும் மிச்சமிராது போய்விடும். எனவே எச்சரிக்கையுடனேயே இரு. அது உன் பிள்ளை விஷயம் என்றாலும் சரி; அன்றி என்பிள்ளை விஷயமானாலும் அப்படியேதான்... ஏதோ, இந்த வசதிகுறைந்த மாமனாரால் இயன்றது. வைத்துக் கொள். வரட்டுமாம்மா?'' என்று கேட்டார் ராமலிங்கம்.

அவர் கொடுத்த காகித உறையைப் பெற்றுக் கொண்டு 'நன்றி' யுரைத்தவள், மேலே என்ன பேசுவது என்று புரியாமல் சற்றுத் தயங்கிவிட்டு, ''அங்கே, உங்கள் மகளைப் பார்க்க வந்தார்கள் என்கிறீர்களே, என்ன சொன்னார்கள்? பிடித்திருக்கிறதாமா?'' என்று விசாரித்தாள்.

''மாப்பிள்ளைக்குப் பிடித்த மாதிரிதான் தோன்றுகிறது. மற்றவர்கள்... எல்லோருடைய இணக்கமும் இருந்தால்தான் பிற்பாடு இவள் வாழ்க்கை நன்றாக இருக்கும்! கலந்து பேசிச் சொல்லுவதாக கூறியிருக்கிறார்கள். அப்புறம், மற்ற விஷயங்கள் அவர்களுக்குத் திருப்தியாக இருக்க வேண்டும்.''

''மற்ற விஷயங்கள்... ஓ, கப்பமா?'' என்றபோது அவளது குரல் மாறியிருந்தது.

''அப்படி நினைப்பானேன், மருமகளே? பெண்ணாகப் பிறந்ததால் ஒன்றுமில்லாமல் விரட்டி விடவேண்டுமா? எனக்கு ஒரு பெண்ணும் இரண்டு பையன்களுமாக மூன்று பிள்ளைகள். என் சேமிப்பில் மூவருக்கும் சமபாகம் கொடுக்கப் போகிறேன். மகளுக்குத் திருமணத்தின்போது கொடுக்கிறேன். இதில் இழிவாக மதிப்பிட என்ன இருக்கிறது?'' என்று அவர் கேட்டபோது, சற்றுத் திகைத்துவிட்டுத் தலையாட்டினாள் சௌமினி.

கூடவே, அவளுக்கு, அவளுடைய பாட்டியின் நினைவு வந்தது. திருமணம், பணம் என்று அவள் பேசிய ஞாபகம் வந்தது. பாட்டி இப்போது இல்லையே என்ற ஏக்கம் உண்டாயிற்று. ஆனால், பாட்டி இருந்திருந்தால், சித்தார்த்தன உருவானது தெரிந்ததுமே உயிரை விட்டிருப்பாள். ஏதோ, அந்த ஒரு துன்பம் அவளுக்கு மிச்சமாயிற்று.

மேலைக் கடலோரமாய், புகுந்த வீட்டு வாசம், சௌமினிக்கு ஒரு விசித்திரக் கலவையாக அமைந்தது.

கடற்கரை ஓரமாய், நிறைய இடத்தை வளைத்துப் போட்டிருந்தார் சிதம்பரநாதர்.

ஒரு பாறைக் கூட்டத்தை அடுத்து உயரத்தில் வசதியாக, ஆனால் சௌமினி எதிர்பார்த்ததை விட எளிமையாக, அவரது வீடு இருந்தது.

மாடியிலும், கீழும் வீட்டைச் சுற்றிலும் வராண்டா இருந்தது.

மேற்குத் திசையில் பொன் மணலோடு கடற்கரையும், வெண் நுரையோடு நீலக் கடலும் மனதைக் கவர்ந்தன. அந்தி வேளையில், ஆதவனின் அஸ்தமனம் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. கீழ்ப்புறம் சென்றாலோ, கண்ணுக் கெட்டிய தூரம் வரை வளமான தென்னைமரக் கூட்டங்கள், காற்றில் ஒய்யாரமாய் அசைந்தாடி எழில் கூட்டின. வீடு இருந்த இடம், ஒரு சிறு வளைகுடாவின் மையம் போல, வடபுறமும், தென்புறமும் கடல் வளைந்து உள் நோக்கிச் சென்றிருப்பதும் வெகு அழகாகவே இருந்தது.

பார்க்கும் இடமெல்லாம் பரந்து விரிந்த இயற்கை அழகு அவளது ரசிக மனதிற்குப் பரவசமூட்டியது. ஆனால், இந்தப் பரவசத்தை தனிமையாக அனுபவிக்க முடியாமல் சஞ்சலத்துக்கும் சங்கடத்துக்கும் அவள் பலமுறை ஆளாக நேர்ந்தது.

காரணம் மனோரஞ்சன்தான்.

சௌமினிக்கு ஒரு துன்பம் என்றால் அதுவேறு யாரால் நேர முடியும்?

அவனது குணம் அறிந்திருந்தும், நெறிமுறையற்ற போக்கு தெரிந்திருந்தும், அவனைத் திருத்துவதாகவும் அவனுக்குத் தண்டனை கொடுப்பதாகவும் எண்ணி, மீள முடியா உளைக்குள் இறங்கிவிட்ட தன் மூடத்தனத்தை எண்ணி அவள் பலமுறை வருத்தப்பட நேர்ந்தது

அதுபோன்ற சமயங்களில், அந்த அழகான சுற்றுப்புறம் அடியோடு எழில் மங்கி, சிறைக்கூடம் போலத் தோற்றமளித்தது.

## 14

'சுந்தரவனம்' மெய்யாகவே மிகவும் சுந்தரமான இடம்

அங்கு வசித்தவர், வேற்றிடத்தில் ஒருநாள் கழிப்பதுகூடச் சிரமம்தான் அத்தோடு, தானே இன்னமும் நேரடியாகக் கவனித்து வந்த தொழிலையும் மற்றவர் பொறுப்பில் விட்டுவிட்டு ஓர் ஓட்டல அறையில் சிதம்பரநாதர் காத்துக் கிடந்ததன் காரணம் அவர் தன் பேரன் மீது வைத்திருந்த பாசம்தான்

மனோரஞ்சன் பிழைத்து விடுவான் என்று ஆனபிறகு அவர், அவ்வப்போது சொந்த இடம் திரும்பிச் சென்று, தோப்புகள், தொழிற்சாலைகளையும், கவனித்துவிட்டு மீண்டும் பேரனிடம் சென்றிருக்கலாம். ஆனால் அப்படிச் செய்யாது, கடைசிவரை கூடவே இருந்து, தன் மேற்பார்வையில் பேரன், பேரனுடைய மனைவி, குழந்தையைக் கூடவே அழைத்துக் கொண்டே ஊர் திரும்பினார் என்றால் அதற்கு ஒரு நோக்கம் இருந்தது.

அந்த நோக்கம் நிறைவேறுவதற்காக அவர் சில ஏற்பாடுக ளைச் செய்தார். அவற்றுள் சில, சௌமினிக்கு மன அமைதியைக் கொடுத்தன. சில, உள்ள நிம்மதியையும் கெடுத்தன.

பூனாவிலிருந்து திரும்பியவர்கள் நேராகச் 'சுந்தரவனம்' செல்லவில்லை. கொச்சிவரையிலும், விமானப் பயணம்தான் என்ற போதும், கொச்சியில் ஓர் உயர்தர ஓட்டலில் தங்கிச் சிரம பரிகாரம் செய்த பிறகே - முக்கியமாக மனோரஞ்சன் நல்ல ஓய்வு எடுத்த பிறகு, அப்புறமும் ஒரு டாக்டர் வந்து மனோரஞ்சனைப் பரிசோதித்து அனுமதி வழங்கிய பிறகே பெரியவர் மீண்டும் பய ணத்தைத் தொடர விட்டார்.

தனக்கும் அந்த ஓய்வு தேவைப்பட்டிருந்ததை சௌமினி சற்று வியப்புடனேயே உணர்ந்தாள். எவ்வளவு வேலைகளைக் களைப்பே இல்லாமல் செய்கிறவள், சொகுசாக விமானத்தில் வரு முன் சோர்ந்து விடக்கூடுமா? மனோரஞ்சனின் கைத்தாலியை ஏற்றதிலிருந்து உளைந்து கொண்டிருந்த மனம்தான் அவளை இவ் வளவு ஓய்ந்து போகச் செய்திருக்க வேண்டும் என்று தோன்றியது அவளுக்கு.

எப்படியோ, தூங்கி எழுந்தது உடம்பைக் கொஞ்சம் தூக்கி விட்டாற்போல இருக்க, 'இதோ வாத்து,' 'இதோ தண்ணி,' 'இதோ கலர்க் குமுளி' என்று ஆர்ப்பரித்த மகனின் உற்சாகம் அவளையும் ஓரளவு தொற்றிக் கொள்ள, ''அதோபார், சிவப்புப்பூ. அங்கேபார் ஊதா பட்டர்ஃபிளை'' என்று தானும் அவனுக்குக் காட்டலானாள்.

'சுந்தரவனம்' என்று பெரிதாகப் பெயர் எழுதிய கேட்டைத் திறந்ததும், பசிய புல்வெளியும் அங்கங்கே வண்ண மலர்ப் ' ...த்திகளுமாக நன்கு பராமரிக்கப்பட்ட ஒரு விசாலமான தோட்டம் அவர்களை எதிர்கொண்டது. அகன்ற கார்ப்பாதை ஓரமாய்ப் பால்சம் செடிகள் பல்வேறு நிறங்களில் பூத்துக் குலுங்கின. பக்கவாட்டில் நிலம் லேசாகச் சரிந்து, பொன் மணல்பரப்புக்கு அப்பால் நீலக்கடல் அழகாகத் தெரிந்தது.

''கடற்கரை அருகாய் இப்படிப் பசேலென்று புல்தரையா?!'' என்று சௌமினிக்கு ஆச்சரியமாயிருந்தது.

''என் மகளின் திட்டம் அம்மா. நிறைய மலையைத் தோண்டி எடுத்துவிட்டு, சத்துள்ள மண், உரம் போட்டுப் புல் பதித்தாள். அவ்வப்போது புதுப்பிக்கிறானே தவிர எல்லாம் பூரணி.. உன் மாமியார் திட்டமிட்ட தோட்டம்தான் இது... இதிலெல்லாம் பெண்களுக்குத்தான் அதிக ஈடுபாடு இருக்கும். உனக்கு எதையேனும் மாற்றவேண்டும் போல ஆசையிருந்தால், வேண்டுமானால் மாற்றிக் கொள்.'' என்றார் சிதம்பரநாதர்.

மாற்றுவது அவருக்குப் பிடிக்காது என்பது நன்றாகவே புரிந்தது ஆனாலும், வீட்டு மருமகள் என்பதற்கான உரிமையைத் தர முன்வந்ததை உள்ளூரப் பாராட்டி, ''ஊகூம். இதுவே மிகவும் அழகாக இருக்கும்போது வேறு நினைக்கத் தேவையே இல்லையே!'' என்று அவள் கூறவும், பெரியவரின் முகம் மலர்ந்தது.

''அதோ, கடல்பார்'' என்று சௌமினி, மகனுக்குச் சுட்டிக் காட்டினாள். ''அத்தோடு, கடலும் நீ நினைக்கிற அளவு பக்கம் இல்லையம்மா. நிலம் லேசாகச் சரிந்து செல்வதால் அருகில் இருப்பது போலத் தோன்றுகிறது. ஆனால், கடற்கரை முழுவதும் நம் சொந்தம் போலத்தான். வேற்று ஆள் யாரும் வரமாட்டார்கள். அதனால் எப்போது வேண்டுமானாலும் இறங்கிக் குளிக்கலாம். ஆனால் ஓதம் வரும் சமயம் மட்டும் வேண்டாம். அலை பெரிதாக அடித்து, நீர்மட்டம் உயரும் என்பதோடு, அலை உள்ளேயும் இழுக்கும்.'' என்றார் பெரியவர்.

சித்தார்த்தனைத் தண்ணீருக்குப் பழக்கக் கூடாதோ?

சௌமினியின் பார்வை சட்டெனப் பிள்ளையிடம் பாயவும், 'குட்டிப் பையனைப் பற்றிக் கவலையே படாதேம்மா. அவன் கூடவே எப்போதும் இருக்கும்படி இரண்டு பேரை வேலைக்கு அமர்த்தி விடுகிறேன். அவனோடு கூட விளையாட ஒரு பெரிடி யன்; காவலுக்கு ஒரு பெரிய ஆள்." என்றார் தொடர்ந்து.

கொள்ளுப் பேரனுக்குத் துணையாக இரண்டு ஆட்களை ஏற்பாடு செய்த அவர், பேரனுக்கு உதவ மட்டும் ஆளே கிடை யாது என்று அடித்துச் சொல்லி விட்டார்.

மனோரஞ்சனுக்கு, நடக்கச் சொல்லி என்று எதற்கும் மற்றவர் கள் உதவி தேவைப்படவில்லை. முன்போலத் துடிப்போடு இல்லா விடிலும், ஓரளவு நிதானமாக அவனே தனக்கு வேண்டியதைச் செய்து கொண்டான்.

விபத்தில் உடைந்த எலும்புகள் எல்லாம் நல்லவிதமாக இணைந்து விட்டபோதும், எலும்புகளை இணைக்கும் தசைகளுக் குத் தொடர்ந்து பயிற்சி தேவைப்பட்டது. மருத்துவமனையில் அதற்குரிய 'பிஸியோதெரப்பிஸ்ட்' மூலமாகச் செய்யப்பட்ட பயிற்சிகள், இப்போது அவனுடைய மனைவியிடம் ஒப்படைக்கப் பட்டன. பெரிய வேலையில்லை. அங்கங்கே களிம்பு தடவி அழுத் தியும், நீவியும் விடவேண்டியதுதான். எப்படிச் செய்யவேண்டும் என்பதை அவளுக்குக் கற்றும் கொடுத்தார்கள்தான்.

மனோரஞ்சனைத் தொடுவதைப் பெரிய விஷயமாகக் குறிப் பிட்டுச் சொல்வதற்கும் இல்லைதான். முன்பு, அவனது அறையே கதியென்று கிடந்தபோது, நாற்காலியில் அவன் கட்டிலை ஒட்டி அமர்ந்திருந்தபடி, அவன் கட்டிலிலேயே அவனை ஒட்டித் தலை சாய்த்து எத்தனையோ முறை தூங்கியிருக்கிறாள். இருவரின் அமைதியற்ற தூக்கத்தின் அசைவுகளால், பலமுறை, அவனது காயமற்ற கைவளையத்திலேயே, பெரும் ஆறுதலோடு விழித்தும் இருக்கிறாள்.

அப்போதெல்லாம் ஒன்றுமே - அவனுக்குக் குணமாகி விட வேண்டும் என்பது தவிர வேறு எதுவுமே அவளுக்குத் தோன்றியது இல்லை.

ஆனால், அவனுக்குக் கிட்டதட்டக் குணமாகிவிட்ட இப்போது, மருத்துவ ரீதியாகக் கூட அவனைத் தொடுவதற்கு அவளுக்கு ஒரு மாதிரித் தயக்கமாக இருந்தது.

முதல்நாள் அதுபோல் நீவி விட்டுவிட்டு, அன்று முழுவதும் விரல் முனைகளில் குறுகுறுத்துக் கொண்டே இருந்தது.

''அதற்கென்று உரிய படிப்பு படித்தவர்கள் செய்வதுதான் நல்லது. ஒரு நர்ஸ் வைக்கலாமே'' என்று சிதம்பரநாதரிடம் வாய் விட்டுக் கேட்டுப் பார்த்தாள்.

''கேரள நர்சுகளுக்கு உலகமுழுவதும் 'டிமான்ட்' இருப்பது உனக்குத் தெரியாதா சௌமினி! நம் வீட்டுக்குத் தினம் இரண்டுதரம் கொச்சியிலிருந்து வந்துபோவது முடியாத காரியம். ஒரு நோயாளிக்காக முழுநேரமாக இங்கே வந்து தங்க யாரும் வரமாட்டார்கள். அத்தோடு, இனி, அதற்காகப் படித்தவர்கள்தான் செய்ய வேண்டும் என்று இல்லையாமே!'' என்ற இலகுவாக மறுத்துவிட்டார் பெரியவர்.

தவிர்க்க முடியாமல் ஏற்ற அந்தப் பயிற்சி நேரம் சௌமினிக்குப் பெரும் இம்சையாக இருந்தது.

மார்பு எலும்புகளுக்கு இடையே, விலாவில், தோளில், தொடையில் என்று அழுந்த வரும்போது... அவளும் உயிரும் உணர்வும் கொண்ட மனுஷிதான், இல்லையா?

அத்தோடு மனோரஞ்சன் வேறு. அவன் மட்டும், என்னிடம் பெரிதாகச் சத்தியம் வாங்கிக் கொண்டு நீயே தொடுகிறாயே என்று ஏதாவது பேசி... குறைந்தபட்சமாய் ஒரு கேலி, கிண்டல் பார்வை பார்த்திருந்தால் கூட அதைச் சாக்கிட்டு, எல்லாவற்றையும் எடுத்து வீசிவிட்டுப் போய்விடலாம் ஆனால், என்னவோ சொர்க்கபோகம் அனுபவிப்பவன் போல ஒரு பரவசப் பாவனையோடு, அவன்

கண்மூடி அமர்ந்திருந்த விதம் அவளைக் கொதிக்க வைத்தபோதும், அவனிடம் குற்றமென்று எதையும் கூற முடியாமலும் போகவே, தினமும் இரண்டு தடவை அவள் மவுனமாக இருந்து வேதனை அனுபவிக்கும்படி ஆயிற்று.

வெளிக்காட்ட முடியாமல், பல்லைக் கடித்து வேதனையை உள்ளேயே விழுங்கிக் கொண்டிருந்த சௌமினி, விரைவிலேயே இதற்கொரு வடிகால் கண்டுபிடித்தாள். இந்த வேதனையின் காரண கர்த்தாவான மனோரஞ்சனையும் வெளிப்படையாகப் பதில் சொல்ல முடியாத நிலையில் நிறுத்திக் குத்திக் குதறினாள். அன்று ஆயிரம் மீன் பிடிக்கச் சென்றவனை, அதே வார்த்தைகளைக் கொண்டே திருப்பி அடித்தாள்.

அங்கே இரவுச் சாப்பாடு எல்லோரும் சேர்ந்து உண்ணும் உணவு.

அந்த நேரத்தைத் தேர்ந்தெடுத்து, சாப்பாட்டில் மீன் இருந்தால், ''பாவம் இந்த மீன்! தூண்டிலில் மாட்டிவிட்ட பாவத்துக்காகத் தன் உயிரையே 'அம்போ' என்று விட்டுவிட்டு இந்தச் சாப்பாட்டு மேஜையில் வந்து உட்கார்ந்திருக்கிறது! ஏன் தாத்தா, தூண்டிலில் சிக்காத மீன்கூட இருக்குமல்லவா?'' என்று அப்பாவி போல விழிகளை நெரித்துக் கேட்டாள் ஒருநாள்.

மற்றொருநாள், ''ஏன் தாத்தா, வலைபோட்டுப் பிடித்தால் நிறைய மீன் கிடைக்கிறபோது, தூண்டிலைப் போட்டுக் கொண்டு மணிக் கணக்காக உட்கார்ந்து மீன் பிடிக்கிறார்கள்?'' என்று பெரியவரிடம் சந்தேகம் கேட்டாள்.

உள் விஷயம் அறியாமல், ''அது ஒரு சவால் மாதிரி மகளே. நீயா நானா என்பதுபோல நேர்முகப் போட்டி. பிடித்து விட்டால், போட்டியில் வென்ற மாதிரி அதில் ஓர் உற்சாகம்.'' என்று விளக்கினார் சிதம்பரநாதர்.

''ம்...கூம் இது சரியான நேர்முகப் போட்டி என்று சொல்ல முடியாது தாத்தா. பலம், பரிசு எதுவும் சமமில்லை, பாருங்கள் இந்தப் போட்டியில் மீன் தோற்றால் உயிரையே விடவேண்டி

யிருக்கிறது. அடுத்த வாய்ப்பு என்பதே அதற்குக் கிடையாது. ஆனால் மனிதனைப் பாருங்கள் ஒரு மீனிடம் தோற்றாலும், அவனுக்கு ஒன்றும் ஆவதில்லை. இன்னொன்றைப் பிடித்துக் கபளீகரம் செய்து விடுகிறான்! ''ஸ்வாஹா!'' என்று அவள் அபிநயத்துடன் கூறப் பெரியவர் நகைத்தார்.

ஓரக் கண்பார்வையில், மனோரஞ்சனின் முகம் கறுப்பதைக் கண்டு, திருப்தியுற்றாள் சௌமினி.

உணவு மெனுவில் மீன் இல்லாவிட்டாலும் சௌமினி விடுவதில்லை.

''இப்போதெல்லாம் கடலில் மீனே கிடைப்பதில்லை, தாத்தா. மீன் பிடிக்கிறவர்கள் எல்லாம் கொஞ்சம் கூடப் பொறுப்பே இல்லாமல் கண்ட மேனிக்கு மீன்பிடித்து மீன் இனத்தையே நாசப்படுத்தி விட்டார்கள் போல. என்று வருத்தப்படுவாள்.

இதில், எந்தவிதப் பேச்சிலும் கலந்துகொள்ள முடியாமல், உதட்டோரம் அழுத்தத்துடன் அவன் சும்மா இருந்தது முதலில் சௌமினிக்கு ஒருவிதமான திருப்தியைத் தந்தபோதும், பிறகு அதுவும் போதவில்லை. எனவே ஒருநாள், அவனிடமே நேரடியாக மோதினாள். ''நீங்கள் நன்றாக மீன் பிடிப்பீர்கள் என்று சொன்னதாக ஞாபகம். இதுவரை சுமார் எத்தனை மீன் பிடித்திருப்பீர்கள், மனோரஞ்சன்? ஒரு நூறு. இருநூறு... அதற்கு மேலும் அதிகம் பிடித்திருப்பீர்களா? ஒருவேளை எண்ணில் அடங்காத அளவு பிடித்ததில் எண்ணிக்கையே மறந்து விட்டதா? ஒரு மீன் உங்களிடம் அகப்பட்டு உயிரை விட்டது எனக்குத் தெரியும்...

மீன் பிடிப்பானா? மனோவா? எப்போது? கொக்கியில் புழுவைக் கோர்ப்பது அருவருப்பாய் இருக்கிறது; தூண்டிலில் மாட்டிய மீனைக் கொக்கியில் இருந்து எடுக்கும்போது பாவமாயிருக்கிறது என்று தொட மாட்டானே!'' புரியாமல் குறுக்கே வந்தார் பெரியவர்

கண்கள் மின்ன, ''அது புராண காலத்துக் கதை தாத்தா. கல்லூரி நாட்களில் அந்த மென்மை, மேன்மை எல்லாம் சுத்.

தமாய்த் துடைத்து எறிந்து விட்டார் தெரியுமா? பதிலாக, மீன பிடிக்கிற வேலையில் வெகு தீவிரமாய் இறங்கி விட்டார். அது வும், கடலில் மீன் பிடிப்பதில் தனி ஆர்வம். அங்கேதானே ஆயி ரம் ஆயிரமாய் மீன்கள் கிடைக்குமாம்!'' என்று கிண்டலும் சிரிப்பு மாக உரைத்தாள் சௌமினி.

''அப்படித்தானே, மனோரஞ்சன்?'' என்று அவனை விடா மல் வம்புக்கு இழுத்தாள். தைரியம் இருந்தால் அவனுடைய பாட் டனார் முன்னிலையில் இதுபற்றிப் பேசட்டுமே! 'கடலில் ஆயிரம் மீன்கள்' என்று அன்றைக்கு அலட்சியமாய்ச் சொன்னானே!

அவளை வெறித்து நோக்கிவிட்டு, முன்னிருந்த உணவில் கவனத்தைச் செலுத்தினான் மனோரஞ்சன்.

அப்பாடி! இன்றுதான் மெய்யாகவே மனோரஞ்சனுக்கு நல்ல அடி கொடுக்க முடிந்தது என்று உள்ளூரக் கெக்கலிக்க முயன்றபோ துதான், இதில் தனக்கும் வலிப்பது அவளுக்குப் புரிந்தது.

மெய்யாகவே இவன் நிறைய.... யப் பெண்களோடு பழகியி ருப்பானா? ஒவ்வொருத்தியிடமும் சரசம் செய்து... ஒவ்வொருவ ரையும் என்னென்ன சொல்லி எப்படி எப்படி மயக்கியிருப்பான்? ஏதேதோ காட்சிகள் அவளது மனக் கண்முன் தோன்றி அவளைப் பதற வைத்தன.

வாயில் இருந்த உணவை விழுங்க முடியாமல் தொண்டை இறுகிக் குறுகிவிடத் தண்ணீரைக் குடித்து அவள் அதை உள்ளே தள்ளவேண்டியதாயிற்று.

அந்த வீட்டில் சௌமினிக்குப் பிடிக்காத ஓர் அமைப்பு, மனோரஞ்சனுக்கும் அவளுக்கும் என்று ஒதுக்கப்பட்டிருந்த பகுதி.

அது, அந்த வீட்டிலேயே மிகச் சிறந்த பகுதி என்பதில் அவ ளுக்குக் கொஞ்சமும் சந்தேகம் கிடையாது. ஒரு பெரிய அறையின் ஒருபுறம் படுக்கை கிடக்க, அந்த அறையின் இரு புறமுமாகக் கணவன் மனைவியரின் சகல வசதிகளுடன் கூடிய தனியறைகள் இருந்தன. எனவே இதில் குறைகூறுவதற்கு ஒன்றும் இல்லை.

அவளது கஷ்டம் என்னவென்றால், இந்த அமைப்பில் அவள் ஓயாமல் மனோரஞ்சன் பார்வையில் பட்டுக் கொண்டே இருக்க நேர்ந்தது

முழு ஆரோக்கியம் அடைந்திராததால், கொஞ்சம் நடப்பது, சிறுசிறு பயிற்சிகள் செய்வது, உடனே படுத்து ஓய்வெடுப்பது என்று மனோரஞ்சன் பெரும்பாலும் அந்தப் பெரிய அறையிலேயே இருந்தான் தொழிலைக் கவனிக்க என்று வெளியே செல்லத் தொடங்கிவிட்ட பெரியவர் வீட்டில் இருக்கும் வேளைகளில் அவரது அறைக்குச் சென்று இருவருமாகத் தொழில் விவகாரம் பேசும் நேரமும், காலைமாலையில் தோட்டத்தில் உலவும் வேளையும் மட்டும் விலக்கு. எனவே, சௌமினி எதற்காகத் தன் அறைக்குச் சென்றுவந்தாலும் அவனது பார்வை அவளைத் தொடர்ந்ததை அவளால் தவிர்க்க முடியாது போயிற்று. அவளது அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டபிறகும், அடுத்த அறையில் அவன் இருந்ததால், என்னவோ பக்கத்திலேயே இருப்பது போல அவளுக்கு ஒரு மாதிரியாகவே இருந்தது.

சித்தார்த்தனின் அறை சௌமினியின் அறையை ஒட்டியிருந்தது. அறையினுள் எத்தனையோ விளையாட்டுச் சாமான்கள் இருந்தபோதும், பகல் முழுவதும் தோட்டத்தில் வண்ணத்துப் பூச்சி விரட்டுவதும், ஓடி விளையாடுவதுமாக அவன் வெளியே சுற்றுகிற நேரம்தான் அதிகம். மாலையில், உடம்பு கழுவி உணவைக் கொடுத்தால் உண்டுவிட்டு அயர்ந்து உறங்கி விடுவான்.

அன்றிரவு, வழக்கம்போல, உறங்கிக் கொண்டிருந்த மகனைப் பார்த்து விட்டு அவளது அறைக்குச் சென்றபோது, ''ஒரு நிமிடம்.'' என்று அவளைத் தடுத்து நிறுத்தினான் மனோரஞ்சன்.

அவனது அழைப்பை அலட்சியம் செய்து அறைக்குள் சென்று விடுவது என்றுதான் சௌமினி முதலில் நினைத்தாள்.

ஆனால், அதை எதிர்பார்த்தோ என்னவோ, அறைக்குள் உலவுகிற பாவனையில், மனோரஞ்சன் அவளது வழியிலேயே நடந்து கொண்டு இருக்கவும், நின்று, 'என்ன' என்பதுபோல அவனை ஏறிட்டாள்.

''உன் பேச்சு கொஞ்சம் அளவைத் தாண்டுகிறது, சௌமினி. தாத்தா கவனிக்குமுன் நிறுத்திக் கொள்.'' என்றான் அவன் மெது வாக.

''ஏன்? தாத்தாவுக்குத் தெரிந்து விடுமோ என்று தொடை நடுங்குகிறதோ? தப்பு செய்யும்போது அப்படி ஒன்றும் பயந்ததா கத் தெரியவில்லையே?'' என்றாள் சௌமினி துடுக்காக.

''நான் யாரிடமும் எதையும் மறைத்ததில்லை சௌ மினி.'' என்று உடனே பதிலளித்தவன், அவளை நேராக நோக்கி, மேலும் தொடர்ந்தான். ''கல்லூரி நாட்களில் நான் மகா உத்தம னாக நடந்து கொள்ளவில்லை என்பது உண்மையே. பிறகும் சில பிழை... செய்திருக்கிறேன் தான்...

உரக்கச் சிரித்தாள் சௌமினி. ''அழகாகத்தான் பேசுகிறீர்கள். ஆனால் உத்தமம் என்கிற வார்த்தைக்கு உங்கள் வாழ்க்கையில் இடம் இருந்தது ஏது? உண்மை நடப்பின்படி அப்போது... அப் போது மட்டுமல்ல, எப்போதுமே நீங்கள் ஓர் அயோக்கியனாகத் தான் இருந்திருக்கிறீர்கள். அதுவே உத்தமம் என்று உங்களுக்குப் பட்டால், நீங்களே பிழை புரிந்ததாக ஒத்துக் கொள்கிற பிற்காலத் தில் நீங்கள் மகா அயோக்கியனாக மாறிவிட்டீர்கள் என்று தோன் றுகிறது. அப்படித்தானா விஷயம்?'' என்று விழிகளை விரித்துக் கதை கேட்டாள்.

''யாரும் வேண்டும் என்று பிழை புரிவது இல்லை, சௌ மினி. வயதின் கோளாறு, சில அசட்டுத்தனமான கொள்கைகளின் விளைவு என்று அந்தத் தவறுகளை ஒதுக்கி விடமுடியாதா?'' என்று தணிவாகவே பேசினான் மனோரஞ்சன்.

''ஒதுக்கிவிட்டு?'' கடுமையான குரலில் கேட்டாள் அவள். ''ஒதுக்கிவிட்டு, இன்னுமோர் அசட்டு மீனாக உங்களிடம் சிக்கு வேன் என்று எண்ணினீர்களோ? அன்று என் நிபந்தனையை எப்படி மாற்றினீர்கள்? 'விருப்பம் இல்லாமல் தொடமாட்டேன்' அப்படித்தானே! எத்தனையோதரம் வென்று பழகிய மாய்மால வார்த்தை வலையில் இவளையும் விழத்தட்டி விடலாம் என்ற இறுமாப்பில் சொன்னீர்கள் அல்லவா? ஆனால், உங்கள் வலை

யில் சிக்கி உயிரை விட நான் வெறும் அயிரை மீன் அல்ல. சுறா உங்கள் வலைகள் அத்தனையையும் அறுத்து எறிந்து விட்டு, உங்களையும் காயப்படுத்திக் கதறடிக்கிறேன், பாருங்கள்.'' என்ற சூளுரைத்தவள், அவனைச் சுற்றிக் கொண்டு, வேகமாக நடந்து. அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டாள்.

## 15

ரொம்பவும் வீரமான வார்த்தைகள்தான்.

ஆனால், அறைக்குள் சென்று கதவைச் சாத்தியதோடு, அவளது சக்தியெல்லாம் தீர்ந்து விட்டாற்போலக் கால்கள் வலுவிழந்து விடச் சற்றுநேரம் அந்தக் கதவின் மேலேயே சாய்ந்து கொண்டு நின்றாள் சௌமினி.

'நன்றாகத் திட்டிவிட்டேன். செமத்தியாகக் கொடுத்துவிட்டேன்' என்று தன்னைத்தானே தட்டிக் கொண்டிருந்தபோது, அவளது காது மட்டும் நன்றாகத் தீட்டிக் கொண்டு, அடுத்த அறையின் அரவங்களைக் கூர்மையுடன் கவனித்தது.

இன்னமும் முழுமையான ஆரோக்கியம் பெறவில்லையே, அவள் கொடுத்த அடியில் மயங்கி கியங்கி விழுந்துவிட்டால்... என்று யோசனை ஓடியது.

வெகுநேரம் அவன் இருந்த அறையில் சிறு சத்தம் கூடக் கேட்கவில்லை.

என்னடா இது? இனிக் கதவைத் திறந்து கொண்டு, எட்டிப் பார்த்துவிட வேண்டியதானே என்று யோசித்து, தயக்கத்துடன் அவள், கதவுக் குமிழியில் கையை வைத்தபோது, மனோரஞ்சனின் காலடி ஓசை மெல்லக் கேட்டது.

அவன் மீண்டும் உலாவலைத் தொடர்ந்து விட்டான்.

சற்று நிம்மதியுற்றவளாகச் சென்று இருக்கையில் அமர்ந்தாள் சௌமினி.

ஏதோ, மனோரஞ்சனிடமும் ஒரு நல்ல விஷயம் இருந்தது. பல சுகவீனர்களைப் போலப் படுத்தே கிடப்பேன், ஆரோக்கியத்தை டாக்டரும் மருந்துகளுமாகத்தான் கொண்டுவந்து சேர்க்க வேண்டும் என்று இல்லாமல் தன்னால் இயன்றதையெல்லாம் முயன்று செய்தான். அதனால் வேகமாகக் குணமடையவும் முடிந்தது.

காலைக் கடன்களை முடித்துச் செல்கையில், வழக்கம்போல ஆராயும் பார்வையுடன், 'குட்மார்னிங்' சொல்ல மனோரஞ்சன் வழியில் இல்லாதிருக்கவும் திரும்பிப் பார்த்தாள்.

'சுந்தரவனத்'துக்கு வந்ததிலிருந்து முதல் தடவையாக, மனோரஞ்சன் இன்னமும் துயின்று கொண்டு இருந்தான்.

இரவு எப்போது உறங்கினானோ, பாவம்!

ஒருவேளை உடம்பு சரியில்லையோ என்று ஓர் எண்ணம் தோன்றவும், பதட்டத்துடன் கட்டிலின் அருகே சென்று பார்த்தாள். ஆழ்ந்த, நிதானமான சுவாசம் நிம்மதியளிக்கச் சற்றுநேரம் அவனைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

ஆராய்தலோ அழுத்தமோ இல்லாமல், தூக்கத்தில் சற்றுத் தளர்ந்திருந்த முகமும், கலைந்த நெற்றியை மறைத்த கேசமுமாக, ஆதரவற்ற சிறுவனைப் போன்று கிடந்தான் மனோரஞ்சன். முந்தைய இரவில் பார்த்துவிட்ட மகனின் தோற்றம் நினைவு வந்து மனதை என்னவோ செய்தது.

சற்று நேரம் அவனையே பார்த்துக் கொண்டு நின்றவள், அவனிடம் அசைவு தெரியவும் அவசரமாக வெளியேறினாள்.

சுந்தரவனத்துக்குச் சென்றதும் முதல் வேலையாகச் சிதம்பரநாதர், அந்த வீட்டின் பொறுப்பை அவளிடம் ஒப்படைத்தார்.

வீட்டில் பணிபுரிகிறவர்கள், உத்திரவையும் பணத்தையும் அவளிடமிருந்து பெறும்படியாக இருந்தால்தான் அவர்களிடமிருந்து, அவளுக்கு உரிய மரியாதை கிடைக்கும் என்பது அவரது கருத்து.

ஒழுங்கான முறையில் வீட்டு மருமகளாக வந்திருந்தால் இந்த மரியாதை அவளுக்கு இயல்பாகவே கிடைத்திருக்கும். ஆனால் இப்படி ஒரு பிள்ளையோடு சௌமினி வந்ததால் அவளை யாரும் அலட்சியப்படுத்தி விடக்கூடாது என்று எண்ணி அவர் இந்த ஏற்பாட்டைச் செய்தார்.

இதுபோலச் செய்து பழக்கம் இல்லையே என்று அவள் தயங்கியபோது, கூட இருந்து இரண்டு நாள் அவர் வழிகாட்டவும் அவள் கவனத்துடன் கற்றுக் கொண்டாள்.

சமையல்காரரிடம் அன்றைய 'மெனு' பற்றிப் பேசிவிட்டு, எடுபிடியிடம் சமான் லிஸ்டும் பணமும் கொடுத்து அனுப்பி விட்டு, தோட்டக்காரனிடம் அன்றைக்குப் பறித்து வைக்க வேண்டிய பூ தினுசு சொல்லிவிட்டு, 'மசாஸ்' களிம்பு சூடு செய்து கொண்டு மனோரஞ்சனை நாடிச் செல்கையில் கால்கள் கொஞ்சம் பின்னடித்தன.

முன்நாள் இரவு நடந்தது, அவனுக்கும் நிச்சயமாக நினைவிருக்கும். அவனுக்கும் பதில் சொல்ல இடம் கொடாமல், அப்போது கதவைச் சாத்திட முடிந்தது. இப்போது  என்று மனம் தடுமாறியது.

என்ன பைத்தியக்காரத்தனம்? தப்பு செய்தவன் மனோரஞ்சன், தயக்கமும் தடுமாற்றமும் அவனுக்குத்தான் இருக்க வேண்டும், அவளுக்கென்ன வந்தது? என்று தன்மீதே கோபமும் வந்தது

அங்கே அவன் தயார்நிலையில் இருந்தான். அவளைக் கண்டதும், "கோபத்தில் வரமாட்டாயோ என்று நினைத்தேன்" என்றான் தணிவாகவே.

லேசாகத் தலையைச் சிலுப்பி, ''ஒத்துக் கொண்டபிறகு இடையில் விடுவது எனக்குப் பழக்கமில்லை'' என்ற அறிவிப்புடன் அவள் வேலையைத் தொடங்கினாள்.

இந்த வேலை ஓர் அனாவசிய வேதனை என்றுதான் செளமினி முதலில் எண்ணியிருந்தாள். ஆனால் வழக்கமான பரிசோதனைக் கென்று வந்த டாக்டர், ''இனி 'மசாஜ்' அவசியமில்லை. இனி, நீந்துவது, ஓடுவது, ஏறுவதுபோன்ற பயிற்சிகளைச் செய்யுங்கள். முதலில் கொஞ்சம் சிரமமாக இருந்தாலும் விரைவில் பழையமாதிரி ஆகிவிடுவீர்கள்.'' என்றபோது, விசித்திரமான வகையில் கொஞ்சம் கஷ்டமாகவும் இருந்தது.

காரணம்... பெரிதாக ஒன்றுமில்லை. அவனாகச் செய்யும் போது தேவைக்குச் சரியாகச் செய்வானா? அல்லது அதிகப்படியாய்ச் செய்து உடம்பைப் பலவீனப்படுத்திக் கொள்வானோ? நீந்துகிறேன் என்று தண்ணீருக்குள் இருக்கும்போது ஏதாவது தசைப்பிடிப்பு ஏற்பட்டுவிட்டால் என்ன ஆகும்? என்றெல்லாம் சிறு கலக்கங்கள்.

ஆனால் இதில் எதையும் வெளிப்படையாகச் சொல்லவும் அவளால் முடியவில்லை. தன்னிடம் அவள் அதிக அக்கறை காட்டுவதாக மனோரஞ்சன் எண்ணத் தொடங்கிவிடக் கூடாது என்பதற்காக உதடுகளை இறுக்க மூடிக் கொண்டு பேசாதிருந்தாள் செளமினி.

மற்றதை விட அவன் நீந்துகிற விஷயத்தில் அவளுக்கு மிகுந்த பயம் இருக்கவே, மனோரஞ்சன் நீந்தச் சொல்கிற போதெல்லாம் துணை செல்லும்படி ஒரு வேலைக்காரனை ஏற்பாடு செய்து வைத்தாள்.

இரண்டே நாட்களில், ''குளிக்கிறதை வேடிக்கை பார்த்துக் கொண்டு சோம்பேறியாய் நிற்கக் கூடாதம்மா. வேறே ஏதாவது உருப்படியா வேலை செய்யச் சொன்னாங்க அய்யா. இன்னொரு தடவை இப்படிச் சும்மா நிற்கறதைப் பார்த்தாக்கச் சீட்டைக் கிழித்து விடுவாங்களாம்மா.'' என்று வந்து நின்றான் அவன்.

சரி. அவன்பாடு; அவன் தலைவிதி என்று உள்ளூர முணுமுணுத்தபடி தன்வேலையைத் தொடர முயன்றாள் சௌமினி. ஆனால் கவனம் சிதறிக் கொண்டே இருந்தது. இரண்டு மூன்றுதரம் எழுந்து சென்று அகன்ற கண்ணாடி அடைப்புகளின் வழியே மனோரஞ்சன் நீந்துவதைக் கண்காணித்தாள். கொஞ்சம் கரை ஓரமாகத்தான் இருந்தான். ஆழம் அதிகம் இராது...

இரண்டு மூன்றுதரம் கைவேலையை வைத்து விட்டு எழுந்து எழுந்து வந்து பார்த்தவள், கடைசியாகத் துணியோடு அங்கேயே ஒரு நாற்காலியைப் போட்டுக் கொண்டு அமர்ந்தாள். சித்தார்த்தனின் வெள்ளைநிற 'ஷார்ட்டு'க்கு அவன் ஆசைப்பட்டது போல, ராக்கெட், துப்பாக்கி என்று 'மோட்டிஃப்' தைத்துக் கொண்டிருந்தவள், கையில் இரண்டாவது தடவையாக ஊசி குத்திவிடவும், அதை எடுத்து வைத்துவிட்டு, முழுக் கவனத்தையுமே கடற்கரைப் பக்கம் செலுத்தினாள்.

பார்த்த அளவில், நீச்சலும் அந்தக் கடலும் மனோரஞ்சனுக்குப் பழக்கப்பட்டவையாகத்தான் தோன்றின. ஆனால் அலைகள்?

உச்சியில் வெண்நுரைச் சிகரத்துடன் ஒவ்வோர் அலை வரும் போதும் அவளுக்கு வயிறு கலங்கியது. உயர எழும்பி வரும் அலை நீருக்கு அடியில் செல்கிறவன் மீண்டும் வெளியே தலை காட்டுகிற வரையில் சௌமினியின் உயிர் எங்கோ சென்று மீண்டது.

இந்த மனோரஞ்சனை மணந்ததும் தப்பு இங்கே வந்ததும் தப்பு. இரண்டுமே பெரும் பிழைகள். இந்த இரண்டையும் செய்திராவிட்டால் சௌமினி இந்தப்பாடுபட நேர்ந்திராது.

சில நாட்கள் இப்படியே தவித்துக் கொண்டு கண்ணால் கணவனை அடைகாத்தாள் சௌமினி.

அன்று கடலில் அலைகள் சற்று அதிகமாயிருப்பது போல சௌமினிக்குத் தோன்றியது. பெரிய பெரிய அலைகள் அடுக்கடுக்காய்வர, முதல் அலையில் மூழ்கிய மனோரஞ்சனை மூன்றாம்

அலைவரை வெளியே காணாது போகவே, பதறியடித்து, தோட்டக்காரனைக் கூவியழைத்தபடியே அவள் வெளியே ஓடிவந்து பார்த்தால் அவன் மீண்டும் லகுவாக நீந்திக் கொண்டிருந்தான்.

இப்படிப் பதறடித்துவிட்டானே என்று அவளுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

இந்த நேரத்தில் தோட்டக்காரன் சோமன் வேறு வந்து, ''அம்மை விளிச்சோ...?'' என்று கேட்டான்.

நல்லவேளை, சந்தேகமாய்த்தான் கேட்கிறான், காதில் சரியாக விழாத தூரத்தில் நின்றிருப்பான் போலும் என்று எண்ணியபடி, ''வந்து... நா... நாளைக்கு வெள்ளிக்கிழமை. இக்சோரா, செம்பருத்தி எல்லாம் சிவப்பு நிறமாய்ப் பூக்கள் பூஜைக்கு வேண்டும். வேறு எதற்கும் பறித்துவிடாதே.'' என்று எதையோ கோவையாகச் சொல்லி அனுப்பிவைத்து விட்டு, மீண்டும் பழைய இடத்துக்கே சென்று அமர்ந்தாள்.

ஊகூம். இது சரியில்லை. மனோரஞ்சனுக்கு ஆபத்து என்று உணர்ந்து உதவியை அழைத்துக் கொண்டு அங்கே செல்லுமுன் காரியம் மிஞ்சிவிடக் கூடும்.

அன்றிலிருந்து, மனோரஞ்சன் நீந்தும்போது, சித்தார்த்தனை அவனுடைய காவல் ஆளோடு அழைத்துச் சென்று கரையோரமாய் அவனோடு உலவுவதும் விளையாடுவதும் சௌமினியின் வழக்கம் ஆயிற்று.

ஒவ்வொரு சமயம் நண்டு விரட்டிக் கொண்டு சித்தார்த்தன் விலகிச் சென்று விடுவது உண்டு. அப்போது அதைக் கவனியாதவள் போலச் சௌமினி நிற்பாள்.

மனோரஞ்சன் மகனுக்குத் தண்ணீரில் விளையாட்டுக் காட்டத் தொடங்கினான்.

ஒருநாள் அப்படி மகனோடு விளையாடிவிட்டுக் காவல் ஆளை அழைத்து, மகனை வீட்டுக்கு அழைத்துப்போய், நல்லநீரில் குளிப்பாட்டி, வேற்றுடை அணிவிக்கும்படிக் கூறி அனுப்பிவிட்டு, சௌமினியிடம் திரும்பினான் அவன்.

''நீயும் நீந்தவாயேன்.'' என்று அழைத்தான்.

''நீந்தத் தெரியாது.'' என்றாள் அவள் சுருக்கமாக.

''ஆற்றங்கரையில் வளர்ந்தவளுக்கு நீந்தத் தெரியாதா? நம்பும்படியாக இல்லையே!''

''நான் வளர்ந்த இடம் தாமிரபரணிக் கரைஓரம். அந்த இடத்தில் பொதுவாக நீந்தும் அளவு ஆழம் இராது. வெள்ளம் வந்தால் ஆற்றுமட்டம் அதிகரிக்கும். ஆனால் அந்தச் சமயம் பாட்டி என்னைத் தண்ணீரில் இறங்க விடமாட்டார்கள்.''

''ஓகோ! இங்கே வாயேன். உனக்கு நான் நீந்தக் கற்றுத் தருகிறேன்.'' என்று அழைத்தான் மனோரஞ்சன்.

இருமனமாய்ச் சற்றுத் தயங்கினாள் சௌமினி.

நீந்தக் கற்றுக் கொள்வது என்றால் தொடாமல் முடியாது. களிம்பு தடவும்போது பட்ட வேதனை அவளுக்கு அதற்குள் மறந்து போகவில்லை ஆனால் அதேசமயம் நீந்தக் கற்றுக் கொள்கிறேன்; நீந்துகிறேன் என்று அவன் அருகில் இருந்தே கண்காணிக்கலாம். இன்னொரு லாபமாக நீச்சலையும் கற்றுக் கொள்ளலாம்.

லாபத்தட்டு தாழவும், துப்பட்டாவைக் கரையில் வைத்துவிட்டுக் கடலில் மெல்ல இறங்கினாள்

சிறு முறுவலோடு அவளை எதிர்கொண்டு அழைத்துச் சென்றான் மனோரஞ்சன்.

இடுப்பளவுத் தண்ணீர் அடைந்ததும் நின்று, ''தரையிலிருந்து கால்களை உயர்த்தி, என் கையை ஆதாரமாகக் கொண்டு, கைமேல் குப்புறக் கவிழ்ந்து கொள்.'' என்றான்.

''என் கனம் எப்படித் தூக்குவீர்கள்? சும்மாவே... உடம்பு... என்று சௌமினி தயங்கினாள்.

தண்ணீருக்குள் பளு வெகுவாகக் குறைந்துவிடும். சிறு வயதில் படித்தது மறந்து விட்டதா?'' என்று அவன் சின்னக் கேலியோடு நினைவூட்டவும், 'சரிதான்' என்று அவன் சொன்னது போலச் செய்தாள்

வயிற்றோடு படிந்து, இடையை லேசாகப் பற்றியபடி அவன் கை அழுந்தியது முதலில் கொஞ்சம் ஒரு மாதிரி இருந்தபோதும், கூடவே தரையில் கால் படாமல் தண்ணீரில் மிதப்பதும், அவன் கூறியது போலக் கையைக் காலை அடிப்பதும் அவளுக்கு உற்சாக மாகவே இருந்தது.

அவ்வப்போது அலை வரும்போது இரு கைகளாலும் அவ ளைப் பற்றிக் கொண்டு மனோரஞ்சனும் அலை நீருக்கு மேலேயே வந்து விடுவான். "எப்படி?" என்று வியந்தவளிடம், "கடல்நீர் அடர்த்தியானது. அதனால் லேசாகக் காலை உந்தினால் தண்ணீ ருக்கு மேலாக இலகுவாக வந்துவிடலாம்." என்று விளக்கினான் "அதிலும் கரைப்பக்கம் மிகவும் எளிது.

துணைக்கு அவன் தோளைப் பற்றியபடி செய்து பார்த்தாள்; நன்றாய்த்தான் இருந்தது.

கையால் அவளது இடையை அணைத்தபடி மனோரஞ்சன் நீந்த, அவனோடு கூடவே நீரில் மிதந்தபடி அவன் இழுத்த வழி செல்வதும், எம்பி அலைகளில் ஏறி இறங்குவதுமாக, அந்த மாகட லையே வென்றுவிட்ட உணர்ச்சி சௌமினியைப் போதை கொள் ளச் செய்தது.

எல்லாம், ஒரு பெரிய அலையை இப்படித் தாண்டியதும், தரையில் கால் ஊன்றி அவள் கலகலவென்று கன்னம் குழியச் சிரிக்கவும், ஒரு கனம் நோக்கிய மனோரஞ்சன், சட்டென அவ ளைத் தழுவி முத்தமிடும்வரைதான்.

சில கணங்களோ, சில நிமிடங்களோ, அவள் அறியாள். ஆனால், மிக அருகில் வந்து விட்ட ஒரு பெரிய அலையைக் கண்டு சட்டென, அவளைத் தழுவிய நிலையிலேயே மனோரஞ் சன் எம்பியபோது சௌமினியைக் கட்டியிருந்த மாயவலை சட் டென அறுந்தது.

மீண்டும் தரையில் கால் பதியவும், "சீ!" என்று மனோரஞ் சனை விலக்கித் தள்ளிக் கொண்டு கரையை நோக்கி விரைந்தாள்

இரண்டு எட்டில் அவளைப் பற்றி நிறுத்தி, "என்ன சீ?" என்றான் அவன் ஆத்திரத்துடன்.

நெருப்புப் பட்டாற்போலக் கையை உதறி விடுவித்துக் கொண்டவள், "என்னவென்று உங்களுக்குத் தெரியாது?" என்று கொதிப்புடன் கேட்டாள். அதற்குள் அடுத்த அலைவரவே, சற்று முன் கற்றுக் கொண்டபடி, சற்றே உந்தி, அலைநீரோடு சேர்ந்து கரைப்பக்கம் சென்றாள்.

அலைநீர் வடிகையில் தண்ணீர் முழங்காலுக்கு இறங்கிவி டவே, இலகுவாகக் கரை ஏறி நின்று, "சூழ்ச்சி பிரமாதம்! மீன் பிடிக்கவும் மிகவும் பொருத்தமான இடமாகத்தான் தேர்ந்தெடுத்து இருக்கிறீர்கள் ஆனால், இன்று மட்டுமல்ல, என்றும் உங்கள் சதி எதுவும் என்னிடம் பலிக்காது என்பதை மட்டும் மறந்து விட்டீர் கள்!" என்று எகத்தாளமாக உரைத்தவள், துப்பட்டாவை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு விரைந்து சென்றாள்

மணலில் கால் புதையப் புதைய, அவள் வேகமாகச் செல் வதை யோசனையோடு பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, மனோ ரஞ்சனும் மெல்லக் கடலை விட்டு வெளியேறினான்.

நல்ல தண்ணீரில் குளித்து உடைமாற்றிக் கொண்டு வர அன்று சௌமினிக்கு அதிக நேரம் தேவைப்பட்டது. உடம்பிலும் கூந்தலி லும் கசகசத்த உப்போடு சில நினைவுகளையும் சேர்த்துக் கழுவி விட முயன்றவளுக்குத் தன்னை மீறிக் கண்ணீர் வந்தது. இதுமட் டும் ஒரு சாதாரணத் திருமணமாக இருந்து, அவர்கள் இருவரும் மனம் ஒத்த கணவன் மனைவியாக இருந்திருந்தால். என்று எண் ணாதிருக்க அவளால் முடியவில்லை.

ஒருவாறு அவள் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு வெளியே வந்தபோது, இருவரின் பொது அறையில், மனோரஞ் சன் அவளுக்காகக் காத்திருந்தான். "உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டும், உட்கார்." என்றான்.

'பெரிய உத்திரவு' என்று உள்ளூரப் புகைந்தவள், "சித்துவுக் குச் சாப்பாடு கொடுக்க வேண்டும்" என்று நில்லாமலே நடந்தாள்.

''அதற்கு இன்னமும் நேரமாகவில்லை. அப்படியே ஆனாலும் அவன் சாப்பாட்டைப் பார்த்துக் கொள்ளும்படி தாயம்மாவிடம் சொல்லிவிட்டேன். அதனால்...

''உங்களோடு உட்கார்ந்து பேச எனக்கு ஒரு விஷயமும் இல்லை'' என்று எடுத்தெறிந்து மொழிந்தாள் சௌமினி.

''எனக்கு இருக்கிறது. சௌமினி, நில்! நான் சொல்லிக் கொண்டே இருக்கிறேன். நீ போய்க் கொண்டே இருந்தால் என்ன அர்த்தம்?''

திரும்பி அவனை வெட்டுவது போலப் பார்த்தாள் அவள். ''என்ன அர்த்தமா? தெரியவில்லை? உங்களைப் பார்க்க, உங்களோடு பேச, உங்களோடு பழக எனக்குப் பிரியமில்லை என்று அர்த்தம். உங்கள் சகவாசம் எனக்கு மிகவும் வெறுப்பாக இருக்கிறது என்று அர்த்தம். இப்போதாவது புரிகிறதா?'' என்று ஏளனமாக உரைத்தாள்.

அவன் அருகில் வந்து நின்ற அவளை நேராகப் பார்த்த மனோரஞ்சனின் கண்களிலும் சினம் இருந்தது. ''திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டே இருந்தால் பொய் மெய்யாகிவிடும் என்று நினைத்தாயா? சற்றுமுன், உன் மூடப்பிடிவாதம் நினைவு வரும்வரை, என் அருகாமை உனக்கு ஒன்றும் கசந்ததாகத் தெரியவில்லையே!'' என்றான் குத்தலாக.

காதுமடல் வரை சூடாகிக் கன்றிச் சிவந்து நின்றாள் சௌமினி. தன்னை மறந்து அவனோடு இழைந்தது ஓர் அவமானம் என்றால் அதை அவன் அறிந்து விட்டது இருமடங்கு இழிவாகப் பட்டது.

அவள் குன்றிக் கூசி வாயடைத்து நிற்கவும், ''இதற்காகத்தான் திருப்பி அடிக்க வேண்டும் என்கிற வேகத்தை அடக்க மாட்டாமல் எதையேனும் சொல்லி உன்னை வருத்தி விடுவேனோ என்று அஞ்சித்தான், இந்தப் பேச்சுகளை எல்லாம் முழு ஆரோக்கியம் பெற்ற பிறகு வைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்தேன். சாரிம்மா'' என்று தணிந்த குரலில் வருந்தினான் மனோரஞ்சன்.

ஆனால், தான் பலவீனப்பட்டு நின்றதைக் குத்திக் காட்டிய அவனை அவள் மன்னிப்பதாக இல்லை. ''அதற்காகவா?... அல்லது, இல்லாத பொல்லாத கற்பனைகளை எல்லாம் உருவாக்க ஆரோக்கியமான உடல்நிலை தேவை என்கிற எண்ணமா?'' என்று திருப்பினாள்.

இளக்கம் மாறி, மனோரஞ்சனின் முகம் மீண்டும் கருத்தது. ''ஏன்? நான் என்னசொல்ல வருகிறேன் என்பதைக் கேட்கக்கூட இவ்வளவு விவாதமா? என்பக்கம் நியாயம் என்று ஆகிவிட்டால் என்ன செய்வது என்று பயமாகயிருக்கிறதா?''

சுட்டெரிப்பவள் போல அவனை முறைத்துவிட்டு, அருகில் இருந்த இருக்கையில் 'சக்'கென அமர்ந்தாள் சௌமினி.

## 16

அவன் சொல்லுவதைக் கேட்பதற்காக, சௌமினி உட்கார்ந்து விட்டபோதும் மனோரஞ்சன் உடனே பேச்சைத் தொடங்கிவிடவில்லை.

கதவு, ஜன்னல் எல்லாவற்றையும் காற்று புகக்கூட இடமில்லாமல் இறுகப் பூட்டிக் கொண்டு இருக்கும் இவளை எப்படி அணுகுவது என்று யோசித்தபடி மனைவியை நோக்கியவனுக்கு அவள் விறைப்புடன் அமர்ந்திருந்த தோற்றம் சிரிப்பூட்டியது.

புன்னகையோடு அவள்புறமாய் ஒரு எட்டு எடுத்து வைத்தவன், உடனே நிதானித்து, இன்னோர் இருக்கையை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தான்.

''நாளெல்லாம் இப்படி உட்கார்ந்து கொண்டிருக்க என்னால் முடியாது. சொல்வதைச் சீக்கிரம் சொல்லுங்கள் '' என்றாள் சௌ

மினி கறார்க் குரலில். "ஒருவேளை, சொல்வதற்கு எதுவும் கிடைக் கமாட்டேன் என்கிறதோ?"

லேசாக முறுவலித்துவிட்டு, "சொல்வதற்கு நிறைய இருக்கி றது. ஆனால் கேட்கும் மனநிலை உனக்கு இருக்க வேண்டுமே. அதுதான்... சௌமினி, இன்றையக் கோபதாபங்களை எல்லாம் விலக்கி வைத்து விட்டு, சமநிலையோடு யோசித்துச் சொல்லு... சௌமி, முன்பு ஒருதரம் திருமணம் அற்ற உறவை ஏற்கமுடியாது என்று விலகிப் போனாய். இப்போது நாம் கணவன் மனைவி. இப்போதும் அந்த உறவை மறுப்பானேன்? உன், 'அப்பாவி மீன் ஏமாந்து 'அம்போ' என்று உயிரை விடுகிற கதை எல்லாம் வேண் டாம். இன்றைக்கு நீ என் மனைவி; உரிமை உள்ளவள். அதனால் அந்தக் கதை எல்லாம் கொஞ்சமும் பொருந்தாது. எனவே... சொல் என் அன்பை ஏற்க இப்போது என்ன தடை?" என்று அமர்ந்த குரலில், தெளிவாக, நிதானமாக மனோரஞ்சன் கேட் டான்.

புரியாத குழந்தையிடம் கேட்பதுபோல. அதைவிட மோச மாய் ஒரு முட்டாளிடம் கேட்பது போல என்ன நிதானம்! அப்படி யானால் நான் என்ன ஒன்றும் புரியாத முட்டாளா என்று உள்ளூரக் கொதித்து, "இடைப்பட்ட காலம்!" என்று பட்டெனப் பதிலளித் தாள் சௌமினி. "அதில் நீங்கள் ஊர் மேய்ந்த விதம்! நான் ஊரை விட்டே ஓடியதால் தப்பித்தேன். மற்றபடி கண்ணில் பட்ட எவளை யாவது - ஒருத்தி! ஒருத்தியையாவது விட்டிருப்பீர்களா?" என்று அருவருப்பும் உதாசீனமுமாக அவள் கேட்ட விதத்தில் அவன் முகம் சிவந்தது.

"நானாக யாரையும் விரட்டிப் பிடிக்கவில்லை. ஆனால், தானாக வருகிறவர்களை விட்டு விலகித்தான் வாழ்ந்தாக வேண் டும் என்கிற கட்டாயம் அப்படி ஓர் அவசியம் இருந்ததாக எனக்குப் படவில்லை. என்றான் சுள்ளென்று.

"உங்களை மட்டும்தான் மறுபாலார் தேடி வருவார்களா? தூணுக்குச் சேலையைக் கட்டிவிட்டாலும் சுற்றிவருகிற இனம் உங்களது

''ஏன், உங்கள் இனத்தில் அதற்கு என்ன குறைவாம்? சொக்குப் பார்வை. அரைகுறை உடை, அலுக்கல் குலுக்கல்... என்று திருப்பினான் மனோரஞ்சன்

''அதெல்லாம் ஒன் என்று தொடங்கியவள் நிறுத்தி, ''இருக்கட்டும். இருபாலாரிலும் அப்படியே நிறையப்பேர் இருப்பதாகவே வைத்துக் கொள்வோம். ஆனால், அதைத் தவிர்த்து நான் வாழவில்லையா? அப்படி வாழும் அவசியமே இருக்கவில்லை என்றால் பிறகு அங்கே அன்பு எப்படி இருக்க முடியும்? உங்கள் வார்த்தையை நம்ப...

அவசரமாகக் குறுக்கிட்டு, ''இல்லை, சௌமி. நான் உன்னைச் சந்திக்குமுன் நடந்ததைச் சொன்னேன். அதன்பிறகு நான் அப்படி வாழ்ந்தது இல்லை.'' என்றான் மனோரஞ்சன்.

ஆனால், ''பொய்!'' என்று கிரீச்சிட்டாள் சௌமினி. எழுந்து நின்று! ''உயிரும் உணர்வுமாய் ஒரு பிள்ளையைப் பெற்று வைத்துக் கொண்டு இப்படிப் பேச உங்களுக்கு நாக்கூசவில்லை?'' என்று கண்களில் கனல் பறக்கக் கேட்டாள்.

மனோரஞ்சனின் முகத்தில் ஒரு திரை படிந்தது. ''இந்த விஷயம். இதுவும் நாம் பேசித்தான் தீரவேண்டும். சற்று உட்கார், சௌமினி'' தணிவாகவே கூறினான்.

அவன் சொல்லுக்கிணங்கி உட்கார சௌமினிக்குப் பிரியமில்லை முன்பு மின்னி மனோரஞ்சனோடான உறவைப் பற்றிச் சொன்னபோது பட்ட வேதனை நினைவு வந்தது. அதைப் பற்றிய இவனது பேச்சும் அதே துன்பத்தைத்தான் தரப் போகிறது. ஏனெனில் அந்த உறவுக்கு அசைக்க முடியாத சான்றாகச் சித்தார்த்தன் இருக்கையில் அதை இல்லையென்று மறுக்க இவனுக்கு வழியில்லை.

ஆனால் வேதனை நிச்சயம் என்று தெரிந்தபோதும் அங்கிருந்து செல்ல முடியாமல் போய்விட, எரிச்சலுடனேயே அரை மனறயாக சோபாவில் அமர்ந்தாள்

மனோரஞ்சன் மெதுவாகத் தொடங்கினான். ''உன் ஒன்று விட்ட சகோதரி - அந்த சௌமினி... வீட்டார் தன்னை மின்னி என்று அழைப்பார்கள் என்று அவள் ஒருதரம் சொல்லியிருக்கி றாள்... அவளைப் பற்றி முன்பே உன்னிடம் சொல்லியிருப்பேன். ஆனால்...

''ஆனால் என்ன? உங்கள் திருவிளையாடல் பற்றித் தெரிந் தால் திருமணத்தை நிறுத்தி விடுவேன் என்று அஞ்சி விட்டீர்களா? கொடுத்த வாக்கு மீறுவது எனக்குப் பழக்கம் இல்லை.'' என்று சிடுசிடுத்தாள் அவள்.

எனக்கும் அப்படித்தான் என்று அவன் இடையிட்டதைக் கவனியாதவள் போல, ''அத்தோடு இது ஒன்றும் நான் அறியாத புதுக்கதை அல்லவே, புதிதாக அதிர்ந்து ஆத்திரப்பட்டு ஏதேனும் செய்து விடுவதற்கு?'' என்று முடித்தாள் சௌமினி.

அவள் பேசி முடித்துவிட்டாள் என்பதை உறுதி செய்து கொண்டவன்போல ஒரு கணம் இடைவெளிவிட்டு அவன் தன் பேச்சை மேலே தொடர்ந்தான். ''முடிந்து போன ஒன்று என்று கருதி, நீயே ஒதுக்கி விட்டிருக்கக் கூடிய ஒன்றைக் கிளறித் தூசு பரப்புவானேன் என்று நினைத்தேன். அத்தோடு சற்றுமுன் சொன் னது போல, உடம்பு பலவீனத்தால் என்னை அடக்கிக் கொள்ள முடியாமல் போய்விடக் கூடும் என்ற பயம். முக்கியமாக நாவை; கொட்டி விட்டால் திரும்பப் பெறமுடியாத பேச்சை. ஆனால் அப்படி ஒத்திப்போட்டதும் தவறுதானோ என்று இப்போது தோன் றுகிறது. அதனால்தான் இன்று இதுபற்றிப் பேசி விடுவது என்று முடிவு செய்தேன்.''

''அவசியமே இல்லை. எனக்குக் கொஞ்சம் புத்தி இருக்கி றது. என்ன நடந்திருக்கும் என்று என்னால் ஊகிக்க முடியும்.''

''ஊகம் தவறாக இருந்தால்?''

''மின்னியின் கடைசி எட்டுமாதகாலம் என்னோடுதான் கழிந்தது தெரியுமா? எவ்வளவு துடிப்பான பெண் அவள்! எல்லா வற்றையும் அழித்து விட்டீர்களே!''

குரல் மாறாமல், ''மின்னி பற்றி என்னைவிட உனக்கு நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். எப்படி இருந்தாலும், என் விளக்கத்தையும் கேட்பதில் உனக்கு என்ன தயக்கம்?'' என்று மனோரஞ்சன் கேட்டான்.

''கைப் புண்ணுக்கு கண்ணாடி எதற்கு?'' என்று நறுக்குத் தெறித்தாற்போலப் பதில் வந்தது.

''புண்ணைப் பார்க்க கண்ணாடி தேவையில்லாமல் இருக்கலாம். ஆனால் புண் ஏன் வந்தது என்று தெரிந்து கொண்டால் புண்ணை ஆற்றவும் வழி கிடைக்கலாம் அல்லவா? ப்ளீஸ், சௌமினி. சந்தேகத்தின் பலனைக் குற்றம் சாட்டப்பட்டவனுக்குக் கொடுக்க வேண்டும் என்பார்கள். என்னைப் புரிந்து கொள்ளக் கொஞ்சம் முயற்சி செய்யக்கூடாதா? நான் ஒன்றும் ஒழுக்கத்தின் மொத்த உரு என்று என்னைச் சொல்லிக் கொள்ளவில்லையே. நீ நினைக்கிறமாதிரி மகாபாதகன் அல்ல என்றுதானே கூற முயற்சிக்கிறேன். அதைக் கேட்கக்கூட மாட்டேன் என்றால் எப்படி?''

அவனது விளக்கத்தைக் காது கொடுத்துக் கேளாதிருப்பதே தப்பு என்பதுபோல மனோரஞ்சன் கொண்டுவந்து விடவும், அதற்குமேல் எதையும் தவிர்க்க முடியாமல் சௌமினி பேசாதிருந்தாள்.

வாய்ப்பை நழுவ விட்டுவிடாமல் அவன் தொடங்கினான்.

''அப்போது நான் தாத்தாவின் வற்புறுத்தலுக்காக தொழிலையும் அவ்வப்போது பார்த்துக் கொண்டிருந்த நேரம் - அதாவது ரேஸ் இல்லாதபோது. தேங்காயெண்ணெய், நார்ப் பொருட்கள் மட்டும் தயாரித்துக் கொண்டு இருந்த நாங்கள், சோப்புத் தயாரிப்பில் இறங்கி, அதுவும் நன்றாகவே வளர்ந்து கொண்டு இருந்த சமயம் அது. சோப்பின் டீவி விளம்பரத் தொடர்பாக நான் பம்பாய் சென்றிருந்தேன்.

''முப்பது வினாடி காட்டப்பட வேண்டிய படத்தின் அமைப்பை முதல்நாள் முடிவு செய்தோம். மறுநாள் விளம்பர ஏஜன்சி தந்த நடிக நடிகையர் பட்டியலில் 'சௌமினி' என்ற பெயர் இருந்தது. அது.... அந்தப் பெயர், அன்றாட வாழ்வில் அடிக்கடி

சந்திக்கும் சாதாரணப் பெயர் அல்ல, சௌமினி. அபூர்வமானது; அழகானது... ப்ளீஸ் முறைக்காதே சௌமி. நான் சொல்வது உண்மை என்று உனக்கே தெரியும்.

''உள்ளூரப் பரபரப்புடன்தான் அன்றையப் படப்பிடிப்புக்குச் சென்றேன். நேரில் பார்த்தபோதும் அவள் உன்ஜாடைதான். நடை, உடை, பாவனைகளில் மட்டும் வேறுபாடு தெரிந்தது. கூந் தலை குட்டையாய் வெட்டி வேறுவிதமாய் வாரியிருந்தாள். நீ தான் வேடமிட்டு என்னை ஏமாற்றுகிறாயோ என்று ரொம்பவும் சந்தேகப்பட்டேன். ...அதுமாதிரி எத்தனை சினிமாப் படங்களில் பார்த்திருக்கிறோம்? இல்லையோ என்றும் ஓர் ஐயம். ஆனால் அவள் என் கண்முன்னேயே நின்றாள். செல்லுமிடமெல்லாம் அவளைக் காண நேர்ந்தது.

''அவை எல்லாம் தற்செயலாக இருக்க முடியாது என்பது நிச்சயம். ஏதோ உன் வேலை தான் என்று வெகுவாகத் தோன்றி யது. அப்போதைக்கு ஓரளவு அடக்கப்பட்டு, நீறுபூத்துக் கொண்டி ருந்த நெருப்பாய் இருந்த உன் நினைவு மீண்டும் தலைதூக்கியது.

''எவ்வளவு அலட்சியமாய் என்னைத் தூக்கி எறிந்து விட் டுப் போனாய்? அப்போது தவித்ததெல்லாம் அன்றைக்கே நடப் பது போல நினைவு வந்தது.

தவிப்பா? அந்த வார்த்தையின் அர்த்தம் தெரியுமா இவ னுக்கு? கண்ணில் பட்ட எத்தனையோ மலர்களில், ஒன்று, கைக் குக் கிட்டாமல் போனதற்காகவே பெரிதாகத் தவித்ததாகச் சொல்கி றானே; பிறவி முழுமைக்கும் ஒரே துணை என்று நினைத்து பொய்த்துப் போனபோது அவள் என்னமாய்த் தவித்திருப்பாள்? கற்பனை செய்து பார்த்தால்கூட அவனால் அதைக் கண்டுகொள்ள முடியாது. பெரிதாகப் பேசுகிறான், தவிப்பு அது இது என்று!

சௌமினி என்னதான் கற்சிலைபோல அமர்ந்திருந்த போதும் அவளது கண்களில் வேறுபாடு கண்டு, ''நான் சொல்வது மெய் சௌமினி. அன்றைய வேதனை எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லைதான். என்றாலும் நான் வேதனைப்பட்டது உன்

மையே. ஒரு பெண்ணால் நான் இப்படிப் பாதிக்கப்படுவதா என்று ஆத்திரமும் உண்டுதான். இதற்கு ஒரு வடிகாலாகத்தான் நான் கார்ரேசில் கலந்து கொள்ளத் தொடங்கினேன். வேகம் வேகம் என்று ஓட்டும் போது, என்னால் முடியாதது எதுவும் இல்லை என்கிற உணர்வு தோன்றும். அதற்காகவேதான் தாத்தாவுக்குச் சற்றும் பிடிக்காதபோதும், பிடிவாதமாகக் கார் ரேஸ்களில் பங்கெடுத்தேன்'' என்று விளக்கினான்.

'முடியாதது எதுவும் இல்லையா?' என்று உள்ளூரக் கறுவியபடி, ''உங்கள் சுயபுராணம் கேட்க நான் இங்கே உட்கார்ந்திருக்கவில்லை,'' என்றாள் அவள் சலித்த குரலில்.

பழைய நினைவில் ஈடுபட்டிருந்தவன் பேச்சை நிறுத்தி அவள் முகத்தை உற்று நோக்கினான். தலையசைத்துவிட்டு, ''அந்தச் சௌமினியை - அவளை மின்னி என்றே குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன்.

''முதல்தடவை அருகில் வந்து பேசியதும் அது நீயல்ல என்பது தெளிவாகிவிட்டது. ஆனால் அவள் ஏன் அடிக்கடி என் வழியில் வந்து நின்றாள்? உனக்கு உறவோ? சகோதரியோ? அவளை வைத்து ஏதோ நாடகமாடுகிறாயோ?... இப்படி ஆயிரம் கேள்விகள்.

''அவளது சந்திப்புகள் திட்டமிடப்பட்டு நடந்தவை என்பது மனதில் உறுதியான பிறகு, அதன் அடிப்படைத் திட்டம் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்று தோன்றியது. அதில் உன் பங்குபற்றித் தெரிந்தே ஆகவேண்டும் போல ஒரு தீவிரம். அதிலும், உன் சாயலில் இருக்கும் அவள் மூலம் நீயே உன்னைப் பற்றிய நினைவைத் தூண்டிவிட முயற்சிக்கிறாயா என்ற ஐயம் தோன்றியபிறகு அதற்குமேல் எனக்கு... நான் என்னை அடக்கிக் கொள்ள முடியவில்லை.''

ஆக, உன்னை எண்ணித்தான் மின்னியோடு பழகினேன் என்கிறானாக்கும்!

நம்பாத பார்வையுடன், ''அப்படி என்நினைவைத் தூண்ட நான் விரும்பியிருந்தால் நானே அங்கங்கே தரிசனம் தந்திருக்க

மாட்டேனா? இப்படி காதைச் சுற்றி மூக்கைத் தொடத் தேவை என்ன இருக்கிறது?'' என்றாள் சௌமினி ஏளனமாக.

''உன் கர்வம்? தூக்கி எறிந்துவிட்டுப் போனவளுக்கு அவ்வ ளவு எளிதில் தழைந்துபோக மனம் வருமா?''

''அது கர்வம் அல்ல. சுய க்வுரவம். தன்மானம். அது உயி ரோடு இணைந்தது; ஒருநாளும் போகாது.''

ஒரு சிறு அமைதியின் பின் லேசாகத் தோளைக் குலுக்கி விட்டு, அவன் மீண்டும் தொடங்கினான். ''என்னவோ, அப் போது எனக்கு அப்படித்தான் தோன்றியது. அவளுடைய திட்டம் என்னவாக இருந்தபோதும் எனக்குப் பெரிதாக என்ன நட்டப் பட்டு விடப்போகிறது என்ற எண்ணம் வேறு... அவளோடு பழ கிப்பார்த்தேன். அவளிடம் விவரம் அறிய முயன்றபோது, உற் றார், உறவென்று யாருமே கிடையாது என்றாள். தான் ஓர் அனாதை, தன்னந்தனியே கிடந்து, தானாக உழைத்து முன்னுக்கு வந்ததாகக் கதை சொன்னாள்...''

''ஒரேயடியாகக் கதை என்று சொல்ல முடியாது. எங்கள் இருவருக்கும் பெற்றோர் கிடையாது. பாட்டியை என்போல அவள் பெரும் துணையாகப் பாவித்தது இல்லை. பாட்டிக்கு இன் றைய உலகம் பற்றிப் புரியாது என்பது அவளது கருத்து. அவள் துணிச்சல்காரியும் கூட. என்னைப் போல மின்னி எதற்கும் பாட்டி யிடம் போய் நின்றது இல்லை.'' என்றாள் சௌமினி உணர்ச்சி யற்ற குரலில். கடைசியாகப் பாட்டியிடம் சென்று விழுந்ததும், பாட்டி அவளைத் தேற்றி நிமிர வைத்ததும் நினைவு வந்தது.

நிமிர்ந்து அமர்ந்து, ''மற்றபடி, 'மாடலிங்'கில் கால் ஊன்றி யது அவளது சொந்த முயற்சிதான்.'' என்றாள் அதே குரலில் தொடர்ந்து.

மீண்டும் தோளைக் குலுக்கியவன் உடனே தொடங்கிவிடா மல் சற்று நேரம் பேசாதிருந்தான்.

அடுத்து, கதை கட்டுவது எப்படி என்று யோசிக்கிறானாக்கும் என்று சௌமினி ஏளனமாக எண்ணமிடும்போதே, மனோரஞ்சன்

மீண்டும் தொடங்கினான். ''இதை... என் நிலையிலிருந்து நினைத்துப் பார்த்தால் தான் புரியும், சௌமினி. அதனால் இனி உன் சொந்த உணர்வுகளை ஒதுக்கி விட்டுக் கேட்க முயற்சி செய்ய வேண்டும்.'' என்ற பீடிகையுடன் மேலே சொன்னான். ''மின்னியிடமிருந்து உன்னைப்பற்றி எதுவும் அறிய முடியவில்லை. அவளது செயலுக்குப் பின்புலமாக உன்னுடைய திட்டங்கள் எதுவும் இருந்ததாகவும் தெரியவில்லை. ஆனால்... ஆனால், உன் சாயலில் ஒரோர் அங்க அசைவுகளில் உன் போலவே இருந்த அவளோடு பழகுவது மனதுக்கு நன்றாக இருந்தது... அவளை உன் போலவே உடை அணியச் சொன்னேன்... சுரிதார், கோட்டா சாரி... ஜடை, பூ இப்படியெல்லாம் அவளும் நான் சொன்னதெல்லாம் செய்தாள்.. சொன்னதற்கு மேலாகக் கூடச் செய்தாள். பேச்சு, பாவனைகள் எல்... லாம். நான் விருப்பியபடியெல்லாம் நடந்து கொண்டாள்...

எல்லாம் உன் அலங்காரம்தான், சௌமி. அசப்பில் நீ என்று கூடச் சொல்லி விடலாம். உன்னை மனதில் வைத்து, பேச்சு, அங்க அசைவு, சிரிப்பு எல்லாம் அதேபோலச் செய்வேனா, மனோ அப்படியே அசந்து விட்டான்...' என்றாளே.

அதுமட்டுமா சொன்னாள்! மின்னி சொன்னது எல்லாம் ஒவ்வொன்றாக நினைவு வர, சௌமினிக்கு உள்ளே கசங்கியது.

எங்கோ கனவில் போல் மனோரஞ்சனின் குரல் தொடர்ந்து ஒலித்தது. அவனும் சற்றுத் தயக்கத்துடன் தான் பேசினான்.

அவன் சொல்ல முனைவது என்னவென்று எளிதாகவே ஊகித்துவிட்ட சௌமினிக்கு, நெருப்பிட்டாற்போல உடம்பு காந்தியது. அவளவள் வளைந்து கொடுத்தாள் என்றால் இவன் எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்வதா? இவனுக்கென்று நெறிமுறைகள் ஒன்றும் கிடையாதா? இதை அவன் நிலையிலிருந்து பார்த்துப் புரிந்து கொள்ள வேண்டுமா? நல்லது. அப்படியே செய்யலாம்!

தலையை ஒருபுறமாய் லேசாகச் சரித்து, கூரிய கத்திப் பார்வையுடன் கேட்டாள். "மற்ற ஐந்து சக்களத்திகளை எப்போது அழைத்து வரப் போகிறீர்கள்?" என்று நிதானமாக விசாரித்தாள்.

திகைப்புற்று, "சௌமினி...?" என்று புரியாமல், அதே சமயம் ஒரு தாக்குதலை எதிர்நோக்கும் கவனத்துடன் மனோரஞ்சன் வினவினான்.

## 17

மனோரஞ்சனின் கேள்வி சௌமினிக்கு உள்ளூர எக்காளத்தையே தந்தது. "புரியவில்லையா?!" என்று வியந்துவிட்டு, பிறகே விளக்கினாள். "உலகத்தில் ஒரேசமயத்தில் ஏழுபேர் ஒரே மாதிரி இருப்பார்களாம். ஒன்று நான். அடுத்து மின்னி ஆயிற்று. என் சாயலில் இருந்ததால்தானே மின்னியோடு... ம்ம்.. மின்னியோடு உறவு கொண்டதாகச் சொன்னீர்கள்? மிச்ச ஐந்து பேரை மட்டும் உங்களால் எப்படி விட்டுவைக்க முடியும்?"

மனோரஞ்சன் கையை விரித்தான். "இது வெறும் குதர்க்கம், சௌமினி."

"எது குதர்க்கம்? ஒரு சாயலில் ஏழு பேர் என்பதா? அது மெய் என்று படித்திருக்கிறேன். அடுத்தது... ஓ! என் சாயலைப் பார்த்து மயங்கிவிடுவதா? எப்போது என் தோற்றத்துக்காக ஒருத்தியிடம் பிள்ளை பெற்றீர்களோ, மற்றவர்களை மட்டும் விட்டு விடுவீர்கள் என்று என்ன நிச்சயம்?" அழுத்தம் திருத்தமாக அவள் கேட்டாள்.

பேசமாட்டாமல் தலையசைத்தான் அவன். "உனக்கு விளக்கம் தர அந்தக் கடவுள்தான் வரவேண்டும்!"

''உங்களால் முடியவில்லை. அதுதானே? உலகத்தில் தப்பு செய்கிறவர்களுக்கு எல்லாம் விளக்கம் கொடுக்கக் கடவுள் சென்று கொண்டிருந்தால் அப்புறம் அவர் அவ்வளவுதான். ம்......அப்புறம் ஒரு சின்ன எச்சரிக்கை. என்னதான் ஒரேஜாடை அது இது என்று சாக்குச் சொன்னாலும் சட்டம் ஒத்துக் கொள்ளது. ஏழு ஆண்டு கடுங்காவல் தண்டனை நிச்சயமாகத் தந்து விடும். அடுத்த ஐந்தைத் தேடுமுன், இதைக் கொஞ்சம் நினைவுபடுத்திக் கொள்வது உங்களுக்கு நல்லது. அல்லது... ஜெயில் களி பரவாயில்லை என்றால் உங்கள் விருப்பம். ம்ம்... இப்போது விஷயம் அவ்வளவு தானே? உங்கள் விளக்கம் எல்... லாம் முடிந்து விட்டதல்லவா?'' என்று எழுந்தாள் சௌமினி.

''சௌமினி யோசி, சௌமினி என்ற பெயரோடு கூடவே மின்னியின் தோற்றத்தில் உன்னைக் கண்ட பிறகும் நான் முதலில் அவளை நாடிச்செல்லவில்லை. அவளாக என்னைத் தேடி வந்த பிறகுதான்....''

அலட்சியமாகத் தலையைச் சிலுப்பினாள் அவள்.

''அப்படியென்றால், உங்களைப் போல ஒருவர் என்னை நெருங்கி வந்து, நானும் அவரிடம் பல்லை இளித்து வைத்திருந்தால் 'சரி' என்று ஒத்துக் கொண்டு விடுவீர்களா?.... முடியாது தானே? என்னால் மட்டும் எப்படி மனம் ஒப்ப முடியும்? ஆண்கள் என்றால் விருப்பம் போலக் கூத்தடிக்கலாம்; பெண்கள் மட்டும் 'ஒன்றே மதி' என்று வாழவேண்டுமா? நல்ல நியாயம்! பாரதியார் என்ன சொல்... உங்களுக்குத்தான் பாரதியார் கவிதைகள் அத்துபடி ஆயிற்றே! 'புது வைரம் நீ எனக்கு'ப் பாடியவர்தானே. அவரது மற்ற கவிதைகள் ஏதேனும் ஞாபகம் இருக்கிறதா? 'கற்பு நிலை என்று சொல்ல வந்தால் இரு கட்சிக்கும் அஃதைப் பொதுவில் வைப்போம்' என்றுகூடப் பாடியிருக்கிறார், தெரியுமா?'' என்று படபடவென்று பொரிந்து கொட்டினாள்.

மனோரஞ்சன், தணிவாகவே, ''நான் செய்தது பிழையில்லை என்று நான் ஒருபோதும் வாதாடவில்லை, சௌமினி. அதைப் பொறுத்துக் கொள் என்றுதான் கேட்கிறேன்.'' என்றான்.

பொறுத்துக் கொள்வதா? என்ன சாதுரியம்? ''ஒன்று செய் யுங்கள். என் தலையை வெட்டித் துண்டித்து விடுங்கள்...''

''சௌமீ!''

''அப்புறம் இதேமாதிரிச் சொல்லுங்கள். தலையும் உடம்பும் ஒன்றாகி உயிர் வருகிறதா என்று பார்க்கலாம்.'' என்றாள் சௌ மினி ஏளனமாக.

''அதா...வது நான் கொலைகாரன் என்கிறாய்.''

''பரவாயில்லையே! கண்டுபிடித்து விட்டீர்களே!''

''யாரை?''

''இதைக் கேட்கவேறு வேண்டுமா?''

''நீ மின்னியைப் பற்றிக் குறிப்பிடுவதாக இருந்தால்... சௌ மினி. ஒரு மரணத்தை அலட்சியப்படுத்தி இறந்தவளைச் சிறுமைப் படுத்த எனக்கு விருப்பம் இல்லைதான். ஆனாலும், நான் ஒன்றும் உத்தமியாய் ஒதுங்கி நின்றவளைக் கையைப் பிடித்து இழுத்துக் கற்பழித்து அதன் காரணமாய் அவள் இறந்துவிட வில்லை என் பதை மனதில் வைத்துக் கொண்டு பேசு. இப்படி நீ முறைத்துப் பார்ப்பதால் அவள் நல்லவள் ஆகிவிட மாட்டாள், சௌமினி.''

மனோரஞ்சனை 'வேறு மாதிரி வளைத்துப் பிடித்த கதை பற்றி மின்னியின் வாய்மொழியாகவே அறிந்திருந்ததால் சௌமி னியால் அவன் பேச்சை மறுக்க இயலவில்லை. ஆனால், அவ ளைப் பற்றிமட்டமாகப் பேச இவன் என்ன மகா உத்தமன்?

எப்படியாவது மனோரஞ்சனை மட்டம் தட்டவேண்டும் என்று ''மின்னி நல்லவளா கெட்டவளா என்பதுதான் இன்றைய முக்கிய பிரச்சினை என்பது இதுவரை எனக்குத் தெரியாமல் போயிற்றே!'' என்று பரிகாசிப்பது போலக் குத்தினாள்.

''இல்லைதான்.'' என்றான் அவன் அமைதியாகவே, ''ஆ னால் மின்னியின் மரணம் அவளாக இழுத்துக் கொண்ட விதி.

அதற்கு நீ முழுக்க முழுக்க என்னைப் பொறுப்பாளியாக்க முடியாது என்கிறேன். அவ்வளவுதான்.''

என்ன இலகுவாக நழுவிக் கொள்ளப் பார்க்கிறான்? ''அதெப்படி?'' என்றாள் அவள் ஆத்திரத்துடன். ''நீங்கள் பிள்ளையை மறுத்தீர்களே, அதனால் தானே அவள் மனம் உடைந்து... என்றவளை இடைமறித்து, 'இல்லை' என்றான் மனோரஞ்சன்.

''என்ன இல்லை? பொய் சொல்ல வேண்டாம். உங்கள் கடிதத்தை நானே படித்தேன்.'' என்றாள் அவள் வெறுப்புடன்.

''அந்தச் சமயத்தில் நான் அவளை நம்பவில்லை சௌமினி. மின்னி எழுதியது முழுப் பொய் என்பதில் நிச்சயமாய் இருந்ததால் பிள்ளையை மறுப்பதான பேச்சை இல்லை என்றேன்... அந்த நேரத்திலும் பிள்ளை கூடாது என்பதில் நான் உறுதியாகவே இருந்தேன். அப்படி ஏதும் நடவாது என்று மின்னியும் உறுதி தந்திருந்தாள்... சௌமி, உனக்குப் புரிகிறதில்லையா?''

'புரியாமல் என்ன?' வேறுவிதமாய் வளைத்த கதை இப்போது வேறு விதமாய் தொனிக்க சௌமினி மிகவும் அருவருப்பாக உணர்ந்தாள். அத்தோடு, பிள்ளை கூடாது என்று கூறியதால் மட்டும் அவன் செய்தது தப்பு இல்லை என்று ஆகிவிடுமா? அவன் மின்னியோடு உறவு கொண்டதுதான் மாறிவிடுமா?

முயன்று மறந்திருந்த அவலங்கள் எல்லாம் தவிர்க்கமுடியாமல் மீண்டும் நினைவுவர அவளுக்குக் குமட்டியது. இந்த மாதிரித் துன்பங்கள் எல்லாம் இன்னும் அவள் பட்டுத்தான் ஆகவேண்டுமா? குரோதத்துடன் அவனை நோக்கி, ''நீங்கள் கொன்றது மின்னியை மட்டுமல்ல.'' என்று சீற்றத்துடன் மொழிந்தாள்.

''மின்னியை நான் அழிக்கவில்லை, ஆனால், நீ குறிப்பிடுகிற இன்னொன்று என்னிடம் உனக்குள்ள அன்பு என்றால், நீயே உன் பேச்சிலிருந்து முரண்படுகிறாய்'' என்றான் மனோரஞ்சன்.

இவனை இன்னும் நேசிப்பதாக எப்போது சொன்னேன் என்று யோசித்து விட்டு ''பொய்!'' என்றாள் சௌமினி.

''இல்லை மெய். சற்றுமுன் என்ன சொன்னாய்? அன்பு இருந் தால் அடுத்த இனத்தைத் தவிர்த்து வாழ முடியும் என்று கூறி, அதற்கு உன்னைத்தான் உதாரணம் காட்டினாய்? அப்படியிருக்க, அந்தக் காதலை நான் கொன்று விட்டதாகச் சொன்னால் எப்படி ஒத்துக் கொள்வது?''

ஒருகணம் திகைத்துப் போனாள் சௌமினி. அவனை மடக்கு வதற்காக அவள் சொன்னதை வைத்து அவளையே மடக்குகி றானே.

உன்னிடம் என் நேசத்தை ஒத்துக் கொண்டு உன் காலடியில் மிதிபட எனக்கு ஒன்றும் பைத்தியம் பிடித்திருக்கவில்லை என்று எண்ணியபடி, ''நீங்கள் முதலில் சொன்னது போலவே நானும் உங்களைப் பிரிவதற்கு முன்பு நான் இருந்த நிலையைப் பற்றித் தான் அப்படிச்சொன்னேன்'' என்று ஒருவாறு சமாளித்தவள், ''அந்த அன்பைக் கொன்று, அதற்கு ஒரு பெரிய சமாதி கட்டிவிட் டுத் தானே நீங்கள் தூண்டில் போடத் தொடங்கினீர்கள்.'' என்று கிடைத்த வாய்ப்பை வீணாக்காமல் ஒரு குத்தும் குத்தினாள்.

''நீ சொல்வது உண்மை என்றால், அதன்பிறகு இந்த ஐந்து ஆண்டுகாலம் நீ தனித்திருப்பானேன்?'' என்று நம்பாத குரலில் திருப்பிக் கேட்டான் அவன்.

அதற்குள் நன்றாகவே சுதாரித்துக் கொண்ட சௌமினி, அவனை ஏளனமாக நோக்கி, ''தெனாலிராமன் பூனை வளர்த்த கதை படித்திருக்கிறீர்களா? அந்தப் பூனை, பாலைக் கண்டால் பயந்து தூர ஓடிப்போய் விடுமாம். கொதிக்கும் பாலில் ஒருதரம் வாய் வைத்த பாவம்! அந்தப் பூனையை விட நான் மோசமா? எனக்கும் ஒரே ஒரு சூடு போதும் என்று உங்கள் இனத்தையே ஒட்டு மொத்தமாய் ஒதுக்கி வைத்துவிட்டேன். அவ்வளவேதான் விஷயம். இதற்குப் போய் இப்படி ஒரு விளக்கமா? அய்யோ!

நல்ல வேடிக்கையடா அப்பா!'' என்று கூறிக் கலககலவென்று சிரித்தாள்.

அவள் விழுந்து விழுந்து சிரிப்பதை வெறித்து நோக்கியபடி மனோரஞ்சன் அசையாமல் வீற்றிருந்தான்.

ஆனால் இந்தப் பேச்சை அவன் அத்தோடு விட்டு விட வில்லை. மறுபடியும் மறுபடியும், வாய்ப்புக் கிடைத்தபோதெல் லாம், பன்னிப்பன்னி அதையே பேசினான்.

மனோரஞ்சன் ஒரேயடியாக மின்னிமேல் குற்றம் சாட்டியி ருந்தால் அப்படி நெளிந்தாள், இப்படி இளித்தாள், பாட்டில் பாட்டிலாக ஊற்றிக் கொடுத்தாள், எல்லாம் சேர்ந்து தந்த போதை யில் நேர்ந்த பிழை என்று அவன் கதைகட்டியிருந்தால் சை என்று தலையைத் திருப்பிக் கொண்டு செல்லச் சௌமினிக்கு எளிதாக இருந்திருக்கும். அனால், அவனோ, நடந்த அனைத்திற்கும் அடிப் படை அவள் மீது அவனுக்கு இருந்த அன்புதான் காரணம் என் றான்.

அவள் அதை நம்ப மறுத்தபோது, ''கிட்டத்தட்ட உயிர் போகிற நிலையில் கூட உன்குரல் கேட்டதும், உன்னைப் பார்த்த தும் பிழைத்து விடவில்லையா?'' என்று சான்று காட்டினான் அவன்.

''நீங்கள் பிழைத்தது வைத்தியர்களின் சாதனை. மற்றபடி உங்களுக்கு என்னை அடையாளம் தெரிந்திருந்தால் ஒருதரமே னும் என்னைப் பெயர் சொல்லி அழைத்திருக்க மாட்டீர்களா?'' என்றாள் அவள்.

வெகு நாட்களாக அவள் மனதில் இருந்ததை அன்று வெளிப் படையாகச் சொன்னாள்.

ஆனால் அவனிடம் அதற்கு ஒரு பதில் இருந்தது. ''அரை குறை நினைவாக இருந்த அந்த நேரத்தில், அது கனவோ, கூப்பிட் டால் மறைந்து விடுவாயோ என்று பயமாக இருந்தது. பிறகு

எனக்கு நல்ல குணமாகிவிட்டது என்று எண்ணி நீ கிளம்பிவிடக் கூடாதே என்ற அச்சம். பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தாலே போதும்போல இருந்தது, சௌமி.''

மருத்துவமனையில் மனோரஞ்சனின் பார்வைகள் நினைவு வந்தன. இவன் சொல்வது உண்மையாக இருந்தால் பாவம் தான். ஆனால்...

அந்தப் பார்வைகளின் காரணம் என்று தான் நினைத்ததையும் சௌமினி பிடிவாதமாக ஞாபகத்துக்குக் கொணர்ந்தாள்.

இதில் எது மெய் என்ற குழப்பத்துக்கு யோசித்து ஒரு விடை கண்டாள்.

தேளின் இயல்பு கொட்டுவது; கெட்டவர்களின் இயல்பு தப்பு செய்வது. மனோரஞ்சன் நல்லவன் அல்ல என்பது அவள் ஐயம் திரிபற அறிந்த விஷயம். எனவே அவனது விஷயத்தில் சௌமினி யின் ஊகம்தான் சரியானதாக இருக்க வேண்டும். அவனது வாய் சாலகத்தினால் இப்படி ஒரு விளக்கம் கொடுத்து அவளை ஏமாற்ற முயற்சிக்கிறான்!

உதட்டைப் பிதுக்கித் தோளைக் குலுக்கித் தன் அபிப்பிரா யத்தை வெளிப்படுத்தி விட்டுத் திரும்பிப் போனாள் சௌமினி.

ஆனால், மீண்டும் மீண்டும் மனோரஞ்சன் நேசம், காதல் பற்றிப் பேசவும் எரிச்சலுற்று, ''அன்று பிள்ளைக்காகத் தான் திரும ணம் என்றீர்கள், இன்று காதல், நேசம் என்று கதை கட்டு வானேன்?'' என்று வெடுவெடுத்தாள்.

''இல்லை, சௌமினி...

''என்ன இல்லை? 'பிள்ளை வேண்டும்' என்று என்னிடம் சொன்னீர்களே.''

''அது உனக்காக - உன்னைச் சம்மதிக்க வைப்பதற்கென்று சொன்ன...

''பொய்யா? இருக்க முடியாது. அவனிடம் நீங்கள் காட்டும் பாசம் வெறும் நடிப்பு என்றால் நம்ப முடியாது.''

''அப்படி நம்பத் தேவையும் இல்லை. சித்துவிடம் எனக்கு அன்பு நிறையவே இருக்கிறது. சொல்லப் போனால் சில தகப்பன் களை விட மிகவும் அதிகமாகவே இருக்கிறது. ஆனால் அவனை அடைவதற்காக நான் உன்னைத் திருமணம் செய்யத் தேவை யில்லை. சித்துவின் தந்தை நான் என்பதற்கு எத்தனையோ சான்று கள் - மின்னியின் கடிதம், ஜனனமரணப் பதிவில் தந்தையாக என் பெயர், தேவைப்பட்டால் ரத்தப் பரிசோதனை... ...இன்னும் என்று சொல்லிக் கொண்டே போனவன், சற்றுத் தயங்கிவிட்டு, ''இதெல்லாம் போதும். எனவே மகனைப் பெற மணம் புரிந்தாக வேண்டிய கட்டாயம் எனக்கு இல்லை. உன் மனதை மாற்ற அவனை ஒரு நெம்புகோலாகப் பயன்படுத்தினேன். அவ்வளவு தான். அது சரியான பலனும் தந்தது. எனவே, சரியாகச் சொல்வது என்றால் நீ என்மேல் சாட்டிய குற்றத்தைச் செய்தது நீதான். பிள் ளைக்காகத் திருமணம் செய்தவள் நீதானே தவிர நானல்ல.'' என்று தட்டைத் திருப்பினான்.

அவனை மறுக்கும் வேகத்தில், தன்னை மறந்து, ''நானும்... என்று வேகமாகத் தொடங்கியவள், சட்டெனத் திகைத்து மவுனமா னாள்.

ஆனால் அவன் பரபரப்புற்று, ''நீயும்... நீயும் என்ன சொல்லு, சொல்லு சௌமினி.'' என்று ஆர்வத்துடன் கேட்கவும், அவசரமாகத் திரும்பிச் செல்ல முயன்றாள்.

அவளது கையைப் பற்றி, நிறுத்தி, ''சொல்லு சௌமினி நீயும், என்னைப் போலவே, பிள்ளைக்காக மட்டும் என்று மணக்க வில்லை என்றுதானே சொல்ல வந்தாய்? அப்படி இல்லை என்று சொன்னால் ஒப்புக் கொள்ள முடியாது. நிஜத்தைச் சொல்லு. சொல்லாமல் நான் உன்னை விடமாட்டேன்'' என்று வற்புறுத்தி னான் அவன்.

கையை உதறிக் கொண்டு நிமிர்ந்தாள் சௌமினி. ''ஆம் சித்துவுக்காக மட்டும் என்று உங்களை நான் மணக்கவில்லைதான். தேறி வந்த உங்கள் உடம்பு என் மறுப்பால் ஏதேனும் ஆகிவிடுமோ என்று அஞ்சி, உங்கள் தாத்தா கெஞ்சிய கெஞ்சலுக்காகவும் தான் என்...னமாய் மன்றாடினார் தெரியுமா? என் பேச்சில் நம்பிக்கை இல்லாவிட்டால் அவரையே கேட்டுப் பாருங்களேன்.'' என்றாள் எகத்தாளமாக.

''சௌமினி...'' என்று குரல் சோர்ந்தான் அவன்.

அந்த ஒரு வினாடிச் சறுக்கலை நேராக்கி விடும் வேகத்தில் அவள் மேலும் பேசினாள். ''மற்றபடி, உங்களிடம் எனக்குள்ள காதலுக்காக என்று எண்ணினீர்களோ! அன்று நீங்கள் கடலில் மீன் பிடிக்கப் போனபோது அந்தக் காதல் அதே கடலில் மிச்சம் மீதியின்றிக் கரைந்து போயிற்றே!'' என்றாள் கடுங் குரலில்.

அவன் செய்வதறியாது நிற்பதைக் கண்டு எள்ளி நகைத்து, ''ஏன்தான் இந்த நிபந்தனைகளை ஏற்றோமோ என்று இருக்கிறதோ? இப்போதைக்குத் தாலியைக் கட்டிவிட்டால், பிறகு இரண்டு தளுக்குப் பேச்சில் இவளை விழத் தட்டிவிடலாம் என்று கணக்குப் போட்டிருப்பீர்கள். பாவம்! தப்புக் கணக்கு!'' என்று மேலும் கடுமையாகவே பேசினாள்.

அவ்வளவு கடுமையாக அவள் பேசிய பிறகும் மனோரஞ்சன் அவனது முயற்சிகளை நிறுத்தி விடவில்லை.''மின்னியின் கடிதத்தை வைத்து தான் உன்னைக் கண்டுபிடித்தார்கள். தெரியுமில்லையா? அந்தக் கடிதம் சொன்ன சேதியை நம்பா விட்டாலும் கூட, அதை ஏன் பத்திரமாகப் பாதுகாத்தேன் தெரியுமா? அதில், அவள் 'உங்கள் சௌமினி' என்று கையெழுத்திட்டிருந்தாள். என்னவோ, நீயே எழுதினாற் போல ஒரு பிரமை... என்று ஒருநாள் தொடங்கினான்.

''போச்சுடா!'' என்றாள் சௌமினி கிண்டலாக.

மனோரஞ்சன் யோசனையாய் நோக்கவும், ''இனி எந்த சௌமினியாவது எங்கேயாவது இருந்து கொண்டு ஒரு கடிதம்

எழுதினால் போதும், அவள் பின்னே ஓடி விடுவேன் என்கிறீர்க ளாக்கும்?'' என்றாள் அவள் ஏளனமாக.

''நீ விதண்டாவாதம் செய்கிறாய் என்பது உனக்கே தெரியும்.'' என்றான் அவன் பொறுமையிழந்து.

''எனக்கு உங்கள் பேச்சுதான் விதண்டாவாதமாகத் தோன்று கிறது. யாரோ ஒருத்தி எழுதியதை - அது நான் அல்ல என்பது உங்களுக்கு நன்றாகத் தெரிந்தும், பெட்டிக்குள் பூட்டி வைத்திருக் கிறீர்கள். என் பெயரில் கையெழுத்து இருந்ததால் என்று விசித்திர விநோதமாய் ஒரு விளக்கம் கொடுத்தால் நம்புவதற்கு நான் என்ன முட்டாளா?''

அவளையே நோக்கி, ''உண்மையை நம்ப மறுப்பதுதான் முட்டாள்தனம், சௌமினி. நீயேதான் சொல்லேன், வேறு எதற் காக நான் அந்தக் கடிதத்தைப் பெட்டிக்குள் வைத்திருக்க வேண் டும்?'' என்று அவளிடமே கேட்டான் மனோரஞ்சன்.

தோளைக் குலுக்கி, ''எனக்கெப்படித் தெரியும்? ஏன், கிழித் தெறிய மறந்து தற்செயலாகக் கூடப் பெட்டியில் விட்டுப் போயி ருக்கலாம்.'' என்று விட்டேற்றியாகப் பதலளித்தாள் அவள்.

''அந்த மாதிரித் தற்செயல் சாமான்கள் எதுவும் அந்தப் பெட் டியில் இராது.'' என்றான் அவன் இறுகிய குரலில்.

''ஒருவேளை மின்னிக்காகவே வைத்திருக்கலாம்.''

''மின்னிக்காகவா? பின்னே உன்னை மணப்பானேன்?''

என்னவோ கதை கேட்கிற மாதிரி அவன் குரல் எரிச்சலூட்ட, ''மின்னி இல்லாததால் இவளாவது இருக்கட்டும் என்று.'' என்று அவன் போலவே சௌமினி பதிலளித்தாள்.

''மின்னி இல்லாததால் நீயா! வேடிக்கைதான். அப்படி மின் னிக்குப் பதிலாக உன்னிடம் வந்து நிற்க, உங்கள் இருவர் தவிர இந்த உலகத்தில் பெண்களுக்குப் பஞ்சமாகி விட்டதாமா?''

ஒரே சாயலில் என்றால் கூட, இன்னும் ஐந்து பேர் இல்லையா என்று அவளது பேச்சைக் கொண்டே மடக்குவானே!

செளமினி பேசாதிருக்கவும், தணிந்து ''யோசி, செளமி. ஏதோ இன்னொரு பெண்தான் தேவை என்றால், என்னிடம் தீயாய்க் காயும் உன்னைத்தானா நான் நாடி வருவேன்?' என்று கேட்டான் மனோரஞ்சன்.

''என்னிடம் தானே சித்தார்த்தன் இருக்கிறான்!''

ஒரு மூச்சுவிட்டு, ''மகன் விஷயம் முன்பே பேசினோம்.'' என்றான் அவன் எச்சரிப்பது போல.

''தந்தை நீங்கள் என்று நிரூபிப்பது பற்றித்தானே?'' என்று அலட்சியமாகத் தலையைச் சிலுப்பினாள் செளமினி. ''அதை நான் ஒன்றும் மறுக்கவில்லையே. ஆனால் தந்தையா தாயா என்று வரும்போது சட்டம் என்பக்கம் இருக்கும் என்பதால் திருமணம் என்று குறுக்கு வழிதேடினீர்கள்!''

விழியிடுங்க ஒருதரம் நோக்கிவிட்டு ஆழ்ந்த குரலில் அவன் சொன்னான். ''ஒரு சின்ன வைத்தியப் பரிசோதனை, செளமி. அதுபோதும் நீ கன்னி என்று நிரூபிக்க. அப்புறம் எந்தச் சட்டம் உனக்கு உதவும்?''

சித்தார்த்தனை அவள் வயிற்றில் சுமந்து பெறவில்லை என்பதை அடியோடு மறந்து, அவனைத் தன் மகனாகவே எண்ணி வாழ்ந்த செளமினி திக்பிரமித்துப் போனாள்.

அவளை உணர்ந்தாற் போலக் கனிவுடன், ''உன்க்குத் துன்பமாக இருக்கும் என்றே இந்தப் பேச்சை நான் தவிர்த்து வந்தேன். வேறு யாரிடமும், தாத்தாவிடம் கூட இது பற்றி மூச்சுவிடவில்லை. இந்த ரகசியம் எப்போதும் நமக்குள்ளேதான் இருக்கப் போகிறது.'' என்றான் மென் குரலில்.

அவனது குரலோ, பார்வையோ அவள் மனதில் படவில்லை. பேச்சு மட்டும் பாதிக்க, ''இப்போது... என்று தொடங்கி

யவள், சற்று நிறுத்தி, தொண்டையைச் செருமி, "இப்போது உங்கள் விருப்பம்போல நடந்து கொள்ளவில்லை என்றால் இதை வெளிப்படுத்தி விடுவீர்களா?" என்று கேட்டாள்.

முகம் சிவக்க, "என்னை என்னவென்று நினைத்தாய்?" என்று சீறினான் மனோரஞ்சன். ஆனால் அவளது வெளுத்த முகம் கண்டு, உடனே இறங்கி, "சௌமி, நீ எனக்கும் வேண்டும்தான். ஆனால், ஒரு பெண்ணின் கழுத்தில் கத்தி வைத்து அவளை அடைகிற அரக்கன் நான் அல்ல. நான் உன்னிடம் கூறியது முழுக்க முழுக்க ஒரு தன்னிலை விளக்கம்தான். அதை ஏற்று என்னைப் புரிந்து கொண்டாயானால் சந்தோஷப் படுவேன். அவ்வளவே. மற்றபடி, வேறு எதற்கும் இந்த உண்மையை நான் பயன்படுத்த மாட்டேன். சத்தியம்." என்றான்.

பெண்களின் உடம்பு மட்டும்தான் மனோரஞ்சனின் இலக்கு என்று எண்ணியிருந்தது தவறோ என்ற சந்தேகம் முதல் தடவையாகச் சௌமினிக்கு உண்டாயிற்று.

ஆனாலும் ஒன்று. அவன் ஒரேயடியாக ஊர்மேய்ந்தது இல்லை என்று மனோரஞ்சன் சொன்னது உண்மையாகவே இருந்தாலும், பிற பெண்களோடு அவன் பழகியதற்கும் அசைக்க முடியாத சான்று இருக்கிறதே!

ஒருவேளை, மற்ற கோபிகைகளுடன் பழகியபடியே ராதையை நேசித்த கண்ணனைப் போல மனோரஞ்சனும் சௌமினியை நேசித்தாலும் நேசித்திருக்கலாம்.

ஆனால் அவளுக்கு அது போதாதே! பட்டமகிஷியாகக் கிரீடம் சூட்டினாலும் பழகிய பத்தோடும் அவளும் ஒருத்தியாக வாழ அவளால் முடியாது.. அதைவிட இந்த ஒற்றை வாழ்வு ஆயிரம் மடங்குமேல்.

# 18

அவர்களது அகவாழ்வு அப்படியே இருந்தபோதும், புற வாழ்வில் பல மாற்றங்கள் ஏற்படலாயின. முக்கியமானதாக, மனோரஞ்சனின் உடல் நிலை நன்றாகத் தேறி, மருத்துவரின் அனுமதியோடு, தொழிலைப் பார்ப்பதற்காக அவன் வெளியே செல்லத் தொடங்கினான்.

உடலுக்கான பயிற்சிகளை மேலும் பலகாலம் தொடர்ந்து செய்வது நல்லது என்றார் வைத்தியர். வேலையை, முதலில் ஓரிரு மாதங்கள், சற்று இலகுவாக எடுத்துக் கொள்ளும்படியும் ஆலோசனை கூறினார்.

தன் பயிற்சிகளை முடித்துக் கொண்டு, பாட்டனாரோடு கிளம்புகிறவன், வேலைகளில் அவருக்கு ஓரளவு உதவிவிட்டு, மதியம் திரும்பி வருவான்.

வைத்தியர் மனோரஞ்சனை இன்னும் கொஞ்சநாள் ஓய்வெடுக்கச் சொல்லியிருக்க வேண்டும் என்பது சௌமினியின் கருத்து. எனவே, முதலில் சில நாட்கள், கணவன் முகத்தில் வெளுப்பு, சோர்வு, அசதி என்று எதுவும் தெரிகிறதா என்று அவன் அறியாமல் தேடிப்பார்த்து விட்டு, அப்படி எதுவும் இல்லை என்று கண்டு, ஒருவாறு நிம்மதி அடைந்தாள்.

அடுத்து, சித்தார்த்தனும் தந்தையோடு கிளம்பி, அரைநாள் பள்ளிக்குச் சென்று, தந்தையுடனேயே திரும்பி வந்தான். அப்பாவோடு செல்கிற ஜோரில், அவனுக்குப் பள்ளிக்கூடம் பிடித்துப் போனதைப் பார்த்து சௌமினிக்கு வேடிக்கையாக இருந்தது.

வாழ்க்கை, ஏதோ ஓர் ஒழுங்குமுறையோடு செல்லத் தொடங்கியது.

அச்சமயத்தில், மனோரஞ்சனைப் பெற்றவரான ராமலிங்கத் திடமிருந்து, நான்கு மூலைகளிலும் மஞ்சள் தடவிய கடிதம் ஒன்று வந்தது. அவருடைய அருமைத் திருமகளான பூரணியின் திரு மண நிச்சயதார்த்த விழாவில், குடும்பத்தோடு வந்து கலந்து கொள்ள வேண்டுமென்று, அவர் தன் மூத்த மகனை அழைத்திருந் தார். 'குழந்தையோடு கட்டாயம் வாம்மா' என்று சௌமினிக்கு ஒரு துண்டுக் குறிப்பு இருந்தது.

பெரியவருக்குத் தனியே அழைப்பு விடுத்திருந்தார்.

அழைப்பைப் படித்ததும்·மனோரஞ்சனின் முகம் கடுகடு என் றாகிவிட்டது.

தந்தையிடம் மனோரஞ்சனுக்கு ஒட்டுதல் இல்லை என்ப தைச் சௌமினி ஏற்கனவே ஊகித்திருந்தாள். அவரைப் பற்றி அவன் ஒருதரம் கூடப் பேசியது கிடையாது. அடுத்த குடும்பத் தோடு அவர் ஒதுங்கிவிட்டதால் பற்று விட்டுப் போயிற்று போலும் என்று எண்ணியிருந்தாள். ஆனால் அவனது கோபம் வேறுகதை சொன்னது.

கேள்வியாய் நோக்கியவளிடம், ''எல்லாம் வேஷம். இவ்வ ளவு காலம் கழித்து திடீரென்று என் பெயர் நினைவு வந்துவிட்ட தாமா? மருத்துவமனையில் தாத்தா செலவு செய்ததைப் பார்த்தார் அல்லவா? கணிசமாக ஒரு தொகை கறக்கலாம் என்று திட்டமாயி ருக்கும். பைசா கொடுக்க மாட்டேன். பெயரைப்பார், பூரணியாம் அம்மாவின் பெயரைப் பார்த்ததும் இங்கே எல்லோருக்கும் உருகி விடும் என்று நினைத்தார் போல. இதற்கு இளகிவிடவேண்டாம் என்று தாத்தாவிடம் சொல்லவேண்டும்.'' என்று வெறுப்பும் கோப முமாக வெடுவெடுத்தான்.

''பெயர், பிறந்தபோதே வைத்திருப்பார்களே.'' என்று சௌ மினி குறிப்பாய்க் கூறவும், கோபமாக முறைத்துவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

''என்ன இருந்தாலும் அந்தப் பெண் - பூரணி உங்களுடைய தங்கை,'' என்றாள் சௌமினி.

''பெரிய பாசமலர் தான். நேரில் பார்த்தால் அடையாளம் கூடத் தெரியாது.'' என்றான் அவன் ஏளனமும் சினமுமாக.

''மோசமான நிலைமைதான்'' என்று உடனே ஒத்துக் கொண்டாள் சௌமினி. ''ஆனால் திருத்திக் கொள்வது உங்கள் கையிலும் தானே இருக்கிறது. எனக்குக் கூடத் தனியாக அழைப்பு விடுத்திருக்கிறார். பேசாமல் இருப்பது மரியாதை இல்லை.'' என்றாள் சற்றுப் பிடிவாதமான குரலில்.

அவளைச் சற்றுக் கூர்ந்து நோக்கி, ''போக ஆசைப்படுகிறாயா?'' என்று மனோரஞ்சன் வினவினான்.

'ஆசை' என்றால்... செல்வது என்று முடிவானால் அது அவளது ஆசைக்காக என்று காட்ட எண்ணுகிறானா? அன்று ஒருநாள் வார்த்தை வழுக்கலுக்குப் பிறகு அவனோடு பேசும்போது சௌமினி சற்று அதிகக் கவனத்தோடு இருப்பது வழக்கம்.

எனவே, ''உங்கள் தந்தை அழைக்கும்போது செல்வது கடமை இல்லையா?'' என்றாள் அவள்.

''ஆமாம் இல்லை என்று ஒரு பதில் சொல்ல முடியாதா? என்னவோ பெரிய, கடமை தவறாத கண்ணியவாதிமாதிரி ஏன் இந்தப் பேச்சு?'' என்று அவன் எரிச்சலுடன் முணுமுணுத்தான்.

நிமிர்ந்து, ''அப்படி யாருக்கு எந்தக் கடமையில் நான் குறை வைத்தேனாம்? சித்துவுக்கு? உங்கள் தாத்தாவுக்கு? உங்களுக்கு?'' என்று. அவள் தலையைச் சிலுப்ப, அவளது தோளைப் பற்றி, நேராகத் தன்புறமாய்த் திருப்பி, ''சொல்லு சௌமினி. என்னளவில் உன் கடமைகள் எல்லாவற்றையும் மெய்யாகவே நீ நிறைவேற்றிக் கொண்டுதான் இருக்கிறாயா?'' என்று கேட்டான் மனோரஞ்சன்.

அவளது இதழ்களில் நிலைத்த பார்வையும், பற்றிய தோள்களை லேசாக வருடிய விரல்களும், அவனது எண்ணத்தைப்

பறைசாற்றிவிட, சௌமினியின் முகம் சிவந்தது. கோபத்தினாலும் தான்.

சட்டென விலகி நின்று, "ஏற்றுக் கொண்ட கடமை எதிலும் நான் பின் வாங்கவும் இல்லை; பேச்சு மாறும் கலை எனக்குக் கைவந்ததும் இல்லை" என்றாள் சூடாக.

அசட்டையாகத் தோளைக் குலுக்கி "எல்லோரும் அப்படித் தான்" என்றான் அவன். "விழா முடிந்த அன்றே திரும்பி விட வேண்டும். அதற்குச் சரியாகத் தேவைப்பட்டதை எடுத்து வைத் துக் கொள். நம் மூவருக்கும் மட்டும்தான். தாத்தா வரமாட்டார்." என்று முடித்தான்.

எப்படியோ, சம்மதித்தானே என்று இருந்தது அவளுக்கு. அவன் சொன்னது போலவே, சிதம்பரநாதர் கிளம்புவதாக இல் லைதான். ஆனால் அவர்கள் செல்வதைத் தடுக்கவும் இல்லை. தடுப்பதென்ன? ஆதரிக்கவே செய்தார் எனலாம். "உறவுகள் எத் தனை இருந்தாலும், அத்தனையும் அவசியம்தான், அம்மா. என் போல முதிர்ந்த் பிறகு வளைவது கடினம். நீங்கள் சின்னப் பிள்ளை கள், அப்படி இருக்க வேண்டாம் போய் வாருங்கள்" என்று வழியனுப்பினார்.

சிதம்பரநாதருக்கு அவ்வளவாகப் பிடிக்காவிட்டாலும், தனக்கு உடம்பு நூறு சதவீதம் நன்றாகிவிட்டதாகவும், கவனமாக ஓட்டுவதாகவும் கூறி மனோரஞ்சன் காரையே பயணத்துக்குப் பயன்படுத்தினான்.

ஆனால், "ஓட்டல் தமிழ்நாடு"வில் காரைக் கொண்டுபோய் நிறுத்திவிட்டு, "அவர்கள் வீட்டில் எல்லாம் நாம் தங்க முடியாது. இங்கே இருந்து கொண்டு, தேவைப்பட்டபோது மட்டும் போய் வரலாம்." என்று ரூம் புக் பண்ணச் சென்றபோது அவனுக்கு ஓர் அதிர்ச்சி நேர்ந்தது.

மனோரஞ்சனிடம் பெயரையும், ஊரையும் கேட்டுவிட்டு, "உங்கள் பெயரில் ஏற்கனவே ஏசி அறை ஏற்பாடு செய்திருக்கி

றதே சார். இரண்டு நாட்களுக்குப் பணம் கூடக் கட்டி விட்டார்க ளே'' என்றார்கள்.

பெல்பாய், சாமான்களைக் கொணர்ந்து அறையில் வைத்து விட்டுச் சென்றதும், ரூம் சர்வீசை அழைத்து, சித்தார்த்தனுக்குப் பால் கொண்டுவரச் சொல்லி விட்டு, ''எல்லாம் பணத்துக்காக. பெரிய தொகை பெயரும் என்று எதிர்பார்க்கிறார்கள் போல. ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஒரு பைசா கொடுக்கமாட்டேன், பார்'' என்றான் மனோரஞ்சன் மனைவியிடம்.

சௌமினி ஒன்றும் பதில் சொல்லவில்லை. மகனது உணர்ச்சி களை ஊகித்து, அதற்கு மதிப்புக் கொடுத்து, மூத்த மாமனார் வீட்டில் 'டூரிசம் டெவலப்மென்ட்' ஓட்டல்களில் தங்குகிற வழக்கம் அறிந்து, ஏசி அறை ஏற்பாடு செய்த மாமனாரிடம் அவளுக்கு மரியாதை கலந்த அன்புதான் உண்டாயிற்று. ஏற்க மனம் இல்லாத வர்களிடம் சொல்லி என்ன பயன்?

மாலையில்தான் விழா. ஆனால் இந்த ஊருக்கு வந்துவிட்டு விழாவுக்குப் போய் நின்றால் நன்றாயிராது என்பது சௌமினி யின் அபிப்பிராயம்.

''எனக்கு வேறு வேலை இருக்கிறது. அங்கேபோய் உட் கார்ந்து வெட்டிப் பொழுது போக்க முடியாது'' என்றான் மனோ ரஞ்சன்.

அவள் சந்தேகமாக நோக்கவும், பட்டென்று கைப்பெட்டி யைத் திறந்து, சில காகிதங்களை எடுத்து அவளுக்குக் காட்டினான்.

மெய்யாகவே அவர்களுக்கு அங்கே டீலர்கள் இருந்தார்கள். பணமும் வரவேண்டி இருந்தது.

''என்னை அங்கே விட்டுவிட்டுப் போங்கள். மாற்ற வேண் டிய துணிமணிகளைக் கையோடு கொண்டுபோய் அங்கேயே உங்கள் தங்கை, சித்தியோடு சேர்ந்து உடைமாற்றிக் கொள் கிறேன்'' என்றாள் சௌமினி பிடிவாதமாக.

"அப்படி என்ன, மாமனார் வீட்டாரிடம் பாசம் பொங்கி வழிகிறது?" என்று பரிகாசம் போலக் கேட்டு, இந்த ஏற்பாடு தனக்குப் பிடிக்கவில்லை என்பதைக் காட்டினான் அவன்.

"பேரனைப் பார்க்க ஆசைப்படுவார். கூட்டிப் போய்க் காட்டுவது கடமை" என்றாள் அவள் சுருக்கமாக.

அதற்குமேல் தட்டிக் கழிக்காமல் தந்தை வீட்டுக்குத் தன் குடும்பத்தை அழைத்துக் கொண்டு போனான் மனோரஞ்சன்.

ஏற்கனவே மனமின்றிச் சென்றவனுக்கு, அங்கே, முன் ஹாலில் தாயின் முழு உருவப் படத்தைக் காணவும் முகம் கருத்து விட்டது. "என்ன வேஷம் பார்." என்று சௌமினியிடம் முணுமுணுத்தவன், அதற்குமேல் நில்லாமல், "வேலையிருக்கிறது. முடித்துக் கொண்டு மாலையில் சீக்கிரம் வந்துவிடுகிறேன்." என்று கிளம்பிவிட்டான்.

தந்தைக்கு அழகாக, 'பை' சொல்லி, 'டாட்டா' காட்டிய பேரனை ராமலிங்கம் ஆவலோடு தூக்கிக் கொண்டார்.

வீட்டில் அவரைத் தவிர வேறு யாரும் இல்லை.

சுற்றுமுற்றும் நோக்கியவளுக்குப் பதிலாக, "பக்கத்துத் தெருவில், மண்டபத்தில் தான் விழா. மற்ற உறவினர்களை அங்கேயே தங்கவைத்து, சாப்பாட்டுக்கும் ஏற்பாடு செய்துவிட்டேன். பூரணிக்கு, ஏதோ 'ஃபேஷியலா'மே அது செய்ய வேண்டும் என்று 'ப்யூட்டி பார்ல'ருக்கு அவளைக் கூட்டிக் கொண்டு சுசீலாவும் நரேந்திரனும் உன் மாமியாரும் மைத்துனனும் போயிருக்கிறார்கள். இதோ வந்து விடுவார்கள். நீ உட்காரம்மா." என்றார் பெரியவர்.

அருகிலிருந்த பிரம்பு நாற்காலியில் அமர்ந்தபடியே, "மற்றவர்?" என்று வினவினாள் சௌமினி.

"என்ன மற்றவர்?" என்றார் அவர் புரியாமல்.

''அடுத்த மைத்துனரைக் கேட்டேன். உங்களுக்கு மூன்று பிள்ளைகள் என்றீர்களே... என்றபோதே தன் பிழை உணர்ந்து சட்டென நாக்கைக் கடித்துக் கொண்டாள் சௌமினி.

ஆனால், அதற்குள் ராமலிங்கத்தின் முகம் வாடிவிட்டது. ''மனோரஞ்சன் என்பிள்ளை என்பதை நீ கூடவா அம்மா, மறந்து விடுவாய்?'' என்று அவர் வருத்தத்துடன் கேட்டபோது தனக்குத் தானே ஓங்கி ஒரு குட்டுக் குட்டி கொள்ளலாம் போல இருந்தது அவளுக்கு.

உடனே மன்னிப்பு கேட்டுவிட்டு, ''மூன்று பிள்ளைகளுக்கும் சொத்து என்கிறீர்களா? ரஞ்சனுக்கு அங்கேயே நிறைய இருப்பதால்... இது மற்ற மூன்று பி... பிள்ளைகளுக்கு என்று எண்ணி விட்டேன்... சாரி... சாரி மாமா.'' என்று தன் விளக்கத்தைக் கூறினாள்.

''அது அவனுடைய தாத்தாவின் பணம். அதற்கும் எனக்கும் என்ன வந்தது? என்னைப் பொறுத்த வரையில் என் சேமிப்பை என் பிள்ளைகளுக்குப் பகிர்ந்து கொடுப்பேன். நான் அறிந்தது அவ்வளவுதான்.'' என்றார் அவர்.

லேசாக முறுவலித்து, ''இந்தத் தெளிவு எனக்கு இல்லாததால் உளறிவிட்டேன்.'' என்று மீண்டும் மன்னிப்புக் கோரும் குரலில் உரைத்தாள் மருமகள்.

''சுந்தரவனத்து வாழ்க்கையில், மனோவுக்கு ஓர் அப்பன் இருப்பது உனக்கு நினைவு இருந்தால் அதுதான் அதிசயம்.'' என்று பழியை வேறிடம் திருப்பினார் ராமலிங்கம். எதிரில் இருந்த படத்தை யோசனையோடு நோக்கியவர் ஒரு முடிவுக்கு வந்தவர் போல மேலே பேசத் தொடங்கினார். ''சற்று முன் தெளிவு என்றாயே, அம்மா, அதன் மொத்த உருவமே பூரணிதான். அவளை மாதிரி அன்பும், அந்த அன்பு கண்ணை மறைக்காத தெளிவும் உள்ள பெண் உலகில் வேறு யாரும் இருக்க முடியாது...'' என்று அவா சொல்லிக் கொண்டு இருந்தபோது வாயிலில் அரவம் கேட்

டது. வருகிறவர்கள் மனைவி மக்கள் என்பதைக் கண்டு, ஒருவருக் கொருவர் அறிமுகம் செய்விக்க அவர் முனைந்தபோது, ''ஏய்... நீ... சௌமினி!'' என்று அவருடைய மகள் ஆச்சரியத்தோடு கூவி னாள்.

''பூரணீ... நீயா?'' என்று வியந்து நகைத்தாள் சௌமினி. பெண்கள் இருவரும் ஏற்கனவே பழகியவர்கள் என்றானதும் பேச்சு இலகுவாகிவிட்டது. போதாக்குறைக்கு சித்தார்த்தன் வேறு அத்தை, சித்தப்பா என்று முறை கற்றுக் கொள்ளவும், கூடவே கல்யாணப் பெண்ணைக் கேலி செய்வதும் சேர்ந்துகொள்ள எல் லாமே வேடிக்கை வினோதங்கள் ஆகிவிட்டது.

சௌமினியும் பூரணியும் ஒரேயடியாக உயிரும் உடலும், நகமும் சதையும் போன்ற தோழிகள் அல்ல என்றபோதும், ஒரே வகுப்பு, ஒரே ஹாஸ்டல் என்று நன்றாகப் பழகியவர்கள். அதிலும் பூரணி வெளிப்படையாகப் பேசுவாள். ''எங்கள் வீட்டில்எதற்கும் எங்கள் பெரியம்மாதான். என் பெயர் கூட அவர்களதுதான். இப் போது கூடச் சென்னையிலேயே இரண்டு கல்லூரிகளில் இடம் கிடைத்தது. பெரியம்மா படத்துக்கு முன்னால் பூக்கட்டிப் போட் டுப் பார்த்ததுதான் இங்கே சேர்த்தார்கள்.'' என்று ஒருதரம் பூரணி சொன்னது நினைவு வரவும், மனோரஞ்சனின் குற்றச்சாட்டு எவ்வ ளவு அநியாயமானது என்று சௌமினி உள்ளூர வருந்தினாள்.

மண்டபத்திலிருந்து உணவு எடுத்து வரச் செய்து வீட்டி லேயே உண்டார்கள். பூரணியைச் சற்று நேரம் ஓய்வெடுக்கச் சொல்லிவிட்டு, வீட்டிலிருந்து கையோடு எடுத்துச் செல்ல வேண் டியது பார்த்து மகனின் உதவியோடு எடுத்து வைத்துக் கொண்டி ருந்தாள் ராமலிங்கத்தின் இளைய மனைவி.

மடியில் தூங்கிவிட சித்தார்த்தனை உள் அறையில், கட்டிலில் கிடத்த வசதி செய்து கொடுத்தார் ராமலிங்கம்.

மகனை அவனுக்குப் பிடித்த வகையில் லேசாக ஒருக்களித் துக் கிடத்திவிட்டு, ''மண்டபத்தில் வேலைகளைப் பார்க்க நீங்கள்

இப்போது செல்ல வேண்டியிருக்குமோ மாமா?'' என்று சௌ மினி மெல்லக் கேட்டாள்.

''இல்லையம்மா.'' என்று தலையசைத்தார் அவர். ''சுசீலா வின் அப்பா, அம்மா, அண்ணன் எல்லோரும் மிக நல்லமாதிரி. 'மண்டபத்து வேலைகளை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். நீங் கள் நன்றாக ஓய்வெடுத்துக் கொண்டு 'ஃப்ரெஷ்' ஆகவந்து சேருங்கள் என்று சொல்லிவிட்டார்கள். நாம் ஓர் ஐந்து மணிக்குப் போல நிதானமாகக் கிளம்பிப் போனால் போதும். ஏனம்மா, ஏன் கேட்கிறாய்?'' என்று வினவினார் அவர்.

யோசனையோடு அவரை நோக்கினாள் அவள். அவளுக்கு உள்ளூர ஒரு குழப்பம். மனைவியை இவ்வளவு நேசித்தவர் இன்னமும் நேசிக்கிறவர், அவள் விட்டுச் சென்ற ஒரே நினைவுச் சின்னத்தை எட்டிக்கூடப் பாராமல் இருந்தது எப்படி? மனோரஞ்ச னின் வெறுப்புக்கு அடிப்படை அந்தப் பாராமுகம் என்பதை அவள் ஊகித்திருந்தாள். ஆனால் அந்தப் பாரா முகத்தின் கார ணம்? இதைக் குற்றச்சாட்டு போலத் தொனிக்காமல் எப்படிக் கேட்பது? சற்று யோசித்துவிட்டு, ''பெரிய அத்தை பற்றிச் சொல் லிக் கொண்டு இருந்தீர்களே...'' என்று எடுத்துக் கொடுத்தாள்.

குறிப்பிட்ட விதத்தில், லேசாகச் சிரித்து விட்டு அவர் பழைய பேச்சைத் தொடர்ந்தார். ''பூரணி தெளிவுள்ளவர் என்று ஏன் சொன்னேன் தெரியுமா, சௌமினி? அவளது மறைவு, மறைவுக் குப் பிறகு என்னென்ன எப்படி எப்படி நடக்க வேண்டும் என்பதில் கூட அவள் தெளிவாய் இருந்தாள். மரணத்தை எண்ணி அவள் பயப்படவே இல்லை. அவளுக்கு ஏதும் ஆகிவிட்டால், பிறக்கும் குழந்தையை அவளுடைய தகப்பனாரிடமிருந்து பிரித்துவிடக் கூடாது என்று ஒருநாள் சொன்னாள். அதற்கு மேலும் பேசமுயன் றிருந்தாள். ஆனால் இந்தமாதிரிப் பேச்சு வேண்டாம் என்று நான் கோபப்படவே அப்போதைக்கு விட்டு விட்டாள்.

''ஆனால் அப்போது சொல்ல நினைத்ததை எல்லாம் கடித மாய் எழுதி, அப்... புறமாய் என்னிடம் சேர்த்து விடும்படி ஏற்

பாடு செய்திருந்தாள். அவளுடைய தந்தைக்கும் தாய்க்கும் வேறு யாரும் இல்லாத காரணத்தைச் சொல்லி, வாழ்வில் அவர்களுக்கு ஒரு பற்றுக் கோடாகக் குழந்தையை அவர்களுக்கு நான் விட்டுத் தரவேண்டும் என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருந்தாள். அந்த வார்த்தைக்குக் கட்டுப்பட்டே நான் மனோரஞ்சனை அங்கே விட்டுச் சென்றேன். மற்றபடி என் மகனை எப்படியும் என்னோடு கூட்டிப் போயிருக்கமாட்டேனா?'' என்று கண்களைத் துடைத்தார் அவர்.

ஒருபுறம் மனம் உருகியபோதே, சௌமினியை இரண்டு விஷயங்கள் உறுத்தின. ஒன்று, மாமியார் தன் கணவனை எண்ணவில்லையே என்பது. இன்னும் இப்படி உருகுகிறவர் எப்படி மறுமணம் புரிந்தார் என்பது அடுத்தது.

ஒரு பெருமூச்சுடன் பேச்சைத் தொடர்ந்த பெரியவர் இதற்கும் விளக்கம் கொடுத்தார். ''அவளுடைய தகப்பனாரின் உரிமை வெறி அறிந்தவள் அம்மா, அவள். அதனாலேயே பிள்ளையை விட்டுக் கொடுத்துவிடும்படி கேட்ட அதேகையோடு, நான் மறுமணம் புரிந்து கொள்ள வேண்டும் என்று ஆணையிட்டிருந்தாள்...

சௌமினி சற்று யோசனையாய் நோக்கவும், ''ஆணையே தான் சௌமினி.'' என்றார் அவர். ''எங்கள் அன்பின்மேல் ஆணையிட்டு, மீண்டும் திருமணம் செய்யச் சொல்லியிருந்தாள்... பிள்ளையைக் கொடுத்துவிட்டு நான் மட்டும் தனிமரமாய் நின்று வெற்று வாழ்வு வாழ்ந்துவிடக் கூடாதாம். சீக்கிரமே ஒரு பெண்ணை அதுவும் நல்ல ஆரோக்கியமான பெண்ணை மணந்து, சீக்கிரமே பிள்ளை பெற்று, மனைவி குடும்பம் என்று வாழவேண்டுமாம்... புரிகிறது இல்லையா?'' என்றவர் எழுந்து சென்று, பீரோவைத் திறந்து, அதில் ஒரு பைக்குள் பத்திரப் படுத்தியிருந்த கடிதத்தை எடுத்து சௌமினியிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னார்.

கடிதத்தைப் படித்து முடிக்கையில் சௌமினிக்கு உடல் முழுவதும் புல்லரித்திருந்தது.

கடிதத்தை வாங்கி, கவனமாக மடித்து, மீண்டும் உள்ளே வைத்தார் ராமலிங்கம்.

அந்தக் கடிதம் இருந்த பையைக்கூட அவர் மென்மையாகக் கையாளுவதைப் பார்த்திருந்து விட்டு ''இன்னும் ஒன்று கேட்க லாமா, மாமா? தப்பாக நினைக்கமாட்டீர்களே?'' என்றாள் சௌ மினி.

''தப்பாகவா? உன்னையா? உன் தூண்டுதல் இன்றி மனோ இன்று இங்கே வந்திருக்க மாட்டான் என்பது எனக்குத் தெரியாதா, அம்மா? எது வேண்டுமானாலும் கேள். ஆனால் அதற்குமுன் இன்னும் ஒன்றை தெரிந்து கொள். இந்தக் கடிதத்தின் பின்னரும் கூட, பிள்ளையை விட்டுக் கொடுக்க எனக்கு முதலில் மன மில்லை. ஆனால் பெரியவரின் தவிப்பைப் பார்த்த பிறகு, கடி தத்தை பிள்ளைப் பாசத்தினால் நான் மனோவைப் பார்க்கச் சிலமுறை சென்றதுண்டு. ஆனால் சிதம்பரநாதரின் உரிமை வெறி பற்றி என் பூரணி கோடிட்டுக் காட்டியிருந்ததை நான் முழுமை யாக உணரும்படி ஆயிற்று. ஆனால் அவனை அருமையாக வளர்ப்பார் என்ற உறுதி இருந்ததால், அதற்குமேல் ஒதுங்கிவிட் டேன்.'' என்றார் அவர்.

''ஊகூம். நான் அதைப் பற்றிக் கேட்கவில்லை, மாமா. ஆனால், நீங்கள் உங்களுடைய இப்போதைய மனைவிக்கு சின்ன அத்தைக்குச் செய்வது அநியாயம் இல்லையா? கணவன் மனதில் இன்னொரு பெண் என்று காட்டிக் கொண்டே இருப்பது சரியாகுமா?

''அதுபற்றி சுசீலா பொறாமைப்பட்டால்தானே, மருமகளே அப்படி? அவளுக்கே அவள் அக்கா ஒரு கேடயம் மாதிரி. அப்ப டித்தான் அவள் சொல்கிறாள். எதற்கும் பூரணியின் முன்னே போய் நிற்பது அவள்தான். நீயே கேட்டுப் பாரேன்.'' என்றார் மாமனார். ''சும்மா கேள். சுசீலாவுக்குக் கோபமே தெரியாது.''

தூங்கும் பேரனைப் பார்த்தபடி அவர் அமர்ந்திருக்க, சௌ மினி தன் சின்ன மாமியாரைத் தேடிச் சென்றாள். மாமனார் சொ

னதற்கேற்ப பெரிய பூரணியின் படத்தின் முன்னேதான் சுசீலா கண்மூடி அமர்ந்திருந்தாள்.

காலடி ஓசை கேட்டுக் கண்திறந்து பார்த்து, சௌமினியையும் அருகே உட்காரச் சொன்னாள்.

பக்கத்து அறையிலிருந்து பேசியது கேட்டிருக்குமோ?

ஆமாம் என்பது போலச் சின்ன மாமியார் பேசினாள். "எனக்குக் கொஞ்சம் மனம் கலங்கினாலோ, அலைபாய்ந்தாலோ இங்கே வந்து உட்கார்ந்து விடுவேன். சாவைக்கூட அக்கா அமைதியாக ஏற்றார்களாமே; அந்த அமைதி எனக்கும் கொஞ்சம் கிட்டுவது போல இருக்கும்."

"இப்போது என்ன கலக்கம் என்று நான் கேட்கலாமா?"

ஒருகண அமைதியின் பின் பதில் வந்தது. "எப்போதும், மனோரஞ்சனைப் பற்றி உன் மாமா பேசினால் எனக்கு அப்படித் தான் இருக்கும். அக்காவின் ஆசி எனக்கு உண்டு என்பதாலோ என்னவோ, அவர்களை என்னால் தெய்வமாக ஏற்க முடிந்தது. ஆனால் மனோரஞ்சன் மனதில் இருப்பது வெறுப்பு என்பது என் ஊகம். இவர் மனதில், என் பிள்ளைகளை அவன் குறைத்துக் காட்டுவானோ என்ற பயம் வேறு...

விசித்திரம் தான்.

கணவனோடு இன்னொரு பெண்ணின் உறவை இயல்பாக ஏற்றவளால் அந்த உறவின் பலனான பிள்ளையை ஏற்க முடியவில்லை; கணவனுக்கும் இன்னொரு பெண்ணுக்கும் இருந்த உறவின் பயனான பிள்ளையை ஏற்றுக் கொண்டவளால் அந்த உறவைக் கொஞ்சம் ஒத்துக் கொள்ள முடியவில்லை!

# 19

மனோரஞ்சன் சரியான நேரத்துக்கு வந்து மாலை விழாவில் கலந்து கொண்டான். யாருடனும் ஒட்டி உறவாடவும் இல்லை; வெட்டிக் கொண்டு போகவும் இல்லை. அந்த அளவில் அவன் நடந்து கொண்டதே ராமலிங்கத்துக்குத் திருப்தியாக இருந்தது. பேரனை மட்டும் கையில் பிடித்துக் கொண்டு அலைந்தார். சித்துவும் விசுக் விசுக்கென்று அவருடன் சுற்றியது எல்லோருக்குமே இதமான புன்னகையை வரவழைத்தது.

விழா முடிந்ததும், ''அதிகாலையிலேயே கிளம்ப வேண்டும். இப்போது சீக்கிரமாகத் தூங்கினால்தான் வண்டி ஓட்ட முடியும்.'' என்று முதல் பந்தியிலேயே சௌமினியையும் உட்கார வைத்து, இரண்டுவாய் கொறித்து விட்டுக் கிளம்பிவிட்டான் மனோரஞ்சன்.

சௌமினிக்கும் சித்தார்த்தனுக்கும் எல்லோரும் பிரியா விடை கொடுப்பதை முகம் மாறாமல் பார்த்திருந்தவன், ஒருவாறு அவர்கள் இருவரும் காரில் ஏறியதும், வினாடி வீணாக்காமல் காரைக் கிளப்பிச் சென்றான்.

அறையை அடைந்ததும், கணவனை எட்டியும் பாராமல், சித்துவுக்கு உடம்பு கழுவி துடைத்து, என்று சௌமினி மகனையே கவனித்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு உள்ளூர ஒரே கோபம். அன்பாய் அழைத்திருக்கிறார்கள்; பிடிக்கிறதோ இல்லையோ, கொஞ்சம் சிரித்து, 'அப்பா, சித்தி' என்று அழைத்துப் பேசினால் இவனுக்கு என்ன குறைந்து போய்விடும்? தொழிலில் மட்டும், 'இன்று சரியான அறுவை ஒன்று வந்தது. என்ன செய்வது? இவனால் இரண்டு லட்சம் லாபம் வருமே என்று இளித்துப் பே

அனுப்பி வைத்தேன்' என்கிறானே. இங்கும் அதேபோல இருந்திருந்தால் கூடப் போதுமே! வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளா விட்டாலும், சுசீலாவின் தடுமாற்றத்தையும், நரேந்திரன், அண்ணனைக் கண்டால் பிறர் அறியாமல் பின்னடித்ததையும் சௌமினி பார்த்துக் கொண்டுதானே இருந்தாள்!

சற்றுநேரம் அவளது கோபத்தை வேடிக்கைப் பார்த்துவிட்டு, சித்து தன் பொம்மைக் கரடியை அணைத்துக் கொண்டு படுத்ததும், மனோரஞ்சன் மனைவியை நோக்கி, "என்ன, உருக்கங்கள் எல்லாம் பிரமாதமாக இருந்ததே. எவ்வளவு பணம் வேண்டுமாம்?" என்று கிண்டினான்.

கண்ணாடி முன் அமர்ந்து, தலையிலிருந்த, 'ஹேர்பின்'களை அகற்றிக் கொண்டிருந்தவள், கண்ணாடியிலேயே அவனை முறைத்துவிட்டு, "உங்கள் பணம் அங்கே யாருக்கும் வேண்டாமாம். உங்களுக்குத்தான் அவர்கள் பங்கு கொடுக்கிறார்களாம். என்றாள் அலட்சியமாக.

"என்ன கதை?"

"கதை ஒன்றும் இல்லை." என்று தீவிரமான குரலில் மறுத்தாள் மனைவி. "அவர்கள் உங்களை வீட்டுப் பிள்ளையாகத்தான் எண்ணுகிறார்கள். அதனால்தான் தன் சேமிப்பில் மூன்றில் ஒரு பங்கை உங்களுக்கு..

"பிரமாதமான கற்பனை!"

"இல்லை இல்லை. இல்லை!" என்று ஆத்திரத்துடன் அவனை நோக்கித் திரும்பி அமர்ந்தாள் சௌமினி. 'முதலில் நான் சொல்வதைக் கொஞ்சம் பொறுமையாகக் கேளுங்கள். கேட்டு முடித்து விட்டு அப்புறம் கதையா இல்லையா என்று கூறுங்கள்." என்று தொடங்கி, மருத்துவமனையிலேயே ராமலிங்கம், தன் சேமிப்பில் மூன்று பிள்ளைகளுக்கும் சமபங்கு என்றதைச் சொன்னாள் "நான்கூட, 'உங்கள் அடுத்த பிள்ளை எங்கே என்று மடத்தனமாகக் கேட்டுவிட்டேன். 'மனோ என் பிள்ளை என்பதை

நீகூட மறந்து விடுவாயா' என்று உங்கள் அப்பா கேட்டபோது... சே, ஐயோ! என்று ஆகிவிட்டது தெரியுமா?''

லேசான புருவச் சுளிப்புடன் மனோரஞ்சன் கேட்டுக் கொண்டு இருக்க அவள் மேலே தொடர்ந்தாள். பெரியம்மா படத்துக்கு முன் சீட்டு எழுதிப் போட்டு எதையும் செய்வது பற்றிப் பூரணி, படிக்கும் காலத்தில் தன்னிடம் கூறியதை விவரித்து விட்டு, ''இப்படி ஒரு சந்தர்ப்பம் வரக்கூடும் என்று யோசித்து, ஆறு ஆண்டுகளுக்கு முன்பாகவே உங்கள் தங்கை இதை என்னிடம் சொல்லியிருக்க முடியாதே'' என்று கூறி, அவனுடைய சிற்றன்னை சுசீலாவுடன் பேசியதையும், கூடவே அவன் தாயின் கடிதம், தந்தையின் பேச்சு எல்லாவற்றையும் மடமடவென்று ஒப்புவித்தவள், 'இதற்கு மேல் உன்பாடு' என்பதுபோல 'நைட்டி'யை எடுத்துக் கொண்டு குளியல் அறைக்குள் புகுந்து கொண்டாள்.

திரும்பி அவள் வந்து பார்த்தபோது, தலையணையின் கீழ் கைகளைக் கோர்த்து, விட்டத்தை வெறித்தவாறு படுத்திருந்தான் அவன்.

சௌமினியைப் பார்த்ததும் எழுந்து அமர்ந்து, ''இது என்ன மடத்தனம், சௌமி? எனக்கு இந்தப் பணம் எதற்கு? இப்போது கூட, மாதம் ஆறாயிரமோ என்னவோதானே சம்பாதிக்கிறாராம்? இதில் எனக்கு வேறு ஒதுக்காமல் அந்தப் பெண் பூரணிக்கு இன்னும் பெரிய இடம் பார்த்திருக்கலாமே!'' என்றபோது, மனோரஞ்சன் குரலில் தவிப்பு இருந்தது.

'படவேண்டிய தவிப்புதான். ஆனாலும் பாவம்!' என்று உள்ளூர இரங்கியபடி, சௌமினி தலையணையை எடுத்துத் தனக்காக சோபாவில் போட்டாள்.

புருவம் சுளித்துத் தீவிர யோசனையில் இருந்தவன், திடுமென நிமிர்ந்து, ''இப்படிச் செய்தால் என்ன, சௌமி? அப்பாவிடம் சொல்லி, இந்தக் கல்யாணத்தை நிறுத்திவிட்டு ஒரு பணக்காரப் பையனாகப் பார்த்துப் பூரணிக்குத் திருமணம் செய்யலாமில்

லையா?'' என்று அவன் கூறவும் சௌமினிக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''என்னது?!'' என்று திகைத்தவள், அவன் உண்மையாகவே தீவிரமாகத்தான் பேசுகிறான் என்பது புரிய, ''புத்தியைக் காட்டுகிறீர்களே!'' என்றாள் ஆத்திரத்துடன். ''திருமணத்துக்குச் சரியாக ஒருமாதம் கூட இல்லை. இருபதே நாட்கள்! இப்போது போய் மாப்பிள்ளையை மாற்றுவதா? பணம் மட்டும்தான் பெரிதா? பூரணி எவ்வளவு மகிழ்ச்சியோடு இருக்கிறாள்! அவளுக்கு இந்த மாப்பிள்ளையை மிகவும் பிடித்திருக்கிறது தெரியுமா? இப்போது போய் மணமகனை மாற்று என்றால் அவள் எவ்வளவு வேதனைப் படுவாள்? இதை எல்லாம் யோசிக்காமல் என்ன பேச்சு பேசுகிறீர்கள்? உங்களுக்கெல்லாம் பணம் ஒரு சர்வரோக நிவாரணியாக - எதையும் சாதிக்க வல்லதாக இருக்கலாம், சார். ஆனால் நாங்கள் பெண்கள். எங்களுக்குப் பணத்தைவிட மனம்தான் பெரிது.'' என்று பொரிந்து கொட்டினாள்.

அவள் பேசி முடிக்கும் வரை பொறுத்திருந்துவிட்டு, ''உன் பெரியப்பா மகள் எப்படி என்று நானும் வாதத்தில் இறங்க முடியும். ஆனால், இப்போது பிரச்சினை அதுவல்ல. என் தங்கைக்கு எப்படி உதவுவது என்பதுதான். ஆனால் நீ சொல்வதிலும் உண்மை இருக்கிறது. அவளுக்கு உதவ, வேறு வழிதான் தேடியாக வேண்டும்.'' என்று மனோரஞ்சன் ஒதுங்கிப் போகவே அதற்கு மேல் அங்கே அமைதி நிலவியது.

கூடவே, 'அப்பா,' 'என் தங்கை' என்று அவன் குறிப்பிட்டதும் சௌமினியை இளக்கிவிடவே, மேற்கொண்டு வாதாடாமல் அத்தோடு விட்டு விட்டாள்.

முதலில் திட்டமிட்டிருந்தபடியே மறுநாள் காலையில் கிளம்ப வேண்டும் என்று மனோரஞ்சன் சொன்னதும் சௌமினிக்குக் கொஞ்சம் ஏமாற்றமாக இருந்தது. பெரிதாகத் தங்கைக்கு உதவப் போவதாகச் சொன்னானே என்று அவள் எண்ணமிடும் போதே அவன், ''பூரணிக்கு என்ன செய்வது என்றாலும், அதை

என் இஷ்டமாய்ச் செய்வது அவ்வளவாகச் சரியில்லை, சௌமினி. தாத்தாவிடம் ஒரு வார்த்தை முதலில் சொல்லிவிட வேண்டும். அதற்குமுன் இங்கே எதையும் காட்டிக் கொள்ள வேண்டாம் என்று பார்க்கிறேன்'' என்று காரணம் கூறியது, அவளுக்கும் சரியாகவே பட்டது.

அன்றுவரை அவள் அறிந்திராத ஒரு மனோரஞ்சனைக் காரில் செல்லும்போது அவன் அவளுக்குக் காட்டினான். ''எனக்கு எப்போதுமே ஒருகுறை, சௌமினி. என் தந்தை என்னைப் புறக்கணித்து விட்டார் என்று மிகவும் வேதனைப் படுவேன். பள்ளியில், நண்பர்களுக்கு முன்னால், எதற்கும் தாத்தா பாட்டிதான். விதி வசத்தால் அம்மா இல்லாமல் போனதை ஒருவாறு ஒத்துக் கொள்ள முடிந்தது. அது பழகியும் போயிற்று. ஆனால் தந்தை இருந்தும் இல்லை என்று ஆனதுதான் என்னை மிகவும் பாதித்தது. கூடப் படித்தவர்கள், 'இவனுடைய அப்பாவுக்கு இவனைப் பிடிக்கவே பிடிக்காது.' என்று சொல்வார்கள். வேண்டுமென்றே என் காது படப் பேசுவார்கள். அது, தாத்தா எனக்கு வாங்கிக் கொடுத்திருந்த பொருட்களைப் பார்த்துப் பொறாமையால் பேசியது என்று எனக்கு இப்போது தோன்றுகிறது. ஆனால் அப்போது... இரவெல்லாம் துடியாய்த் துடிப்பேன்.

''புதுப் பெண்டாட்டி மோகத்தில் பிள்ளையை அடியோடு மறந்துவிட்டார் என்று அப்பாவோடு சித்தியையும் சேர்த்து வெறுத்தேன். என்னைப் பார்க்கக் கூட வரவிடாமல் அப்பாவைச் சித்திதான் தடுத்துவிட்டாள் என்று எண்ணினேன். இந்த மாதிரி என்னை ஆட்டிப் படைக்கும் உரிமை யாருக்கும் கொடுக்கமாட்டேன் என்று அடிக்கடி சொல்லிக் கொள்வேன். திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்ற கொள்கையின் வித்து விழுந்தது அப்போதுதான்.

''முதலில் பெண்கள் என்றாலே பிடிக்காது. ஆனால் ஒரு பிராயம் வந்த பிறகு மனதில் வேறுவிதமான ஆசைகள் உண்டாயின... ...அது வயதின் இயற்கை என்று தோன்றியது.

மனோரஞ்சன் என்ன சொல்ல முனைகிறான் என்று புரிந்து, அவனை அறிந்து கொள்ளும் ஆவலை மீறிக் கொண்டு அவளுக்கு ஆத்திரம் உண்டாயிற்று. "எல்லோருக்கும்தான் வயதும் அதன் இச்சையும் தோன்றும். அதற்காக? பழைய கற்கால மனிதர்கள் போல நெறிமுறையற்று விருப்பம் போல உறவு கொள்வதா?" என்று சினந்தாள்.

"ஆசைகளை அடக்கிப் பழக்கம் இல்லை, சௌமினி." என்றான் அவன் தணிவாகவே.

அவள் தலையைத் திருப்பிக் கொண்டு பேசாதிருக்கவும் மேலும் தொடர்ந்தான் அவன். "அதனால் கொள்கையைக் கொஞ்சம் மாற்றிக் கொண்டேன். மணந்து கொண்டால்தானே உரிமையும் அதிகாரமும்? அந்த பந்தம் இல்லாமலே, தேவைப்பட்ட போது பழகிவிட்டு, வேண்டாதபோது விலகி விடுவது... உன்னைக் காணும் வரை அதேதான். கண்டபிறகும் முதலில் அதே எண்ணம்தான். அதனால்தான்...உ"

சிறு மவுனத்தின் பின், "உங்கள் அம்மா, பாட்டி... அவர்களும் பெண்கள் தானே? எண்ணிப் பார்க்கவே தோன்றவில்லையா?" என்று கேட்டாள் அவள். கொஞ்சம் குத்தல் குரல்தான்.

ஆனால், "என் அம்மா பற்றி எனக்கு என்ன தெரிய முடியும், சொல்லு." என்று மனோரஞ்சன் முன்னை விடத் தணிவுடனேயே பதிலளிக்கவும் அவளுக்கு ஒரு மாதிரியாகப் போயிற்று.

சற்று நேரம், பின் சீட் முழுமையும் தனதாக்கிப் பொம்மைகளைப் பரப்பி 'ஹீமேன், கட்! சோல்ஜர் ஷூட்,' என்று விளையாடிக் கொண்டிருந்த சித்தார்த்தனின் குரல் மட்டும்தான் காரில் கேட்டது.

கழிவிரக்கம் மிக, அவள் பேச்சிழந்து போய்விட, அவனே தொடர்ந்தான். "பாட்டி பழைய காலத்து ஆள். என்னை ஒத்தவர்களுடைய தாய்மார் போல நுனி நாக்கால் ஆங்கிலம் பேச அவர்களால் முடியாது. மற்றவர் பேச்சைப் புரிந்து கொள்ளவும் முடியாது.

சும்மாவேனும் எனக்காக வந்து, கஷ்டப்பட்டு, உட்கார்ந்திருந்து விட்டுப் போவார்கள். பாட்டி பாவம் என்று நினைக்க முடியுமே தவிர, அவர்களை ஓர் எடுத்துக் காட்டாகக் கருதிப் பெருமைப்பட முடியாது. அம்மா பற்றிப் பிறர் வாய் மொழியாக அறிந்ததில் முக்கியமானது, என் அப்பா அவர்களைத் தலைமேல் வைத்துக் கொண்டாடினார் என்பதுதான். அம்மா ஒன்று சொல்லி, அப்பா அதை மறுத்ததே கிடையாதாம். அப்படிப் போற்றி வாழ்ந்தவர், அம்மா மறைந்து ஆறு மாதத்திற்குள் மறு கல்யாணம் செய்து அடியோடு மாறி விட்டாரே என்று எல்லோருமே அங்கலாய்ப் பார்கள். இதைப் பற்றி நான் யோசித்து தீர்வுகண்ட விதம் - இந்த அப்பாவுக்கு யாராவது ஒரு பெண்ணைத் தலைக்குமேல் தூக்கி வைத்துக் கொண்டேயாக வேண்டும். நல்லவளோ, கெட்ட வளோ, அவள் இட்டதே அவருக்கு வேதம்! எல்லாப் பொது விதிகளுக்கும் ஒரு விதிவிலக்கு இருப்பது போலப் பெண்ணாக இருந்தும் என் அம்மா நல்லவர்களாக இருந்தது கடவுளுக்கே பொறுக்கவில்லை. சின்ன வயதிலேயே அழைத்துக் கொண்டார்... இப்படித்தான் நினைத்தேன்.'' என்றான் ஒரு பெருமூச்சுடன்

அந்தக் குடும்பம் 'சுந்தரவன'த்தை அடைந்த போது, சிதம்பர நாதர் இன்னமும் வீடு வந்து சேரவில்லை. தாயம்மாவைக் கூப் பிட்டு, சித்தார்த்தனுக்கு வேண்டியதைச் செய்யும்படி கூறி, அவ ளோடு மகனை அனுப்பிவிட்டு மனோரஞ்சன் சௌமினியை விடாப் பிடியாக அவனது அறைக்கு அழைத்துச் சென்றான்.

அலமாரியைத் திறந்து, தன் சிறு கைப் பெட்டியை வெளியே எடுத்தான். ''இந்தப் பெட்டி தெரிகிறதல்லவா?'' என்று கேட்டபடி திறந்து, ''பார்'' என்று பல படங்கள் காட்டினான்.

எல்லாமே அவனுடைய பெற்றோரின் படங்கள்தான். தாய் அல்லது தந்தை, அல்லது இருவருமாக என்று ஏழெட்டுப் புகைப்பட டங்கள். அதில் ஒரு படம், ஒரு பெரிய பொம்மையை நடுவில் வைத்து இருவருமே அதை அணைத்தாற் போல நின்று எடுத்திருந் தனர். அந்தப் பொம்மையின் மேல் 'மனோரஞ்சன்' என்று சிறு

பிள்ளையின் உருட்டு எழுத்துக்களைப் பார்க்கவும் சௌமினியின் கண்களில் நீர் தளும்பி விட்டது. இதை எழுதியபோது மனோரஞ்ச னுக்கு ஐந்து அல்லது ஆறு வயது இருக்கக் கூடுமா? அந்தப் பிஞ்சு வயதில் என்னமாக ஏங்கி இருக்கிறான்!

நல்ல வேளையாக சித்தார்த்தனுக்கு இந்த மாதிரி ஏக்கங்கள் எதுவும் நேராது!

சற்றுப் பழைய, ஆனால் அழகிய தங்கநிற வேலைப்பாட்டு டன் கூடிய 'லேடி ஷீஃபர்' பேனா ஒன்று இருந்தது. "இது அப்பா அம்மாவுக்குக் கொடுத்ததாம்." என்றான். ரொம்பப் பழையதான டவல் ஒன்றைக் காட்டி, "அப்பாவுடையதாம். பழைய துணியா கப் பயன்படுத்திக் கொண்டு இருந்தபோது வேலைக்காரர் பேச் சில் விவரம் தெரியவும் எடுத்து வைத்தேன்." என்று அவன் சொல் லச் சொல்ல சௌமினியின் நெஞ்சில் பாரம் ஏறிக் கொண்டே வந்தது. ஒரு குட்டி டப்பாவைத் திறந்து, "அம்மா ரூம் கண்ணாடி யில் இந்த ஒட்டுப் பொட்டு இருந்தது. அம்மாவுடையதாகத் தானே இருக்கும் என்று எண்ணி எடுத்து வைத்தேன்." என்று ஒரு "மெ ரூன்" கலர் வட்டத்தைக் காட்டவும், அதற்கு மேல் தாங்கமாட்டா மல், "போதும், ரஞ்சன்," என்று அவன் கையைப் பற்றித் தடுத் தாள். "அப்போது பட்டது போதாதா? இன்னமும் ஏன் வருத்திக் கொள்கிறீர்கள்?"

தன் கரத்தைப் பற்றியிருந்த கையின் மீது நெற்றியைப் பதித்து மனோரஞ்சன் சற்று நேரம் பேசாமல் இருந்தான். பின்னர் ஒரு பெருமூச்சுடன் நிமிர்ந்து, "நீ சொல்வது சரிதான். ஆனால் இந்தப் பெட்டியில் துயர ஞாபகார்த்தங்கள் மட்டுமே நான் வைத்திருக்க வில்லை பார், இது நான் பள்ளியில் முதல் முதலில் வாங்கிய பரிசு. ஓட்டப் பந்தயத்துக்கு இது..." என்று சிலது காட்டிவிட்டு, "சௌ மினி," என்று ஓர் ஆழ்ந்த குரலில் அவளை அழைத்தான்.

"என்ன?"

அவள் கையைப் பற்றித் திருப்பி, அந்தச் சிறு நகை டப்பாவை வைத்து அழுத்தி, "இது உன்னுடையது. எந்தவித அர்த்தமும்

இல்லாமல் வெறும் நகையாகவேனும் இதை நீ வைத்துக் கொள்ள வேண்டும்.'' என்று கேட்டான்.

மனம் நெகிழ்ந்திருந்த நிலையில் ஒரேயடியாக மறுக்க மாட்டாமல், ''நான் இதை அணியப் போவது இல்லை எனும்போது இது என்னிடம் இருப்பானேன்? உங்களிடம் இருந்தாலாவது...'' என்றவளை மனோரஞ்சன் இடைமறித்தான்.

''எனக்கு மட்டும் எப்படிப் பயன்படும் என்கிறாய்? உன் நிபந்தனை உனக்கே மறந்து விட்டதா? பார் சௌமி, இதை நீ இன்னோர் அணிமணியாக உன் உடமைகளோடு வைத்துக் கொண்டாலும் சரி; அது கூடப் பிடிக்காமல் தூக்கித் தூர எறிந்தாலும் சரி; உன் விருப்பம்.'' என்று கூறி கைப் பெட்டியை மூடி எடுத்துச் சென்று விட்டான்.

சௌமினி அந்த நகையை வைத்திருந்தாளா, அல்லது தூக்கி எறிந்து விட்டாளா என்று மனோரஞ்சன் ஒரு நாளும் கேட்கவில்லை.

ஆனால் அந்தச் சமயத்தில் மறுக்கமாட்டாமல், அவ்வளவு விலை மதிப்புள்ள பொருளை எங்கோ சும்மா போட்டு விட்டுப் போகவும் முடியாமல் எடுத்துச் சென்றவளுக்கோ, அந்த நகை ஒரு சுமையாகிப் போயிற்று அதை அவள் கழுத்தில் அணியாத போதும்.

அந்தக் கைப் பெட்டியில் இருந்த பொருட்கள் மனோரஞ்சனை எந்த அளவுக்குப் பாதித்தவை அவனுக்கு எவ்வளவு முக்கியமானவை என்று அறிந்த பிறகு, அதே பெட்டியில் இருந்த கழுத்தணியின் முக்கியத்துவமும், அதன் மூலம் அவள் மேல் அவனுக்கு இருந்த நேசத்தின்... அல்லது காதலின் அளவும் அவளுக்குப் புரியவர, அவள் மனம் அப்படியே உருகிப் போயிற்று. சௌமினி என்ற கையெழுத்துக்காகவே மின்னியின் கடிதத்தை பத்திரப் படுத்தி வைத்திருந்ததாக அவன் கூறியதையும் கூட ஒத்துக் கொள்ள முடிந்தது. இத்தகைய அன்பை விலக்கி நிறுத்தியிருப்பது பெரும்பிழை என்று அவள் மனம் ஒருபுறம் பயங்கரமாக

இடிக்க, அறிந்தே குற்றம் புரிகிறவள் போல அவளுள் ஒரே உறுத்தல்!

ஆனால் அதே சமயம், மனோரஞ்சன் என்னதான் சமாதானம் சொன்னாலும், மின்னியோடு அவன் உறவாடியதையும் அவளால் ஒத்துக் கொள்ளவே முடியவில்லை. அவளைப் போல்வே இன்னுமோர் அழகான பெண் அவன் மேல் விழுந்து பழக முயன்றிருந்தால் அப்போது அவன் தவறு செய்திருக்க மாட்டான் என்றோ, இனி அப்படிப் பழக முன்வந்தால் தவறு செய்யமாட்டான் என்றோ என்ன நிச்சயம்? அவளிடம் மனோரஞ்சன் எவ்வளவு அன்பு கொண்டிருந்த போதும், எப்போது ஒருதரம் அவனால் இன்னொருத்தியைத் தொட முடிந்ததோ, அதன் பொருள், அவனுக்கு உடலும் மனமும் தனித்தனியாக இயங்கக் கூடும் என்பது தானே? மீண்டும் அது நடவாது என்று எப்படி உறுதி கொள்வது? முடியாத காரியம்.

ஆனால், அலமாரியைத் திறக்கும் போதெல்லாம், அந்த நகைப் பெட்டி அவள் கண்ணில் பட்டுவிட, உடனேயே மனம் இரு கூறாகிப் போரிடத் தொடங்கவும், அந்தப் பெட்டியின் மேல் ஒரு சேலையைப் போட்டுக் கண்ணுக்கு மறைத்து, அதைப் பற்றி நினையாதிருக்க முயன்றாள்.

அந்தக் கோவைப் பயணத்தின் விளைவாக இன்னொரு நன்மையும் உண்டாயிற்று.

மனதில் இருப்பதை எந்தவிதத் தடையும் இல்லாமல் மனைவியிடம் கொட்டுவது மனோரஞ்சனுக்கு இயல்பாயிற்று. கணவனிடம் கண்ணில் விளக்கெண்ணை விட்டுக் குற்றம் கண்டுபிடிப்பதைச் சௌமினியும் விட்டுவிடவே, இருவரும் சாதாரணமாகப் பேசிச் சிரித்துப் பழகத் தொடங்கினார்கள்.

மழை இல்லாதபோது, காலை வேளைகளில் கட்டாயமாக 'வாக்கிங்' போனார்கள். மாலையில் மனோரஞ்சன் வீடு திரும்பிய பின் மகனோடு விளையாடினார்கள். லீவு நாட்களில் அங்கே, இங்கே என்று 'பிக்னிக்' சென்றார்கள்.

சிறுவயதில் இருந்து தான் ரசித்தவற்றை எல்லாம் மனைவிக் குக் காட்டி அந்த மகிழ்ச்சியை அவளோடு பகிர்ந்து கொண்டான்.

'சுந்தரவனம்' இருந்த வளைகுடாப் பகுதியின் தெற்கு முனை யில் இருந்த பாறைக் கூட்டம்தான் மனோரஞ்சனுக்கு மிகவும் பிடித்தமான இடம். அந்தப் பாறைகளின் மேல் அலைநீர் மோதி மோதி உருவாகியிருந்த வடிவங்களும், அவற்றுக்கு மனோரஞ் சன் கொடுத்த விளக்கங்களும் சௌமினியை மிகவும் கவர்ந்தன. எல்லாவற்றிலும் உயர்ந்த பாறை, 'சுந்தரவன'த்துத் 'தொட்டபெட் டா'வாயிற்று. யானைப்படை, திமிங்கிலம்... என்று பல. கடல்நீர் குடைந்து, குகைபோல ஓர் அமைப்பும், சற்றுதூரம் அந்தக் குகைக் குள் சென்றால், அதன் பின் குகை அகன்று, மையத்தில் ஒரு பீடமும் காட்டினான். "இது தான் என் சிம்மாசனம். வெளியே இருந்து பார்த்தால் தெரியாது. எனக்குப் பிடித்ததைச் சாதிக்க வேண்டுமானால் இங்கே வந்து உட்கார்ந்து கொள்வேன். கார் ரேசில் கலந்து கொள்ளத் தாத்தாவின் சம்மதத்திற்காக இங்கே இரண்டு நாட்கள் இருந்தேன்" என்றான்.

மேலிருந்து, பாறை இடுக்குகளின் வழியே காற்றும் வெளிச்ச மும் வர, அலைநீர் அடித்து வந்த பொன்மணல் பரப்பில் அகல மாய் அந்தப் பீடம் மிக அழகாகவே இருந்தது. அதை அவள் சொல்லவும் அவன் முகம் மலர்ந்தது.

ஒத்த மனமுடைய நண்பர்களாகப் பழக முடிந்தது, இருவருக் குமே நன்றாகத்தான் இருந்தது. சில சமயங்களில், அவன் எதிர் பாராத வேளைகளில் பார்க்க நேர்ந்தபோது அவனது கண்களில் தென்பட்ட பாவம் மட்டும் இல்லை என்றால், அவனிடம் சௌ மினி மீண்டும் நீச்சலைக் கூடக் கற்கத் தொடங்கியிருப்பாள்.

ஆனால், சும்மா இருக்கிற சிட்டுக் குருவிக்குச் சோற்றைப் போடுவானேன்? அது கொண்டையைக் கொண்டையை ஆட்டிக் கொண்டு கொத்த வருவானேன்? என்ற பழமொழிக்கிணங்க, ஏதேனும் செய்து இப்போதைக்கு நன்றாயிருக்கிற உறவைக் கெடுத்துக் கொள்ள வேண்டாம் என்ற அபிப்பிராயம் அவளுக்கு.

**ஏனெனில், இந்த நிலைக்கு மேல் அவனோடு எந்தவித நெருக்க மும் கொள்ள அவள் தயாராக இல்லை.**

எப்போதேனும், பெரிய அலைவரும் போதோ அல்லது பாறைகளூடே நடக்கும் போதோ, வழி காட்டும் முகமாக சௌமி னியின் கரத்தை மனோரஞ்சன் பற்றிச் செல்வது உண்டு. அவசியம் தீர்ந்த பிறகும் அவன் கை லேசில் அவளை விட்டு அகலாது. இது அவளுக்கும் இதமாகவே இருந்தபோதும், வேறு ஏதாவது கவ னம் போல அவள் மெல்ல நகர்ந்து விடுவாள். முன்போல, சூழ்ச்சி சதி என்று குறிப்பது இல்லை. அவனது பிழையை மன்னிக்கவோ, மறக்கவோ அவளால் முடியாமல் போனாலும், அதற்காகத் தொடர்ந்து அவனை துன்புறுத்தவும் அவளுக்கு மனமில்லை. சின் னஞ்சிறு பிராயத்திலிருந்து அவன் அனுபவித்த வேதனைகள் எத் தனையோ பிறவிகளுக்குப் போதும் பாவம்!

மனோரஞ்சன் தன் தாத்தாவுடன் கோவைப் பயணம் பற்றிப் பேசியதன் அடையாளமாகச் சிதம்பர நாதர், பேரன் மனைவியி டம் தன் மகளைப் பற்றிப் பேசினார். ''பூரணி இப்படி ஒரு வேலை செய்திருக்கக் கூடும் என்று யோசியாமலேயே இருந்து விட்டே னம்மா. மாப்பிள்ளையைப் பார்த்தாலே, மனோவைப் பறித்துப் போய்விடுவாரோ என்று... ச்சு. எல்லோருக்கும் அனாவசியமான வேதனை... எப்படியோ அது முடிந்த கதை. திருமணத்துக்கு நானும் வரலாம் என்று இருக்கிறேன்.'' என்றார் அவர்.

அவர் சொல்லாமல் விட்டதை ஊகித்து உணர்ந்த சௌமி னிக்கு, அன்றையச் செயல்களுக்காக வருந்தும் இவரைப் பார்க்க வும் பாவமாகத்தான் இருந்தது.

சற்றுத் தலையைக் குலுக்கிப் பழைய நினைவுகளை ஒதுக்கி, மீண்டும் அவளிடம் திரும்பினார் அவர். ''நான் உன்னிடம் இன் னொன்று சொல்ல வந்தேனம்மா. மனோ நன்றாகி விட்டதால், உன்னையும் சித்துவையும் இந்தப் பக்கம் அறிமுகப் படுத்த வென்று ஒரு பார்ட்டி வைக்கவேண்டும்... என்று தொடங்கி விவரம் சொன்னார்

அந்த விருந்தில், ஊர்வசி என்ற பெண்ணைச் சௌமினி சந்திக்க நேர்ந்தது. அழகில் அந்தத் தேவலோக ஊர்வசியை ஒத்திருந்த இந்தப் பூவுலக ஊர்வசி, ஊசியாகவே சௌமினியின் நெஞ்சில் தைத்தாள்.

## 20

சுந்தரவனத்துக்கு வந்ததிலிருந்து, சௌமினிக்கு அவ்வப்போது ஒரு யோசனை. பெரும் விபத்துக்குள்ளாகி அரும்பாடு பட்டுப் பிழைத்திருக்கும் மனோரஞ்சனைப் பார்க்க என்று யாருமே ஏன் வரவில்லை? விபத்து பற்றித் தெரியாதிருக்குமோ என்று எண்ண வழியில்லை. தொழிலைப் போட்டுவிட்டுக் கிட்டத் தட்ட ஒருமாத காலம் சிதம்பரநாதர் பேரன் அருகிலேயே கிடந்திருக்கிறார். எல்லோரையும் தூர நிறுத்துகிற மாதிரிப் பந்தாவும் கிடையாது. பின்னே?

எப்போதேனும் இப்படி யோசிப்பதும், அன்றாட வாழ்வின் பரபரப்பில் அதை மறந்துவிடுவதுமாக இருந்தவளுக்குச் சிதம்பர நாதர் விளக்கம் கொடுத்தார்.

மனோரஞ்சனின் உடல்நிலை பற்றி விசாரிப்பதற்காக, ஓயாது ஒலித்த டெலிபோனில் விவரம் சொல்வதற்காகவே தனியாகவே ஓர் ஆளை நியமித்திருந்தார். விசாரித்தவர்கள் அத்தனை பேரையும் மீண்டும் அழைத்து, அவர்கள் காட்டும் அக்கறைக்கு நன்றி செலுத்திவிட்டு, பேரனின் உடல்நிலை நன்றானதும் தானே தெரிவிப்பதாகவும், அதுவரை நேரில் வருவதைத் தள்ளிப் போடுமாறும் பணிவன்புடன் கேட்டுக் கொண்டிருந்தார்.

சக்தியற்றுக் கிடக்கையில் தன்னை யாரும் பார்ப்பது மனோ ரஞ்சனுக்குப் பிடிக்காது என்பதோடு, அப்படி வருகிறவர்களுக்குச் சௌமினியும், சித்தார்த்தனும் சுவையான அவலாகி விடக்கூடாது என்ற எண்ணமும் அவருக்கு இருந்தது.

பெரியவரான அவரது வேண்டுகோளுக்கு இணங்கியே இது வரை யாரும் இந்தப் பக்கம் வந்து மூக்கை நீட்டவில்லை.

ஆனால் இந்த வீட்டு விஷயங்கள் அக்கம் பக்கம் தெரியாமல் இராது. மனோ, குடும்பத்தோடு காரில் சென்று வந்ததும் மற்றவர் கண்ணில் பட்டுத்தான் இருக்கும். இளப்பமான கட்டுக் கதைகள் ஏதும் பரவுமுன் அதைத் தடுத்துவிடவே இந்த ஏற்பாடு. அவர் வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்தவர்களுக்கு அவர் செய்ய வேண்டிய மரியாதையும் கூட.

பூரணியின் திருமணத்துக்குக் கிளம்புமுன், இந்த விருந்தை முடித்து விட்டுச் சில தினங்கள் ஓய்வெடுத்துக் கொண்டு செல்ல வேண்டும் என்றும் பெரியவர் நினைத்திருந்ததால் மறுவாரம் 'பார்ட்டி' வைக்க வேண்டும் என்றார்.

ஒரு விருந்து என்கிற அளவில், இது வேண்டும், வேண்டாம், என்று சௌமினிக்கு எதுவும் தோன்றாத போதும், அங்குள்ள மற்ற குடும்பங்களைச் சந்திக்க விருப்பமாகத்தான் இருந்தது

இங்குதான் வாழ்க்கை என்று ஆன பிறகு, அக்கம் பக்கம் எப்படி என்று அறிவதும், அவர்களோடு நல்ல உறவு கொள்வதும் அவசியம் தானே? முக்கியமாகச் சித்துவுக்குத் தகுந்த நண்பர்கள் வேண்டுமல்லவா?

எனவே சௌமினியும் விருந்தை ஆவலுடன்தான் எதிர் நோக்கினாள்

மேஜை நாற்காலிகள், ஒளி விளக்குகள் அமைப்பு, பின்னணி இசை, உணவு வகை, அவரவர் உடை என்று பாட்டனும் பேரனு மாகத் திட்டமிடும் போது அவளையும் உடனழைத்துக் கொண்ட

னர். அவளுக்கும் பயிற்சி தேவைதானே அவளது சில யோசனைகள் ஏற்றார்கள். அல்லது காரணத்தை விளக்கி மறுத்தார்கள். காரணம் நியாயமானதாக இருக்கவே அவள் அந்த மறுப்பில் வருத்தப்படவில்லை.

பரபரப்பும் விறுவிறுப்புமாக நாட்கள் சென்று மறைய, விருந்து நாளும் விடிந்தது. மற்றவர்கள் பேசுகிற முறைக்குத் தக, எப்படிப் பதில் கூற வேண்டும் என்று சித்தார்த்தனுக்கு மீண்டும் ஒருதரம் நினைவு படுத்தினார்கள் சௌமினிக்கும் சில ஆலோசனைகள் உண்டுதான்.

கிளிப் பச்சையில் ஜரிகை வேலைப்பாடுகளுடன் கூடிய சேலை சௌமினிக்கு. பொருத்தமாகத் தங்கத்திலேயே அழகிய வேலைப்பாடமைந்த நகைகள். ஷாம்பு தேய்த்துக் குளித்து கூந்தலைப் பக்கவாட்டில் உயரத் தூக்கிப் பின் மாட்டி, தளரப் பின்னி, சரம் சரமாகத் தொங்கும்படி நிறையப் பூவும், மிதமான முக ஒப்பனையுமாகக் கண்ணாடியில் பார்க்கும்போது நன்றாக மிக நன்றாக இருப்பதாகவே சௌமினிக்குத் தோன்றியது.

உண்மையும் அதுதான். அந்தப் பச்சையும் தங்கமும் அவள் உடலில் பிரதிபலித்து ஒளிவிட அவளே தங்கத்தில் வார்த்து எடுத்த பொற்பாவையாகவே திகழ்ந்தாள்

அலங்கரித்துக் கொண்டு அவளது தனியறையை விட்டு வெளியே வந்தவளைப் பார்த்த மனோரஞ்சனுக்குச் சற்றுநேரம் பேசவே முடியவில்லை. தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள அவன் பெருமுயற்சி செய்தது வெளிப்படையாகவே தெரிந்தது. இலகுவாகப் பேச முயன்று, "எத்தனைபேர் மயக்கம் போட்டு விழப் போகிறார்களோ?" என்று கூறி உதட்டால் மட்டுமாய் முறுவலித்தான்.

பளபளவென்று அலையலையாகப் படிந்திருந்த கேசத்திலிருந்து, அவனது சிலைபோன்ற முக அமைப்பும், அவள் அண்ணாந்து பார்க்கும் அளவான உயரமும், மடிப்பு கலையாத உடை

யும், சௌமினியையும் பாதித்து தான் இருந்தன. அதை மறைக்கும் முயற்சியாய், அவனைப் போலவே அவளும் பேச முனைந்தாள். "அவ்விடம் மட்டும் எப்படியாம்? பெண்கள் அத்தனைபேரும் உங்களையே சுற்றி வரப்போகிறார்கள், பாருங்கள்!" என்று புன்னகை புரிய முயன்றாள்.

அதற்குள் சுதாரித்து விட்டவன், பெரிதாகப் பெருமூச்சு விட்டு, "அத்தனை பேர் எதற்கு? ஒரே ஒருத்தி சுற்றிவந்தால் போதுமே!" என்று கேலிக் குரலில் பதில் தந்தான்.

"ம்ஹூம்? அந்த ஒருத்திக்கு எப்போதும் நேர்வழி நடந்து தான் பழக்கமாம். சுற்றத் தெரியாதாம்."

"அடேயப்பா! இம்மி விட்டுக் கொடுத்து விடக்கூடாதே! பேச்சில்கூட?"

"இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்குகிறவர்கள் இருக்கும் இடத்தில் எச்சரிக்கையாக இருந்தால் தானே பிழைக்க முடியும்?" என்று அவள் முடித்தபோது இருவருக்குமே சிரிப்பு வந்தது.

சற்றுமுன் இருந்த இறுக்கம் மாறி இருவருமே புன்னகையுடன் வெளியே வந்தனர்

எறும்புக் கூட்டம் போல, மலையாளமும் தமிழும் பேசிக் கொண்டு, கடைசி நேரவேலையாக எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தித் துடைத்து சுத்தம் செய்து முடித்துக் கொண்டிருந்தவர்கள், வேலை முடியவும் ஒருபுறமாகச் சேர்ந்து நின்றனர். மேஸ்திரி போல இருந்து, அவர்களை வேலை வாங்கியவனைச் சிதம்பரநாதர் அருகில் அழைத்தார். "சாவடியில் பிரியாணி செய்து வைத்திருக்கிறது. எல்லோரும் சாப்பிட்டு விட்டுப் புதுத்துணியும் வாங்கிக் கொண்டு போங்கள் காலையில் நாலைந்து பேரோடு சுத்தம் செய்யவா " என்று கூறி அனுப்பினார்

அனைவருமே மனோரஞ்சனிடமும், கூடவே நின்ற அவளி டமும் சந்தோஷச் சிரிப்புடன் கும்பிட்டு விடை பெற்றுக் கொண்டு போனார்கள்.

எல்லோரும், தொழிற்சாலையில் பணிபுரிகிறவர்கள் என்ப தைச் சௌமினி அறிவாள். ஏனெனில் அவர்களைத்தான், கடைசி நேரவேலைக்கு வரச் சொல்லியிருந்தது; அவர்களுக்குப் புதுத் துணி, சாப்பாடும் ஏற்பாடாகி இருந்தது. ஆனால் இந்தத் துணி மணி பற்றி அறியுமுன்பே எல்லோரும் முக மலர்ச்சியுடனேயே ஆர்வமாய் வேலை செய்தது அவளுக்கு அதிசயமாய் இருந்தது.

அதுபற்றிக் குறிப்பிட்டபோது, மனோரஞ்சன் விளக்கினான். "யூனியன் பரிந்துரை செய்கிற சம்பளம் முழுசாகக் கொடுப்பது நாம் மட்டும்தான். அத்தோடு, தொழிலாளர் வீட்டு நல்லது, கெட்ட துக்கும் தாராளமாகச் செய்வது, முதலிலிருந்தே தாத்தாவின் வழக் கம். அதனால், எல்லோரும் உள்ளூரப் பாசத்துடனேயே பழகு வார்கள்." என்றான் அவன்.

எல்லோருக்கும் இவ்வளவு செய்கிறவர், அனாவசியமாய், மருமகளை மட்டும் விலக்கி, அவரையும் நோகடித்து, பேரனை யும் வருத்தித் தானும் நொந்தாரே என்று எண்ணினாள் சௌமினி.

உணவுப் பொறுப்பை ஒரு பெரிய 'கேட்டரிங்' கம்பெனியி டம் ஒப்படைத்திருந்தார்கள். அவர்கள், உரிய நேரத்தில் வந்து சேர்ந்து, சூடு பண்ணுவதும், பிரிஜ்ஜில் வைப்பதுமாக அவர்கள் வேலையைத் தொடங்கினார்கள்.

விருந்தாளிகள் வீட்டை நெருங்குவதன் அறிகுறியாக, தூரத் தில் கார் வரும் ஓசை கேட்கவும் சௌமினிக்கு தன்னை மீறி உள்ளூர இறுக்கம் படர்ந்தது. வருகிறவர்கள் எல்லாம் பல ஆண்டு காலமாக இந்தக் குடும்பத்தோடு சமநிலையில் நின்று பழகுகிறவர் கள். இவர்கள், சௌமினியைத் தங்களுள் ஒருத்தியாக ஒப்புக் கொள்வார்களா?

அவளையே கவனித்துக் கொண்டு இருந்தவன் போன்று, 'சௌமி, நாம் நேசக்கரம் நீட்டுகிறோம். ஏற்றால் மகிழ்ச்சி, ஏற்கா

தவர்கள் எந்தவிதத்திலும் நம் வாழ்வைப் பாதிக்க முடியாது. இதற்குப் போய் அனாவசியமாய் ஏன் இந்தக் கலக்கம்?'' என்று மனோரஞ்சன் கனிவோடு கடியவும், சௌமினி மீண்டும் நிம்மதியுற்றாள்.

வந்தவுடனேயே அமர்ந்து பார்க்கும் விதமாக, ஒருபுறமாய் ஓர் அரங்கம் அமைத்து, கொஞ்ச நேரம் இன்னிசை, கொஞ்ச நேரம் விகடம், கடைசியாக மாஜிக் ஷோ என்று நடத்த ஏற்பாடு செய்திருந்தார்கள்.

விருந்தினர்கள் வரவர, அறிமுகத்தை முடித்துக் கொண்டு, அழைத்துப் போய் அரங்கத்தில் அமர வைத்தார்கள்.

வந்த முதல் குடும்பத்திலிருந்து, வரிசையாக ஒவ்வொரு குழுவிலிருந்தும் குறைந்த பட்சமாய் ஒருவரேனும் கட்டாயமாகக் கேட்ட கேள்வி, 'ஊர்வசி வந்துவிட்டாளா?' என்பதுதான். ''டூரி'லிருந்து நேற்றுத் தான் திரும்பி வந்ததாகக் கேள்வி...''

ஒவ்வொரு தரம் வினா எழும்போதும், கேலி, கிண்டல், குத்தல், குறும்பு அதிகப்படி ஆர்வம் என்று இத்தகைய உணர்ச்சிகளை கேட்பவரோடும் சூழ இருந்தோர் முகத்திலும் காணவும், அடுத்துக் கிடைத்த சிறு தனிமையில், ''யார் அது?'' என்று மனோரஞ்சனிடம் சௌமினி விசாரித்தாள்.

''எது, யார்?''

''அதுதான்; எல்லோரும் கேட்கிறார்களே, ஊர்வசி என்று...'' என்று விடாமல் கேட்டாள் அவள்.

''பக்கத்து எஸ்டேட் பெண்... அடுத்து வருகிறவர்களைக் கவனி?''

அந்த ஊர்வசியை பற்றி மனோரஞ்சன் பேச விரும்பவில்லை என்பது விளங்கவும் சௌமினிக்கு ஒரு மாதிரி இருந்தது. இதன் பொருள், ஒரு காலத்தில் இந்த ஊர்வசியும் இவனும் ஒன்றாக அலைந்தவர்கள் அதுதானே? இவனது கடந்தகாலம் அறிந்த பிறகு இதில் வருத்தப்பட என்ன இருக்கிறது?

சுற்றிலும் ஒளி மழுங்கினாற்போல அவள் உணர்ந்த போது, தானே ஓர் ஒளி விளக்கு போலப் பளபளத்தபடி அந்த ஊர்வசியே வந்து சேர்ந்தாள். தூய வெண்ணிற ஷிபானில் இறுக்கமாகத் தைக்கப்பட்டிருந்த மேல் உடல் பகுதியிலும், முழுக்கையிலும் வெள்ளி சரிகை வேலை பளபளத்தது. கீழே விரிந்து, நடக்கையில் அலை அலையாகத் துள்ளி விழும்படி தைக்கப்பட்டிருந்த ஆடையில் அங்கங்கே கிறிஸ்டல் மணிகள் அவளது ஒவ்வோர் அசைவிலும் வண்ண ஜாலங்களை வாரி இறைத்தன. இது போதாதென்று, கழுத்தை ஒட்டி ஒரு வைர மாலை வேறு.

நாம் என்னவோ அழகாக இருப்பதாக நினைத்தோமே என்று சௌமினிக்குக் குன்றிவிட்டது.

அவளோடு கூடவே, நடுத்தர வயதில் ஒருவர் வந்து, தன் பெயர் சுசீந்திரன் என்று சௌமினியிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார் 'என் மகள்...'' என்று கூறித் திரும்பிப் பார்த்தால் பக்கத்தில் மகளைக் காணோம். அவள் அங்கே மனோரஞ்சனின் தோளைப் பற்றி, எம்பி, அவன் கன்னத்தில் முத்தமிட்டுக் கொண்டிருந்தாள்.

வந்தவர்களில் அதி நாகரீகமாகவும் நாலைந்து பேர் இருக்கத் தான் செய்தார்கள் ஆனால், அவர்களில் யாரும் மனோரஞ்சனை இப்படி அணுகவில்லை! இவள்....

''சின்ன வயதிலிருந்து சேர்ந்து வளர்ந்தவர்கள், மகளே... என்று சுசீந்திரன் சமாதானம் போலக் கூறவும், சௌமினி முயன்று தன் முகத்தைச் சீர்படுத்திக் கொண்டாள்.

''என்ன அங்கிள், எல்லோரையும் விடப் பக்கத்தில் இருந்து கொண்டு இவ்வளவு லேட்?'' என்று வினவினான் மனோரஞ்சன்.

''பெட்டர் லேட் தன் நெவர்'' என்று சிரித்த விட்டு, ''ஊர்வசி தயாராகி வந்த மறு வினாடியே கிளம்பி வந்தோமப்பா.'' என்று விவரம் கூறினார்

ஊர்வசி திரும்பி நின்று, சௌமினியை ஏற இறங்கப் பார்த்து விட்டு, ''இந்த மாதிரிச் சேலை என்றால் நிமிடத்தில் சுற்றிக் கொண்டு வந்து விடலாம். என்று உதட்டைப் பிதுக்கினாள்.

அழைத்தவர்கள் எல்லோரும் வந்துவிட்ட பிறகு, அரங்கத்தில் மாஜிக் ஷோ முடிந்தபின், சிதம்பரநாதர் மேடையில் ஏறினார். மனோரஞ்சனும், சௌமினியும், சித்தார்த்தனும் கூட அவரோடு நின்றார்கள்

மைக்கில், தன் அழைப்புக் கிணங்கி வந்தமைக்கும், மனோரஞ்சன் உடல் நலமின்றிப் படுத்திருந்தபோது தன் வேண்டுகோளுக் கிணங்கி வராமல் இருந்தமைக்கும் அவர்கள் அனைவருக்கும் சிதம்பரநாதர் முதலாவதாக நன்றி செலுத்தினார். அடுத்து அவர்களுக்குத் தன் பேரனுடைய மனைவியையும், மகனையும் பெருமையோடு அறிமுகப் படுத்தினார். இன்றுவரை இந்த நட்புக் குடும்பங்கள், அவருக்கு அளித்து வந்த ஒத்துழைப்பையும், பாசத்தையும், தொடர்ந்து தரவேண்டும் என்று வேண்டிக் கொண்டு எல்லோரையும் விருந்துண்ண அழைத்தார்.

சிதம்பரநாதர் முன்பே சொன்னது போல, சௌமினி, சித்தார்த்தன் பற்றிய வதந்திகள் எல்லோர் காதையும் எட்டித்தான் இருந்தன. உண்ட சோறு செரிக்க உருண்டு புரள்கிறவர்கள் ஆயிற்றே! கண் காது வைத்து எத்தனையோ கதைகள் உண்டு தான். எல்லாவற்றையும் விண்டு அறிந்து கொள்ள அனைவருக்குமே ஆசைதான். ஆனால், அந்தப் பகுதியில் மதிப்புக்குரிய பெரியவரான சிதம்பரநாதர் வாய் திறந்து கேட்டுக் கொண்டபிறகு, அதை அலட்சியப் படுத்தவும் யாருக்கும் மனமோ, துணிவோ வரவில்லை. எனவே எல்லோரும் பல்லைக் கடித்துப் பொறுத்திருந்தனர்

முதலில், மனோரஞ்சன் அருகில், விளக்கிய வெண்கலக் குத்து விளக்குபோல் நின்று கொண்டிருந்த சௌமினியைக் கண்டதும் வதந்'தீ'யின் தகிப்பு கொஞ்சம் தணிந்தது. அறிமுகத்தின் போது, 'புரோகே'டில் 'ஷெர்வானி'யும் ஒற்றைவட முத்துமாலை

யும் அணிந்து, ''ஹல்லோ. ஐயாம் சித்தார்த்தன்.'' என்று பச்சரிசிப் பல்லைக் காட்டி அழகாகக் கரம் குவித்த சிறுவனைக் கண்டதும் கூடவே அவனிடம் மனோரஞ்சனின் சாயலைக் காணவும், பெரும்பாலும் எல்லோரும் இளகிப் போயினர். அதிலும் மற்றவரைக் கவர்வது சித்துவுக்குக் 'கருவிலே திருவுடைத்து' என்பது போலப் பிறப்பிலேயே இயல்பான ஒன்று ஆயிற்றே!

ஆனால், எதற்கும் இளகாத கருங்காலிக் கட்டைகளும் உண்டு. அப்படிச் சிலர், சௌமினி அருகில் இருப்பதை அறியாதவர்கள் போல, வேண்டுமென்றே கடந்த காலம் பற்றிப் பேசினர். சித்தார்த்தனின் பிறப்பு, திருமணத்துக்கு முந்தியதா, பிந்தியதா என்று ஆராய்ந்தனர். 'இலவு காத்த கிளி' போல ஊர்வ்சி ஆனது குறித்து எக்களிப்போடு பரிதாபப்பட்டனர். ஆனால் பெரும்பாலும் மனோரஞ்சனோ, சிதம்பரநாதரோ சௌமினியின் அருகிலேயே இருந்ததால் இது அதிகம் நடக்கவில்லை.

ஆனால் ஊர்வசி அங்கேயே சுற்றிச் சுற்றி வந்தாள். நாகரீகம் கருதி மற்றவர்கள் விட்'-தை எல்லாம் துளைத்துத் துளைத்துக் கேட்டாள்!

திருமணம், சித்தார்த்தன் பற்றிய கேள்விகளைச், ''சின்னப் பெண்ணாய் லட்சணமாய்ப் பேசு'' என்று பெரியதனமாய்ச் சிதம்பரநாதரும், ''அனாவசிய மூக்கு நுழைப்பு ஊசி. பிறகு முனை உடைந்து விடும்.'' என்று கேலி போல மனோரஞ்சனும் அடக்கிவிடவே, படிப்பு, வளர்ப்பு பற்றிக் கிண்டினாள்.

எல்லோரும் கலந்து பேச வசதியாக இருக்கட்டும் என்று 'பஃப்பே' முறையில் உணவுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். நிறையப் பேர் வந்து சௌமினியிடம் நல்லவிதமாய் பேசிவிட்டும் போனார்கள். ஆனால், அதிலும் ஒரு தீமையாக ஊர்வசியை விலக்க முடியாது போயிற்று.

கேலி, கிண்டலாக, ஊர்வசிய்யை ஊசி என்பது அங்கு பழக்கம் போல, ஒரு சிலர், ''இன்னமும் இங்கென்ன வேலை, ஊசி தைப்ப

தற்கு வேறிடம் பார்." என்று அவளிடமும், "ஊசி குத்தாமல் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று சௌமினியிடமும் சொல்லிச் சிரித்தார்கள்.

யாரோ, சௌமினியை சிலாகிப்பதாக, "மனோவின் ருசி எப்போதுமே உயர் ரகம்தான். இப்படி ஓர் அருமையான பெண் ணைத் தேடிப் பிடித்து மணந்து கொண்டிருக்கிறானே!" என்று கூறவும், மனோரஞ்சன் சட்டைக் காலரைத் தூக்கி விடுவது போலப் பாவனை செய்ய அருகில் நின்றவர்கள் எல்லோரும் நகைத்தனர்.

"யோசியாமல் கோணல் பண்ணுகிறீர்களே!" என்று கடிந்த படி அவன் தூக்கிவிட்ட காலரை லேசாக இழுத்துப் பழைய மாதிரி சீர் செய்தாள் ஊர்வசி. சற்றுமுன் சௌமினியை உயர்த்திப் பேசிய வனை முறைத்துப் பார்த்துவிட்டுப், "பாக்கப் ப்ளீச் சென்று இருந் தால் போதுமா? அலங்காரம் செய்தால் எல்லோரும்தான் அழகா கத் தெரிவார்கள்." என்று ஏளனமாக உதட்டைப் பிதுக்கினாள்.

"ஆமாம். உதாரணமாக நீ இல்லையா. ஊசி?" என்று அவர் திருப்பவும் ஊர்வசியின் முகம் சிவந்தது.

"நான் ஒன்றும்... என்று அவள் ஆத்திரத்துடன் கீச்சிடத் தொடங்கவும், அவள் கையைப் பற்றி, "ஊகூம், ஊசி. விளையாட் டுப் பேச்சுக்கெல்லாம் கோபப்படலாமா? நீ பிரமாதமான அழகி என்பதுதான் எல்லோருக்கும் தெரியுமே! அதேபோல சௌமினி யும் எழில் அரசி என்பதும் உண்மையே." என்று அவளையும் சமாதானப்படுத்தி, மனைவியையும் மேன்மைப் படுத்தினான் மனோரஞ்சன்.

ஆனால் ஊர்வசிக்கு, அவன் மனைவியைத் தாங்கியது பிடிக் காமல் போயிற்று. "அழகு மட்டும் போதுமா? அந்தந்தப் பதவிக்கு உரிய தகுதி வேண்டாமா" என்று விடாமல் வாதித்தாள்.

"தகுதி தகுதியின்மை பற்றி மனோவை விட யாருக்குத் தெரி யும்?" என்று முதல் குரல் மேலும் சீண்டியது.

''எனக்கு!'' என்றாள் ஊர்வசி. ''ஒரு சின்னக் கேள்வி. மனோவுடைய மனைவிக்குப் பதில் தெரிகிறதா, பார்க்கலாமா? சொல்லுங்கள் சௌமினி. நிக்கோபார், யாழ்ப்பானம் என்றால் என்னவென்று ஏதாவது தெரியுமா?'' என்ற கேலிக் குரலில் வின வினாள்.

சீண்டலும் சிரிப்புமாய் விளையாட்டு போலப் பேசியபோதும், இந்த ஊர்வசிக்குத் தன்னைப் பிடிக்கவில்லை என்பது சௌமினிக்கு நன்றாகவே புரிந்தது. ஊர்வசிக்கும் கணவனுக்கும் உள்ள உறவு பற்றியும் ஊகித்து வைத்திருந்ததால் இவளிடம் தோற்றுவிடக் கூடாது என்ற பிடிவாதத்தில் இருந்தவளுக்கு, ஊர்வசி கேட்ட கேள்வி எளிதாகத் தோன்றவும் ஏதோ சொல்ல முன் வந்த கணவனை முந்திக் கொண்டு, ''நிக்கோபார் இந்தியாவைச் சேர்ந்த தீவுக் கூட்டம். யாழ்ப்பாணம் இலங்கைத் தீவில் தமிழர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் இடம்.'' என்று தன் பூகோள அறிவைக் காட்டவும் சட்டென ஒரு சிரிப்பு அலை பரவியது.

லேசான முறுவலுடன், ''பொதுவாக நீ சொல்வது சரிதான், சௌமினி. ஆனால், இங்கே, நாம் எல்லோருமே பெரும்பாலும் தேங்காயில் பிழைப்பவர்கள். அதனால் வேறு விவரம் கூறாமல், யாழ்ப்பாணம், நிகோபார் என்றால் தேங்காய் இனங்களைத்தான் குறிப்பது.'' என்று இதமான குரலில் மனோரஞ்சன் விளக்கினான்.

''மற்றதோடு மனோவிடம் இதையும் கற்றுக் கொள்ளுங்கள், சௌமினி.'' என்றார் ஒருவர்.

''ஆனால் புரிய வேண்டுமே! அரிச்சுவடி தெரியாதவளைப் போய், அகராதி எழுத அழைத்து வந்திருக்கிறாரே, மனோ,'' என்றாள் ஊர்வசி வெற்றிக் குரலில்.

''ஊசி குத்துகிறது!'' என்றார்கள் யாரோ.

பெரும்பான்மையினர் தன் பக்கம் இருப்பது தெரிந்தாலும் ஊர்வசி மட்டம் தட்டிப் பேசுவதற்கு இடம் கொடுத்து விட்டோமே என்றிருந்தது சௌமினிக்கு.

மனைவியின் முகக் கன்றலைக் கவனித்து, ''அரிச்சுவடியா? இங்கே அகராதியே வெளியாகி விட்டது தெரியுமா? அதோ பார்!'' என்று ஐஸ்கிரீமை விழுங்கிக் கொண்டிருந்த மகனை மனோ ரஞ்சன் காட்டவும் 'ஓகோ' என்று மற்றொரு சிரிப்புச் சத்தம் அலை மோதிற்று

ஒருவர் புரையேறி இருமவே தொடங்கிவிட்டார்

''பாலபாடம் தெரியாதவள் பேசவந்து விட்டாயே, ஊர்வசி?''

''இது முதல் பதிப்பு. அடுத்த ரிலீஸ் எப்போது?''

''தயாராகிக் கொண்டு இருக்கிறதா?''

ஊர்வசியாலும் ஒன்றும் பேசமுடியாமல் போனது மட்டுமே ஒரு திருப்தி. மற்றபடி இந்தச் சிரிப்பு, கேலி எதிலும் சௌமினியா லும் கலந்து கொள்ள முடியாது போயிற்று.

'பெங்கால் காட்டன்' சேலையை ஸ்டைலாக அணிந்திருந்த ஒரு பெண் முன்னே வந்து ''ஏய் மனோ, முன்போல எங்காவது ஒளித்து மறைந்து இதைப் பெறக் கூடாது. இங்கே 'சைகலாஜி' படித்த டாக்டர் நான் ஒருத்தி இருப்பது நினைவிருக்கட்டும்.'' என்றாள் சினேகப் புன்னகையுடன்.

''வரும்படிக்கு ஆள் பிடிக்கிறீர்களா?'' என்று அதையும் கேலி செய்து நகைத்தார்கள்.

ஆனால், அடுத்த பிள்ளைக்கென்று போய் நின்றால், முன் ஒரு பிள்ளை பெற்ற அடையாளம் இல்லாதிருப்பதைப் பார்த்து, நட்போடு சிரிக்கும் இந்த டாக்டர் எப்படி அதிர்ந்து போகக் கூடும்?! அன்றோடு இந்த ரகசியமும் வெடித்து விடும். எல்லோ ரும் - முக்கியமாகத் தாத்தா என்ன நினைப்பார்?

சித்தார்த்தன் விஷயம் வெளியாகாமல் இருக்க வேண்டும் என்றால் சௌமினி, பிள்ளைப் பேற்றைக் கூடத் தனக்குத்தானே பார்த்துக் கொள்ள வேண்டுமா? சேச்சே பானுமதி இருக்கை

யில் என்ன கவலை... ஓங்கித் தலையில் குட்டிக் கொள்ள வேண் டும்போல இருந்தது சௌமினிக்கு.

பிள்ளைப் பேறாம்! டாக்டராம்! இதைப் பொல்லாத சிக்கலா கக் கருதி, அதிலிருந்து மீள வழிவேறு தேடி.. என்ன முட்டாள் தனம்!

ரஞ்சனோடு உறவே கூடாது என்று ஒதுக்கி விட்டபிறகு, பிள்ளை எங்கிருந்துவரும்?

உள்ளூர விசுவரூபம் எடுத்த ஏக்கத்தைத் தாங்கவோ, மறைக் கவோ முடியாது போலத் தோன்றவும், "ஒரு நிமிடம்" என்று முணு முணுத்துவிட்டு சௌமினி வேகமாக அங்கிருந்து அகன் றாள்

விருந்து நடந்த இடத்துக்குப் பின்புறமாகக் குத்துச் செடிக ளும் சிறுமரங்களும் வளர்க்கப்பட்ட பகுதி இருந்தது. அங்கு சென்று ஒரு குத்துச் செடியின் பின்னே மறைவாக அமர்ந்தாள்.

வேண்டாம் வேண்டாம் என்றாலும், மனம் பிள்ளைப் பேற்றி லேயே நின்றது. இன்னோர் உயிரை உடலில் தாங்குவது எவ்வ ளவு பெருமை! உள்ளே அதன் அசைவுகளை உணர்வதும்தான் எவ்வளவு சுகம்! ஆனால் அவளுக்கு மட்டும் ஏன் எல்லாமே மறுக்கப்பட்டுப் போக வேண்டும்?

அந்த ஊர்வசி மனோரஞ்சன் கன்னத்தில் முத்தமிட்டதும், தொட்டதும், சட்டைக் காலரைச் சரிசெய்ததும் நினைவு வந்தன. எவ்வளவு உரிமையோடு பழகுகிறாள்! எல்லாம் அவன் கொடுக் கிற இடம்தானே? முன்பு எப்படி எல்லாம் நடந்து கொண்டார் களோ? இனி? இனியும்...

தனிமையும் தாங்கமாட்டாமல் எழுந்து நடந்தாள்.

அவளைக் கண்டதும், மனோரஞ்சன் வேகமாக அவள் அரு கில் வந்து, "என்ன சௌமினி, இந்தப் பக்கம் எங்கே போனாய்? என்ன விஷயம்?" என்று வினவினான்

என்னவென்று சொல்வது.. திடுமென மூளைக்குள் ஓர் மின்னல் வெட்ட, ''அதுவா...?'' என்று இமைகளைப் படபடவென்று கொட்டினாள். ''இங்கே ஒருவர் - அசப்பில் உங்களைப் போலவே இருந்தாரா? பார்த்ததும் அப்படியே மயங்கிப் போனேனா? அவரோடு இளித்துக் கொண்டு இருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை!'' என்றாள் இனிய குரலில். தேன் சொட்டாத குறை!

நம்பாத தலையசைப்புடன், ''தண்டிக்க நினைத்தாய் என்றால், உள்ளிருப்பது செத்த பாம்பு. அடித்துப் பயன் இல்லை. ஆனால்... என்று அவளை இமை இடுங்கக் கூர்ந்து நோக்கி, ''எனக்கு வேறு ஒரு சந்தேகம்'' என்றான் மனோரஞ்சன்.

அவன் தன் ஐயத்தைச் சொல்லவும் சௌமினிக்குத் தூக்கி வாரிப் போட்டது.

# 21

என்ன பெரிய சந்தேகம் என்று அலட்சியத்துடனேயே தான் ''என்ன?'' என்று சௌமினி கேட்டது

'ஊர்வசி என்னிடம் ஒட்டி, தொட்டுப் பேசுவது உனக்குப் பிடிக்கவில்லை கோபம்!'' என்று மனோரஞ்சன் கூறியபோது, ''பரவாயில்லையே! கண்டுபிடித்து விட்டீர்களே!'' என்று யோசியாமல், சொன்னதும் அப்படித்தான்.

''இந்தக் கோபத்தின் அடிப்படை என்னவாக இருக்க முடியும்? பொறாமைதானே? என்னிடம் இன்னொரு பெண் பழகுவதைப் பார்த்து உனக்குப் பொறாமை உண்டாகிறது என்றால்.... உன் அன்பு அப்படியே இருக்கிறது என்றுதானே அர்த்தம்?''

மெய்யாகவே கண்டுபிடித்து விட்டானே!

பதில் சொல்ல மாட்டாமல் சௌமினி அயர்ந்து நின்ற வேளையில், மனோரஞ்சன் ஒரு பிழை செய்தான். சிரித்தான்! ஒரு சின்ன வெற்றிச் சிரிப்பு! ''நீ என்ன முயன்று என்ன? கண்டுபிடித்தே விட்டேன் பார்!'' என்று அவளது வார்த்தைகளையே திருப்பிச் சொல்லி, மீண்டும் அவன் நகைக்கவும் சௌமினி சுதாரித்தாள்.

''இன்னொரு பெண் உங்களோடு பழகினால், பொறாமையின் அடிப்படையில் மட்டும்தான் எனக்குக் கோபம் வரமுடியுமா?'' என்று மிடுக்காகக் கேட்டாள்.

''இப்போது வேறு என்ன இருக்கிறதாம்?'' இன்னுமா? என்பது போலச் சிறு அலுப்புடன் அவன் வினவினான்.

''ஒருவரிடம் அவரது பேச்சை நம்பி ஒரு லட்சம் கொடுக்கிறீர்கள். திருப்பித் தரவில்லை என்றால் உங்களுக்குக் கோபம் வராதா?''

''அதற்கும் இதற்கும்... ஓ உனக்குக கொடுத்த வாக்கை - உன்னிடம் ஒத்துக் கொண்ட நிபந்தனையை மீறியதால் வந்த கோபம் என்று சொல்லப் போகிறாயா?''

''ஒரு வழியாகச் சரியாகவே கண்டுபிடித்து விட்டீர்கள்!''

சில கணங்கள் அவளை ஊடுருவி நோக்கிவிட்டு, அவன் தோளைக் குலுக்கினான். ''உன் விருப்பம் போலவே இருக்கட்டும். வா, போகலாம். அங்கே கிளம்பத் தொடங்கி விட்டார்கள். அதற்காகத்தான் உன்னை அழைக்க வந்தேன்.'' என்று சாதாரணமான குரலில் கூறினான்.

உன் பேச்சை நம்பா விட்டாலும் விட்டுக் கொடுக்கிறேன் என்பது போல அவன் நடந்தது ஆத்திரமூட்ட, ''கிளம்பினால் போக வேண்டியதுதானே? நான் எதற்கு? செல்லும் வழி சொல்ல வேண்டுமா?'' என்று படபடத்தவள், உடனே தவறு உணர்ந்து, ''சாரி'' என்று முணுமுணுத்துவிட்டு முன்புறம் நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

பெரும்பான்மை விருந்தினர் கிளம்பிச் சென்று விட்டனர். சாய்வு நாற்காலிகளைக் கொணரச் செய்து, சிதம்பரநாதரும், அவரை ஒத்த சிலரும் பேசிக் கொண்டு இருந்தனர்.

கொஞ்சியவர்களிடம் எல்லாம் இனிமையாகச் சிரித்து, பேசி, டாடா, பையை சொல்லிக் களைத்து விட்டபோதும் சித்தார்த்தன், உள்ளே சென்று உறங்க மறுத்துத் தந்தையின் தோளில் சாய்ந்து படுத்திருந்தான்.

மகனைத் தோளில் போட்டுக் கொண்டு, தன் பழைய நண்பர்கள் சிலருடன், மனோரஞ்சன் வார்த்தையாடிக் கொண்டு இருந்தான். உரிமைக்காரிபோல, அவனுக்கு வெகு அருகில் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு அமர்ந்திருந்த ஊர்வசி, சித்துவுடன் கொஞ்சுகிற சாக்கில், மனோரஞ்சனைத் தொட்டுக் கொண்டிருந்தாள்.

அவள் தனியே இருப்பதைப் பார்த்து விட்டு, ஊர்வசியுடைய தகப்பனார், சௌமினியின் அருகே வந்து அமர்ந்து, பேச்சுக் கொடுத்தார்.

மூன்றாம் முறையாக, சௌமினியின் பார்வை, கணவன் பக்கம் சென்று மீளவும், ''இந்தப் பக்கம் எல்லாப் பெண்களுக்குமே மனோ என்றால் ஒரு கிறுக்கு உண்டு, மகளே! எங்கள் ஊசிக் குட்டிக்கு சற்றே அதிகம். திருமணம் ஆனதும் எல்லாம் சரியாகிவிடும். எங்கள் சொந்தத்திலேயே மாப்பிள்ளை கூட ரெடி. ஊசி நேற்றுதான் ஒரு வழியாகச் சம்மதம் கொடுத்தாள்.'' என்று அவள் இயம்ப திகைப்புடன் மீண்டும் ஊர்வசியை நோக்கினாள் சௌமினி.

அவள் பார்வையைத் தொடர்ந்தவர், மகள் மனோரஞ்சனின் முகத்தைத் தொட்டு அவள்புறம் திருப்புவதையும், சௌமினியின் முகம் வாடுவதையும் கண்டுவிட்டு, ''என் மகள் குழந்தை அம்மா' இதையெல்லாம் தப்பாக எண்ண அவசியமே இல்லை. மனோவிடம் அவளுக்கு 'ஹீரோ' மயக்கம் இருந்ததும் உண்மையே.

ஆனால் மணமாகி மகன் கூட இருக்கிறான் என்பது சொன்ன துமே திருமணத்துக்குச் சரியென்று விட்டாளே!''

சில நிமிடங்கள் பல்லை இளித்துக் காட்டிச் சமாளித்தவள், அரைகுறை உறக்கத்தில் சித்தார்த்தனின் கையிலிருந்து கரண்டி நழுவி விழவும், அதையே சாக்காகக் கொண்டு அவசரமாக எழுந் தாள். ''உன் மகனின் ஐஸ்கிரீம் கரண்டி உடையில் பட்டுவிட்டது. உடனே சுத்தம் செய்யாவிட்டால் கறையாகிவிடும். குளியல் அறைக்குக் கூட்டிச் செல்கிறாயா?'' என்று கிளம்பினாள்.

அவள், ஒருமையில் விளித்தது உறுத்தினாலும், காட்டிக் கொள்ளாமல், சௌமினி ஊர்வசியை வீட்டினுள் அழைத்துச் சென்றாள். ஆனால், குளியல் அறைக்காக வீட்டினுள் சென்றவள் குளியல் அறைக்குள் செல்ல ஆர்வம் காட்டவில்லை.

மாறாகக் குளியல் அறையை ஒட்டியிருந்த 'டிரஸ்சிங் டேபிள்' முன்னேயே நின்றாள். 'டேபி'ளின் முப்பட்டைக் கண்ணா டியில் இங்குமங்கும் திரும்பி, உடலை முறுக்கி, நெளித்துத் தன் உருவத்தை ஆராய்ந்தாள். ''நிச்சயமாக உன்னைவிட நான்தான் அழகு. கூடவே, பணம் அந்தஸ்து, எல்ல்... லாவற்றிலும் நான் தான் உயர்வு. அப்படியிருக்க, இந்த மனோ எதற்காக உன்னிடம் மயங்கினார்?'' என்று சௌமினியிடமே விளக்கம் கேட்டாள் ஊர் வசி.

சற்றுத் திகைத்துவிட்டு, ''இதை நீங்கள் ரஞ்சனிடமே கேட்ப துதானே?'' என்றாள் சௌமினி.

''ரஞ்சன்! அப்படித்தான் நீ அவரை அழைப்பாயா? அத னால்தான், நான் ஒருதரம் ஒரே ஒருதரம் அவரை அப்படி அழைத்தேன் என்று சீறி விழுந்தாரா?'' என்று ஊர்வசி கேட்கவும், சௌமினி மேலும் திகைத்தாள்.

''இந்த மனோ, என்னை விட்டு விட்டு உன்னை எப்படி மணக்கலாம்!'' என்று ஊர்வசி சீறியபோது அவளைப், பார்த்துக் கொஞ்சம் பரிதாபமாக கூட இருந்தது.

''திருமணம் நிச்சயமானபிறகு இப்படிப் பேசுகிறீர்களே? தெரிந்தால் உங்கள் வருங்காலக் கணவர் என்ன நினைப்பார்?'' என்றாள் மெதுவாக.

'யார், பாபுவா?'' என்றாள் ஊர்வசி ஆச்சரியமாக. ''அவனுக்குத்தான் எல்லாம் தெரியுமே! நான் ஒன்றும் ஒளித்து மறைத்து மனோவிடம் பழகவில்லையே! எப்போதுமே மனோ என்றால் எனக்குப் பைத்தியம்தான். நான் என்றால் பாபுவுக்குப் பைத்தியம் தான். பைத்தியமும் பைத்தியமும்... என்று ஒரு பெருமூச்சு விட்டாள் அவள்.

பிறகு நிமிர்ந்து, சௌமினியை நோக்கினாள். ''நீ பெருமைப் படுவதானால் பட்டுக் கொள். ஆனால் இதற்கு எனக்கு ஒரு விளக்கம் கிடைத்து விட்டாலே கொஞ்சம் நிம்மதியாகி விடும் என்று தோன்றுகிறது. சொல்வாயா? ஏன் சௌமினி, ஏன் மனோவுக்கு என்னிடம் - இவ்வளவு அழகையும் காலடியில் வைக்கத் தயாராக இருந்தும் என்னிடம் ஏன் அவருக்கு அந்த எண்ணமே வரவில்லை? படிப்பு முடிந்து திரும்பி வந்த பிறகு, கிட்டத்தட்ட நாலு ஆண்டுகளாக இதே நினைவுதான். ஏன், ஏன் என்று இரவு பகல் யோசித்து மூளையே குழம்பிவிட்டது. என்ற குரலில் அவள் அனுபவித்த தவிப்பு தெளிவாகவே தெரிந்தது.

மனோரஞ்சன் இந்த ஊர்வசியோடு காதல் லீலை புரிந்தது இல்லை என்று அவள் வாயாலேயே அறிய, சௌமினிக்கு எல்லையற்ற ஆறுதல் தான் ஆனால் இன்னொரு பெண்ணின் தவிப்பை சும்மா இருந்து பார்க்கவும் அவளால் முடியவில்லை. இதே மனோரஞ்சனுக்காக, அவளும் ஒருவகையில் இதே தவிப்பு தவித்தவள் தானே?

''திருமணம் என்பது ஒரு கால்கட்டு என்பது அவரது அபிப்பிராயம். உங்களிடம் வேறு மாதிரிப் பழக முடியாதில்லையா?' என்றாள் சமாதானமாக.

ஆனால் சௌமினியை வினோதமாக நோக்கிவிட்டு ஊர் வசி சொன்னாள். ''நான் வெளிநாட்டில் படித்தவள், சௌமினி எந்தவித உறவுக்கும் - திருமணம் இல்லாத காதலுக்கும் கூட நான் தயாராகத்தான் இருந்தேன். சினிமாவில் வருகிற மாதிரி முக்கி, முனகி, மேலே விழுந்து ஆடவில்லையே தவிர, என் மனதை அவருக்கு நான் உணர்த்தாத வகை இல்லை. ஆனால், மனோவின் மனதில் நீ இருந்ததால், அவருக்கு வேறு எதுவும் கண்ணில் படவே இல்லை போலும்.... சௌமினி, உன்னை நான் குத்திக் குதற வேண்டும் என்று வந்தேன். உன்னைச் சிறுமைப் படுத்தவும் முயன்றேன். ஆனால், நீயானால் எனக்குச் சமாதானம் சொல்கி றாய்.. இன்னும் புரியாதது ஒன்றே ஒன்று. இத்தனை ஆண்டுகள் பழகி இருக்கிறீர்கள். பிள்ளை பெறும் அளவு நெருக்கம் இருந்தி ருக்கிறது. இருவருமே வேறு தேடியதாக... உயர்ந்ததாக ஒன்று தேடி வந்தால் கூட மறுத்திருக்கிறீர்கள்; ஏன் மணந்து கொள்ள வில்லை? குறைந்த பட்சம் உன் சித்தார்த்தன் உருவான உடனேயா வது திருமணம் செய்திருக்கலாமே? பிரிந்தல்லவா இருந்தீர்க ளாம்? ஏன்?'' என்று கேட்டாள்.

இதற்கு என்னவென்று பதில் சொல்வது? உண்மையை அணு வளவு கூட வெளியிட முடியாது! ஆனால் ஏதோ ஒரு விடை தேடி தவிக்கும் இவளிடம் முகம் திருப்பவும் சௌமினியால் முடிய வில்லை. வேகமாக யோசித்து, ''அது... அதுதான் அவரது அப் போதைய கொள்கை சொன்னேனே. ... அதில் எனக்குக் கோபம். பிரிந்து விட்டபிறகு... பிறகு... சித்தார்த்தன் விஷயம் எனக்கே அதன் பிறகுதான் தெரிந்ததா, அப்போது இருந்த ஆத்திரத்தில்... அப்படியே இருந்து விட்டேன். இப்போது... இப்போது விபத்துக் குப் பிறகு சித்து பற்றி அறிந்ததும், தாத்தாவும் சொல்லவே... என்று பொய்யும் புகலாமல், முழுவதுமாக உண்மையையும் உரைக்காமல் எப்படியோ ஒரு வழியாகச் சொல்லி முடித்தாள்.

ஆனால் அதுவே போதுமாய், ஊர்வசியின் முகம் தெளிவுற் றது. ''குழப்பம், கஷ்டம் என்பது எல்லோர் வாழ்விலும் இருக்கும் போலும்.'' என்று லேசாகத் தோளைக் குலுக்கினாள்.

சமயத்தை விடாமல், "உண்மைதான். ஆனால் இரவோடு இருளும் மறைந்து விடிவது போல, இந்த வேதனைகளை ஒதுக்கி, மறந்து நல்லபடியாக வாழ முற்படவேண்டும்." என்றாள் சௌமினி.

சற்று யோசித்து, "நீ சொல்வது சரிதான், சௌமினி. பாபுவுக்குக் குதிரைச் சவாரி பிடிக்கும். இனி அதைக் கற்றுக் கொள்ளப் போகிறேன்." என்றவள் சௌமினியை நேராக நோக்கி முறுவலித்தாள். "நன்றி சௌமினி."

கதவைத் தட்டி மனோரஞ்சன் அழைக்கவும், குரல் கொடுத்துவிட்டு, "உன்னை என்ன செய்கிறேனோ என்று பயந்து காப்பாற்ற கண்ணபிரான் ஓடோடி வந்து விட்டார் போல." என்று சிரித்தபடியே ஊர்வசி முன்னே சென்று கதவைத் திறந்தாள்.

இருவர் முகத்தையும் வேகமாக ஆராய்ந்தவன் உடனே இலகுவாகி, "அங்கிள் உன்னைத் தேடினதுபோல இருந்தது ஊர்வசி." எனவும், சௌமினியைப் பார்த்து அவள் கண்ணடிக்க, சௌமினிக்கும் சிரிப்பு வந்தது.

தூக்கமும் அலுப்புமாக சிணுங்கிய மகனிடம் கெஞ்சிக் கூத்தாடி, ஒருவாறு வெந்நீரில் உடம்பு கழுவி, 'காம்ப்ளான்' கொடுத்துத் தூங்க வைத்துவிட்டுத் தன் வேலைகளையும் முடித்துக் கொண்டு, சௌமினி படுத்தபோது நடுநிசி தாண்டி விட்டது என்றாலும், அவளுக்கு உடனே தூக்கம் வர மறுத்தது. அன்றைய நிகழ்ச்சிகளையே மனம் அசை போட்டது.

ஊர்வசியின் பேச்சை உண்மையெனக் கொண்டால் கொண்டால் என்ன? அது உண்மைதான். அப்படிப் பார்த்தால் மனோரஞ்சன் சௌமினியைப் பிரிந்த பிறகு மனம் போனபடி வாழவில்லை என்பதும் உண்மை என்றாகிறது. ஆனால், அவன் என்ன சப்பைக் கட்டு கட்டினாலும், மின்னியை இன்னொரு பெண்ணை அவன் தொட்டதும் உண்மை ஆயிற்றே. அவளைப் பொறுத்தவரையில் அவனது அந்தக் குற்றம் மன்னிக்கத் தகாதது தான். அந்தக் குற்றம் செய்தவனை ஏற்பதும் முடியவே முடியாது

தான். என்று பிடிவாதமாக முணுமுணுத்தபடியே ஒருவாறு உறங்கத் தொடங்கினாள் அவள்.

விருந்தன்று அதிகப்படியாக விழுங்கிய ஐஸ்கிரீமாலோ என்னவோ, அடுத்த இரண்டு நாட்கள் வயிறு சரியில்லாமல் சித்தார்த்தன் கஷ்டப்பட்டான். அவன் துவண்டு கிடப்பது தாங்காமல், "அன்று இரண்டாவது ஐஸ்கிரீமை எடுத்தபோது கூடாது என்று கண்டித்திருக்க வேண்டுமோ?" என்று சௌமினி வருந்தவும், "அடுத்தவர் முன்னிலையில் கண்டித்தால் ரோஷமற்றுப் போய் விடுவான், சௌமினி, ஒருநாள், இரண்டுநாள் வயிற்று உபாதையால் அவனுக்கு ஒன்றும் ஆகிவிடாது. மேலும், அனுபவ பாடமாக, அடுத்து எந்த விழாவிலும் அதிக ஐஸ்கிரீம் வேண்டாம் என்று இந்த வயிற்று வலியை நினைவூட்டிச் சொன்னால் அவனே நிறுத்தி விடுவானே" என்று அவளைச் சமாதானப்படுத்தினார் பெரியவர்.

விருந்தில் அலைந்தது அவருக்கும் களைப்புதான். "வயதாகி விட்டதல்லவா?" என்று அவரும் இரண்டு நாட்கள் ஓய்வாக வீட்டில்தான் இருந்தார்.

அன்றைய விருந்தின் விளைவாக அக்கம் பக்கம் உள்ளவர்கள் வந்து போனார்கள். ஒரு திருமண நிச்சயதார்த்தம், லேடி டாக்டரின் வெளிநாட்டுப் பயணத்துக்கான பாராட்டு விழா என்று அழைப்பு வந்தது. ஊர்வசியும் பாபுவும் ஒருநாள் குதிரையில் வந்து பேசிக் கொண்டிருந்து விட்டுப் போனார்கள்.

அடுத்து, சின்ன பூரணியின் திருமணத்துக்காகக் குடும்ப முழுமையும் கோவையை அடைந்தது. பெரியவர் பயணக் களைப்பு தீர, ஓய்வாகப் படுத்திருக்க, மனோரஞ்சன் குடும்பம் அவன் தந்தையின் வீட்டுக்குச் சென்றது.

அங்கே சௌமினிக்குப் பயங்கர வரவேற்பு. இரவு அவள் தன்னோடுதான் தங்க வேண்டும் என்று, கல்யாணப் பெண்ணின் சலுகையோடு பூரணி பிடிவாதம் பிடிக்கவே, மனைவியையும் மகனையும் அங்கேயே விட்டுவிட்டு மனோரஞ்சன் மட்டும்

அறைக்குத் திரும்பிச் சென்றான். உடைமாற்ற அதிகாலையில் அவன் வந்து இருவரையும் அழைத்துப் போவதாக ஏற்பாடு.

இரவு முழுவதும் பூரணி, சௌமினியைப பேசவிடவில்லை. அப்படி இப்படி என்று வருங்காலக் கணவனைப் பற்றியே பேச்சு. பக்கத்தில் ஈரோடில்தான் அவர்கள் வீடு என்பதால் எதையாவது சாக்கிட்டு அடிக்கடி வருவானாம். காபி கொடுத்தால் கையைத் தொட்டுத்தான் வாங்குவானாம். ஒருநாள் யாரும் இல்லாத நேரம் பார்த்து வந்து, அவளை அணைத்து முத்தமிட்டுவிட்டானாம். அதிலிருந்து அவளுக்கு மிகவும் வெட்கமாகவும் பயம்...மாகவும் இருக்கிறதாம்.

இன்னோரன்ன எத்தனையே விஷயங்கள். திருமணமாகிக் கணவனோடு வாழுகிற சேர்ந்த அண்ணி என்ற எண்ணத்தில் பூரணி தடையற்றுப் பேச, சௌமினிதான் தடுமாறிப் போனாள். கடைசியாக, முதல் இரவைப் பற்றி அச்சத்தையும் ஆவலையும் கூறி, அனுபவசாலியான அண்ணியிடம் அவள் ஆலோசனை எதிர்பார்க்கவும், சௌமினி திண்டாடி விட்டாள்.

சூடாகிச் சிவந்த முகத்தை நல்லவேளையாக இருள் மறைக்க, ''அது... அது... நீ வந்து... அவர்... அவராக..'' என்று அவள் திக்கித் திணறுகையில், அங்கே பேச்சு சத்தம் கேட்டு உள்ளே வந்த சுசீலா, ''பூரணி, நீ இன்னுமா தூங்கவில்லை? தூக்கமில்லாமல் சிவந்த கண்ணுடன் மணவறையில் உட்கார்ந்தால் பார்க்க சகிக்காது. பேசாமல் தூங்கு. என்று மகளை அதட்டி விட்டு, ''சௌமினி, இனி அவள் பேச்சுக் கொடுத்தாலும் நீ பதில் சொல்லாதேம்மா அப்படியானால்தான் அவள் தூங்குவாள்.'' என்று மருமகளிடமும் கூறவே, நல்லதாயிற்று என்று வாயைமூடிக் கொண்டாள் சௌமினி.

பேச்சு நின்றதும் பூரணி உறங்கிவிட, சௌமினிக்குத்தான் தூக்கம் வர மறுத்தது.

திருமணம் சிறப்பாக நடந்தேறியது.

பெரியவர் தன் பரிசாக ஒரு நகை செட் பரிசு கொடுத்தார். தன் மருமகனோடு இப்போது அவரால் ஒட்டிப் பழக முடியாவிட்டாலும், இருவருமே முயன்று இயல்பாக நடந்து கொண்டனர்.

''தங்கைக்கு எங்கள் பரிசு.'' என்று மனோரஞ்சன் ஒரு காகித உறையை எடுத்துக் கொடுத்தான்.

கவரைப் பிரித்து பார்த்த மொய் எழுதுகிறவர் ''இவ்வளவா!'' என்று வாயைப் பிளந்தார்.

தங்கையின் பெயரில் மனோரஞ்சன் இரண்டு லட்சம் ரூபாயை 'டெப்பாசிட்' செய்திருந்தான். ஒரு லட்சத்தின் வட்டி மதிப்பு மாதாமாதம் பூரணியின் கைக்கு வந்து சேருமாறும், அடுத்த லட்சத்தின் வட்டி முதலோடு சேர்ந்து பெருகுமாறும் ஏற்பாடு செய்திருந்தான்.

வியப்பும், மகிழ்ச்சியும், பெருமையுமான பார்வைப் பரிமாற்றங்களைக் காண்கையில் சௌமினிக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. 'இது, சிதம்பரநாதரின் யோசனையும்' என்பதை உணர்ந்து, அவரிடமும் மரியாதையும் பிரியமும் அதிகமாயிற்று.

கிடைத்த முதல் வாய்ப்பில், ''ஆயிரம் எப்படி இரண்டு லட்சம் ஆயிற்று?'' என்று கணவனிடம் கிண்டலாய்க் கிசுகிசுத்தாள் சௌமினி.

''அன்புப் பாடம் பற்றி அறிவுரை கிடைத்த பிறகு,'' என்று அதே குரலில் கூறி அவன் முறுவலிக்கவும், பதிலாக அவள் முகமும் மலர்ந்து விகசித்தது.

பால்பழம் சாப்பிட என்று மணமக்களை வீட்டுக்கு அழைத்துப் போனார்கள். அங்கே அந்த வீட்டுத் தெய்வத்தாயின் படத்தின் முன் ராமலிங்கம் மகளுக்கும் மருமகனுக்கும் திருநீறு, குங்குமம் வைத்து ஆசீர்வதித்தார்.

சௌமினியின் கையைப் பற்றிக் கொண்டு அவரிடம் சென்றான் மனோரஞ்சன். ''எங்களையும் ஆசீர்வாதம் செய்யுங்கள் அப்பா!'' என்று கேட்டுக் கொண்டான்.

அவனது சொந்தத் திருமணத்தின் போது திருநீறுபூச அவருக்கு நெற்றியைக் காட்டாமல் திருப்பிக் கொண்டவன்!

தந்தை திகைத்து நோக்குகையில், பின்னடித்து மெல்ல நகர்ந்த சுசீலாவிடம், ''நீங்களும்தான், சித்தி'' என்றான்.

அவள் அதிர்ந்து நோக்கவும், ''ப்ளீஸ் சித்தி. அம்மா அருகில் நின்று, என் தாயாராய் என்னை ஆசீர்வாதம் செய்யுங்கள். ஆமாம், சித்தி. என் தம்பி தங்கைக்கு அம்மா என்றால், எனக்கும் அதே உறவுதானே?'' என்று அவன் கூறவும் அந்த அம்மாளுக்குக் கை நடுங்கிப் போயிற்று.

தம்பி, தங்கை இருவரிடமும் கூட அவன் அதே கலகலப்புடன் பேசவும், சௌமினிக்கு மிகவும் பெருமையாக இருந்தது.

உறவாலும், ஒத்த வயதினர் என்பதாலும், மனோரஞ்சன் முன் வந்து பழகியதாலும், மணமக்களோடு கூட இருந்து, வேண்டியதைச் செய்வது மனோரஞ்சன் தம்பதியின் பொறுப்பாயிற்று.

மாப்பிள்ளையின் ரகசியச் சீண்டல்களும், பூரணியின் நாணச் சிவப்புகளும், கேலியும், பதில்களும், சிரிப்புமாக பொழுது விரைந்து மறைந்தது.

மதியம் தூங்காமல் ஆடிவிட்டு, ஏழு மணிக்கே தூக்கத்துக்குத் தொல்லை செய்த கொள்ளுப் பேரனைச் சிதம்பரநாதர் தன்னோடு ஓட்டலுக்கு அழைத்துச் சென்றார். ''இங்கே வரவேற்பு முடிந்து நீங்கள் திரும்பி வர எவ்வளவு நேரம் ஆகுமோ? அதுவரை இவனை வைத்துக் கொண்டு சமாளிக்க உன்னால் முடியாது, சௌமினி. அவனுக்கு, இனி இரவில் 'காம்ப்ளான்' மட்டும் தானே? அங்கே வரவழைத்துக் கொடுத்துவிட்டு என்னுடனேயே தூங்க வைத்துக் கொள்கிறேன். அவன் கவலையின்றி, நீங்கள் இருவரும் எப்போது வேண்டுமானாலும் வந்து படுத்துக் கொள்ளுங்கள். ஆனால் காலையில் சீக்கிரம் கிளம்பிவிட வேண்டும் அம்மா. பதினோரு மணிக்கு அங்கே முக்கியமான 'மீட்டிங்' இருக்கிறது. வரட்டுமா?'' என்று சித்தார்த்தனை அழைத்துக் கொண்டு கிளம்பினார்.

வரவேற்பு முழுவதும் மணமக்களோடு கூடவே மேடையில், நின்றுவிட்டு, வீடு திரும்பி, அவர்களை இரவுக்கு தயாராக்கி அனுப்பி விட்டு மற்றவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு காரில் ஏறிய பிறகு, கணவன் மனைவி இருவருக்கும் இடையே பேச்சு நின்று போயிற்று.

மவுனமாகவே, முதலில் குளியலறைக்குள் சென்று உடம்பு கழுவி, உடைமாற்றி வந்தவளைச் சித்தார்த்தன் கூட இல்லாத தனிமை புதுவிதமாய்த் தாக்கியது. படுக்கமாட்டாமல், மேசை மேல் கிடந்த பத்திரிகை ஒன்றை எடுத்துப் புரட்டிப் பார்த்தாள்.

புத்தகத்தின் பக்கங்களில் பூரணியின் முகம் தெரிந்தது. 'மாலை மறைவில் இப்படி உரசினார், சௌமி. இங்கே கிள்ளினார்' என்று அவள் குரல் நாணமும் மகிழ்ச்சியுமாக அப்போதும் ஒலித்தது.

குளியலறைக் கதவு திறந்து, வெளிவந்த மனோரஞ்சன், படுக்கச் செல்லாமல் அவளை நோக்கி வரவும், அவளது இதயம், பந்தயக் குதிரையின் வேகத்தில் துடிக்கலாயிற்று.

அவள் அருகே வந்து, கையிலிருந்த பத்திரிகையை வாங்கி, மூடிவைத்தான் அவன்.

அவள் கைகளைப் பற்றி, ''சௌமினி, ப்ளீஸ். இன்று ஒன்றும் சொல்லாதே. இடைப்பட்ட எதுவும் இப்போது எதுவும் வேண்டாம். நாம் இருவரும் மணந்து கொண்டவர்கள்; ஒருவரை ஒருவர் விரும்புகிறவர்கள். இல்லை என்று பொய் பேச வேண்டாம்... இன்று ஒருநாள், மற்றதை மறந்து சாதாரணக் கணவன் மனைவியாக இருக்கலாம்... ப்ளீஸ், சௌமி. இதையே தொடரவோ, இன்னொருநாள் இதைச் சுட்டிக்காட்டிப் பயன்படுத்தவோ மாட்டேன், நிச்சயமாக சௌமி... சௌமி...'' என்றபோது அவளுக்குப் பேச்சு வரவில்லை.

ஒருகணம் கைகளை விடுவித்துக் கொள்ள எண்ணியவளுக்கு அதைச் செயலாற்றவும் தோன்றவில்லை.

ஏன் கூடாது என்றது மனது.

மெல்லக் குனிந்து, அவன் மிக மென்மையாக இதழ் ஒற்றிய போதும் அவள் அகல முயற்சிக்கவில்லை. பிறகு காட்டாற்று வெள்ளம் கரைபுரண்ட போதும் அப்படித்தான்.

## 22

மறுநாள் காலையில் மனோரஞ்சனும் சௌமினியும் தூக்கத்திலிருந்து விழித்ததே, அறையிலிருந்த டெலிபோன் மணி அடித்த ஓசையில்தான்.

மனோரஞ்சன் எழுந்து ரிசீவரை எடுக்க, சிரமப்பட்டு இமைகளைப் பிரித்துக் கண்திறந்து பார்த்த சௌமினிக்குத் தூக்கி வாரிப் போட்டது.

விடிந்து, நன்றாகவே வெளிச்சம் பரவிவிட்டிருந்தது!

விழுந்தடித்துக் கொண்டு அவள் எழும்போதே, "ஆ... ஆமாம் தாத்தா. இதோ, தயாராகிக் கொண்டேதான் இருக்கிறோம். பத்தே நிமிடங்களில் வந்து விடுவோம்." என்று கூறி ரிசீவரை வைத்தான். சௌமினியிடம் திரும்பி, "சொன்னது கேட்டதல்லவா? பத்தே நிமிடங்கள்தான். சித்து வேறு விழித்து உட்கார்ந்து கொண்டு உன்னைக் கேட்கிறானாம். நீ முதலில் கிளம்பு. நான் இங்கே கிடப்பதை எல்லாம் பெட்டியில் எடுத்து வைக்கிறேன்" என்றான்...

அதன்பின் எல்லாம் மின்னல் வேகம்தான்.

'தேய்த்தேன்' என்று ஒரு பெயருக்குப் பல் துலக்கி, குளித்து, நைட்டியோடு வெளிவந்து, பொட்டிட்டு, தலைவாரி, உடை மாற்றி, நைட்டியை அவள் உள்ளே திணிக்கையில் மனோரஞ்சனும் குளியலை முடித்துக் கொண்டு வந்து விட்டான். கூடவே கதவைத் தட்டிக்கொண்டு சிணுக்கத்துடன் சித்தார்த்தனும் வந்து சேர்ந்து விட்டான்.

அவனைத் தூக்கிக் கொஞ்சி, ஆறுதல் படுத்தி, ''அங்கே குடிக்க மாட்டேன் என்று விட்டானம்மா.'' என்று சிதம்பரநாதர் கொண்டு வந்த பாலைக் குடிக்க வைத்து முடியாதபோது, திருமணப் பலகாரத்துடன் அவர்களை வழியனுப்பவென்று ராமலிங்கமும் சுசீலாவும் வந்தார்கள்.

ஒரேயடியாய் மேலே விழுந்து பழகாவிட்டாலும், இந்தத் திருமணத்தின் பயனாக ஒரு நல்ல உறவு மலர்ந்தது என்பதில் சௌமிக்கு மிக்க மகிழ்ச்சி.

ஆனால் இந்தத் திருமணத்தின் மூலம் விளைந்த பயன் இந்த உறவு மட்டும் தானா? என்று இதயத்தின் ஒரு மூலையில் சிறு குரல் ஒன்று எழும்பவும் அவள் திடுக்கிட்டுப் போனாள். பொறு. பொறு மனமே பொறு. இதையெல்லாம் நினைக்க இப்போது அவகாசம் இல்லை.

ராமலிங்கம் தம்பதியிடம் விடைபெற்றுக் கொண்டு, அவர்கள் காரில் ஏறியபோது, அவர்கள் கிளம்ப உத்தேசித்திருந்த நேரத்தை விட அரைமணி நேரம் அதிகம் ஆகியிருந்தது.

மனோரஞ்சன் முடிந்த அளவு வேகமாகக் கார் ஓட்டியபோதும் சௌமினியையும் மகனையும் வீட்டில் இறக்கி விட்டு விட்டு, முன்னரே தயாராக எடுத்து வைத்திருந்த குறிப்புகளைத் தூக்கிக் கொண்டு ஓடத்தான் நேரம் சரியாக இருந்தது.

அப்போதும், மனைவியின் கையைப் பற்றி, ''சௌமீ... என்று தொடங்கியவன், மேலே பேசுமுன், ''மனோ,'' என்று சிதம்பரநாதரின் குரல் அழைத்து விட்டது.

''இதோ, தாத்தா'' என்று குரல் கொடுத்து விட்டு, ''நாம் நிறையப் பேசவேண்டும், சௌமி. எப்படியாவது மதியம் வரப் பார்க்கிறேன்,'' என்றவன், தன் கைக்குள் சிக்கியிருந்த அவள் கையை அழுத்தி விட்டு மனமில்லாமல் விலகிச் சென்றான்.

அவன் கைபற்றி அழுத்திய இடம் கன்றிச் சிவந்திருந்ததை, சௌமினி ஆச்சரியத்துடன் பார்த்தாள். வலிக்கவே இல்லையே! மாறாக...

ஆனால் அது பற்றி மேலே நினைப்பதற்கும் ஏதோ தப்பு செய்வது போல மனம் அலைபாய்ந்தது.

பிடிவாதமாக மனதை வேறு விஷயங்களில் செலுத்த முயன் றாள்.

அனாவசியமாக, 'ஷோகேஸ்' சாமான்களை மாற்றி அடுக்கி விட்டு, அது நன்றாயில்லை என்று மீண்டும் முன்போலவே எடுத்து வைத்தாள். வரவேற்பு அறைச் சுவரில் மாட்டியிருந்த அரிய சித்திரங்களை வரிசை மாற்றி வைத்தாள். அவளது அறை யுள்ளும், 'டிரஸ்சிங்டேபிள்' சாமான்கள் எல்லாவற்றையும் எடுத்து ஒவ்வொன்றாகத் துடைத்து வைத்தாள்...

ஆனால் எதிலும் மனது நிலைக்கவில்லை. சித்துவை கூட வைத்துக் கொண்டிருந்தால் கொஞ்சம் அமைதி கிட்டியிருக்கக் கூடும். ஆனால், இங்கேதான் அவன் கட்டவிழ்த்த கன்றாயிற்றே! தாமதமாக வந்ததால் அன்று பள்ளியும் செல்லவில்லை. அவன் துணைக்காகவென்று நியமிக்கப்பட்டவர்களோடு ஆடி ஓடி ஆர்ப் பரித்துக் கொண்டு இருந்தவனை இழுத்து வந்து மடியில் இருத்திக் கொள்வது நியாயமாகவும் படவில்லை.

'மதியம் வரப் பார்க்கிறேன்' என்றவன் மதியமும் வர வில்லை. மாலையிலும் எப்போது திரும்ப முடியும் என்று தெரி யாது என்று ஆயிற்று. சசி குடும்பத்து அம்பாரத்தில் தீப்பிடித்து விட்டதாம். நார்ப் பொருள் தயாரிப்பு அவர்களுடையது. பஞ்சுப் பொதிகள் போலக் குவித்து வைத்திருந்த கச்சாப் பொருளில் தீப்

பற்றியிருக்கிறதாம். முடிந்த அளவு பொருளைக் காப்பதற்கும், புகையினாலும் தீயினாலும் பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்று வதற்கும் என்று ஆட்களை அழைத்துக் கொண்டு உதவச் செல்கிறா னாம்.

இந்தத் தகவலைக் கூட அலுவலக நிர்வாகி தான் சொன்னார். "இந்தக் குடும்பங்களுக்குள் ஒருவருக்குத் துன்பம் என்றால் மற்ற வர்கள் இப்படிப்போய் உதவுவது வழக்கம், அம்மா." என்று கார ணத்தையும் சொல்லிவிட்டு போனை வைத்தார் அவர்.

இப்போது வந்து விடுவான் என்று எதிர்பார்த்து, இல்லை என்று ஆகவும் சௌமினிக்கு மனம் தவித்தது.

அவன் வந்தாலும் கூட, என்ன பேசுவது என்பது குழப்பம் தான்: ஏனெனில், மாட்டேன், முடியாது என்றதன் காரணங்கள் இன்னமும் அப்படியேதானே இருந்தன?

கணவனின் கைவளையம் சொர்க்கமாக இருந்ததால் மற் றவை மாறிவிடவில்லையே!

பின்னே அவள்தான் தப்பு பண்ணிவிட்டாளா?

இப்போதா ? முன்பா?

எது தப்பு? எது சரி? எது சரி? எது தப்பு?

மீண்டும் மீண்டும் இதே கேள்விகள் எதிரொலிப்பது போலத் தோன்றவும், தனித்திருக்கப் பயந்து, மகனை நாடிச் சென்றாள். ஆடி, ஓடி, அலுத்து, ஒருவாறு உறங்கத் தொடங்கியிருந்த மக னைப் பார்த்தபடி சற்றுநேரம் அமர்ந்திருந்தாள். எப்போதும் போலவே அவளது தவிப்பு மெல்ல அடங்கியது.

ஆனால் கொஞ்ச நேரம் தான். மீண்டும் பழைய தவிப்பு மீண்டு விட்டது. வீட்டுக்குள் மூச்சு முட்டுவது போலத் தோன்றவும் எழுந்து, சற்று வெளியே நடந்து விட்டு வருவதாக ஒரு பணியாளி டம் சொல்லிவிட்டுத் கடலை நோக்கிச் சென்றாள்.

சித்தார்த்தன் விழித்து எழ எப்படியும் ஐந்து மணிக்கு மேல் ஆகிவிடும். மற்றவர்கள்தான் இப்போதைக்குத் திரும்பி வருவதாகத் தெரியவில்லையே!

பிற்பகல் மூன்று மணி என்பது வெயில் மண்டையைப் பிளக்கிற நேரம்தான். ஆயினும், அலைநீர் காலைத் தொட்டுத் தொட்டு செல்வது கொஞ்சம் இதமாகத் தோன்றவே, அப்படியே கடலோரமாக நடக்கத் தொடங்கினாள்.

எவ்வளவு நேரம் நடந்தாளோ, எதிரே பாறைப் பகுதியைக் காணவும் அவளுக்கே ஆச்சரியமாயிருந்தது. அதற்குள் இவ்வளவு தூரமா நடந்திருக்கிறாள்!

அங்கேயும் கடல்நீர் கணுக்கால் அளவே இருக்கவும, பாறைகளின் ஊடே நடந்து சென்று, மனோரஞ்சனின் குகையை அடைந்தாள். காலுக்குக் கொஞ்சம் ஓய்வு தேவை என்பது போலத் தோன்றவும், கையைத் திருப்பிப் பார்த்தாள். மணி நாலு என்றது கைக்கடிகாரம்.

குகையினுள் சென்று, மனோரஞ்சனின் சிம்மாசனத்தில் சற்று நேரம் சாய்ந்திருந்து விட்டுத் திரும்பினால் ஐந்தரைக்குள் வீட்டை அடைந்து விடலாம் என்று கணக்கிட்டு உள்ளே சென்றாள்.

அந்தப் பாறை அரியணையில், பழையகால அரச பீடம் போலக் கைவைக்கும் இடத்தில் திண்டுபோல அமைப்பு கூட இருந்தது.

இதில் சாய்ந்து கொள்வது மனோரஞ்சனுக்கு மிகவும் பிடிக்கும் என்றானே! அவளும் அதில் ஏறிச் சாய்ந்து கொண்டாள். என்னவோ அவன் அருகில் இருப்பது போல ஒரு பிரமை உண்டாயிற்று. அதுவே சுகம் போலக் கண்களை மூடிக் கொண்டாள். மூடிய இமைகளின் பின்னே, முன்தினம் படமாய் ஓடிற்று.

இனி மனோரஞ்சன் நெருங்கினால், அவனை மறுக்கும் திறன் தனக்கு இல்லை என்பதைச் சௌமினி சர்வ நிச்சயமாய் உணர்ந்தாள் ஆனால் அவன் நெருங்குவானா? இதைத் தொடராமல்

டேன் என்றானே? ஆனால்... பேசவேண்டும் என்றான்... எ.... என்ன பேசுவான்? ...பேச்சில்... ஒன்...றும்...

முகத்தில் சில்லென்று நீர்த் திவலைகள் படவே, கண் விழித்துப் பார்த்த சௌமினிக்கு முதலில், இது என்ன இடம் எங்கே இருக்கிறோம் என்று ஒன்றுமே புரியவில்லை. தீவு மாதிரி அவள் உட்கார்ந்திருந்த பாறையைச் சுற்றிலும் இது என்ன தண்ணீர்!

பார்வை மங்கியிருப்பது போல உணர்ந்தவளுக்குச் சற்று யோசித்த பிறகு தான், மாலை மயங்கி இருள் பரவிக் கொண்டிருப்பது புரிந்தது.

என்ன இது? இப்போது தானே பாறைச் சிம்மாசனத்தின் மேல் ஏறி அமர்ந்தாள். ஏறுமுன் மணி நாலு தானே! அதற்குள் எப்படி இருட்டும் என்று கைக் கடிகாரத்தைப் பார்த்தவளுக்கு அதன் மினுமினுத்த கரங்கள் ஏழை நெருங்கிக் கொண்டு இருப்பதைக் காணவும் அதுவும் புரியவில்லை.

பேராசையுடன் குகையினுள் வந்த அலை ஒன்று தொங்கப் போட்டிருந்த காலை நனைக்கவும், அவசரமாகக் காலைத் தூக்கி உயரே வைத்துக் கொண்டு வேகமாக யோசித்தாள்.

பாறைத் திண்டின் மேல் சாய்ந்து கண்ணை மூடிக் கொண்டு யோசித்தாளே, அப்படியே தூங்கிப் போயிருக்க வேண்டும். பகலில் தூங்குகிற பழக்கம் -அதிலும் அந்த நேரத்தில் தூங்குவது அவளுக்கு வழக்கம் இல்லையென்றாலும், தொடர்ந்து இரண்டு நாட்கள் சரியாகத் தூங்காததும், வெயிலில் நடந்ததும், மதியம் சாப்பிடாத பசியும் சேர்ந்து கொண்டு கண்ணயர வைத்திருக்கின்றன.

சே! இப்படி மடத்தூக்கம் தூங்கி இருக்கிறேனே! அங்கே சித்துக்குட்டி எழுந்ததும் அவள் முகத்தைப் பார்க்கவில்லை என்று தொல்லை செய்து கொண்டிருப்பானே! விரைவில் வீட்டுக்குச் செல்ல வேண்டுமே என்று காலைக் கீழே தண்ணீரில் வைத்த போது தான் வீடு செல்வது எப்படி என்ற கவலை முதல் முதலாக அவளுக்கு உண்டாயிற்று.

வீடு செல்ல வேண்டுமானால், சுமார் நாற்பது அடி தூரம் உள்ள இந்த குகை வழியை முதலில் கடக்க வேண்டும்; அப்புறம்... அப்புறமும் பெரிதும் சிறிதுமான பாறைகளூடே நடந்து சென்று பாறைப் பகுதியைத் தாண்ட வேண்டும். அதுவரை சென்று விட்டால் பிறகு வீடு செல்வது எளிதுதான்.

ஆனால் இந்த இருளில், தொடையளவு ஆழம் போலத் தோன்றும் இந்தத் தண்ணீரில் பாறைகளில் இடறி விழாமல் எப்படிச் செல்வது என்று யோசிக்கும் போதே அன்று பவுர்ணமி என்பது சௌமினிக்கு ஞாபகம் வந்தது.

வளர்பிறையில் வைக்க வேண்டும் என்று பார்த்தால், கடைசி நாள்தான், பவுர்ணமிக்கு முன்தினம் தான் கல்யாண மண்டபம் கிடைத்தது என்று பூரணியின் திருமணத்தின் போது பேசிக் கொண்டு இருந்தார்கள். ஆனால் நேற்றுத்தானா அது?! எவ்வளவோ காலத்துக்கு முந்தியதுபோல, அதன் நினைவையே மனோரஞ்சன் மறக்கச் செய்துவிட்டானே!

நிலவின் வெளிச்சத்துக்காகக் காத்துக் கொண்டு இருந்த போதே மீண்டும் வீட்டு நினைவு வந்தது. சித்து நிச்சயம் அழுது கொண்டிருப்பான். மனோரஞ்சன் கூட வீடு திரும்பி அவளைக் காணாமல் திகைத்திருக்கக் கூடும். சிதம்பரநாதரிடம் இந்த அசட்டுத் தனத்தை விளக்கவேண்டுமே? அப்போது கூட, அப்படி ஒரு வாய்ப்பு கிடைக்காமல் போகக் கூடும் என்று அவள் நினைக்கவே இல்லை.

இந்த நிலவொளி எப்போது வரும் என்று அண்ணாந்து மேலே பாறை இடுக்கைப் பார்க்கையிலேயே, இன்னோர் அலை முன்னிலும் உயர்ந்து வந்து அவள் காலை நனைத்துச் சென்றது...

முன்னிலும் உயரமான அலை! இன்று பவுர்ணமி! சட்டென சௌமினியின் உடல் முழுவதும் நடுங்கி விட்டது.

இன்று பவுர்ணமி. கடலில் ஓதம் - நீர்ப்பெருக்கு உச்சத்துக்கு வரும் நாள்! அலைக்கு அலை, நீர்மட்டம் உயர்ந்து கொண்டே போகுமே! இப்போதே இடையளவுக்கு வந்திருக்கும் நீர்மட்டம் இன்னும் எவ்வளவு உயரும்? குகையே நீரில் மூழ்கி விடுமா?

அடுத்து வந்த அலை, அவளது பாறை இருக்கைக்கு மேலே அவளது கணுக்காலை நனைத்தது. திரும்புகையிலும் பாறை அள விற்கு நீர் மட்டத்தை உயர்த்தியது.

இதற்கு மேல் இங்கே இருப்பது பெரும் பிசகாய் முடியக்கூடும் என்பதை உணர்ந்து, அவசரமாக இறங்கி, தண்ணீரில் காலைத் துழாவித் துழாவி வைத்து முடிந்த அளவு வேகமாக நடக்க முனைந்தாள்.

எல்லாம் அடுத்து ஒரு பெரிய அலை வரும் வரைதான். கரிய சுவர்போல உயர்ந்து நுங்கும் நுரையுமாக வந்த அலை, அவள் மேல் மோதி அவளை உருட்டி புரட்டித் தள்ளிவிட்டுத் திரும்பிச் செல்லுமுன், அவள் மூச்சுக்குத் திணறி இரண்டுவாய் உப்புத் தண் ணீரையும் குடித்து விட்டிருந்தாள்.

இருமி, இருமி மூக்கிலும் வாயிலுமாக உப்புநீர் வழிய ஒரு வாறு எழுந்து... பாறைமேல் ஏறி நின்றவளுக்கு, இந்த முயற்சி பயனற்றது என்பது புரிந்தது.

அவள் என்னதான் முயன்றாலும், இரு அலைகளுக்கு இடையே உள்ள நேரத்திற்குள்ளாக, அந்தக் குகை வழியைக் கடப்பது முடியாத காரியம். அப்படியே குகையைத் தாண்டினாலும், குகைக்கு வெளியே இன்னமும் சரிவான - இப்போது ஆழமான இடம். பாறைகளும் அதிகம். நீச்சல் தெரிந்திருந்தால், ஒரு வேளை, மிக அபூர்வமாகத் தப்பிப் பிழைக்கக் கூடும். ஆனால் சௌமினி போன்றவர்கள், அலைகளின் வேகத்தால் பாறைகளில் மோதுண்டு உயிரிழப்பது நிச்சயம்.

அப்புறம் மனோரஞ்சன்? சித்துக்குட்டி?

வேண்டாத யோசனையில் மனோரஞ்சனிடம் நீச்சலைச் சரியாகக் கற்றுக் கொள்ளாமல் விடுத்த தன் மடத்தனத்தை அந்த நேரத்தில் சௌமினி மிகவும் நொந்து கொண்டாள்.

என்ன செய்வது என்று புரியாமல் சற்றுநேரம் தவித்து விட்டு, அவளால் இயன்ற ஒரே செயலாக, உதவி, உதவி என்று பலம் கொண்ட மட்டும் உரக்கக் கத்தத் தொடங்கினாள்.

இதிலும் கூட ஏதேனும் பயன் விளையக்கூடும் என்று அவள் பெரிதாக நம்பிக்கொண்டு கத்தவில்லை. முதலில், இந்தஇடம் அதி கம் அதிகமென்ன? ஆள் நடமாட்டம் இல்லாதது. அடுத்து, அவள் இங்கே வந்தது யாருக்கும் தெரியாது. ஆயினும், நில வொளி ஊடுருவி வந்த பாறை இடுக்குகளின் வழியே இந்த கூக்கு ரல் வெகுதூரம் சென்று, யார் காதிலாவது விழுந்தாலும் விழக்கூ டும் என்ற நப்பாசையினாலேயே தன் கூச்சலைத் தொடர்ந்தாள்.

இந்த 'உதவி' என்ற வார்த்தை எப்போது 'ரஞ்ச'னாக மாறி யது என்று அவள் அறியாள். அலைமேல் அலையாக வந்த கரிய தண்ணீர்த் திரள், இரக்கமற்று மெல்ல மெல்ல உயர்ந்து அவளது தாடையை எட்டிய பிறகும் அவள் தன் அழைப்பை நிறுத்த வில்லை. இதற்குத் தப்பி உயிர் பிழைக்கக் கூடும் என்ற நம்பிக் கையை அறவே இழந்து விட்ட பிறகும் கூட, தொண்டை வரண்டு, குரல் ஒடுங்கி விட்டபோதும் ஒரு மந்திரம் போல அவன் பெயரை அவள் உருப்போட்டுக் கொண்டே இருந்தாள்.

சௌமினி எண்ணியது போல, அவளை முதலில் தேடியது சித்தார்த்தன்தான். என்னதான் ஆடி ஓடினாலும், மணிக்கணக்காய் அவளைப் பாராமலே விளையாடிக் கொண்டே இருந்தாலும், தூங்கி விழிக்கையில் மட்டும் தாயின் முகம் தேடுவான். அதிலும், ஏதாவது கெட்ட கனவோடு விழித்தான் என்றால், அவளைப் பார்த்த பிறகுதான் சிணுக்கம் தீரும். பூனா மருத்துவமனையில் மனோரஞ்சன் அருகாமையே கதி என்று சௌமினி இருந்தபோது தொடங்கிய பழக்கம், இங்கே வந்த பிறகும் விடவே இல்லை.

அன்று ஏதோ எரிச்சலுடன் விழித்தவனுக்கு அன்னையைக் காணவில்லை என்றதும் ஆத்திரம் வந்து கையில் அகப்பட்டதை எல்லாம் தூக்கி வீசத் தொடங்கினான். இடையிடையே வீல் வீல் என்று அலறல் வேறு.

அவனை இப்படி அழவிட்டு விட்டு சௌமினி இருந்ததே இல்லை என்றபடியால், தாயம்மாவும் சித்தார்த்தனுக்குத் துணை யாக அமர்த்தப்பட்ட பையனும், அவளைத் தேடத் தொடங்கினார் கள். சிறுவனைச் சமாளிக்க முடியாத அவசரம் வேறு.

சௌமினி கடலை நோக்கிச் சென்றதுவரை அங்கே தெரிந்திருந்தது. அதன் பின் அவள் திரும்பி வந்ததும் வராததும் தெரியாமல் வீடு, தோட்டம், கடற்கரை எங்கும் அவளைத் தேடி அலைந்தார்கள்.

இந்த நிலையில்தான் அலுப்பும் களைப்புமாகச் சிதம்பரநாதரும் மனோரஞ்சனும் திரும்பி வந்தது.

சித்தார்த்தன் பரிதாபகரமாக அழுது கொண்டு இருப்பதை முதல்முறையாகக் கண்ட இருவருமே அதிர்ந்து போயினர். அவனைத் தூக்கி, ஒருவாறு சமாதானப்படுத்திய பிறகு, சௌமினியைப் பற்றி அவர்கள் அறிந்த போது மணி ஆறரை.

கடலை நோக்கிச் சென்றவள், அதன்பின் காணோம் என்றதும் மனோரஞ்சன் பதறிய அளவு சிதம்பரநாதர் பயப்படவில்லை. வேலையாட்கள் சரியாகப் பார்த்திருக்க மாட்டார்கள் என்று இங்கே அங்கே என்று எல்லா இடங்களிலும் அவள் இல்லை என்று கண்ட பிறகோ, பெரியவரும் சேர்ந்து கலங்கி விட்டார்.

வெளியே, வேறு எங்கும் செல்வது என்றால், அதை மற்றவர்களுக்குத் தெரிவியாமல், குறைந்தபட்சமாய் ஒரு துண்டு காகிதத்தில் எழுதியேனும் வையாமல் செல்லும் அளவு சௌமினி பொறுப்பற்றவள் அல்ல என்பது இருவருக்குமே நிச்சயம்.

திருப்பித் திருப்பிப் பணியாட்களை விசாரித்த போதும், அவள் வெளியே நடக்கப் போவதாகச் சொல்லி கடற்கரைக்குச் சென்றது வரைதான் தெரிய வந்தது.

வங்கக் கடல் போல எண்ணித் தண்ணீரில் இறங்கி, நீரில் இழுப்பில் மாட்டிக் கொண்டு விட்டாளே என்று சிதம்பரநாதர் அஞ்ச, மனோரஞ்சனும் இந்தக் கடலை எண்ணியே வேறு விதமாய் வெகுவாகக் கலங்கி நின்றான்.

பேரன் இடிவிழுந்தாற் போல நிற்பதைக் காணச் சகியாமல், "சௌமினிக்கு ஒன்றும் ஆபத்து இராது, மனோ. உன் அம்மா தெய்வமாய் இருந்து நிச்சயமாய் உன் மனைவியைக் காப்பாற்றுவாள். எப்படியாவது ஒரு மிதப்புக் கட்டையைச் சௌமினியின்

கையில் கொண்டு வந்து சேர்ப்பாள் பார். ஒரு கட்டையைப் பிடித்துக் கொண்டு இந்தக் கடலில் மூன்றுநாள் மிதந்து பிழைத்தவர்களை நான் பார்த்திருக்கிறேன். பயப்படாதே'' என்று மனோரஞ்சனைத் தேற்ற முயன்று, அதிலேயே தானும் திடம் பெற்றார்.

கடைசி நேரத்து உயிர் ஆசையில், பிழைப்பதற்குச் சௌமினி அப்படி ஏதும் முயற்சி செய்யக் கூடுமோ என்ற நப்பாசை மனோரஞ்சனுக்கும் உண்டாயிற்று. வேறு வழியில் வாழ்க்கையைச் சீர் செய்வதாகக் கருதி அவளுக்கு நீச்சலைக் கற்றுக் கொடாமல் கெடுத்த தன் மடத்தனத்தை எண்ணி அவன் அந்த வினாடியில் மிகவும் மனம் நொந்தான். ஆனால் அப்படி நொந்து கொண்டு இருப்பதில் பயனில்லை என்று கண்டு படகுகள், வள்ளங்களோடு உடனே வருமாறு சற்று தூரத்தில் இருந்த மீன்பிடிக் குப்பத்துக்குச் சொல்லி அனுப்பினான்.

அந்த வலைஞர்களுக்கு இந்தப் பவுர்ணமிக் கடல் பெரிதல்ல. அவர்களின் குடும்பங்களிலும் பலர் 'சுந்தரவன'த்துத் தொழிற்சாலைகளில் வேலை பார்ப்பவர்கள் என்பதால் இவர்களிடம் மரியாதையும் உண்டு. எனவே மனோரஞ்சன் சொல்லியனுப்பிக் கால் மணி நேரத்திற்குள்ளாகவே பல படகுகளும், கட்டு மரங்களும், வள்ளங்களும் அவற்றை கடலில் செலுத்துபவர்களோடு வந்து சேர்ந்து விட்டன.

அப்போதுதான் சௌமினியைப் பற்றிய முதல் துப்பு கிடைத்தது.

மாயச் சந்தைக்காக மீன் பிடித்துத் திரும்பி வரும்போது, தென்புறம் பாறைகளிடையே ஒரு பெண் செல்லக் கண்டதாக ஒரு கட்டுமரக்காரன் கூறவும், சட்டென்று மனோரஞ்சனுக்குத் தன் சிம்மாசனத்தின் நினைவு வந்தது.

தனியே செல்லச் சற்று தொலைவுதான். ஆனால் நேற்றைக்குப் பிறகு, அவளும் இடையூறு இல்லாமல் தனித்திருந்து, சிந்திக்க விரும்பி இருக்கலாம் அல்லவா? அவனுக்கே, அவ்வளவு முக்கிய

மான பணியைக் கூடத் தூக்கியெறிந்து விட்டுத் தனியே சற்று நேரமேனும் இருக்க மாட்டோமா என்று இருந்ததே?

ஆனால் அதிலும் ஒன்று இடறியது. அப்படித் தனிமையை மட்டும் விரும்பி சௌமினி சென்றிருந்தால், ஓதநீர் குகையினுள் வரத் தொடங்கியதுமே திரும்பி வந்திருக்க வேண்டுமே.

அல்லது.. ஒருவேளை அவன் அஞ்சியதே மெய்யாக... இன்னேரம் குகை கிட்டத்தட்ட நிரம்பியிருக்கும்.

அதுபற்றி மேலே சிந்திக்க மாட்டாமல், எல்லோரையும் ஒவ்வொரு பக்கமாகத் தேட அனுப்பிவிட்டு, பாறைகளை ஒட்டிப் படகை ஓட்ட முடியாது என்பதால், ஒரு வள்ளத்தில் ஏறிப் பாறைப் பகுதிக்கு அதைச் செலுத்தச் சொன்னான்.

அங்கே நீர் மட்டத்தைப் பார்த்ததும் மனோரஞ்சனின் மனம் மிகவும் சோர்ந்து போயிற்று. வழியின் மையத்தில், மேல்வளைவின் உச்சிக்கும், கடல் நீருக்கும் இடையே இருந்த இடைவெளி, மிஞ்சி மிஞ்சி ஓர் அடிதான் இருக்கக் கூடும். இதன் உள்ளே சௌமினி எப்படி உயிரோடு இருக்க முடியும்?

ஆனால் இவ்வளவு தூரம் வந்துவிட்டு, உள்ளே போய்ப் பாராமல் போகவும் அவனுக்கு மனம் வரவில்லை. வள்ளத்தைச் செலுத்திய இருவரையும் எச்சரிக்கையோடு கவனிக்கும்படிப் பணித்துவிட்டு, நீரில் பாய்ந்து குகையினுள் நீந்திச் சென்றான்.

உள்ளே சென்று, டார்ச் அடித்துப் பார்த்தால், அங்கே அவனுடைய அருமை மனைவி, அவளது வாயளவுக்கு வந்துவிட்ட நீருக்குள், தலையை அண்ணாந்து, மூக்கை மட்டும் முடிந்த அளவு மேலே உயர்த்தியபடி நின்று கொண்டிருந்தாள்!

''சௌமீ!'' என்று பயந்து அவளை அவன் அணைத்தபோது, ஓர் அலை வந்து இருவரையும் மூழ்கடித்துத் திரும்பியது.

அந்த அலையின் விளைவாகத் தண்ணீர்மட்டம் மேலும் உயர்ந்ததால், சௌமினிக்கு இப்போது நிலை கொள்ளவில்லை.

அவளை முடிந்த அளவு உயரத் தூக்கிப் பிடித்துக் கொண்டு மனோரஞ்சன் குகை வழியை ஒருதரம் நோக்கினான்.

மனைவியிடம் திரும்பி வெகு வேகமாகப் பேசினான். "என் பேச்சை நன்றாகக் கவனி, சௌமி. இனி உனக்கு ஆபத்தில்லை. எப்படியும் நான் உன்னைக் காப்பாற்றி விடுவேன். ஆனால், நான் சொல்வதை நீ நன்றாகக் கவனித்து, அனுப்பிசகாமல் அதன்படியே நடக்க வேண்டும். ஏனென்றால் உயிர் பிழைக்க இது ஒன்று தான் வழி... என்றவன் அடுத்து, ஓர் அலை வருவதைக் கவனித்து, "சட்டென மூச்சை உள்ளிழுத்து, அப்படியே 'தம்' பிடித்துக் கொண்டு நில்" என்றான்.

அலை வடிந்ததும், "என் முதுகின்மேலே ஒட்டிப் படுத்து ஒருகையால் என் கழுத்தைச் சுற்றிப் பிடித்துக் கொள். அடுத்த கையில் இந்த 'டார்ச்'சை அணைத்து எரிய வைத்துக் கொண்டே இரு. முகத்தில் நீர் படாத போதெல்லாம் முடிந்தவரை காற்றை உள்ளே இழுத்து நுரையீரலை நிரப்பிக் கொண்டே இரு. அலை வரும்போது மூச்சைப் பிடித்துக்கொள். வா. சீக்கிரம்." என்று கூறியபடியே அவளைத் தன் முதுகின்மேல் ஏற்றிக் கொண்டு குகையின் வாயிலை நோக்கி வேகமாக நீந்தலானான்.

குடைந்தாற்போல இருந்த குகை வழியின் மைய உச்சிப் பகுதியைத் தவிர, மற்றபடி குகை முழுவதும் கடல்நீர் நிரம்பிவிட்டது. உச்சிப் பகுதியிலும் ஒரு தலைமட்டுமே தண்ணீருக்குமேல் இருக்கக் கூடிய அலை அடிக்கும்போது அதுவும் முடியாத நிலை.

பல யுகங்கள் போலத் தோன்றிய சில பல நிமிடங்கள் பின், குகை வழி முடிந்து, வெளியே வானமும் நிலவும் தெரிந்தது.

கணவன் முதலிலேயே கூறியிருந்தபடி, 'டார்ச்'சை ஏற்றி அணைத்தபடியே, "அப்பாடி பிழைத்தோம் ரஞ்சன்!" என்று கூறிய சௌமினிக்கு, மனோரஞ்சனிடமிருந்து பதில் ஏதும் வரவில்லை.

அலைபாய்ந்த தண்ணீருக்கு மேலாக அவன் உடம்பு வெளியே தெரியவும் இல்லை.

## 23

சௌமினி அடுத்துக் காட்டிய விளக்கொளியைக் கண்டதும், பதில் ஒளியுடன் வள்ளம் வேகமாக அவள் அருகில் வரத் தொடங்கியது.

அதற்குள்ளாகத் தண்ணீருக்கு மேலாக மனோரஞ்சனின் தலைகூட வெளிப்படாததோடு, அவன் உடல் நீரினுள் அமிழ்வதை உணர்ந்து சௌமினி வீறிட்டாள்.

கையிலிருந்த ஒளிவிளக்கை விட்டுவிட்டுக் கணவனைப் பற்ற முயன்றபோது அவன் உடம்பு அவளது கைப்பிடியிலிருந்து நழுவியது.

வெகு அருகில் வந்துவிட்ட வள்ளத்திலிருந்து நீண்ட கரங்களைப் பற்றிக் கொள்ளாமல் அவள் நீரினுள்ளேயே துழாவியபடி அவளும் அமிழவும், வள்ளத்தில் இருந்தவர்களில் ஒருவன், சட்டென நீரில் பாய்ந்து, அவளைப் பற்றி இழுத்தான்.

சௌமினி திமிறவும், ''புத்தி புரண்டுவிட்டது'' என்ற அறிவிப்புடன், அவளது புருவ மத்தியில் லேசாகக் குத்தவும், ''ரஞ்சன்'' என்ற கதறலுடன் அவள் நினைவிழந்தாள்.

அரை மயக்கத்தில் இருந்தவளைத் தூக்கி வள்ளத்தின் உள்ளே போட முயன்றபோது, அவளது இறுகிய கைப்பிடியில் இருந்த மனோரஞ்சனின் சட்டைத் துணியோடு அவனும் தண்ணீருக்கு மேல் வரவே எல்லோருமே பதறிப் போயினர். அவசர அவசரமாய் அவனையும் தூக்கி வள்ளத்தில் ஏற்றினர்.

ஆனால் மனோரஞ்சனுக்குப் பேச்சு மூச்சு ஒன்றும் இல்லை என்பதைக் கண்டதும், உடனேயே அவர்கள் அறிந்த அளவில் ஒருவன் முதல் உதவியைச் செய்ய, மற்றவர் இருவரும் முடிந்த வரை வேகமாக வள்ளத்தைச் செலுத்தலாயினர்.

மனோரஞ்சனின் நிலைமை, சௌமினி என்று ஒருத்தியும் அந்த வள்ளத்தில் மயக்கத்தில் கிடக்கிறாள் என்ற நினைவுகூட அவர்களுக்கு இல்லாது செய்துவிட்டது.

ஆனால், அந்த முதல் உதவிக்கு மட்டுமல்ல, கரையில் சிதம்ப ரநாதரின் முன் யோசனையான ஏற்பாட்டின்படி வந்திருந்த மருத் துவரின் சிகிச்சையும் கூட அவனது நினைவைத் திரும்பிக் கொண் டுவரச் சக்தியற்றுப் போயிற்று.

அவன் உட்கொண்டிருந்த நீரை வெளியேற்றிவிட்டு, வாயோடு வாய் வைத்து ஊதி மூச்சு வரச் செய்தபடியே மனோரஞ் சனை மருத்துமனைக்குக் கொண்டு சென்றார்கள். அங்கே அவனது மூக்கிலும் உடம்பிலும் குழாய்களை மாட்டிவிட்டு, அவன் கண் விழிப்பதற்காகக் காத்துக் கிடந்தார்கள்.

விரைவிலேயே எழுந்துவிட்ட சௌமினி அழுது கொண்டே விவரம் சொல்லவும் எல்லோருக்கும் நடந்தது புரிந்து போயிற்று.

மனைவியைக் காப்பற்றி விடும் பிடிவாதத்தினால் மனோரஞ் சன் மூச்சு எடுக்கவே இல்லை. இரண்டுபேரின் தலைகளையும் சேர்த்து தண்ணீருக்கு மேல் தூக்க இடம் இல்லை; எனவே அவ ளது மூச்சுக்காற்றுக்கு மட்டும் வகை செய்து கொடுத்து விட்டு அவன் தன்னைத் தியாகம் செய்ய முடிவு செய்திருக்கிறான்.

அவளை மூச்செடுக்கச் சொன்ன கணவன், தானும் அப்ப டியே செய்திருப்பான் என்று எண்ணியிருந்த சௌமினி இதை எதிர்பார்க்கவே இல்லை. தெரிந்திருந்தால் குகையைவிட்டு வெளியே வர அவள் சம்மதித்திருக்கவே மாட்டாளே!

உணவு உடை போன்றதல்ல உயிர்க்காற்று. உடம்புக்கு மிக மிக அத்தியாவசியமானது; இன்றியமையாதது. சற்றுநேரம் மூச்சு

நின்றால் உயிரே போய்விடும். அதற்காகவே மனித முயற்சியின்றி மூச்சு விடுதல் தானாக நடக்கும்படி கடவுள் செய்திருக்கிறார். அந்த மூச்சுக் காற்றுக்குத் தடை நேரும்போது, உடம்பின் ஒவ்வோர் அணுவும் அதற்காகத் தானாகவே போராடுமாறும் விதித்திருக்கிறார்.

நீரில் மூழ்கிக் கொண்டு இருப்பவர்களைக் காப்பாற்றச் செல்கிறவர்கள் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும் என்பார்கள். மூச்சுக் காற்றுக்குத் தவிக்கும்போது, இவர் நம்மைக் காப்பாற்ற வருகிறார் என்று பகுத்துணரும் அறிவு இராதாம். அருகில் வருகிற எதையும் அது காப்பாற்ற வருகிற மனிதர் என்றாலும் அவர்களையும் அமுக்கிக் கொண்டு தான்மேலே வந்து மூச்செடுக்கும் வெறி மட்டும்தான் இருக்குமாம். ஒருவர் தானாக யோசித்து, சுய அறிவுடன் திட்டமிட்டுச் செய்வதல்ல. உயிர்க் காற்றுக்குத் தவிக்கும் மனித உடலின் அணிச்சைச் செயல்.

இந்த இயற்கை உணர்வையும் கூடக் கட்டுப்படுத்தி, அவளைக் காப்பது ஒன்றே குறிக்கோளாக உயிரையும் விடும் அளவுக்கு அவளுடைய கணவன் சென்றிருக்கிறான் என்றால் அந்த அன்புக்கு ஈடு எது? இணை ஏது?

இந்த அன்புக்கு அவள் எதைப் பிரதியாகக் கொடுக்க முடியும்? அவன் காப்பாற்றிய இந்த உயிரைக் கொடுத்துவிட அவள் தயார்தான். ஆனால் அதனால் ஒரு பயனும் இல்லையே!

அவன் அன்பு, நேசம், காதல் என்றதெல்லாம் வெறும் அலங்காரப் பேச்சு; அவளை ஏமாற்றச் சொன்னது என்று எண்ணினாளே! இல்லவே இல்லை. அவன் சொன்னது அத்தனையும் உண்மை. வெறும் உண்மை அல்ல. வெகுவாகக் குறைத்து மதிப்பிடப்பட்ட உண்மை.

ஒருகாலத்தில் - முன்பிறவி போலத் தோன்றிய ஒரு காலத்தில் மனோரஞ்சன் தப்பு செய்திருக்கலாம். ஆனால் பிறகு, அவன் புடம் போட்ட பொன்னாக ஜொலிப்பதைக் கண்ணிருந்தும் காணாத முட்டாளாக அவள் அல்லவோ இருந்துவிட்டாள்!

மன்னிப்பதையும் மறப்பதையும் பானுமதி அவளிடமே மிகுந்த அன்பு வைத்திருப்பவள் - அவள் எழுதியதையும் சற்றும் எண்ணிப் பாராமல் இருந்து விட்டாளே!

இன்று கண்டு கொண்டது காலம் கடந்ததாகி விடுமா?

உயிர் பிழைத்து விட்டாலும், அதிக நேரம் மூச்செடுக்காததாலும், நுரையீரல் முழுவதும் தண்ணீர் நிரம்பியிருந்ததாலும் உடலில் பிராண வாயு மிகவும் குறைந்து, மூளைக்குள் 'ஆக்ஸிஜன் சப்ளை' குறைந்ததால் ஏதும் பெரும் பாதிப்பு நேர்திருக்கக் கூடுமோ என்று டாக்டர்கள் சந்தேகப்பட்டார்கள். மூளை எந்த அளவு பாதிக்கப் பட்டிருக்கிறது; அது உடலை எப்படி எப்படி பாதிக்கக் கூடும் என்பதை இப்போது அளவிட்டுச் சொல்ல இயலாது என்றார்கள்.

இப்படி எல்லாம் சொல்லி, சௌமினியின் நெஞ்சக் கூட்டினுள் ரயில் ஓட்டினார்கள். 'கோமா' போன்ற வார்த்தைகள் அவளை மிகவும் பயமுறுத்தின.

தாளமாட்டாமல் அவள் கடவுளைச் சரணடைந்தாள். "கடவுளே! என் ரஞ்சனுக்கு, என் அன்பைப் புரிந்து கொள்ளும் சக்தியை மட்டுமேனும் கொடு. அவருக்கு எல்லாவிதப் பணிகளையும் செய்து அவரை நான் பராமரித்துக் கொள்கிறேன்." என்று கண்ணீர் சிந்தி வேண்டினாள்.

தன்னுணர்வு அற்றுத் துவண்டு கிடந்தவனிடம் சென்று, "ரஞ்சன், ரஞ்சன்" என்று முன்போல முன்பு விபத்தில் அடிபட்டுக் கிடந்தபோது செய்தது போல அழைத்துப் பார்த்தாள்.

ஆனால் அவனிடம் மாறுபாடே காணவில்லை.

உடல் ட ாரும்போது, கண் இருட்டிக் காது அடைப்பது தானே முதலில் நடப்பது. கண் திறவாது கிடந்த கணவனின் காதுகளும் கேட்கும் திறன் இழந்து விட்டனவோ என்று யோசித்து, அவனைத் தொட்டுத் தடவி, உயிரூட்ட முயன்றாள்.

ஆனால், எதையுமே அவளுடைய ரஞ்சன் உணர்ந்ததற்கான அறிகுறிகளே இல்லாது போகவும் மனம் உடைந்து அழுதாள்.

அவளுக்குக் கொஞ்சம் கூடக் குறையாது வேதனைப்பட்ட இன்னோர் உயிரும் அங்கே இருந்தது.

துணியாய்க் கிடந்த பேரனைக் கண்கலங்க நோக்கி, ''அன்றைக்கு நீ நிபந்தனையோடு திருமணத்துக்குச் சம்மதித்தபோது கூட மனோ பிழைத்துக் கொள்வான் என்றேனே, ஏன் தெரியுமாம்மா! அந்தச் சமயம், நீ வருமுன் அவன் கிட்டத்தட்ட போய் விட்ட நிலைதான். உன்மேல் உள்ள ஆசை மட்டுமே அவனை இந்த உலகத்தில் பிடித்து வைத்திருந்தது. அதுதான் அவனை எமன் வாசலில் இருந்து மீட்டும் வந்தது. உன் அருகாமை அவனை உயிர்ப்பித்து விடும் என்ற நிச்சயம் எனக்கு. அவ்வளவு தூரம் அவனது அன்புக்கு உகந்தவள் என்பதால்தான், உன்னை எனக்கு முதலிலேயே பிடித்துப் போயிற்று. உன்னைப் பற்றி வேறு எதையும் விசாரித்துக் கூடப் பாராமல் வீட்டுப் பெண்ணாக்கவும் மனம் ஒப்பினேன். ஆனால், அதே அன்பு, இன்று உயிர்த்தியாகம் செய்யுமாறும் அவனை உந்தி விட்டதே!'' என்று அரற்றினார் அவர்.

'கெட்டலைந்ததால் வேறு பெண்ணே கிடைக்கவில்லை போலும்' என்று, அன்று ஏளனமாக எண்ணியது நினைவுவர, சௌமினியின் நெஞ்சு விண்டு விடும்போல வலித்தது.

பாவம்! எழுபத்தைந்து பிராயம் கடந்தவர். எத்தனையோ இழப்புகளை உயிருக்கு உயிரானவர்களின் இழப்புகளையும் கூட அனுபவித்தவர். இன்றையத் தினம் கூட ஒரு கர்ம வீரனைப் போல, அவர் எத்தனை செய்திருக்கிறார்! அவர் இன்னமும் வேதனைப்பட, அவள் காரணமாகி விட்டாளே!

இப்படித் தன் மேல் அன்பு வைத்திருந்த அனைவரையும் ஒரு மூச்சு கதிகலங்கச் செய்துவிட்டு, துயிலில் இருந்து எழுகிறவன் போல, மனோரஞ்சன் இலகுவாகவே பிழைத்து வந்தான்.

ஒருவகையில், அவன் துயிலில் இருந்துதான் எழுந்தான் என லாம்.

பிராணவாயுக் குறைவினால் மனோரஞ்சனின் உடலில் இருந்த அத்தனை திசுக்களும் சக்தியிழந்து சோர்ந்து போயிருந் தன. எனவே அங்க, அவயவங்களும் அடியோடு ஓய்ந்து போயி ருந்தன.

இதுவே, இன்னமும் சில வினாடிகள் அவனுக்கு உயிர்க் காற்று கிடைக்காமல், போயிருந்தால், உடல் திசுக்கள் அழியத் தொடங்கியிருக்கும். முக்கியமாக மூளைத் திசுக்கள்.

ஆனால், சரியான சமயத்தில், வள்ளத்தில் இருந்தவர்கள் செய்யத் தொடங்கி விட்ட முதல் உதவியினால், அத்தகைய அழி விலிருந்து மனோரஞ்சன் காப்பாற்றப்பட்டு விட்டான். ஆயினும், சோர்ந்து, ஓய்ந்துவிட்ட உடலுக்குத் தேவையான சக்தி அப்போது அவனுக்குக் கிடைக்கவில்லை.

இங்கே, மருத்துவமனையில் நேரடியாகக் கிடைத்த பிராண வாயுவும், முழுமையான ஓய்வும், அந்தப் பற்றாக்குறையைப் போக்கி மெல்ல மெல்ல அவனது உடல் திசுக்களுக்கு உயிரூட் டின. அவனது மயக்க நிலையும் மாறியது.

ஆனால் உடலின் களைப்பால் - அவனும் முன் தினம் தூங்க வில்லை. கூடவே அன்றைய அதிகப்படி வேலையின் களைப்பும் சேர்ந்து கொள்ளவே, மயக்கத்தில் இருந்து அப்படியே நல்ல துயி லில் ஆழ்ந்து விட்டான்.

அவனது இதயத்துடிப்பு, ரத்த அழுத்தம் போன்றவை சரியா கவே வந்துவிட்ட போதும், மனோரஞ்சன் விழித்து எழுந்தபின் தான் எதுவும் உறுதியாகச் சொல்ல முடியும் என்றனர் வைத்தியர் கள்.

அவன் தூக்கம் கலைந்து, சாதாரணமாகவே விழித்த பிறகும், உள் பாதிப்பு பற்றிய பரிசோதனைகளுக்காகவே, மேலும் இரண்டு நாட்கள் மருத்துவமனைக் கண்காணிப்பில் வைத்திருந்து விட்டு, அதன் பிறகுதான் டாக்டர்கள் மனோரஞ்சனை அன்று வீட்டுக்குச் செல்ல அனுமதித்தனர்.

சௌமினியின் உள்ளம் அன்று குதியாட்டம் போட்டுக் கொண்டு இருந்தது.

இராதா பின்னே? இந்த மாதிரி; மனைவிக்காக உயிரையே விடத் துணிகிற கணவன், உலகத்தில் வேறு யாருக்குக் கிடைப்பான்? அந்த அன்பை எண்ணுகிற போதெல்லாம், வெல்வெட் துணியால் வருடுகிற மாதிரி, அவளது உடல் முழுவதும் பூரித்தது.

அன்றுதான் அவர்களது திருமண நாள் போல ஓர் ஆனந்தம் உள்ளூரப் பொங்கி அவளைப் பரவசப் படுத்தியது. மீண்டும் மீண்டும், ஓர் ஆயிரம் தரம் ஆள் உயரக் கண்ணாடியில் அழகு பார்த்துக் கொண்டாள்.

கோவையில், கண்ணாடியில் அவன் பின்னே வந்தது நினைவு வந்தது. அன்றே இந்த அன்பைப் புரிந்து கொண்டிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்!

அன்றே தெரிந்திருந்தால், அந்த நடையும் தேவைப்பட்டிராது; அப்படி ஓர் ஆபத்தில் அவள் சிக்கியிருக்க மாட்டாள்; எல்லாவற்றையும் விட மிக முக்கியமானதாய், அவளைக் காப்பாற்றுவதற்காக, அவளுடைய ஆருயிர்க் கணவன் உயிருக்கு அபாயம் நேர்ந்திராது...

அப்பாடியோவ்! என்ன மாதிரி இரண்டு தினங்கள்! இனிப் பயமே இல்லை என்று டாக்டர்கள் சொல்லும் வரை உள்ளூர உதைத்துக் கொண்டேதானே இருந்தது!

மனோரஞ்சனுக்கும் அப்படித்தான் இருந்திருக்குமோ? அவன் கூட இந்த இரண்டு நாட்களாகச் சரியாகப் பேசவே இல்லையே! ஒருவேளை அந்தச் சிறு மருத்துவமனையில் தனியறை வசதி இல்லாததால், பேசப் பிடிக்காமல் இருந்து விட்டானோ என்றும் தோன்றியது.

எப்படியோ, இன்று வரப் போகிறான்! இருவரும் இனி இணைபிரியாமல், வாழப் போகிறார்கள். அவ்வளவுதான் விஷயம்!

ஏதோ யோசித்தவள், அவளது அலமாரியைத் திறந்து, சேலைகளை ஒதுக்கி, அவற்றின் அடியில் மறைத்து வைத்திருந்த சிறு டப்பாவை எடுத்தாள்.

பாட்டனாருடன் வீடு திரும்பிய மனோரஞ்சன் உடனே அவர்களது பகுதிக்குச் சென்றுவிடவில்லை. தாத்தாவிடம், தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட டாக்டர் குடும்பத்தின் லாப நஷ்டம் பற்றிக் கேட்டுக் கொண்டிருந்தான்.

''ஒன்றுமே 'இன்ஷ்யூர்' பண்ணவில்லை. டாக்டருக்கும் அவள் கணவருக்கும் ஏற்கனவே இந்தத் தொழிலில் ஈடுபாடு இல்லை என்பது தெரிந்த விஷயம். 'ஸ்டேட்'சில் வேறு மேல்படிப்புக்கு இடம் கிடைத்திருக்கிறது. வேலை பார்த்துக் கொண்டே படிக்க முடியுமாம். ஒரு வழியாய் ஒப்பித்து விட்டுக் கிளம்புவதாகத் திட்டம். வாங்கிக் கொள்கிறீர்களா என்று என்னிடம் கேட்டார்கள்... என்று சிதம்பரநாதர் கூற, வாங்குவதின் நன்மை தீமை பற்றி இருவரும் அலசத் தொடங்கினார்கள்.

பொறுமை இழந்து, ''அவருக்கும் அசதியாய் இருக்கும். உங்களுக்கும் களைப்புதான். கொஞ்ச நேரம் இரண்டு பேரும் ஓய்வெடுத்தால் என்ன தாத்தா?'' என்று சௌமினி குறுக்கே புகுந்தாள்.

''அது சரிதானம்மா'' என்று பெரியவர் கிளம்ப, மனோரஞ்சனும் ஒருவாறு அறைக்கு வந்து சேர்ந்தான். வந்தவன், கூடவே பின் தொடர்ந்த மனைவியை ஏறெடுத்தும் பாராமல், சன்னல் பக்கம் சென்று, வெளியே வெறிக்கத் தொடங்கவும், சௌமினி திகைத்தாள்.

''ரஞ்சன்?''

அப்போதும் திரும்பிப் பாராமல், ''இனியும் நான் உன்னை இந்தப் பந்தத்தில் பிடித்து வைப்பதாக இல்லை சௌமினி.'' என்றான் அவன் வரண்ட குரலில். ''நீ விரும்பும் விதத்தில் மணவிலக்கு தருகிறேன். நீ எங்கே வேண்டுமானாலும் போகலாம்'' என்று அவன் கூறவும் சௌமினி பிரமித்துப் போனாள்.

தண்ணீருக்குள் தத்தளித்தபோது மூச்சுவிட அவள் இவ்வளவு சிரமப்படவில்லை. ஒருவாறு சுதாரித்து, "ஏ...ஏன்? ஏன் ரஞ்சன்?"

"பின்னே? இந்த உறவு - அன்று நான் தொட்டது பிடிக்காமல் தானே தற்கொலைக்கு முயன்றாய்?"

"தற்கொலையா!" சௌமினிக்குத் தலை சுற்றிவிட்டது. "தற்கொலை... நானா? ...இ.. இல்லையே, ரஞ்சன்!"

"இல்லையென்றால் பெருக்குநாளில், அவ்வளவு தண்ணீர் பெருகிய பிறகும் அந்தக் குகைக்குள்ளேயே நீ நிற்கக் காரணம்?" திரும்பி நின்று மனோரஞ்சன் அவளைப் பார்த்த பார்வையில், கோபம், வருத்தம், வேதனை எல்லாமே நிறைந்திருந்தது.

மற்றதைவிட, அவனது வேதனை தாளாமல் ஓடிச் சென்று அவன் தோளைப் பற்றி, "இல்லை, ரஞ்சன். சத்தியமாய் நான் தற்கொலைக்கு முயற்சிக்கவே இல்லை. நான் ..." என்று தொடங்கி நடந்ததைச் சொன்னாள்.

அவனால் நம்பவே முடியவில்லை. "வாட்! தூங்கினாயா? மைகாட்! எந்த நேரத்தில், எந்த இடத்தில்... அலையடித்து முகத்தை நனைத்திராவிட்டால் அப்போதும் விழித்திருக்க மாட்டாயா? சரியான கும்பகர்ணிதான் போல!" நெஞ்சின் பாரம் இறங்கிவிடவே அவனால் கேலி பேசமுடிந்தது.

அவள் முகம் சிவந்து, "பின்னே, இரண்டு நாட்களாக ஒரு பொட்டுக் கண் மூடவிடாமல் உங்கள் தங்கையும் நீங்களும் தானே புண்ணியம் கட்டிக் கொண்டீர்கள்?" என்று அவனையே குற்றம் சாட்டவும் மனோரஞ்சன் கடகடவென்று நகைத்தான்.

அவளை இறுக அணைத்து, அவள் காதருகே குனிந்து, நான் தான் தூங்க விடவில்லையா? நீ எப்படியாம்?" என்று கிசுகிசுத்து, அவள் முகம் செக்கர் வானமாய்ச் சிவப்பதைக் கண்டு ரசித்தான். வெட்கத்துடன் விலக முயன்றவளை இழுத்துத் தன்

மேல் சாய்த்துக் கொண்டு, "நான் என்னமாய் நடுங்கி விட்டேன், தெரியுமா? கோவையில் நடந்தது பிடிக்கவில்லையோ, அதனால் இந்த முடிவுக்கு வந்து விட்டாயோ என்று மிகவும் கலங்கிப் போனேன். அவளுக்கும் விருப்பம் இருக்கிறது என்று நினைத் தோமே என்று..." என்று அவன் சொல்லிக் கொண்டே போகை யில் ஒன்று தோன்ற அவள் தலையைத் தூக்கி அவனைப் பார்த் தாள்.

"என்னடா?"

"இதேபோல... கோவையிலும் இதையே... ஒருவரை ஒரு வர் விரும்புகிறவர்கள் என்று சொன்னீர்களே. எப்படித் தெரியும்? அதுவும் காதலே கிடையாது என்று நான் அவ்வளவு கடுமையா கப் பேசி விரட்டியடித்த போதும் இந்த மாதிரி எப்படி நினைத்தீர் கள்?"

"இது இப்போதல்ல. பூனா மருத்துவமனையிலேயே தெரிந்து கொண்ட விஷயம். அப்போது, பல சமயம், இரவு நேரங் களில் என் கட்டிலிலேயே சாய்ந்து தூங்கி விடுவாய் தெரியுமா? ஆனால் ஆழ்ந்து தூங்காமல் அமைதியற்று, அப்படி இப்படி அசைந்து கொண்டே இருப்பாய். காயம் படாத கையை மெல்ல நகர்த்தி உன் தலையைச் சுற்றி அணைத்தாற்போல வைத்துக் கொள்வேன். அதன் பின் நிம்மதியாய் உறங்கி விடுவாய். என்ன தான் சினம் காட்டினாலும், உன் மனதில் எனக்கு இடம் இருப்பது அப்போது முதலே எனக்கு உறுதிதான்." என்று விளக்கினான் அவன்.

"ஓகோ! அதனால்தான் முயற்சி செய்து கொண்டே இருந்தீர் களா? நீந்தக் கற்றுக் கொடுத்த போது கூட...

"ஆமாம். ஆனால் வேறு வழியில் வாழ்க்கையைச் சீர்செய்வ தாக எண்ணி நீச்சலைக் கற்றுக் கொடுக்காமல் கெடுத்த மடத்த னத்தை நினைத்து எப்படி நொந்து போனேன் தெரியுமா?" என்று மனோரஞ்சன் வருந்தியபோது, "அட!" என்றாள் சௌமினி ஆச் சரியத்தோடு.

அவன் பார்வையால் வினவவும், ''இதே மாதிரி நானும் இல்லாததை நினைத்துச் சரியாக நீந்தப் பயிலாமல் விட்டோமே என்று வருத்தப்பட்டேன். எப்படி ஒரே மாதிரி யோசிக்கிறோம், பாருங்கள்!'' என்று வியந்தாள்.

''ஆமாம். என்ன பொருத்தம் இப்பொருத்தம்!'' என்று அவன் எரிச்சலும் கிண்டலுமாகக் கூறவும் அவளுக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

சிரித்து முடித்து விட்டு, ''ஒகே, பாஸ்! இனி இந்தப் பேச்சு நாம் பேசவே கூடாது. எப்போதும், நல்ல, சந்தோஷமான விஷ யம்தான் பேசவேண்டும். சரிதானா?'' என்றாள் சமாதானமாக.

''ஆகா! பேசலாமே! எனக்குத் தெரிந்த ரொம்ப நல்ல விஷ யம் பேசலாமா ஆனால், அதற்கு முதலில் கதவைத் தாளிட்டு விட்டு வரவேண்டும்.'' என்று மனோரஞ்சன் கண்சிமிட்டிக் கையைப் பற்றவும், ''ம்ம்...'' என்று கொஞ்சலாகச் சிணுங்கி நெளிந்தாள் சௌமினி.

சேலை லேசாக விலக, வைரலாக்கெட் பளிச்சிட்டது.

''சௌமீ!''

லாக்கெட்டை ஒரு விரலால் தொட்டுப் பார்த்து விட்டு, ஆவ லோடு அவளை நோக்கினான் மனோரஞ்சன். அவனை, மெய்யா கவே தன் வைரமாகவே ஏற்றுக் கொண்டு விட்டாளா!?

பதிலாக முறுவலித்த சௌமினியின் செவ்விதழ்களில் ஆசை யாக முத்தமிட்டான் அவளுடைய கணவன்.

# புது வைரம் நான் உனக்கு

ரமணிசந்திரன்

